### அறுசீர்க்கழிநெடிலடியாசியவிருத்தம்.

ஈந்தநற் கூடையு மூலத் தெழுஞ்சுட ரொளியே காலில்
பாய்ந்தருள் தருமெய்ஞ் ஞானப் பராபர நந்தி தானும்
ஆய்ந்தநல் லாதி சோதி யநாதியென் றடியேற் கின்பந்
தோய்ந்தமு தொழுகுங் காமத் தொளிசொரிந் தருள்வல் லோனே.

வல்லப மதற்கு மேலோர் மனதுக்கு மிடையி னுள்ளா
டில்லற வெவர்க்கு மெட்டா திருக்குமொன் றிங்கு வாய்த்த
நல்லற மதற்கொப் பாக நான்மறை தனிலுங் காணுச்
சொல்லற மதற்கு ளின்பஞ் சொரிந்தரு ளருந்துய் யோனே. (387)

துய்யநற் கமல மீன்ற சுடரொளி யதனிற் பாய்ந்து
வையக மதனி லோடி வான்கடந் தறுஷின் மேலோன்
உய்யநற் பதத்துக் காளா யுலாவிநின் றிமைக்கு முன்வந்
தய்யனென் றுனது தீதா றடியவர்க் கருளல் லாவே. (388)

### கலித்துறை.

அல்லா வெனுமெழுத் தெங்குதித் தேதி லடைந்ததெனுஞ்
சொல்லா மறைபடித்தென்பய ஞுஞ்சூலற் சைச்சுற்றியே
வல்லான் மணிமந் திரமீன் றுவந்த மலுகறெனு
நல்லா தரவீந் தருள்வா யெமக்கென்றும் நாயகனே. (389)

நாயன்மே லாயிர மாலறு நான்லொன் ருகத்திரு
ஆயிரம் வாழ்வக லாதவ னேயெம்மை யாள்பவனே
காயமு மாலுயி ரோடுனைக் காண்பதற் குன்னுதவி
நேயனே நீதரு வாயடி யேற்கெந்த நேரமுமே. (390)

மேலாம் பதம்விட் டறுஷுக்கு மேல்மிகு ருஜிலுன்றன்
நாலாம் பதந்தெரி சித்துரை பேசிய நம்மிறசூல்
பூலாம் பசிந்தசெந் தேனும் புசித்ததில் மிச்சமதைக்
காலோ டெக்குண விந்தருள் நீகலங் காதவான. (391)

கலங்கா திருதயக் கண்ணுடிக் குள்வருங் காரணங்கண்
டலங்கார மாயெங்கு மாள்பவ னேயெனக் காதரவாய்
மலங்காதே நீயென்றும் வந்தெனக் கேவலக் கைதருநற்
பலங்காண்ப தென்னைவிட் டேகாமல் தந்தருள் பாத்திபனே. (392)

பாத்திப னேபர மானவ னேபடைத் தெவ்வுயிர்க்கும்
பூத்துயி ரானதெல் லாமறி யப்பொது வானவனே
ஆர்த்தெழும் பாலமோ டாபத்து நோயணு காமலென்னைக்
காத்தவ னேபிழை தீர்ந்த்ருள் வாயுன்னைக் காண்பதற்கே. (393)



கண்டதெல் லாங்கன வென்றுண ராதென்கடுஞ்சலிப்பை
விண்டமு தேற்றியுன் ஞேடுரைப் பேனந்த விண்ணப்பங்கேள்
வண்டரென் ஞேடு பகைசெய்தி டாமல் வணங்கிடநல்
தொண்டர்கள் தேடுந் துணையெனக் கீந்தருள் துய்யவனே. (394)

### எழுசீர்க்கழிநெடிலடிபாசிரியவிருத்தம்.

வினைமிடைகள் தீர்ந்துமிடி வெகுபிழைகள் பாவம்நீ
விலகபி ராபத்துங்காத்
தனைவருமென் ஞேடுபகைத் தணுகுமதை நீவிலகென்
றடியவர்கள் தொழுமி றைவனே
உனைமிகுதி தேடியெனக் குளசலிப்பும் நோவுமுன்
ஞேடுரை செய் தேத்திப் புகழ்வேன்
எனைமிகுதி நீதெரிசித் திறகுமத்தொ டாபியத்து
மிரணப்பொலி வுந்தந் தருளே. (395)

வெறுங்கான கத்திடைவி ளைந்தூச லிட்டுநீ
விரைந்தாடி நின்றுறையுமா
சறுங்கால தற்கிடையெ ழுந்தேயி ஷுக்குணவு
தண்டாம ரைக்குள் ளுருவாய்
உறுங்காம ராசதமு னைத்தொழு முன்நீயுன்
னுள்ளத்தே யுனைத்தொ ழுமதால்
நறுங்காத லைத்தரும்ந மக்கார மீந்தருள்
நலத்தோடெமக்கி றைவனே (396)

எனக்காக நின்றவ ருனைக்காண்ப ரென்றுநீ
யிசைத்தா யெழுத்தா ணியோ
டனக்காதல் கொண்டுநீ யமைத்தா யனைத்துயி
ரதற்கான நல்ல றிவையீந்
துனக்கான நற்றவ மினித்தேடு மென்றுநீ
யுரைத்தா யெவர்க்கு மிறையே
மனக்காவல் தந்தெனை வகுத்தாய் நமக்கார
வாசலி லுனைத்தெ ரியவே. (397)

### வேறு.

தெரிவுறு மலிபெழுந்து திருமன மதிலுறைந்த
சிவகுரு வடிவ னந்தமென்
றரியமறை யுஞ்சிவந்த கலமெழுதி லதிலென்று
னஹுமதோ டணுகி நின்றுலாம்

விரிவுறு மனதுசந்தம் விளங்குநல் மலுகறென்முன்
விரையவந் தணுக விண்டுதன்
புரியுறு விழிகளுன்றன் புதுமைகள் தெரியவென்றன்
பிழைபொறு பெரிய நாயனே. (398)

பெரியவ ரகமகிழ்ந்த பெருமைகொ டுனதுசெல்வம்
பெருகுதொண் ணூரெரு டொன்பதும்
அரியதிரு நாமமென்று மஹம்மதுயி ராகவந்து
மடியவர் தெரிய நின்றதால்
வரியிரு வகையுமென்றன் மனதினி லெழுந்துமந்த
வரிசைகோ டமைசெய் தொன்பதரம்
பரிதரு மலுகறென்ரன் பதுமமீந் திடநில்லென்று
பழையவர் புகழு மன்பனே. (399)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அன்பனென் றுனைவிண் ணோர்க ளடிபணிந் தேத்து மந்தா
ளென்படு முனது நாம மேயொடு ஹேயும் லாஹும்
இன்பமென் றெமுகிப் பாய்ந்தெம் மிருதயக் கமலக் கண்ணால்
நம்பிலந் துன்னைக் காண நடுவனே துணைசெய் வாயே. (400)

துணைநீயென் றுயர்மெய்ஞ்ஞானத் தூக்கத்தோ டொளிகண்டுள்ளத்
தணையென்ன ரூப ரூபத் தருஞ்சிலை வனைத்த காமக்
கணைவிடுத் துயர்மெஞ் ஞானக காயமில் லாகி மகானில்
பிணைமுனின் றுனையான் காணப் பிழைப்பொறு சமதுல் லாவே. (401)

வெண்பா.

சமதெனுமு டவ்விருளாய்த் தானே ரணுவியங்கா
தஹறெனஅவ் வலில்நூ றஹம்மதாய் அபதெனநீ
வித்தா கிறுமரமாய் விரிந்துபூத் துக்காய்த்த
கொத்த யிரங்கனியே ஹம்தே. (402)

கலித்துறை.

கூவென்ற ராகங் குறையாமல் நின்றுன் குதுறத்தினால்
காவென்ற காமத் துயரம்பொ ருமற் கமலத்தினுள்
கியென்ற ராகங் கிளர்ந்திற சூலுன்னைக் கிட்டியபின்
கோவென்ற தாலெமக் கிந்தருள் வாயுயர் தற்கொடையே. (403)



கொடையா லுயர்ந்திற சூல்நயி னுரைக் குதுறத்தினால்
படையாத போதொன்றை யும்படை யேனென்ற பாரசத்தம்
அடையா தறுபத்து நாலாறு காணதிலொன்றடியேன்
சடையாமல் தந்தரு ளிமான் தலையடி தானவனே. (404)

அவனென் றுனைநீ யறிவா லறிபுமுன் னவ்விருளாய்ச்
சிவனென் றெழுந்தூக்கத் துள்ளோ ரொளியே தெரிசித்தபின்
பவனென் றெழுநீ ஹகீகத்து நின்பர மத்தில்நின்
றெவனென் றுயர்ந்து தெளிந்தோனே தந்திட மானெமக்கே. (405)

என்னைவந் தாதரித் தோருனைக் காண்பதென் றெம்மிறசூல்
தன்னைவந் தாதரித் தேமொழிந் தாயது தப்பிலையென்
றுன்னைவந் தாதரித் தோர்க்குமென் னேடுற வானவர்க்கும்
பொன்னேவந் தாண்டுநற் பேறெமக் கீந்தருள் புண்ணியனே. (406)

புண்ணிய னேபொறை யுள்ளவ னேபுவி யோர்கள்மனத்
தெண்ணிய காமத் தெழுஞ்சுட ரேநிறை தெவ்வகையுங்
கண்ணிமை யோடுருக் காண்பதுபோற்கலந் தாழ்பனே
தண்ணிய பாவிக் கிரங்கியுன் னற்பதந் தந்தருளே. (407)

வேதத் துவக்கம் விரிவா யனைத்தும் விளங்குமுதல்
ஆதத் துவக்க மஹம்மது ரோடுயி ரண்ணுமுன்றன்
பாதத் துவக்க மறிந்தறி யாப்பஞ்ச பாதகனுக்
கேதுக் கிடுக்க ணினித்தா வேணும்றஷூ மத்திறையே. (408)

இரவந்த மானுக் கிருகண்பொ ருக்கலைக் கும்மிறசூல்
உரவந்த வரர்க் குயிரித்த மானிடர்க் குள்ளுடலுங்
கருவிந்த மாதிக் கருள்தரு ஹக்கனே நின்னடியேன்
சொருவெந்த நாளுந் துனையன்றி வாழ்கவென் றுய்யவனே. (409)

துய்யவ ராவி துலங்குமெஞ்ஞானச் சுடரொளிக்கென்
னுய்யிரு காதை வளைத்துப தேசித்த வுள்ளுயிர்க்கென்
றய்யரு ளாவிக் கஹம்மதுள் ளாவிக் கருளடியேன்
வெய்யிரு பார்வைக் குயிரினைத் தந்திடென் மேலவனே. (410)

மேலத் திசையி லெழுங்காற் றுதிர வெயிலுமெடுத்
தாலைக் கடந்தெழு மக்டனி யிரலு மந்த்ரநிணம்
மூல மணிப்பித்து மப்பினில் மூளையுஞ் சேர்ந்துனது
காலைப் பிடிக்கத் பிலையெனக் கீந்திடென் காவலனே. (411)

காப்போ ரழகுங் கடலதி னோசை ககனமதின்
ஆர்ப்போ டனலெலும் புஞ்சசி வேருமி தஞ்சுமொன் றாய்ப்
பார்ப்போ ருளத்தில் பனாவாய்த் தெரியுப ராபரத்தின்
தேர்க்கா லருளைத் தருவா யெமக்கொரு தீங்கிலியே. (412)

இல்லையென் றெண்ணா மியங்கரி தான விடையிலொரு
தொல்லையென் றெண்ணா மியங்கா தெழுந்த சுபசொருபத்
தெல்லைகண் டுன்னை வணங்கா தெளியர்க் கிரங்கி நெடுந்
தில்லையென் ருள்பவ னேதரு வாய்நின் தீ தாறெமக்கே. (413)

எனக்குயர் ஞானச் சுடரொளி யீந்தரு ளெம்மிறையென்
றுனக்கொரு நாம மறிந்துதொ ழாம னுழன் றடியேன்
சினத்திடு மாந்த ரிடத்தேகை யேந்திச்செல் லாமலுள்ளத்
தனப்புறுங் காத லினைத்தர வேணுமென் னாண்டவனே. (414)

வினையச்சம் பாவ மிடிமைகண் ணோறு மெலிகுறையுந்
தனையச்ச மானோர்க் கணுகாமல் நீயுந் தவிர்த்துமண்ணில்
எனையச்ச மாமவ ருக்குமென் னோடுற வானவர்க்கு
முனையச்சம் பூணவுதவிசெய் வாயென் று முள்ளவனே. (415)

உள்ளெழுத் தஞ்சு முடலெழுத் தேழுநம் முள்ளுயிரில்
என்ளெழுத் தேக சொருபமென் றோங்க மிருதயக்கண்
வெள்ளெழுத் தஞ்சும் விழலெழுத் தென்றதை நீக்கிவரும்
வள்ளலுக் கஞ்சு வடிவீந் தெமக்கருள் வல்லவனே. (416)

வல்லப மென்ற தனைத்துமெஞ்ஞான வடியுருவத்
தில்லெழுத் தேக சொருபமென் றீதற் கிழிவுரைத்தோர்
புல்லரென் றுன்னைத் தொழுதாலும் பொய்யிரு ளேகிவரும்
நல்லற மென்றதெற் கீந்தருள் வாயுயர் நாயகனே. (417)

நாயக மாயெவ் வுலகுக்கெல் லாம்வரு நல்லுயிரென்
றோய்வொரு நாளுமில் லாநந்தி யோது னருள்வெளிக்குள்
மாயவன் காவல்கொ டாள்பவ னேமதி யாமலுன்னைப்
பேயனொந் தேதுசொன் னாலும் பிழைபொறென் புண்ணியனே. (418)

புண்ணிய பாவப் பிரளய முற்றும் பொருளுளத்தில்
எண்ணிய காமத் தரளத் தொளியி லெவர்க்குமனத்
தெண்ணியமெய்ஞ் ஞானத்தெரிசனைக் குள்ளுனைத்தேடியிரு
கண்ணிமை யாநறிந் தெற்கிரங் காய்நீஹக் கானவனே. (419)



ஹக்கா மனித்த ருளத்தே யுறைந்ததென் காரணத்தால்
நக்கா தினித்த நறுமாம் பழத்தை நவின்றெவரும்
சிக்கா தருந்தக் கடனாகுந் தீங்கிலை தேறுமனச்
சக்கா னதைவிட்டுனைக்காண நின்றருள் தானவனே. (420)

தானா யெழுந்து தவத்தால் நிறைந்துநின் தற்சொருபத்
தேனா றெழுந்து திருவாய்ச் சுரந்தநற் றெள்ளமுதை
நானாரு நாத நபிதாண் மொழிந்துன்னை நாடிவந்தேன்.
ஆனாலு மந்த மணமீந் தெனக்கரு ளாண்டவனே (421)

### கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆளுநின் னருமை யாரறிந்திடுவ ராலமென் றுலகெவ் வுயிர்க்கள்கண்
டசையா துன்னருள்கோ டஹூமதஞ்சுரு வாணியானதை யறிந்து (நின்)
றுள்நி றைந்துதவ ருமலெங்குமர சானாநின்தலீ லாகவே
தலைமேலுவந்தறி வாயுவந்துநீ தயவாக நின்றென துயிருடம்
பேழுபங்கிலுநீ யுறைந்தவெங்கதி ரெழுந்தரூபசொ ரூபந்தெரிந்
தேழைவந்துநினோ டிரந்ததென்றிக ழாமல்நின்றெனள விரங்கிநீ
வாழுமுன்றனிரு பாதமும்வடிவும் வரிசைநின்றிரு வமுதமும்
மனமுஞ்செங்கமலத் தருளுந்தந்தென்னை மருவவந்தரு ளன்பனே.

வரவுகண்டடியன் மனதுகொண்டுனது வடிவுகண்டுபல வரிசையால்
வளையநின்றரிய பழையநன் றிதரு மலரலர்ந்துனடி வருடியே
உதவுகின்றபொரு ளுனையொழிந்துவே றுலகிலில்லையென் றிளமகிழ்ந்
தொளிதிரண்டருவ ரூபமென்றதையுள் ளுயிரறிந்துடலம் வெருவிட
இரவுநந்தம்வெயி லிருவர்சந்தமதி லெழுமிரண்டினோ டுடுவினம்
இருகணைந்தவெளி தெரியுமந்தவிருள்தெரியுஞ்செங்கமலத் திருவிழி
விரைவோ டொங்குமொளி தெரியநின்றுபல விபரமென்ற றிந்துநீ
மிகுதியென்றனொடுமருவவந்துனருள்விரைவொடீந்தருள்வேந்தனே

### கட்டளைக்கலிப்பா.

பிஸ்மில் லாகிர்றஹ் மானிர்ற கீமென்றும்
வேத நாயக னஹ்ம தொளியதில்
கொசுவிற் பாதி பகுந்திறை யோனந்தக்
குவலை யம்பதி னெண்ணா யிரங்கொடு
வசும னும்பதி னெண்ணா யிரமகத்
தண்ட ரும்பய காம்ப ரடங்கலுந்
துசும னானவ ராளு முலகையும்
சொற்க மும்மதில் மெய்ப்போடுண் டாகையால். (424)

ஆவென் ருஷிக் கெழுந்திடு மாழிமி
லன்பு கொண்டொரு யேஅலி பாகுமன்
ஏக னுயன் கிருபைகொண் டாழ்கட
லில்லல் லாவென் றெழுந்திரை யோசையால்
ஹீயென் றேகன் கிருபைபெ றும்மொலி
கேட்டு ஹீயென் றெழுஞ்சுட ரசகையால்
தாவென் றேவருஞ் சங்கினி டத்தொரு
தாள மோங்கித் தனியனைத் தேடுமே. (425)

## வெளிவிருத்தம்.

சேகன நற்பெரி யோர்களி மானொடு சென்னத்தைத் தெரிதல்
சாலிகு லானவர் சட்குப தேசித்த சற்குவைத் தெரிதல்
சூபிக ளுக்கொரு சோபன மெய்மிற சூல்நபியைத் தெரிதல்
போகிக ளுக்குரு வானவ னேயெம துள்ளத் தெழுந்தருளே. (426)

## வேறு.

சென்னத்துல கெட்டுமுயர் சிவலோகம தாறும்
மின்னத்துறு நபினொரொடு முகியித்தீனுக் கும்நின்
றன்னத்திடு நடமாடிய வரசேயடி யேனுன்
உன்னைத்தெரி சனையுற்றநல் லுவவிந்தரு ளுகவே. (427)

## அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருளுதற் கரிதாய் நின்றங் கவரவர்க் கடிமை செய்யும்
பொருளினைத் தருமெய்ஞ் ஞானப் புகழ்ச்சியின் மகிழ்ச்சி யானோர்க
கிருளினை யகற்றி யுள்ளத் தெழுங்கண்ணு மிரங்கண்ணுக
வெருளதை நீக்கி நாலாம் விளக்கமீந் தருள்செய் வாயே. (428)

செய்யினு மேவல் தந்தை செயலினைச் செய்யுந் தாயார்
சய்யிரு வைகையுங் கூடித்தரித்தொரு ருபமாகிப்
பொய்யிரு ளகன்று ஞானப் பொருளெனக் குபதேசித்த
அய்யரென் னுளத்தில் வாழ்கஆமினல்லாகு ஆமீன். (429)

## வேறு

ஆமினென் றுன் னடிபணிந்துன் னருளைவேண்டு மவரைநீ
மூமினென்றுன் கிருபைநாம முழுதும்பேசி நின்றவா
பூமிவானுன் னவர்கள்பேறும் பொலிவும்வாழும் றகுமத்தும்
நாமியாது செய்ததுண்மை நழுகொணுதெந்நாளுமே. (430)



நாளும்வண்ணி ஞானம்நல்கி நவின்றவர்க்கைம் புலனுமாய்
மீளுமூலக் குகையிலேமுக் கோணுக்குள்ள வறிவுநீர்
கூழநெய்யுங் கரைந்துக்காச்சிக் தறுக்கிவார்த்தோ ரெழுத்தையீந்
தானுநந்தி யருளலாம லாருண்டெனகுன் தலீலக்லா. (431)

## கலித்துறை.

அல்லா வுனக்கு மெனக்குநின் னும மடியவர்க்கும்
பொல்லாதவர்க்கு நபிமக்கள் நாமம் புகழெனிற்பொன்
னில்லா தவர்க்கு மிறைவர்க்கு நாளொரு ரசசியென்று
சொல்லா லவர்க்கும் வருமோசெங் கோலென்றுந் துய்யவனே (432)

துய்ய மனத்தைக் குருக்களை நோவித்த துர்ச்சனர்கள்
கய்யி லிருக்குஞ்சுண் ணும்பை மடிதனிற் கட்டிப்புனல்
தொய்ய நடக்க வெரித்திடு நீரந்தத் துர்ச்சனர்கள்
செய்யும் வருத்தந் தவிர்ப்பா யெமக்கொரு தீங்கிலியே. (433)

தீங்குறும் பாவங்கள் தேன்கனி யாம்நின் றிருவுளத்தின்
பாங்குறுஞ் சீர்வேம் பினுங்கசப் பாகும் பராநந்திசொல்
ஆங்குறுங் காயத்தி லண்ணிடுஞ் சீவனுக் கன்புதரும்
வாங்குடன் காமத் தொழுகையு நீவழு வாதவனே. (434)

## வேறு.

வழுவாநெறி யிமான்றிரு மனமானது நிகுமத்
தொழுகானது நானம்முமி ருடலாமுனத் தறிவின்
றெழுகாலொளி நபியாதமுள் ளிடங்கஃபதுல லாவின்
புழுகாதறை தருமாமலர் புகழீந்திடல் லாவே. (435)

பேயோடொளி சீனும்முயர் மீமோடுலா மலிபும்
ஹேயோடொளி றேநூனுயர் ஹேவொல்ப தெழுத்தும்
ஓயாதிசு மூல்அஃலமென றுனதன்புறு நாமத்
தாயும்பொரு ளேநீயெமை யாட்கொண்டருள் வாயே. (436)

வேதாந்திகள் காணிலதை பிஸ்மிலென வின்வார்
பேராய்ந்தறி யாதார்வெகு பிழையென்றதை மிகழ்வார்
சீராய்ந்துன ஞானிக்குயர் திருமந்திர மெனதல்
லாராய்ந்திடு மிறைவாவெமக் குனதன்புதந் தருளே. (437)

அருள்தந்தெனை யடிமைகொளு மரசேயறு சுவையோ
டருள்தந்தடி தொழுமென்றிரு ளெவனென்றறி கிலனுன்
மருளுந்திட மதிதந்தெழு மனமெஞ்செயு மெனதுட்
பொருள் தந்திரங் கிடுநீபல புகழுக்குரி யவனே. (438)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உரியவ னுனது நாம முய்யுமா யிரற்றொன் றென்னும்
பெரியவ குறுதி யாகப் பேசுவா ரிதயங் காணார்
அரியநின் னும மிஸ்முல் லஃலமென் றநுளும் ஞானத்
தெரிவுறு பரமா னந்தத் தேசிகா துணைச்செய் வாயே. (439)

மாறுலு கஃப துல்லா வாயலில் வளரு மன்னு
காலுறுங் காலத் தோங்கிக் கருதுமுண் டகத்தால் வென்றிப்
பாலுறும் வலப்பா கேத்திப பசுபதி பரம னின்ற
நால்மறை தருமெய்ஞ் ஞான நடுவனே துணைச்செய் வாயே. (440)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

யாமன்சி வாக்கென வின்னாயி ரமாகவா
றெழுதின மகலா மல்நின்
றேமன்சி வலையமுள் ளாடுங்கண் ணுடியிரு
ளேகும்வி யாதி களறும்
யோகஞ்செ லாதரசோ டாரு ம வந்திடுவ
ருலகில்முக வசிக மாமென்
றீவஞ்சி லாவுமிது தானென்றென் னேடருளு
மிறைவா ஜெயந்த ருகவே. (441)

தருமெந்த நாளுமுன தரவிந்த மானதுயர்
தலிலென்றுன் னருள்பெ ருகநீ
வருமந்த ஞானவடி வுருவந்த மாயெனது
மனவிந்தை நாத மெழநல்
குருவந்து லாவியொரு குறையன்றி வாழ்கறபி
குறிகண் டெமக்கி றைவனே
திருநந்தி வாசமுள் ளருளென்று காணவுயிர்
திருமந்தி ரந்த ருகவே. (442)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தந்தவேத நான்குமாறு சாத்திரங்க ளானதும்
வந்துபேசு நாதரும் வழங்குதேவ னேந்துங்கண்
டுன்றன்நேர்மை யின்னதென் றுரைக்கொணுதென் னொருவனே
எந்தநாளும் ஹுப்புகொண்டென் னளவிரங்கெந் நாளுமே. (443)

நாளுமைம்பு லங்கள்நம்பொ ணுதபஞ்ச பூதமும்
வாழுமஞ்சு அரவையும் மனத்திலு லொடுக்கிநின்



ருளிதென் றிறைஞ்சநல் தலீல்தந்தீ டேற்றிநின்
ருளுநந்தி யருள்கொடென்ற னளவிரங்கெந் நாதனே. (444)

இரங்கெந்நாளு மென்றுன்னே டிரந்தபேரி னுட்கலந்
துரங்கண்ணுடிக் குள்ளெழுந் துயர்ந்தபட்ட ணத்திலோர்
அரங்குமாட கூடம்பள்ளி யறையுங்கண் டுன்னஹுமதர்
சிரங்கண்ணுடி யாலுயர்ந்த தெளிவுதந்தி டொருவனே. (445)

ஒருவனன்பு பெருகவென்று முலகைநேர்செய் திடுமிசன்
முருகநண்பு கொடுவணங்கு முதலவாநின் மலரடி
தருவனென்று பெருக நம்பி தளர்வர்நேர்வி டாமல் நீ
வருவனென்று குருமொழிந்த வரிசைதந்தி டிறைவனே. (446)

வெண்பா.

இறையென் றெவருமுன்னை யேத்தா துனக்கோர்
குறைகளென்ன நன்னிறைவே கோமான்—மறையவர்கள்
வார்த்தை வழாது வழுவா துளத்திலெழுங்
காற்றையணு காதிருந்தக் கால். (447)

கலித்துறை.

காலுங் கரமு மரந்தனக் கேன்விழி கள்வனுக்கேன்
பாலும் பழமும் பசும்பிள்ளைக் கேன்பசி யாதெமக்கேன்
பூவு மதுவுங் குரங்கினுக் கேன்பொறி வண்டுக்கல்லால்
ஆலு மரசும் பணிக்கேன் யெமக்கரு ளாண்டவனே, (448)

நெடியவ னேநின் றிருப்பாத மென்னுளம் நின்றதனால்
அடியனுக் காதர வீந்தரு ளென்றுன் னளவிரந்த
கொடியே னுனைப்போற்றி லன்மிடை யாலக் குறைகளற
முடிவேது மற்றவ னேதரு வாயருள் முக்கியமே. (445)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முக்கிய மானது பேரறி வாமுயர் முப்பொ ருளைத்தெரிதல்
எக்கீன் மரத்தி லெழுந்தொரு மாமயி லீன்ற பசுங்கிளிமுன்
நக்கிய தேனமு துச்சியில் நெற்றி நடுப்பட நின்றுதறும்
மக்கிய மானுருத் தங்கிடெ மக்கொருமாசணு காதவனே. (450)

மாசணு காதவ னேவடி வேவரி சைப்பொரு ளானவனே.
ஆசணு காதவ னேயர சேநீ யனைத்தையு மாள்பவனே
ஏசணு காதவ னேயிறை வாயுல கெங்கு நிறைந்தவனே
ஊசணு காதெமை யாரறி வார்நீ யுவந்தருள் பன்னவனே. (451)

மன்னவ னேவழு வாதவ னேவடி வாமால நபிக்கரசே
தென்னவ னேதெளி வானவ னேதெளி யாரறி யாதவனே
முன்னவ னேமுத லானவ னேயெழு முச்சுட ரானவனே
என்னவ னேதரு வாயெளி யேற்குன்றீ தாறென துத்தமனே. (452)

## கலித்துறை.

உத்தம னேயுனை யாரா லுந்தேடி யுழன்றழன்ருல்
எத்தல மேதிலென் றெண்ணப்ப டாதென் னிறையவனே
நித்தலு நானுன்னைத் தேடிய நிய்யத்தை நிகபூல்செய்
தத்தலம் நீயெனக் கீந்தருள் வாயுவந் தாள்பவனே. (453)

ஆளு மறைக்கர விந்தமா மஞ்செழுத் தாய்நிலை
ஏழுண் டறுசுக் கெதிர்த்தல மேலவ ரெண்ணத்திலும்
வாழு மரசர் முகத்திலு நூலிலும் வாசத்திலும்
நாளும் வரிசைப் பொருளெனக் கீந்திடென் னாயகனே. (454)

நாயக னேநழு வாதெமக் கீந்திடு நற்கொடைநீ
தோயவன் வெள்ளை யுடுப்பது மாமணஞ் சூட்டுவநின்
ருயநின் னேவல்கொ டால நபியரு ளாலென் றனுனுக்
கீயும் றகுமத்தும் நீதரு வாயென் னிறையவனே. (455)

## சந்தவிருத்தம்.

இறையுனக்கோ ரலைவுதுக்க மிலையெனக்குள் ளிருவினைக்
கறையகற்றி யகமெரித்த கசடுபொய்த்த குபிறெனுங்
குறையகற்றி யருள்பொதித்த குருமனிததர் வடிவுகண்
டிறையதற்குள் ளுறையுமுத்தைநிகரமைத்த நெடியனே. (456)

நெடிமைநீதி நெறிநல்லோர்கள் நிலைமைஞான மௌனமே
அடிமைநானின் னளவிரந்துன் னடிபணிந்து புகழ்வனீ
மிடிமைநோவு பிழைகண்ணேறு முழுதுப்போக்கி யெனையுவந்
திடுமென்னுவல்தெளியவந்தென் னிருகண்பாரென்னிறைவனே (457)

இறையுனன்பு தருமுஹம்ம திருதயத்துள் ளொளிதிரண்
டறையுநான்கு மறைகளோதி யலையுமாந்த ரறியொணுக்
குறைகண்ணுடி தெளிவிடாது குவலையேகுங் கதிரலாற்
றையகன்ற தெளிவுதந்தென் கவலைபோக்கென் னிறைவனே (458)

இறையுனக்குள் ளொளிமனித்த ரிதயமொக்க நிலைவிடா
துறைவதற்கு ளுயிரனைத்து முயர்பனிக்கோ டமைசெய்தே
மறைவெனக்கு ளிருளடித்த மதிமயக்க மணுகிடா
தறையுனைக்கண் டறியமுற்று மருள்வினைத்தி டன்பனே. (459)



## கலிவிருத்தம்.

உன்பிழை யுலகெலா மொழிக்கப் பாரமோ
தன்பிழை கைபடத் தனக்கு நோவுமோ
கண்பிழை மனதினிற் காண நீதியோ
என்பிழை நீபொறு இலாஹி நாயனே. (469)

## வெண்பா.

1 அலூதுபில் லாகியென்ற டைக்கலமா னேனடியே
னெவருமிட ருமற்கா ரிறையோனே – முதல்வோனே
பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீ மேயுலகில்
துஸ்மனைத்து ராக்கியருள் தூஞ்சானே பசுபாசத்
தாதிமுத லோனே யநாதியே அல்லாவே
சோதியிறை யோய்துணை யானவனே—நீதியாய்
வந்தடிய வர்க்குறுதி மாருமல் நல்லிரணம்
தந்துதவி செய்தருளுந் தானவனே—சிந்தையுறும்

5 பழையவடி யார்க்குதவும் பழப்பொருளே பாரிலெங்கள்
பிழைகள் பொறுத்தருளும் பெரியோனே—விளைவுதரும்
மெய்யடியார்க் கென்றுமுள்ள மெய்யனே மெய்மறந்த
பொய்யடியார்க் கென்றுமுள்ள பொய்யனே—நொய்யடியும்
தூருந் துலையுந் துவக்கமுடி வுப்நடுவும்
வேருமொரு வித்துமில்லா வேந்தனே—பேரும்
பிறப்புமொரு வர்க்குரையாப் பெரியோனே பேசிலுனக்
கிறப்பொருகா லுமணுகா திருப்பவனே—சிறப்புடைய
அண்டர்தொழு தேத்துமெங்க ளல்லாவே யன்புறுநல்
தொண்டரிடமாகிநின்ற துல்லிபமே—நன்றிதரும்

10 துய்யபெரி யோனேபல் துக்கமணு காதவனே
வய்யமுழு தாளுமுயர் வான்பொருளே—பொய்யருனைக்
காணவரி தாகியொரு காலந்துயி லாதவனே
சேணிலடி யார்க்கிரங்குஞ் சீமானே—வீணர்
தவத்தை வெறுப்பவனே தற்பரனே யெவ்வுயிர்க்கும்
பகுத்தறி வீந்துதவும் பார்த்திபனே—செகத்தில்வரும்
நல்லார்க்கு நல்லவனே நாயகனே நின்னடியா
ரெல்லார்க்கு மொன்ரு யிருப்பவனே—வல்லபங்கள்

என் றுமழி யாதவனே யேகனே யெப்பொழுதுங்
குன்ருத வாழ்வுடைய கோமானே—தென்டமுறும்

15 ஏழையடி யார்க்கிரங்க மில்லல்லா வேயெங்கள்
வேனே யறிந்துதவும் மேலோனே—கோழையுடன்
குற்றமணு காத குறைபழுதொன் றற்றவனே
யெத்திசையுந் தாஞ மிருப்பவனே—வெற்றி பெறும்
மூமினோர்க் கென் றுமுயர் முத்திதரு முப்பொருளே
ஆமீனென் ருர்க்குந்தலீ லானவனே—பூமிதனில்
உன்னைத் தொழுதவர்க்கு முனைமறந்த வீணர்க்கு நல்
மின்னத்துச் செய்தருளு மேலோனே—ஜென்னத்தில்
அறப்பெரிதாய் வந்துதவு மல்லாவே யெங்களுக்குஞ்
சிறப்புடைய வாழ்வுதருஞ் சீமானே—உறப்புடையோர்

20 செங்கமலத் துட்பொருளே தீங்கிணையில் லானேயுல
கெங்குங்கலந் தீடேற்று மிறையோனே—அங்கம்
உறுப்பில்லா வுத்தமனே யுவமைபழு தற்ருேனே
நிரப்பமுற வெங்கு நிறைந்தோனே—விருப்ப முள்ளோர்
இருதயத்தில் நிற்பவனே யெவர்க்குந்துணே யேயென்று
முறுதிகுறை யாதவெங்க ளுடையோனே—அறுதியுடன்
போதமக லாதவனே புண்ணியனே புத்திதரும்
வேதமுத லாகநின்றமெய்ப்பொருளே—ஆரும்
அறியா தகப் பொருளேயன்பனே நின்னடியார்
நெறிகளாய்ந் துணரும் நெடியோனே—குறியான

25 மூலப் பொருளே முகவசீகர மேயுவந்து
காலத் தெழுமடியார் காண்பவனே—மேலத்
தவத்தி லிருப்பவனே தம்பிரா னேகுபிரை
அவத்தமதி லாக்குமெங்க ளல்லாவே—தொகுத்துயிர்கள்
அனைத்தும் படைத்திரண மருள்பவனே யடியவர்கள்
நினைத்ததுதந் தீடேற்றும் நித்தனே—உனைத்தொழுது
கேட்டோர் நினைவைக் கிருபைசெய்வோ னேயடியார்
நாட்ட மறிந்துதவம் நாயகனே—யேட்டி
லெழுதரிய கோமானே யெவ்வுயிர்க்கு மேலோய்
முழுதுமெண் ணளவிரங்கு முன்னவனே—பழுதுபல



30 வினைகளணு காதவனே மேலோனே மெய்யோர்
அனைவருநீ தாஞ யடுத்தே—யுனையெவரும்
போற்றப்பர மானவனே புண்ணியனே புத்தியுள்ளார்க்
கேற்றமுற ரட்சித்திரங் குப்பொருளே—தோற்ற
மொடுக்கமுள்ளோ னேயுனக் கூனுறக்க மற்ருே
யிடுக்கமணு காத விறையே—நடுக்கமுடன்
ஈனம் பழுதுபல விடையூறில் லானேமெய்ஞ்
ஞானமொரு காலநழு வாதவனே—வானவர்கள்
நாடிப் புகழுமவர் நாவிலெழுந் தெங்களுடன்
கூடிக் கலந்திருக்குங் கோமானே—தேடிலொரு

35 திக்கி லுநில் லாதவனே சீமானே யெப்பொழுதும்
மிக்கமிடை சற்றுமில்லா வேந்தனே—தர்க்கமுறும்
ஆரணத்துக் கெட்டா வகப்பொருளே யாண்டபரி
பூரணமா யெங்குநின்ற புண்ணியனே—காரணஞ்சேர்
ஏவல் விலகல்குபி ரீடேற்றம் பாவமனக்
காவல்தரு மெய்ஞ்ஞானக் காரணனே—ஆவலுறுந்
திருவினைக்குந் தீவினைக்குஞ் சேர்ந்துபொது வாகிநின்ற
இருவினைக்கு மெட்டா திருப்பவனே—குருவெனக்குச்
சொல்லுமுப தேசமதில் தோன்றும்பொரு ளேதுபிறை
வெல்லுமிஸ் லாமில் விளக்கொளியே—அல்லுமெழு

40 பகலுமில்லாப் பட்டணத்திற் பாங்குபெற வாழ்வோனே
கவலுநிற மொன்றினுங்கா ஞநவனே—புவனிலெங்கள்
வல்லோனே யாரு வணங்க வுரியோனே
நல்லோர் புகழவரு நாயகனே—யெல்லா
மருந்துயர மாயணுகுஞ் சிற்றின்ப மேயறிந்தோர்
பெருந்துயர மாயணுகும் பேரின்பமே—வருந்துமலர்த்
தெரிசனைக்குள் நிற்பவனே தெளிவே சுவைநாவில்
உரிசைரச கந்தருபப் பரிசோசையே—வரிசைதரும்
அவ்வெழுத்தா யவ்வி லடங்காது டந்தையுமாய்
உவ்வெழுத்தி லோங்கிநின்ற வுத்தமனே·யெவ்வெழுத்தும்

45 ஒன்ருகி ரண்டா யுருவாயென் னுள்ளமதில்
நின்ருவி யெங்கு நிறைந்தோனே—கண்டாலும்

இன்னநிற மின்னவடி வென்றெருவ ரேத்தரிய
வன்னநிற மாயுயர்ந்து வாழ்வோனே—உன்னுமுள்ளத்
தாதார மாறுங்கடந் தப்பாலுக் கப்பால் நின்
றோதாம லோசைதரு முட்பொருளே—யீராறுங்
கல்லாக் கயவர் கண்ணிற் கனவிலுமெட் டானே நிலை
நில்லாரை நீக்கி நிறைந்தோனே—பொல்லானை
நாடேற்ற மாகவரு நபிஷபா அத்துடன்சேர்த்
தீடேற்று மெங்க ளிறையோனே—கோடாமல்

உன்னைத்தொழு தேத்து முரியவடி யாரோடு
மென்னைத்தெரி சித்துணரு மேகனே—மின்னத்தால்
அப்புமுத லானபடைப் பத்தனையும் போற்றவரும்
ஒப்புவமை யில்லா வொருவனே—கற்பலிதன்
புத்திக்கட லேபற் புகழ்ச்சிக் குரியவனே
சற்றுங்குறை யற்றுநின்ற தற்சொருபே—யெத்திசைக்கும்
மூலமணி மந்திரமே முஹம்மதுர்ற சூல்மொழிந்த
காலமுத லாய்ந்துதவுங் காவலனே—ஆலம்பதி
னெண்ணுயிர முப்புகழ்ந் தேத்துமிறை யோயுவந்
தண்ணு மலயன்றெழு மல்லாவே—உண்ணுமல்

உதரப் பசியுமனத் துட்பசியு முள்ளவர்க்குன்
குதறத் தமுதளிக்குங் கோமானே—சதமுற்
றரியகலை யாகமங்க ளாராய்ந்து தேடினுநீ
தெரிவரிதாய் நின்றனைத்துந் தேர்பவனே—உரியபுக
ழுற்றஷரீ ஹத்தி லொழித்தெவருங் காணரிய
வெற்றிதரீ கத்தில்விளங் கும்பொருளே—முத்தொளிசேர்
நீதிஹகீ கத்தில் நிறைந்தோசை கொண்டரிய
வாதிமஃரி பத்தில்வழங் கும்பொருளே—வேதியர்கள்
ஹாப்புமஃரி பத்தில் குறையாமல் நின்றடியேற்
கெப்பொழுது நன்மைநல மீபவனே—யொப்பரவோ

டஞ்செழுத்து மைம்புலனு மஞ்சுபஞ்ச பூதமுமே
தஞ்சமென நின்றருளுந் தானவனே—நெஞ்சகத்தில்
உன்னினைவ றிந்துட் கலந்தெங்க ளுக்குமுயர்
மின்னும் பதவிதரும் வேந்தனே—பின்னுமுயர்



அண்டர்முனி பேயரக்க ரறியாமல் நின்றுலகில்
தொண்டர் தெரி சித்துணருந் துய்யவனே—கண்டருனை
யெண்ணுவகைகண் டிழிவுவகுத் தோய்மனக்
கண்ணுலொளி தெரியக் காண்பவனே—விண்ணோர்கள்
விசுவாசியானவனே மேலோனே மெய்யடியார்
பசுபாச மீதுறையும் பார்த்திபனே—நசுகாபுக்

கீனமணு காமலிரங்கும்பொரு ளேவசுவா
சானவனோ டன்புபொருந் தாதவனே—தீனவர்கள்
கல்பதனுக் குள்ளுறையுங் காவலனே யாங்கள்செய்த
வல்வினைகள் போக்கிவர மீபவனே—தொல்லுலகில்
எறும்புகடை யெண்பத்து நான்குநூ றுயிரத்தி
லுறும்பொருளா யெங்குமுண வானவனே-வெறும்பயனுப்
ஆறுறு தத்துவமா யைரண்டு வாய்வுவதாய்
வேருக வெவ்வுயிர்க்கு மேலோனே—கூறுங்
கருவிகரு ணுதிகளாய்க் கைகலந்துங் காணரிய
பெரியதொரு மாய்கைப் பெரும்பொருளே—தெரிவரிய

சோதிப் பெருங்கடலே தொலைவொடலை வற்றவனே
ஆதியெவர்க்கு மூத லானவனே—நீதிசேர்
அபபுமுத லானபடைப் பத்தனைக்கு முன்னவனே
யெப்பொழுது நீகுறையில் லாதவனே—தப்பறவெண்
சிந்தைக் கமலத்திலெழுந் தீபப் பெருஞ் சுடரே
தந்தைக்கு முன் பிறந்தார்க்குத் தாபரமே—உந்திக்
கமலத் திருவிளக்கேகாண்பவர்க்குக் காண்பவனே
அவலச்ச மர்த்தாறி யாதோய்—கவலரிய
எட்டெழுத் துள்வந் திருப்பவனே யெட்டெழுத்தில்
ஒட்டுப்படா வெங்க ளொருவனே—வெட்டவெறும்

பேல வெளிக்குள் விளைந் தினித்த செந்தேனே
நாலுமுகப்பணியும் நாயகனே—ஆலமதி
லுள்ளவர்க ளோடு முயிர்க்குயிராய் நிரப்பியொரு
எள்ளளவு நீகுறையில் லாதவனே—விள்ளரிய
ஆங்கார மேல்வெளிக்குள் ளாருமன்றி நிற்பவனே
நீங்காம லெங்கு நிறைந்தோனே—பாங்காக

முக்கோணத் துள்ளுறையு ம்முப்பொருளே மூவிரண்டாம்
சக்கோணத் துள்ளுறையுஞ் சற்குருவே—மிக்கபுக
ழனைத்தும் படைப்பதன்முன் னனல் லுறையுல் கையூமென்
றுனைத்திருநா வாற்புகழு முத்தமனே—நினைத்துமகிழ்ந்

80 தெவ்வுயிரு மெவ்வகையு மெல்லாநீதானாய்
அவ்விலெடுத் தவ்வி லமைத்தோனே—செவ்விலெழும்
ஈரா றெழுத்தி லிருப்பவனே யீராறும்
ஓதாத மந்திரத்தி னுட்பொருளே—தீதாறுங்
காண்பவருக்குங் காணத்தெரிபவனே கசடருக்குஞ்
சேரம்பருக்கு மெட்டாச் சுடரொளியே—வேம்பரிய
பஞ்சபூ தங்கள்தொழும் பார்த்திபனே பார்முழுதுந்
தஞ்சமது வாகநின்ற தானவனே—செஞ்சொல்மறை
சொல்லே பொருளே சுவையே சுவையிலெட்டா
தல்லைப் பகலாய்நின் றுள்பவனே—நல்லவொரு

85 நீராக்கி யுற்றநெருப் பாய்நிமைக்கு முன்னெய்யப்
பாரைப் பலவாப் படைத்தோனே—சீர்மேவும்
அலையாத பேரின்ப வானந்த வெள்ளத்தில்
நிலையா யுருவிருந்து நின்றோனே—கலைமேவும்
அருளுக்கரு ளாய்நிறைந்தோ ரணுவுமயங் காமலெழுந்
திருளுக்கிரு ளாகிநின்ற வேகனே—வெருளுக்குமுன்
கௌவென்ற சத்தங் கதருமற் காரிருளி
லவ்வென்ற சத்தமுத லானவனே—யௌவென்றுந்
தானாகி நின்றுயிர்கள் சகலமுநீ தான்படைத்துக்
கோனா நபிக்குளுருக் கொள்வோனே—தேனூறல்

90 பாய்ந்தினித்த மாவும் பதவியுஞ்சேர்த் துன்னருளை
ஆய்ந்துணரு மேலோர்க் களிப்பவனே—யோய்ந்தமனக்
காபிர்களும் பேய்களுநற் கமலநா ரணனும்பல்
தேவர்களும் போற்றநின்ற சீமானே—மேவரிதாய்
மேற்பட்டங் கூடுருவி மெய்ப்பாக நின்றடியார்
ஆர்ப்பனத்துக் குள்ளுறையு மல்லாவே—சீர்பெற்ற
பஞ்சகு ணத்துறையும் பழம்பொருளே யடியவரை
அஞ்சாமற் காத்துதவு மல்லாவே—மஞ்செவையுங்



குன்னென்றமை செய்துபய கூனென் றரும்பொருளை
யென்னென் றெவர்க்குமியம் பாதவனே—முன்னின்ற

95 தில்லை விளக்கவருந் திருநபியைத் தேடியுள்ளத்
தொல்லை யிலக்கத் தெழுஞ்சுடரே—வில்லைவளைத்
தோங்காரத் தெய்தகணை யுட்கமலத் துள்ளுருகிப்
பாங்காய் வணங்கப்பர மானவனே—நீங்காத
வாசிக்குள் வாசியெனும் வலம்புரிச்சங் கீன்றமணி
யோசைக்கு ளோசைதரு முட்பொருளே—நாசிக்குள்
ஈரெட் டெனவந் திலங்குமன மந்திரத்தின்
தீதாறு தந்தருளுஞ் சீமானே—யோராறும்
நொடிக்குளமை செய்தெவையு நோக்காமல் நோக்கிவிண்ணே
முடுக்கில்நலம் பூத்தலறு மல்லாவே—நடுக்கிவரும்

100 ஹறுபுனது நாமமுய ரிஸ்முல் அகுலமென்
றறுபதறு நான்குமுவஞ் சானவனே—சர்வமுநீ
தானா யெழுந்து சமையவடி வாயெவர்க்கும்
கோனாய்ப் படியளக்குங் கோமானே—தீனபிதங்
காலைப் பிடிக்கத் தலையெவர்க்குங் கைவருமென்
றுலத் தடங்கலையு மாள்பவனே—மேலத்தெரு
விண்ணுலா மண்டபத்தில் வீற்றிருக்கு மேலோனே
மண்ணுள்ளா ரென்றும்வடி வானவனே—கண்ணி
லொளிமணியி ரண்டாயென் னுட்கமலக் கண்ணாடி
வெளிதெரிய நின்றருளு மேலோனே—தெளிவுதரும்

105 முத்தரள மொன்றாய் முளைத்த சிவமரத்தின்
வித்தாக வந்து விளைந்தோனே—சித்துநவ
கோடியமை செய்தடிமை கொள்பவனே மௌனமதுள்
ஓடிவிளையாடிவரு முத்தமனே—தேடியமூச்
செட்டெழுத்துங் கண்ணா யிரண்டெழுத்தி னூடுசுத்த
வட்டெழுத்துக் குள்ளுறைந்து வாழ்வோனே—விட்டகலா
மூன்றெழுத்தை நோக்கி முதலெழுத்தாய் நின்றடியேற்
கீன்றெடுத்த தாய்போ லிருப்பவனேஆண்டவர்தம்
கால்பிடித்துத் தூங்கியிரு கண்விழித்தோரு க்குத்திரு
மால்கொடுத்துக் காணவரும் வல்லோனே—வேல்பிடித்துக்

110 கோத்தணிந்த கோவை குலையாக் குருபரனே
பார்த்தறிந்து போற்றப்பர மானவனே—சேர்த்தெழுந்த
அய்மகவுங் கூழென் றதிற்கலந்த தேனஹூம
திய்யாரி லொன்றி லிருப்பவனே—நீயாதம்
சபீயுல்லா வுக்குயிர்நீ தானும்ஹௌ வாவுக்குங்
ஹபீபுல் லாக்குரிய காவலனே—புவியுள்ளோர்க்
காதிஷரீ ஹத்தோ டனுதிதரீ கத்தெனவுஞ்
சோதிஹகீ கத்தில்வருந் துய்யோனே—நீதியிவை
முச்சுடருந் தானாய் முளைத்துவரு மஃரிபத்தில்
எச்சுடருந் தானு யிருப்பவனே—அச்சுடரி

115 லொன்றுரைநீ யொன்றஹூம தொன்றுபே ரொன் றுட லும்
ஒன்றுயிரோ டுட்கலந்த வுத்தமனே—பண்டுவரும்
மாளைப்புலி யாயு மயிலையுமுன் னின்றபெரு
மானைத்திரு வாசமுறும் வல்லோனே—ஞானமுறு
தௌஹீதாய் நின்றுலகில் தூலகா யத்திலுறு
மாவிகால் மண்ணழலகப் பானவனே—மேவியா
ரஞ்செழுத்து மூன்றெழுத்து மல்லாதகப் பொருளாய்
நெஞ்சகத்தில் வாழ்வுதரு நித்தனே—உன் செயல்கேர
டருள்பெருகி நின்றகவு துல்லகுலம் நாசியிநூ
டிருளகலுங் காலோ டெழுஞ்சுடரே—மருள்பெருகும்

120 மாய்கைமுன் றதனிலொன்று மண்புவியு நம்முடலொன்
ருகையால் வத்துமமைத் தாள்பவனே—சோகையால்
திருப்பதியிற் செல்லாமல் தீங்குபல பாவமுஞ்செய்
துருப்பெரிய மாந்தர்க்குத வாதவனே—இருப்பவர்கள்
எண்ணமதி னூடெழுந்து மீவோர் தமக்கிரங்கி
உண்ணும்பல பாங்கருளு முத்தமனே—யெண்ணுந்
தருத்துக் குரியவனே தம்பிரா னேயெவர்க்கும்
பகுத்தரிய வாழ்வுதரும் பார்த்திபனே—தொகுத்தரிய
பேசுமறை நான்குமுன்னைப் பேரறியா தென்றுபல
வோசையுறு மாந்தர்க் குணர்பவனே—நேசமுறு

125 மெய்ஞ்ஞானத் துள்ளுறையும் வேந்தனே மெய்யுள்ளார்க்
கஞ்ஞானம் போக்கிநிறைந் தாள்பவனே—துஞ்சானுஞ்



சொல்லு மடியவரைத் தூடணித்து மேலோர்கள்
கல்பதனுக் குள்ளுறையுங் காவலனே—இல்லெனவந்
தெல்லா வுயிர்க்குமிர ணப்பொலிவு றஹ்மத்தோ
டல்லா வெனப்பெருமை யானவனே—வல்லானே
எண்ணு மெழுத்தி லொளியுருவா யெவ்வுயிர்க்கு
மன்னன் சிவமயமென் றுள்பவனே—தன்னென்றுல
கனைத்தோ டுயிர்க்கு மருபரு பத்ததிலும்
உனைத்திருநா வாற்புகழு முத்தமனே—நினைத்துவரு

130 மச்சமா ஷிக்கு மதையன்பு மன்ஷூக்கென்
றிச்சையிஷூக் காகநின்ற வேகனே—பச்சையொன்று
சுட்டதுவுங் கூட்டியே தூலகா யத்ததிலும்
எட்டுநிறம் நான்குடற் கீபவனே—வெட்டவெறும்
பாழான துக்குளுரு வானபய காம்பர்க்கரு
ளேழா றெடெழுத்தி லீபவனே—நாளாறி
லோரிரவின் னுள்ளெழுந்த வுற்றபெருங் காலைப் பிடித்
தீரிரவி னுள்ளத் தெழுஞ்சுடரே—ஆராரும்
காணரிய சிந்தைக் கமலத்தெழுந் திப்புவியில்
ஊனுருவாய் நீஅஹூம தானவனே—பூணரிய

135 காரிருளில் கானகத்தில் காரிகையைக்கைப்பிடித்தங்
காருமறி யாமலர சாள்பவனே—பாரிலெழுந்
தெண்மை தருப்வேதப் பொருளே யெழுஞானத்
தன்மைதரும் வித்தி லுறும்பொருளே—நன்மைநலம்
ஈடேற்றம் பாவ மெழுங்குபிரோ டிப்புவியிற்
கூடேற்ற மார்க்குங்குறை யாதவனே—நாடேற்றம்
இல்லா தவர்க்கு மெளியவர்க்கு நன்மைநலம்
சொல்லாம லீந்தருளுந் துய்யவனே—யெல்லார்க்கும்
பாசத்தாற் பூட்டிப் பசுவால் பதவிவிளைத்
தாஷிக்காய் நீயனைத்து மாள்பவனே—நேசத்தால்

140 கசுகசென்று மூலக் கருத்திலெழுந் தஹ்மதொடு
நசுநசென்ற போதமணு காதவனே—விசுவசென்று
சொல்லுந் தொழுகைக் கிடையில்வருஞ் சுபசொரூபத்
தில்லென் றெழுந்துதவு மேகனே—கல்பிலொன்றுங்

காணு துறைந்ததற்குங் காரணத்துக் கும்மிடையி
லாஞர்நா னென்ற ருளுபவனே—வாணுனெட்
டாதமொடு ஹௌவாவை ஆவென்றுரு வாயமைத்துப்
போதமக லாதுறையும் புண்ணியனே—நாதமெழும்

ஈயென் றஹ¬மதையுன் னிருதயத்தி லெவ்வுயிர்க்கும்
ஊவென் ஞெளிபரவு முத்தமனே—யோவென்றே

145 யானந்த ரூபமதா யவ்வென் றடியவர்க்குத்
தானந்த ரூபந் தருபவனே—தேனந்தப்
பாற்கடலும் பச்சைப் பவளக்கட லுந்தாளப்
பூக்கடலும் நூலும்பொலி வானவனே—காற்கடமுன்
அவ்விருளா யங்கோ ரணுவுமியங் காமலெழுந்
தெவ்வுயிருந் தாணு யிருப்பவனே—உவ்வென்றெழும்
வானவடி வுயிருவாய் மறைநான்கி னுச்சிபழுத்
தான கனியாய்நின் ருள்பவனே—ஞான
மருவுருவாய் மண்ணில் வடிவுருவாய்த் தானவர்நின்
னடியுருவமே தென்றறி யாதவனே—படியுருவம்

150 பாய்ந் தெழுமெய்ஞ் ஞானப் பராபரனே பதுமத்தரு
ளாய்ந்துணரு மேலோர்க்கொன் ருனவனே—தேய்ந்துவரும்
சங்கரனுக் கன்பு தருபவனே தாமரைக்குள்
அங்கரனுக் காதார மானவனே—வெங்கதிர்முன்
சுவ காமத் துளியையுருச் செய்ததைவின் னரிதார்க்கும்
சுவகாமத் தொளிசிதறுந் துய்யவனே—முகமாறில்
மின்னிடையு மலுகரொடு வெய்யவனு முஹியித்தீனு
முன்னும்லைலத் துல்கதுருய் வாழ்வோனே—யென்று
முயிருக் குயிராகி யுள்ளொளிக்குள் மேலொளியென்
றயிருக் கறுசுவைநா வானவனே—பயிரதற்

155 கப்புதவுங் காலைப்பிடித் தழலெழுப்பிக் காண்பவரோ
டெப்பொழுது நட்பகலா தேகனே—முப்பொருளின்
சிகரக் கலையறிவாய் ஜீமிலுறுந் தலையோட்டி
லிகரநிலை யீமானென் றிருப்பவனே—அகரமுதல்
ஆன பெருஞ்சுடரா யனேகனேக ரூபமதாய்த்
தீனவர்க ளோடுறையுஞ் சீமானே—ஞானபரன்



ஈண்டுவரு மூமினோர்க் கென்னுடனென் பெம்மானே
வேண்டுஞ் ஷபா அத்தருளு மேலோனே—மூன்றெழுத்தில்
ஆதிஜமால் சந்திரன ஞதிஜலால் வெய்யவனும்
சோதி றகீமுடுவான் துய்யவனே—நீதியிவை

160 யெண்ணு யிரங்கோடி யிமையோ ருளத்திலெழுந்
துண்ணு துடலுக்குயி ருள்ளோனே—கண்ணுடி
மாரிபத்தஞ் செனப்பார்வை மலுகறுன் ளத்துதிப்
போரணைத்தும் பதியானோர்க் கருள்பவனே—காரியத்தால்
மனத்திடையில் நின்றதிரு வாளுக் குறைகழித்தும்
இனத்திடைநீ ரண்டறவே சென்றோனே—நினைத்தகுறிப்
புருவாகக் கண்டதற்பின் னுலகுயிர னைத்துக்குநீ
குருவாகு மென்றுரைத்த கோமானே—திருவாழும்
முண்டகத்தி னுள்ளிருக்கு முழுக்கருவைத் தெரிசிப்பவர்
என்று முயிர்க்கரசா மென்றோனே—நன்றிபல

165 காரணமுந் தீதாறுங் காணவென துட்கமலம்
பூரணமா யெங்குநின்ற புண்ணியனே—ஆரணநா
லேதுமிலை நீயலா தென்றியம்பி யெவ்வுயிரும்
ஓதுமுனைத் தானென் றுரைப்போனே—வேதவுரை
கற்றவர்க்குங் கேட்டவர்க்குங் கல்புதிறந் துன்னருளை
உற்றவர்க்கு மென்னொடுற வுள்ளவனே—பெற்றவர்க்கும்
எழுதிப் படித்தவர்க்கு மேகாம லுண்மகிழ்ந்து
பழுதெனக் காணுர்க்கும் பார்த்திபனே—முழுதும் பல்
வல்வினையுந் தீங்குகளும் வராமற் காவல்செய்து
தொல்லுலகில் வந்துதவுந் துய்யோனே—நல்லவர்கள்

170 மெய்யில் மிடைவருத்த மிக்கபிழை நாவுளத்துச்
செய்யு மிடையகற்றுஞ் சீமானே— உய்யும்பல்
சொல்லுறுதி மாறியெழுந் தோஷத்தா லாபத்தும்
வல்வினையும் போக்கிவர மீபவனே—கல்பதனுள்
வஞ்சகமும் பொய்யறுதி மாறிச்சதி செய்வதுவும்
நஞ்சுபிஞ்சு போக்கிநல மீபவனே—மிஞ்சும்பல்
சாத்திரத்தி லெட்டாச் சதுர்ஞானத் தவக்குறைசெய்
தேத்துமதற் கப்பா லிருப்பவனே—வேற்றுறக்கம்

வாராமற் காத்து மனப்பீடை தீர்த்துனக்கொன்
றேருப் பிழைபொறுக்கு மேகனே—ஓராமல்

பேயர்போல் நின்று பிதற்றுமடி யார்க்குவெகு
பாயிதாவீந்தருளும் பார்த்திபனே—யேதுவரச்
செய்யுமனச் சூடும்பல் தீவினையு மாபத்தும்வந்
துய்யுமதைக் காத்தருளு முத்தமனே—மெய்யடியார்க்
கீனம் பழுதுபல விடை யூ றிழிவுமது
தானென் றணுகாத தானவனே—ஞானமதில்
முப்பொருளு மொன்றாய் முடிந்த முழுக்குருவென்
றெப்பொழுது மெய்ப்போ டிருப்பவனே—தப்பறநல்
லேக சமுத்திரமென் றில்முல்யகீ னென்னு முள்ளத்
தாகந்தரு மைனுல்யகீ னவனே—யோகந்தரும்

ஹக்குல்யகீ னென்னுங் கடலிலெழுங் காரணமுன்
றுக்குநல்யகீ னகவரு முத்தமனே—திக்றுல்யகீன்
ஓர்பங்கனுகியற வோசையதற் கப்பால்நின்
றீர்பங் கொலியில்லா தேங்கிறையே—காரோங்கும்
பேச்சை செயிக்குமொரு பேதங்க ளற்றிறையோன்
ஆச்சாச் செனுமாரு மறியானே—மூச்சாச்சென்
ரேடிமலக் காவியைவந் துரைகடத்து முன்னுமெனைத்
தேடியலங் கரிக்குஞ் சீமானே—நாடிக்
குறித்த மணி மந்திரத்தைக் கூடுவிட்டங் குயிர்செலுங்கா
லெறித்த மணி நாவிலெமக் கீபோய்—பறித்தமலர்

பிண்டடத்தில் வார்த்தவுயிர் பிடிக்குமந்தக் கசப்பையறுத்
தண்டத் தமுதளிக்கு மல்லாவே—கண்டத்தில்வாழ்
ஆத்துமா வென்னும்புக ழாதிகா ரணத்திலுயிர்
காற்றுவா கனத்திலுறுங் காவலனே—பாத்திமா
அஞ்சுமுலைப் பால்குடித் தயருமுனக் காளாகக்
கஞ்சமலர் கொண்டுவருங் காவலனே—செஞ்சொற்
புறுகானை அஹ்றமதுள்ளம் பொருந்துகலை நான்குமொரு
மறுக்காணு தென்று வசனிப்போய்—வறக்கான
சனது முறையோடு தலைகீழ்மே லாய்ஹதீ
துனதுறா ஹாளிய்யத்து நான் குரைப்போய்—கனதிநபி



பாதநிலந்தோயாப் பதவியுமே கக்குடையென்
ரேதுஞ் சனதையுவந் தருள்வோனே—வேதமுறை
கண்டுதொழா ரீமானைக் காண்பதற்கு றூஹானி
யென்றுறுங்கு ருன்ஹபீபுக் கீபவனே – நன்றியதைப்
பற்றியறியா வீணர் பகைவோர்வந் தோறுமறை
சுற்றுதலை கீழ்மேலாய்ச் சொல்வோனே— அற்றகுபிர்
ஈனமிடை யூறணுகா ரிஸ்லாமி லுள்ளவர்கள்
காணமறை ஹதீதுதலீ லானவனே—ஊனமறும்
மூசா நபிக்கரிய மொழியுந்தௌ ருத்ததனில்
கூசா நவுஹறுபின் கோமானே—பீசாவுக்

கீந்தமறை யிஞ்சீலுக் கேய்ந்தஹறு பானபத்தஞ்
சாய்ந்தசபூ றுக்கஞ்சுபத்தொன் ருனவனே—தோய்ந்திறகுல்
உள்ளத் துறும்புறுக்கா னுற்றபதி னலெழுத்தும்
விள்ளத்தொலை யாதிசைத்த மேலோனே—கள்ளனுனே
விண்ணஞ்சே ருலகில் விரிந்தமறை நான்கிலெழுந்
தெண்ணஞ்சு மூன்றுமதற் கீபவனே—கண்ணஞ்சிப்
பேசரிய காமப் பிரளயத்தி லேயிறங்கி
ஓசைக் கிருபைகள்நான் குள்ளோனே—தேசமதில்
ஓதுமறை நான்கும்விண்ணி லுறுமழையும் பொன்னும்பல்
போதரவோ டும்புகழும் புண்ணியனே—ஆதரவோ

டன்புதருங் காமத் தருள்சிறப்பு மெய்ஞ்ஞானத்
தன்பமுறுந் தலைமை தருவோனே—வெம்புதவு
மவ்வல்கவி மாதிக்குறு மல்லவென்றுன்கிருபை
யெவ்விலுறு நான்குமிசைந் தீபவனே—செவ்விருளாய்
முந்து மெழுத்து முதலெழுத்துந் தானாகித்
தந்தையென்றித் திக்குறுக்கிசை தானவனே—சந்தமுறும்
விண்ணவர்க்கு மாதமுகி யித்தீனுந் தாய்தந்தையென்
றுண்மைசிவ ஞானத் துறைவோனே—யெண்ணும்
அகீலொடு புத்தியதற் கன்னைபிதா கல்பருளென்
றெகீனபி யோடுரைத்த வேகனே—ஹக்கனே

அல்ஹம்து லில்லாகி யனைத்தும்புகழ் வதைக்கபூல்செய்
தெல்லாதிக் றுள்ளுறையு மேகனே—சொல்லந்த

மேலுப் றப் பில் ஆல மீனென் றிறைவநீ
ஆல மனைத்தும்படைத் தாள்வோனே—கோலமுடன்
அர்றஹ்மா னென்றுலகி லனைவர்க்குப்ஷ பாஅத்திலொரு
குறைபகராக் கிருபைதருங் கோமானே—இறைவனுன்னை
நின்றுதெரி சிப்பவர்க்கு நிர்றகீ மெனும்பழைய
நன்றிக் கிருபைதரு நல்லோனே—யென்றுமுயர்
ஏவலுறு மாலிக்கி யௌமித்தீ னென்றடியார்க்
காவலுறுங் கூலிகொடுத் தாள்பவனே—காவல்தரும்

210 நிய்யாகு மென்றுலகில் நின்சரணந் தொழுமவரோ
டிய்யாக் கநகுபுது வென்றேத்திறையே—வ இய்யாக்க
நஸ்தகீ னென்றுமிக நல்லுதவி தேடுமவர்
கஸ்திபோக் கிப்பதவி காண்போனே—விஸ்திநலம்
எட்டமனு குப்பெரியோர்க் கிஹ்திநஸ்ஸிருத்தல் முஸ்தகீமென்
றெட்டுகடும் பாலத்துத வும்பொருளே—பட்டுடையோர்க்
கிரங்கிசிருத் தல்லதீன வென்றருளு மெய்ஞ்ஞானத்
துரங்களறிந் தீடேற்றுந் துய்யோனே—வரங்கள்தரும்
அன் அம்த வென்றெலிமார்க் காகவரு நிஃமத்திலொன்
றுன்னந்த மீந்தருளு முத்தமனே—அன் அம்த

215 அலைகிமென வே அவுலி யாக்களோடு மெங்களைநீ
சலுகையுடன் கூட்டியருள் தருவோனே—பலவிதமாய்ச்
சதிகளனி யாயஞ்செய்வோர் தம்முடன்கூட் டாமலே
கைறில்மகு லூப்பியென்றுங் காப்பவனே—தெரியுநல
வாமவுலி யாக்களுட னடியேனை யுஞ்சேர்த்து
நேமநபி யோடெமதுள் நிற்பவனே—யோமதனுள்
ஒளிகள்தெரி சித்துணரா ஒலல்லாஅல் லீனென்றுன்
வழிபிழைத்தா ரோடுவருத் தாதவனே—தெளிவுறுநல்
மூமீன் களையும்பல் முசுலிமோ டெங்களையும்
ஆமீனென்ற வழிதனிலாக் கல்லாவ—ஹாமீமதில்

220 பொங்குநிகு மத்திரணப் பொலிவும்றகு மத்துமூவந்
தெங்கு முயர்பறக்கத் தீவோனே—யங்கையொடு
எரிகொடுசுட் டேபுகைத்தோர்க் கிடறுவருத் தாதெமக்கு
மரியநல வருளாமீ னல்லாவே—கதிபலவும்



விக்காமல் நல்லவர்க்கு மேலவர்க்கு மெற்குந்தொண்ட
னுக்கனுகா தருளாமீ னல்லாவே—புக்காமல்
பாசத்துறும் பசுவும்பதி யுந்தெரிந்தோ ராவெமக்கு
ஆஷிக் கருளாமீ னல்லாவே—பேசக்கென்றும்
ஓாராமற் காவல்செய்துன் வடிவுதெரி சித்திடநல்
ஆதார மருளாமீ னல்லாவே—தீதாறை

225 மூமீ னல்லபேர் முஸ்லிமோ டெமக்குமருள்
ஆமினல்லா கும்மஆமி னல்லாவே—பூமிதனில்
தந்தைதா யொஸ்தாது தருமவுனக் குருவொடெமக்
கெந்தநல முந்தருந் றப்பி லாலமீன்—உந்திதரும்
மறுஹபா வுன்னையுணா ராவன்பிழை போக்கெமக்குப்
பிறஹ்மத் திக்கயா அறுஹமர் ருஹிமீன்.

ஞானப்புகழ்ச்சி முற்றுப்பெற்றது.

ஆகத்திருப்பாடல்-687.

# முஹ்யித்தீன் ஆண்டவர்கள்

## காரண சரித்திரம்.

---

இதாகிறது, கல்விக்கடலாகிய இமாம் அப்துல்லாஹில் யாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்குத்புர் றப்பானீ வம்கவுதுஸ் ஸமதானீ, சையிதிஞ முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் தின்றும், கஷ்பு கருமத்துக்களில் நின்றும் அருமையும் அற்புதமுமான ஹிக்காயத்துகளாக அறபால் செய்திருந்த கிதாபை தமிழில் மொழிபெயர்த்தும் (முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரமென்று) நாமமிட்டு அழகான கிளேஸ் காயிதத்தில் அச்சிடப்பட்டது.

இதன் கிரையம் கிளேஸ் கலிகோ பைண்டு ரூபா. 1 8 0

## புஹ்த்தானுன் அஹ்க்கம் பீ திக்ரி கிஸ்ஸதி இப்ருஹீமிப்னு அதஹம்.

இந்தக் கிதாபாகிறது நாயகம் சுல்தான் இப்ருஹீமிப்னு அதஹம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரமாகவிருக்கும். இதில் அவர்கள் அவதரிக்குமுன் அவர்கள் தாய் தகப்பன்மார்களுடைய சரித்திரத்திலிருந்து ஆரம்பித்து அவர்கள் அவதரித்து பிறந்து வளர்ந்து இராஜாங்கஞ் செய்து அப்பால் அவ்விராஜாங்கத்தை விட்டு விலகி தக்வாவென்னும் பாதையில் திரும்பிப் பேரின்பகடலில் மூழ்கிப் பெரும்பதவிபெற்று இப்பூலோகத்தை விட்டும் வபாத்தென்னும் பிரயாணமாகிய வரையிலுமுள்ள சரித்திரங்களையொன்று சேர்த்துப் பத்துப் பஸல்களாகச் சேகரிக்கப்படுகிறது.

இவை கிளேஸ் காயிதம் விலை ரூபா. 1 0 0

ஷை அற்புதத் தமிழ் விலை ரூபா. 1 8 0

---

பெற்றுக்கொள்ளுமிடம்:—

**எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு சன்ஸ்,**

*ஹமீதிய்யா பில்டிங்ஸ் நெம்பர், 10. ஹைரோட்,*

*திருவல்லிக்கேணி, மதறாஸ்*



ஹு

# ஞான முச்சுடர் பதிகம்

இதில்

தற்கலையூர் மெய்ஞ்ஞான பிரபுவாகிய குதுபுஸ்ஸமான்

**ஹலரத்து பீர்முகம்மது சாஹிபு ஒலியுல்லா**

அவர்கள் அருளிச்செய்த மூலமும்,

அதற்கு

பாண்டியமண்டலம்-செவ்வல்மாநகரம்

மஹாவித்துவான்

**எம். ஏ. நெயினு முகம்மது பாவலர் செய்த**

**அவதாரிகை உரையும்,**

அடங்கியிருக்கின்றன.

---

இதனை

சென்னை, திருவல்லிக்கேணி,

பூஞனி மதாரிய்யா மெடிக்கல் ஸ்டோரின்

சொந்தக்காரராகிய மகாகனம் ஸ்ரீமான்

**டாக்டர். எம். ஏ. ஷேக்மதார் சாஹிபு**

**அண் ஸன்ஸ், அவர்களால்,**

தமது

மதாரிய்யா அச்சியேந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

ரிஜிஸ்டர்] **1926** [விலை ரு. 1—4—0

# முகவுரை

முச்சுடர்ப் பதிகவுரை யானது, தென்மலையாளத்தில் சிறந்த தற்கலையூரில் அடங்கிராச நின்ற நமது ஞான சூரியர், ஸ்ரீமத், பீர் முகம்மது சாயபு, ஒலியுல்லா அவர்களால் அருளிச்செய்த மெய்ஞ்ஞானப் பிரபந்தங்களில் ஒன்றாக இருக்கும். அவர்களின் சமுகத்தொண்டனான என்னையே நாயகமவர்களின் பிரபந்தத் திறவுகோலாக நியமித்து அவை ஒவ்வொன்றிற்கும் கருத்துரை, ஷரீத்துரை, திருமணியுரை, தெளிவுரை, அவதாரிகையுரைகள் செய்து விடச் செய்து சொந்த அடியார்களில் ஒருவனாக எடுத்துக்கொண்டதற்காக நான் நீடூழிகாலம் ஆநந்தப் பரவச மடைகிறேன். நிற்க இம் முச்சுடர்ப் பதிகமானது, அஹது, உஹது, வாஹிது, என்ற அடி, நடு, முடி, என்பதாய் இருக்கும். அதை விவேகிகளான உத்தம ஞானவான்கள் தெற்றென உணர்ந்து கொள்வார்களென்றாலும், நம் தமிழ் நாட்டில் வசிக்க நின்ற சாதாரண இந்து முஸ்லீம் சமூகத்தார்கள் இலேசாகத் தெளியுமாறு தெந்தமிழ் ரசமுறுகின்ற வெள்ளிய வசன நடையில் நடத்திப் போயிருக்கின்றேன். ஞானாசையுடைய நல் மாணாக்கனாயுள்ள உத்தம சீலர்களுக்கு எவ்வளவும் இன்றியமையாத முரீது, நாட்டம், தேட்டம், வாசி ஏற்றம், இறக்கம், திக்று, கல்வத்து, தவம், சாதனை, நிஷ்டை, ஊண் முதலிய சகல ஞான சாஸ்வத நியமங்களும் இதில் ஒருமிக்க அடங்கியிருப்பதால், இதைப்பற்றி நான் விசேஷித்து எழுதிக்கொள்ள அவசியமில்லை, யென்று சுருக்கி இந்நூலை பொருட்செலவு

முதலிய சரீர கஷ்ட சிரம சாத்தியத்துடன் என்னால் செய்து முடிக்கச்செய்து. அச்சிட்டு வெளிப்படுத்தி விட்ட சென்னை திருவல்லிக்கேணி மதாரிய்யா மெடிக்கல் ஸ்டோரின் சொந்தக்காரர் ஸ்ரீமான் மகாகனம் டாக்டர், எம் ஏ ஷேக்மதார் சாஹிப் அவர்களுக்கும், அவர்களின் குமார சிரோமணியான கனம் முஹியித்தீன் பிச்சை அவர்களுக்கும், ஆண்டவன் இருமையிலும் ஒருமையான அருபமான நன்மைகளை நன்கொடைக் கொடுப்பாளுக, என்று பிரார்த்தியுடன் முகவுரையை முடித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு,

பாண்டிய மண்டலம்

செவ்வல்மா நகரம்

மஹாவித்வான் ஸ்ரீலஸ்ரீ

எஸ்.ஏ. நெயினுன் முகம்மதுப்பாவலன்

உரையாசிரியன்.

ஹூ

# ஞான முச்சுடர்

பதிகம்.

## அவதாரிகை உரை.

## காப்பு. பதிகம்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவிரிநதொளி யலரியிந்ததி தீபமிட்டபெ ருஞ்சுடர்
உருகிவந்திட விருளில்நின்றதை யுரையுமென்குரு நாதரே [மா
கருதியுண்மையை யோர்மைகொண்டிடக் ககனமுச்சுடர்ப் பதிக
மருளுமுன்னுத வியனும்நபி முஹம்மத்காப்பருள் ஹக்கனே. (1)

(இ-ள்):—திருவாகிய வான் கதிரும் ஒளிவு பொருந்திய சூரிய சந்திரர்களும், இன்னும் நட்சத்திராதிகளும், மற்றுண்டான தீப கிரணங்களும், பொதிந்ததாக உள்ள ஆசை என்னும் பெருத்த காந்தி வடிவானது, இருளாகிய கன்ஜூல் மக்பிதாத்தில் அமைந்திருந்து உருகி மோக அக்கினியால் விந்து நாதமாகத் திரண்டவல்லப மானது, எவ்விதம் அதைச் சொல்லுங்கள் குருமார்களே! அப்படிப் பட்ட உண்மைப் பொருளை அறிந்து உறுதி கொள்ளும் பொருட்டு மூன்று வகை யுடைய முச்சுடர் பதிக மாகிய இந்த மெய்ஞ்ஞான நூலை அருளிச் செய்வதற்கு நல்லுதவி செய்த உன்றசூல் நாயகம் அவர்களாகிய சற்குரு முஹம்மதையே யான் இதற்குக் காப்பாகிய காவலாக நிறுத்தி வைக்கிறேன். ஹக்கானவனே!
எ-று

சித்தரக்கதிர் தீபம்வீசிடச் சிறந்தமுச்சுடர்ப் பதிகமரல்
பத்திபாய்ந்திட மண்டலங்களே பரமவாசி திறந்திட
முத்திபாழறை மூன்றுமப்புற முச்சந்தி நடு வட்டத்துள்
வத்திரப்பொரு ளாகிநின்றவா வல்லகாப்பருள் ஹக்கனே. (2)

(இ-ள்):—அஹது, உஹது, வாஹி தென்கிற அலங்கார பதவிகளான திவ்ய பரஞ்சோதிகள் இலங்கா நின்ற முச்சுடர் பதிகத்தினல் உலக வாசிகளா யுள்ள ஜனங்களுக்கு பத்திப் பாயும் படியாக நல்லருள் செய்து இரட்சித்து வாசி யாகிய நினைவின் கொத்தளமானது, தாராளமாய் திறக்கச் செய்து கீழ்ப் பிண்டங்களி லுள்ள பாழ் அரைகளின் மூன்றுசைகளும் மாய்ந்து போகவும் செய்து அப்பால் முச்சந்தியாகிய வில் புருவ மத்தியின் சுடர் விடக் கூடிய வட்டத்தில் கருப் பொருளாக நிற்பவனே! நீ இதற்கு வல்லபமுடைய காவல் செய்வாயாக. ஆமீன். எ-று.

முன்னையட்சர மொன்றுமுற்றிய வுற்பனத்தை யுரைப்பதோ
பின்னைவந்தொரு குத்துவட்டமும் பீறிநின்றது மெங்ஙனே
கண்ணேமுன்னை நீ யாகிநின்றிடு கருணைசுக்கிலம் நீயன்றோ
எண்ணுமுச்சுடர்ப் பதிகமாலைக்கு மேககாப்பருள் ஹக்கனே. (3)

(இ-ள்):—ஆதியாக இன்சான் உற்பனமாகிவந்த விதமானது ஓர் அட்சரத்தினலே தான். அதைச்சொல்ல வேண்டுமானல், நாதத்தோடு கலந்து வந்த ஒளிவானது வட்ட மாகிய ஜனில் ஒரு நுக்தாவின் வடிவில் நிற்கின்றது. அதாவது விந்து நாதத்தின் சொருபத்தில் நேத்திரத்தில் நின்கின்றது நீ யல்லவா, நீ இந்த முச்சுடர் பதிகத்திற்கு காவலாக நின்றருள் செய்வாயாக. எ-று.

அலிபுலாமொடு ஹேயுமீமு மமர்ந்ததாலி லடக்கமும்
ஒலியு மாசையு மாசைபூசையு மொக்கவாசி யடக்கமும்
வலியபாசறை யஞ்சுமொன்றதா யைம்புலன்க ளடங்கிட
வலியவல்லப முச்சுடர்ப்பதிக மகிழவல்ல காப்பு ஹக்கனே. (4)

(இ-ள்):—அலிபுப், லாமும், ஹேயும், மீமும், தால் என்பதற்குள் அடக்கம், இன்னும் வார்த்தையின் ஓசையும், ஆசையும், மற்றுண்டான வணக்கங்களும் வாசியாகிய நினைவில் அடக்கமாயிற்று, இன்னும் வல்லமை பொருந்திய பஞ்ச பூதங்களும் ஐந்து புலன்களில் அடங்கி விட்டன. மற்றெல்லா இல்முகளும் இந்த முச்சுடரில் அடங்கியதாகச் சொல்ல வேண்டியதற்கு வல்லவனே நீயே இதற்கு காப்பாக இருக்க வேண்டியது. எ-று.

ஆசியைம்புல னஞ்சுமொன்றில டங்கிநின்றிடவோர்மையால்
வாசியென்றவ பகாவெழுத்திலே வாங்கியேற்றடா மந்திரம்



முஸ்லிமவராங்கொலு முருதில் முடுகியிருதத்கந்துசெய்ய
அசுலாமீ மும்ஹேமீமு மதிலேதாலும்மயில்பெண்ணும்
ஒசியாங்குஷியாயோயாம லொன்ருயிருந்ததறியாமல்
அசியாம்ஹலாலினுகப்பறியா ரவருங்காபிறெனமொழிந்தார் (6)

(இ-ள்):—இன்னும் நாட்டமென்ற கொலுவில் முடுகி இருதத்து என்ற நினைவன் வாசி வணக்கஞ் செய்ய வேண்டிய அசலாணமீமையும், ஹாமீமையும், அத்துடன் தாலையுங் கூட்டி மயிலானது பெண் சொரூபத்தில உதித்தது. அதனலே மோகமானது அசலனவில் ஒன்றித்திருந்ததை உணர்ச்சி செய்யாமல் தன்னுடைய ஹலால் பெண்ணின பேரில் உகப்பு வையா தவர்களும் கடைகெட்ட காபிராக இருக்கும். எ-று,

பிறநதார்குழந்தையொன்றதிலே பேசியெழுந்த ஆவதுகுள்
உறைந்தார்ஜெம்ஜெம் எனுமூச்சி லூறவையறியார் காபிறென்ருர்
பறைந்தார்ஜனைப்பசலையென்றும் பழக்கப்படுத்தார்பாவியென்ருர்
சிறந்தார் கேள்வியிரைச்சலிலே தெளிந்தோர்ஹக்கையுகந்தோரே.

(இ-ள்):—பிறந்த சிசுக்களான குழந்தைகளில் தலை உச்சியின் பள்ளமானது, ஆபுஸபஸம் என்று உணர்ந்து அறியாத மடையர்களைக் காபிரென்றும், இனி ஐல் என்ற நேரத்தில் வஸ்து உதயஞ் செய்வதை மனதில ஒப்புக் கொள்ளத் தவறிய மோட்டாத்துமாக்களைக் கொடும் பாபிகளென்றும், காதின் உள்ளிரைச்சலை எது என்று தெளிந்தவர்கள் ஹக்தஆலாவின் தஜல்லியாத்தை உகந்து விட்டஆஷிக்கீன்கள் என்றும், நபிகள் சிரோமணியவர்கள் கூறினர்கள். எ-று

உகந்தாலுவமைக்கடங்காத மொழியாதொருநாளகலாது [தாம்
புகழ்ந்தால் பொறுமைக்குறிமையதாம் புகழ் சேர்மீமில்புதையல
சுகந்தான் அவ்வல்மஹறுலுலில் சுடராயிருந்ததறியாமல்
முகந்தார்கமலக்கண்ணுடி முடிவையறிந்துவணங்காரே (8)

(இ-ள்):—அந்த வஸ்துவைப் பற்றி உகந்து விடும்பட்சத்தில் யாதொரு உவமைக்கும் அடங்காமல் நிற்கும். அது ஒருவனை உகந்து கொள்ளும் பட்சத்தில் இதனை விட்டும் ஒரு போதும் விலகாது புகழுக்கு ஒரு எல்லை தராது. பொறுமைக்கும் அதுவே பாத்தி

ரமானது இன்னும் மீமின் புதையல் பொருளானது, ஆதி மஹ்ல தில் ஒளிவுடைய வடிவமா யிருந்ததை அறியாதவர்களெல்லாம் கமலக் கண்ணுடியுடைய முடிவு இன்னதென்று தெரிந்து வணங் காத வர்களாக இருக்கும். எ-று

முடிவின்சூட்ச முதலாகும் முன்னங்கெழுந்தருஷியதிலே
அடியிலிருந்தமுடிவதிலே யகாரமிகாரமென்ற சொல்லில்
தடுகியிருந்ததறியாமல் தானேயுருவொன்றில்லானே
அடுகிவளர்ந்ததவ்வருளே யகாரவட்டத்துள்ளாமே. (9)

(இ-ள்):--முடிவு என்ற சூட்சியமான ஆதிவஸ்துவைப் பற்றி விசாரணை செய்வதாக இருக்கும். அதானது மோகத்தின் ஆனந்தத் தின் உதயமாகி, கடைசி முடிவாக உலகம் யாவும் அகாரப், இகா ரப் என்ற சொல்லில் எழுந்து வந்ததை முதலறிய வேண்டும். இவ் விதம் அறிகின்ற அருட்கள் தான் அகாரம் என்ற அலிபின் வட்டத் தில் நின்றும் ஆடுகின்றது. எ-று.

வட்டத்துறைந்ததுள்ளினடு வயிரம்பச்சை பவளமது
அட்டத்துறைந்த அகரமது கறுப்பாம்பச்சையதுவாகும்
திட்டத்துடனேயுகாரமது திருவென்றெழுந்தபவளமது
சட்டப்பதியின் கதியான சிகாரத்தரளமெனவறியே. (10)

(இ-ள்);—அலிபின் வட்டத்தில் வந்து குடி கொண்ட பரம் பொருளான அந்த நீதியானது, நேரத்தில் வைரம், பச்சை, பவ ளம், கருப்பு, ஆகிய ரெங்குகளை, எடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனல் ஒளிவின் திட்டமானது, உஜூதின் மயமாக பவளமாகிய சிகப்பில அதாவது உதிரத்துடன் கூடிக் கலந்து நிற்கின்றது. இதுதான் சிகார மென்ற சிர்ருக இருக்கும் என்று அறிய வேண் டியது. எ-று.

விந்துகலைமின்பிரகாசம் விளங்குமகண்ட மேல்நாலாம்
சந்தமசந்தமப்புறத்தாற்ருனே அவ்வல்பிரகாசி
அந்தசந்த்ராக்கலையறுதியது போல்பிறப்பும்போலுருவம்
சந்திப்பிற கால்வருடிவரும் தானேமூன்ருமங்குலமே. (11)

(இ-ள்):—விந்தின் கலையாகிய சந்திர சூரியர்களின் பிரகாச மாகிய உஜூதை, விளங்கும்படியான நாலாம் மகா மாகிய அகண்



டவெளியாகிய விழியில் இருந்து அப்புறமாகிய அருஷின் மகா மாகிய புருவ மத்தியில் நின்ருநிற வஸ்த்தை, நீ ஆதிஒளிவென்று திடப்படுத்தி ஈமானில் உறுதி கொள்ள வேண்டும். அது தான் சந் திர கலையாக இருக்கும். அதுதான் இந்த ஜடலத்தை உருச்செய்து சமைத்தது. அதுதான் நினைவான தந்தியுடன் சம்பந்தப் பட்டு நிற்கின்றது. அது மூன்று அங்குலம் சுவாசத்தில் கலந்து நடக்கி ன்றது. எ-று.

கண்டவிபரக்கலையதுவைக் கருத்திலோர்மைக்கமலமதில்
அண்டமடுத்த அகாரநிலை யதுவே அறுஷோரடோடிவரும்
வண்டரறியாரிக்குணத்தை வளர்த்தேசுருண்டகாலூரடே
ஒன்ருய்ப்புறத்திலோடிவரு மொன்ருய்மூன்ருயஞ்சாமே (12)

(இ-ள்):—மேற்கண்ட விபர முடைய சந்திர கலையை நினை வில் பொருத்திக் கொண்டு வைராக்கியமாய் பிடித்து கமலமாகிய இருதயத்தில் வைத்து ஊன்றி விட்டால், மூளை மண்டலத்தில் நின்று சகல உலகங்களிலும் சுவாசித்து வோடி வரும், வண்டராகிய செளிவற்ற மூடர்கள் இதன் மகிமையைத் தெரிந்துகொள்ள மாட் டார்கள். சுருளாகிய சுவாசத்துடன் ஒன்ருகிய சுழிமுனை வாசியு டன் கலந்து விரைந்ததாக வரும். அதுஒரு அங்குலமாகி அப்பால் இரண்டங்குலமாகி, பிறகு மூன்றங்குலமாகி அப்பால் ஐந்தங்குல மாக இருக்கும். இந்தரகசியம் பீர்மார்களிடப்கேட்கவேண்டியது.

ஹக்கு முருதுப்பதிகம் ஸம்பூரணம்

## மயில் வலம்புரிப்பதிகம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முதுமயி லொளிவாய் முதலவ னறுஷில
முடுகியே யிருக்கு மவ்வேளை
புதுமணி யழகாய்ப் புகழச்சிற் றணியாய்
பொன் மணித் தவுஸினி லிருத்தி
மதுவதி லெழும்ப மலரமு தளித்து
மதுரத்தைச் சொரிந்தது போலே
குதுசியென் றுதறும் குதறத்துப் பனியைக்
குடித்ததும் வலம்புரிச் சங்கே. (1)

(இ-ள்):—மானிடவர்க்கத் தார்களுக்கு றகுமத்தாகிய வள்ளலாகிய நூறுல் முகம்மதியா வானது அல்லாவின் திருக்கொலுவாகிய அறுஷளவில் தாவூஸ் என்கிற மயில் ரூபமாக இருக்கும் பொழுது. றப்பானவன் அதற்கு அழகிய முத்துபணியாலும், மரகதத்தாலும் அலங்கரித்து ஒரு பெரிய ரத்ன சிங்காசனத்தில் வைத்து நோக்கிப்பார்த்தான் அக்காலம் அந்த மரகத மயிலானது, அல்லாவின் றகுமத்தென்கின்ற தேவாமிர்தத்தை அருந்திக் கொண்டு வந்தது அப்பால் அந்த மயிலானது றப்புடையருதுஸி என்னும் தோற்றத்தைக் கண்ணுற்று. அவனது குதறத் தென்னும் காட்சியில்முழுகி, பனியான வியர்வை தோன்ற உடிகி, சிலிர்த்து, தன் வடிவான இரக்கைகளை விசிரியடித்தது. அதிலிருந்து உதிர்ந்து விட்டபனித்துளிகளான நட்சத்திராதிகள் யாவற்றையும் அஹ்மதியத்தான வலம்புரிச்சங்கானது றகுமத்தென்னும் கடலிலிருந்து வோடி குடித்து விட்டது எ-று

திருவென வெழுந்த திறலொளி மயிலே
திரும்பியே அஹததி லூஹதாய்
அருப்பனி சொரிந்த வமுதமு முறைந்தே
யதிலொரு மீமுள் சூக்ஷம்
உருவென வாகா யுறைவொரு ஹேய்க்கும்
ஒருபேசு முத்தலக் கெழுதி
இருவென விருத்தி யெழுகட லிடத்தி
லிருந்ததும் வலம்புரிச் சங்கே (2)

(இ-ள்):—அவ்விதம் திருமணியின் கோலத்தில் கோலங்கொண்டெழுந்த மயிலானது,அஹதியத்தின் புறத்திலும்,உஹதத்துடைய புறத்திலும், திரும்பி தன்னுல் வியர்த்து உதறப் பட்டுள்ள பனித்துளி களினெல்லாம் போய் உறைந்து ஒரு மீமுடைய ரகசியத்தில் சூட்சியமாகி ஒரு ஹேய்க்கும், ஒரு பேஷாக்கும், இடையில் முத்தலக்காகி, அச்சு சித்திரம் எழுதப்பட்டு, அப்பால் எழு சமுத்திரங்களிலும் குடியிருந்நு, பலபல விதமான ரகசியப் பொருளானதும் அஹ்மது என்ற வலம் புரிச்சங்காக இருக்கும், எ-று

வாயிடம் மூடி வாசியைப் பூட்டி
வளரொளி ரவிமணி முத்தாய்த்



தாயிட மமுது அரித்தது போலோ
தருப்பொரு ளொன்றினை ஹூஹூ
காயுடல் கனியில் கறுப்பென விருந்த
காரிருட் குலந்தனைக் கலக்கி
மாவிது மருந்தா யலிபொரு லாமு
மிறைந்ததும் வலம்புரிச் சங்கே. (3)

(இ-ள்):— அவ்வாறு சொல்லப்பட்ட திருமணித் துளிகளை அள்ளி எடுத்தருந்தியதான வலம்புரியானது, உடனே வாயை இறுக மூடிக் கொண்டு, வாசியாகிய நினைவை அதில் வைத்துப்பூட்டி, ரவியாகிய நாதவிந்தின் மணியோசையைத் தாயாகிய சுவாசத்தில் நிறுத்தி வந்த சூஸ்திர பாவை தான் ஹூ என்பதாக இருக்கும். இந்த காயாகிய சரீரத்தில் கனியாகிய மனசில் சூழ்ந்திருக்கின்ற இருட் கூட்டங்களான முக்காம அந்தகாரங்கள் யெல்லாம் சிறுகச் சிறுக நாசப்படுத்தி விட்டு, கலிமாவில் உள்ள தேனை மந்திரமான திக்ருய் உள்ளில் இரைந்து கொண்டிருந்த வடிவானது, எதுவென்ருல் அதுதான் வலம்புரிச் சங்கென்று சொல்கிறதாக இருக்கும். எ-று,

இப்படிப் பதினெண் ணுயிரந் திரைதா
ணிரைந்ததும் பின்பதி தனிலே
முப்படி யிருந்த முதலஞ்சின் கீழே
முடுகியே சேரொன்றை யிழுத்து
ஹூப்புடன் சிலநாள் களித்ததின் பின்னே
குறித்தொரு சவரையுங் கூட்டி
மெய்ப்புட னேதி மேலேவா நீயென்
றெழும்பிய வலம்புரிச் சங்கே. (4)

(இ-ள்):— இவ்வாறு பதினெண்ணுயிரம் திரைகளுங் கடந்து, இருந்து, இரைந்து, பின்பு அவைகளில் அல்ஹம்தாகிய பஞ்சாட்சர வடிவத்தில் மீண்டு தரன் தானுய் சேரென்றதை தானுய் இழுத்து, சிலகாலம்வரை அவ்விதமிருந்து, கழிந்ததின் பிறகு, ஒரு சவரை உண்டாக்கி, (அன அந்த) என்று தொனித்ததுவும், வலம்புரிச்சங்காக இருக்கும், எ-று,

திரையொன் றதுக்கு ளெழுபதி னுயிரந்
திசைபுவி யமைந்திட நினைத்தான்
வரைகடல் புவியும் வானமு மடுக்காய்
வகுத்திட மன்மது திருத்தி
உரையொரு கலத்தி லிருந்தமை வுரைப்பை
யுருக்கவே யெழுதிய பலகை
மரையெலா மடங்கி முஹம்மதென் றிருந்து
மகிழ்ந்ததும் வலம்புரிச் சங்கே. (5)

(இ-ள்):— டி திரை ஒவ்வொன்றிற்குள்ளும் எழுபதினுயிரம் திசையும், லோகங்களும் அடங்கும்படியாக உண்டு படுத்திட நினைவில் நினைத்தான். இன்னும் வானம், பூமி, பாதாளம், அறுஸு, குர்ஸு, லௌஹு, கலம், முதலிய எல்லா அதிலடங்கிவிட சுமந்து கொண்டு, முகம்மது என்று முழங்கி ஆனந்தங் கொண்டதுவும் வலம்புரிச் சங்காக இருக்கும். எ-று,

குவ்விய கோலம் ஹேயொரு வாவுங்
கூடியே குபிரற வெழுந்து
அவ்வியே யெனக்கு ஆஷிக்கென் றெடுத்தே
யணைத்தது மொருகோடி வருடம்
செவ்விலே யிருந்து சேர்ந்தது மாறுநா
ருயிரத் தறுபதா மாண்டு
மவ்விலே யிருந்து மகிழ்ச்சிகொண்டருந்தி
வளர்ந்ததும் வலம்புரிச் சங்கே. (6)

(இ-ள்) சுத்த மரகதத்தின் சொரூபியான மயிலானது ஒரு ஹேயும் ஒரு வாவும் கூட்டி, ஹவ்வா என்ற திக்றை உண்டாக்கி, குபிறைவிலக்கி இருந்ததை நோக்கி வலம்புரியானது மயிலே ஆ! என்னுடைய ஆஷிக்கே என்றெடுத்து, அணைந்த கணக்கானது ஒரு கோடி வருஷமாக இருக்கும். இன்னும் அந்த இரண்டும் ஆஷிக்கு மஉஷூக்காகி, ஒன்றுக்கொன்று அணைந்து கொண்டு கிடந்த கணக்கானது, ஆறு நூறு ஆயிரத்து அறுபது வருஷங்களாக இருக்கும். இப்படி றதுமத்தென்ற சமுத்திரத்திலிருந்து அமிர்தத் துளிகளை அருந்தி



மகிழ்ச்சி கொண்டிருந்த தானது வலம்புரிச்சங்காக இருக்கும். எ-று,

அஹதது வானது முஹதது வாகி
அஹ்மது வெனு முஹம் மதுவாய்ப்
பகுத்தது வாகி பகுமது வடங்கிப்
பழகிய ஞானப்பெண்ணுறைந்து
தகுத்ததி லிருந்து தகுமணித் தவுஸில்
தரளவெண் மணிகிந்தீ லாகி
வகுத்தது துலங்கி வளர்முஹம் மதுவென்
றிறைந்ததும் வலம்புரிச் சங்கே. (7)

(இ-ள்):— அவ்வித மிருந்தது, முதலாவது, அஹதியத்தாகி, அப்பால் உஹத்தாகி, அப்பால் வாஹிதத்தாகி அஹ்மது முகம்மது வாகி, மெஞ்ஞான பெண்ணுகிய வாலை மஹ்பூபின் வடிவமாகி, அப்பால் அறுஷின் சிங்காசனத்தில் இருந்து வெண்முத்தாக இலங்கி கிந்தில் விளக்கொளிவாகி, உலகமெல்லாம் அதிலே படர்ந்து விளக்கும்படியாக முகம்மது என்று எப்போதும் ஓயாதிக்று முழங்கிக் கொண்டிருந்ததும் வலம்புரிச்சங்காக இருக்கும். எ-று.

அஹமது நபியு முகம்மது அதுவும்
அணைந்திட வருப்பனி சொரிந்து
முகமலர் விரிந்து முச்சுடர் பிறந்து
மூவிலக் கணத்தையுந் தெரிந்து
ககனமு மறுஷுங் குறுசொடு விளங்கி
கதிர்மதி யுடுவையு மமைத்து
பகாவெனும் ஹயாததுல் கை பாறெனுங் கடலில்
வளர்ந்ததும் வலம்புரிச் சங்கே. (8)

(இ-ள்):— அஹ்மதென்ற ஆஷிக்கு முகம்மதென்ற மஉஷூக்கும் கூடி, மோகத்துடன் அணைத்திட்டவுடன் குளிர்ச்சி என்னும் ஜமாலுடைய நீரானது சொரிந்து முகமலர் என்ற தேகவுடைய மண்டலமானது பூத்து விரிந்து முச்சுடருடைய பிரகாசமானது உடனே உதித்தது. மூன்று காமியங்களும் உண்டாயிற்று. உடனே ஆகாயம், புவி நட்சத்திரங்கள், அறுஷு, குர்சு, லௌஹு, கலம்

யாவற்றுவிளங்கித் துலங்கிடும் படியாக உண்டு படுத்தி, எந்நாளும் நிலைவரங்கொண்டிருக்கின்ற, ஹயாத்துல் கைபாறு என்ற ஆதிசமுத்திரத்தில் கிடந்து வளர்ந்த ரகசிய வஸ்துவும் வலம்புரிச் சங்கா இருக்கும். எ-று.

சங்கினி லிருந்தே தருமொலி யதிரத்
தானவன் திருமுனே நிறுத்திப்
பங்குநாலாக்கி முன்னிறை படைத்த
பச்சமா மரமெக்கி னதனில்
முங்கியே யெழுந்த முஹம்மது வெனும்பேர்
முழங்கிய தாவுசு மயிலை
இங்குவா வெனவே யிறையவன் திருமுன்
னிரைந்ததும் வலம்புரிச் சங்கே. (9)

(இ-ள்):— அவ்விதம் எழுந்த வோசையின் வலம்புரிச்சங்குக்குள் இருந்து உதிப்புடன் வெளியான ஓர் சப்தமானது எழும்பி, அல்லாவின் ஹலரத்தளவில் நிறுத்தி, நாலுபங்காகப் பிரித்து ஆதியில் உண்டாயிருந்த பச்சை மரகத ரெங்குள்ள முகம்மதியத்தான மயிலை நேராக நோக்கிக்கொண்டிருந்து ஆண்டவன் சமூகத்தில் நின்று, திக்று செய்து கொண்டிருந்ததும் வலம்புரிச்சங்காக இருக்கும். எ-று,

இசைரந்தது மோசை யெழுந்தது வகைகே
ளெழும்பிடும் முன்கலி மாவில்
உறைந்திடு மெழுத்துப் பனிரண்டிற் கடைசி
யெழுத்தினைத் தலையெழுத் தாக்கி
விரைந்திடு மதுக்குள் விலங்கிய வெழுத்து
விரைமுஹம் மதுர்றசூ லுல்லாவென்
றுரைத்திடு மெழுத்து ரண்டையுங் கூட்டி
யுரைத்ததும் வலம்புரிச் சங்கே, (10)

(இ-ள்):— அவ்விதம் எழுந்த வோசையின் தத்துவத்தைச் சொல்கிறேன் கேட்பாயாக, தாலிபானவனே! ஷஹாத்துக் கலிமாவிலே லாயிலாஹ இல்லல்லாஹு என்ற பன்னிரண்டு அட்சரத்தில் கடைசி அட்சரமாகிய ஹூ என்றதை தலையங்கமாக்கி அது



க்குள்ளே ஏக விளக்கொளிவாக விளங்கிய முகம்மதுர் றசூலுல்லா வெறுன் பின்னல் திக்று செய்ததானதும் வலம்புரிச் சங்காக இருக்கும். று-எ.

இடப்புரி சுழித்து வலம்புரி யெழுந்த
விசையெழுத் தொன்றினை யறியத்
தடப்புரி யதுக்குத் தலைநடு வணைக்குள்
சுழற்றியே கழித்து மூலம்
கடவது ஆரு தாத்தையுங் கடந்து
கவனவெண் பரியின்மே லேறி
உடலுடு கடித்து லாமொரு ஹேயு
முரைத்தது வலம்புரிச் சங்கே. (11)

(இ-ள்):—இடம் புரியாகிய சந்திரகலை வாசியானது சுழித்து வலம்புரியாகிய சூரியகலையான வாசி எழுந்து அத்துடன் விசை கொண்டிருக்கா நின்ற ஹூ வென்ற அட்சரத்தை அறிவதற்காக மூலா தாரத்தில் நின்றும் சுவாச கலையான உதான வாய்வானது உதயஞ் செய்து நிற்கின்றது. அதுவானது நடுவணையாகிய தாமரையில் நடனஞ் செய்து ஆருதாரத்தைக் கடந்து கவனவாம்பரி என்ற நினைவின் பேரில் ஏறி உடலென்ற உடுக்கை யடிப்பித்து, லாமும் ஒரு ஹேயையும் தியானத்தில் வைத்து திக்று செய்து கொண்டு வந்ததும் வலம்புரிச் சங்காக இருக்கும். எ-று.

மயிலதுக் குள்ளே வலம்புரி யென்ற
வாவொரு ஹேயுடன் றேயுங்
குயிலெனக் கூவி யிருந்தது ஹூஹூ
கூடியே யுறைந்துவெண் மணியாய்
அயிலிறை யோன் தசனழைத் துமுன் னலே
அமானத்தைத் தாவெனக் கேட்க
இயல்முத்தை யின்ற அலிபொரு மீமு
மிரைந்ததும் வலம்புரிச் சங்கே. (12)

(இ-ள்) :—அவ்விதம் மயிலென்ற முகம்மதியாவுக்குள் வலம்புரி என்ற வாவும், ஹேயும், றேயும் கூடி ஒரு குயிலாகச் சமைந்து கூவிக் கொண்டிருந்ததும் என்ன திக்றென்றால், அது தான் ஹூ

என்பதாக இருக்கும் அவை மூன்றும் ஒன்ருய் கூடினது தான் முஸ்தபா என்னும் வெண்மை நிறமுத்தாக இருக்கும் அதை அல்லாகுத்தஆலா நோக்கி ஏ முத்தே! நான் தந்த அமானிதத்தைக் கொடு வென்று கேட்ட போது, அந்த முத்தானது, ஒரு அலிபையும் ஒரு மீமையும் வைத்து திகறு செய்தது அது தான் வலம்புரிச் சங்காக இருக்கும். எ-று.

மயில் வலம்புரிப் பதிகம்
பூரணமாயிற்று.

---

# றப்பில் ஆலமீன் பதிகம்.

கலி விருத்தம்,

ஆஹூ வுன்னை யறிந்து வணங்கிட
ஹூஹூ வென்று குறித்துளக் கிளிடம்
ஹீஹீ யென்றுனைக் கின்னரம் பாடிட
யாஹூ யாறப்பல் ஆலமீ னனவா. (1)

(இ-ள்) :— அலிபும் ஹேயுமாக நின்று உலகத்தை ஸம்ப்ரக்கத்தக்க றஹிமாகிய, உன்னை இன்னதுதானென்று வணங்கும் படியகர் எக்கின் மரத்தின் கிளைகளிலே மயிலாக நின்று ஹூ, ஹூ, என்று திக்று செய்து குறிப்புடன் நிர்த்தனம் பாடிய ஹீ என்ற, தத்துவத்தை யுடைய யாஹூவாகிய றப்பில் ஆலமீனே. எ-று.

முத்து முச்சுடர் முன்னஞ்சு மாழியில்
பத்து மச்சரப் பார்வை யதனிலே
எத்து முன்குத றத்துடை சூட்சுமம்
சித்து யாறப்பல் ஆலமீ னனவா.

(இ-ள்):— முத்து, பவளம், மரகதம் நீலம் ஆகிய மூன்று சுடரும் பஞ்சபூதியங்களும் ஒன்ருய்க்கலந்து கொண்டிருக்கின்ற மாளிகையாகிய மகாமன் மகுமூதாவில் பத்து எழுத்தால் அமையப் பெற்றிருக்கின்ற இரண்டு கண்ணிகளும் தோற்றி விளங்குகிற உன்றன் குதுறத்துடைய சூட்சிய ஒளிவைக் கண்டு பாடு பட்டவர்களுக்கு எல்லாம் சித்தியாக்கிக் கொடுப்பாய் றப்பில் ஆலமீனே. எ-று.



அஞ்சோ டஞ்சிறு பத்தஞ் சறைதனிற்
செஞ்சொல் பஞ்சாட்ச ரத்தை யடைத்துநீ
தஞ்ச மாமலிபு லாமொடு ஹேயையும்
மிஞ்சு மீப் றப்பல் ஆலமீ னனவா. (3)

(இ-ள்):—மேலுலகமாகிய கபால மண்டலத்தில் இலங்காநின்ற முப்பத்தைந்து வீடுகளிலும் அற்புதச் சொல்லாகிய அல்ஹப்தை அடைத்து அத்துடன் சரீரத்தின் தாபரமாகிய அலிபு, லாம், ஹே, மீமையும் பொதிந்த றப்பில் ஆலமீனே. எ-று.

தாலு மஞ்சுமே யொன்ரு யடைத்துத்தான்
பால்போல இல்முல்இன் ஸானைத் துலக்குமே
காலும் வன்னியுங் காயறை வீட்டினில்
மாலும் யாறப்பல் ஆலமீ னனவா. (4)

(இ-ள்);—அத்துடன் தாலுங்கூட்டி அஞ்சுபஞ்சாட்சரமாக அடைத்த பிறகு பால் போன்ற நாதவிந்தால் இல்முல் இன்சானை வெளியாக்கித் துலக்கி விட்டு காற்றையும், நெருப்பையும், காயமாகிய சரீரத்தில் ஒன்ருகிய மகாமன் மகுமூதாவில் வந்து சொக்கிநின்ற பிறகு காமிய உடலாகிய நப்சுகள் தன் அநாநீயத் தென்னும் ஊசாட்டமற்று ஒரு நிலை நிற்கும்.

மஞ்சுவார் குழல் மங்கை யொருத்திக்கு
அஞ்சு வாகன மவ்வெழுத் தஞ்சுமே
கொஞ்சும் பஞ்சவன் னக்குரு வானவன்
தஞ்சம் யாரப்பல் ஆலமீ னனவா (5)

(இ-ள்);—ஒருஸ்திரியாகிய றூஹுல் குதுசிஎன்னும் பரமாத்மாவுக்கு, அஞ்சுவாகனம். அதாவது அஞ்சுபஞ்சபூதங்களும் ஏவல்செய்து நடக்கப்பட்ட வைகளாக இருக்கும். அதாகிறது அல்ஹம்து என்ற அஞ்சு எழுத்தாக இருக்கும். இந்த விபரத்தைக் கண்டுஅதன்படி அமல்செய்ய தஞ்சமாகிறது சற்குருநாதனாக இருக்கும் றப்பில் ஆலமீனே. எ-று.

ஆகுமிப்படிக் கண்டுள்ள மூமின்கள்
பாகு முன்னிடம் பார்த்து வணங்கினால்

போகு மூன்குபு ரிய்யத்தைப் போக்கிடும்
யாஹூ யாறப்பல் ஆலமீ னுனவா. (6)

(இ-ள்);—இவ்விதம் வழிவழியாகக் கண்டுக் கொண்டவர்கள் தான் உலகத்தில் மூமீன்களாக இருக்கும் அவர்கள் வணங்கும் வணக்கங்களே வணக்கமாக இருக்கும் அவ்விதம் வணக்கங்கள் தான் இன்சான்கள் செய்யும் பாவச் செயல்களான குபிரியத்துக் களைப்போக்கும். அதானது யாஹூவென்று செய்யப்பட்ட திக்ருக இருக்கும். எ-று.

தீன தானதுக் குள்ள செயலிது
மான மானது வுன்னுடை செய்கைக்குப்
பான மான பறுலும்ஸுன் னத்துந்தான்
மோனம் யாறப்பல் ஆலமீ னுனவா.

(இ-ள்):—தீனுனவர்களுக்குடைய செயல் முழுவதும் சரிவரச் செய்து நடந்த பிறகு நல்ல நிய்யத்துடன் பறுலு வாஜிபு சுன்னத்துக்களை நல்லொழுங்காய் எடுத்து நடத்தி சாலிஹான குணத்தில் தரிபடுவதுதான் ஞானத்தின் முதல் படியான மௌனமாக இருக்கும். யாரப்பில் ஆலமீன்! எ-று.

நல்ல திப்படி நாட்டுஞ் சுக்கூன் நடு
வெல்லு மேமஹூ மூது பதிவழி
அல்லு மேபகல் மூச்சுமற் றனுதினம்
சொல்லுப யாறப்பல் ஆலமீ னுனவா. (8)

(இ-ள்):—அப்பால் சுக்கூன் வழியாகிய தரீகத்தின் செயல்களை யெடுத்து நடப்பதுதான் புரீத்ன வழியாக இருக்கும். அப்போதுதான் மகாமன் மருமூதுடைய பதியாகிய புருவமத்தியின் ஒளியின் திரையானது தூக்கப்படும். அல்லு பகலாக சுவாசமும் நினைவுமற்று சதாநேரம் திக்று செய்கிறதாக இருக்கும். றப்பில் ஆலமீனே! எ-று.

கருதி வந்து புகுந்து கழித்தபின்
மருவ வந்த அலிபுஹே மீம்தாலும்
உருகி யொக்க வொடுக்க மவ்ஜூதத்தாய்ப்
பருகும் யாறப்பல் ஆலமீ னுனவா. (9)



(இ-ள்); —குர் ஆனில் கண்டு பிடித்து அதன் ஆசையானது பெருகிய பிற்றை அதன் சொரூபத்துடன் மருவிக் கொள்ளும்படியாக அலிபு, ஹே, மீம், தால் இந்த அட்சரங்களைகையாட்சி செய்து உருகி நப்சடங்கலும் ஒடுக்கமான தவத்தில் மவ்ஜூது தாத்தைக் கலந்து அதன் அமிர்தத்மை உள்கொள்ளப்சடும். றப்பில் ஆலமீனே! எ.று.

ஓது முன்குல மானதி லுன்ஹலால்
சாது முன்முகக் காட்சி கொடுத்துநீ
வாது பேசிய வாஜிபோ ரட்சரம்
ஓதும் யாறப்பல் ஆலமீ னுனவா. (10)

(இ-ள்):— உன் தெரிசனை கண்டு நானும் உன்னில் சேர்மான மானதின் பின்னுலேதான் நான் அருந்தும் வஸ்த்துக்கள் எனக்கு ஹலாலாகும், உன் முகக்காட்சி கண்டதின் பிறகுதான் நானும் என் குணமும் சாதுக்களாகும். அவ்விதம் உன் திரு முகக்காட்சியைக் கொடுத்து இதற்கு முன் நான் வாயால் பேசித்திருந்த எல்லா வாது சூது மொழிகளையும் நீ பொறுத்து அந்த ஒரு எழுத்தாகிய ஹூமயத்தை யருளிச்செய்து, காப்பாற்றுவாயாக றப்பில் ஆலமீனே. எ-று.

கூடி யிப்படிக் கூவிக் குலாவினுல்
தேடி யுன்னைத் தியங்குமு ஹம்மதே
நாடி தாலில் நடக்கும் வழியிலே
கூடும் யாறப்பல் ஆலமீ னுனவா. (11)

(இ-ள்);— ஞானவரன்களின் சமுகத்தை தேடிப் போய்ப்பிடித்து அவர்களின் அருமை வாய்ந்துள்ள கூட்டத்தில் சேர்ந்து அவர்களின் பேரில் உண்மை தன்மையான நேசம் வைத்துப்பற்றிப் பிடித்துக் கொண்டால் உன்னைத் தேடிய தேட்டமானது கைகூடுப முகம்மதியாவும் கைகூடப்படும், உள்நாட்டமும் நாடிய வஸ்த்துககளும் கைகூடப்பெற்று தாலில் நடக்கும் பாதையில் எல்லாம ஒன்று பட்டுப் போகும், யாறப்பில் அலமீனே எ-று.

முந்த நீசெய் தவமுனக் கெய்திட
உன்றன் மாமயி லோர்மை யதுக்குள்ளே

சிந்தை கூர்ந்து கலக்கந் தெளிந்தபின்
அந்த யாறப்பல் ஆலமீ னனவா (12)

(இ-ள்):—ஞானத்தை அறிய வந்த மகனே! இந்த இடத்தில் நன்கு கவனிப்பாயாக, நீ முன் துருப்பில் செய்து வைத்த தவமானது இந்த துருப்பில் உனக்கு ஒரு சற்குருவாக வந்து கைகொடுத்து நின்றது. அதுதான், ஆதி யுஹத்தில்மயிலுடைய சொருபமாக இருந்தது. அந்த மயிலிருந்த எக்கீன் மரந்தான் வைராக்கியசாதனை என்னும் ஓர்மையாக இருக்கும். யாறப்பல்ஆலமீனே. எ-று.

யாறப்பில் ஆலமீன் பதிகம்
பூரணமாயிற்று

---

# கஃபத்துல்லாப்பதிகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அவ்வல் ஹாமீ மஹதியத்தா யடங்கி யிருந்த சூறத்தையும்.
நவ்வில் நஹிமா வஹியேகி நடந்த சிர்றில் முத்தலக்கும்
வெவ்வல்கொடியாய்ப்படர்ந்ததுவும்வேதப்பொருளாய்நிறைந்ததுவும்
லெவ்ஹின் படியே யெனக்கருளு மெழில்சேர் கஃபத் துல்லாவே.

(இ-ள்):— ஆதியில் ஹாமீமா யிருந்த சிர்ருனது அஹதியத்தாக நிறைந்து விட்ட சுய சொரூபத்தையும், அதன் பிறகு அந்த சிர்றுகளினத்தையும், மிஃறுஜி ராத்திரியில் வைத்து ஒன்றொன்றாய் பிரித்துச் சொன்ன விளக்கத்தையும். அவ்விளக்கமானது பெரிதான பணர் கெண்ட ஒரு கற்பகம் கொடிபோல் தரீகத்துகளுக்கிடையில் படர்ந்த விதத்தையும், அதற்கு உதாரணகருவியாக குர்ஆன் வேதம் இறங்கி சாட்சி பகர்ந்ததையும், லௌஹுல் மஃபூல் பலகை வரியின் பிரகாரமே எனக்கு அருள் செய்யவேண்டியது. கஉபாவை யுடைய நாயனே. எ-று.

நாட்டம் புகுந்த நடனமதில் நடுவி லிருந்த ஜல்லாலியத்தை
ஆட்டும் படியே ஐன்கலிமா வதனி லிருந்த வப்பொருளால்
கூட்டி வரவே குமரியொரு குழந்த யவளுந் தான்வரவே.
காட்டி யெனக்கே யருள்புரிவாய் காணுங் கஃபத் துல்லாவே (2)



(இ-ள்):—ஆதியில் நாட்டமென்ற ஊசாட்டமானது பிறந்த உடன் அதனடுவாக ஜலாலியத்தென்ற அக்னி மயமானது நாதவிந்தின் தோத்ரமாகி நேத்ரமத்தியில் கலிமாவாக நிற்கின்றது. அந்த மகத்தா வஸ்தை கொண்டு இந்த ஜடலத்தை உண்டு பண்ணி அதில் ஒரு பத்து வயது முகவரைக்கீருத கன்னி சொருப ரஞ்சிதமாய் நிற்கும்- வாலை மனோமணியும், ஒரு குழந்தை போன்று வரும் படியாகக் காட்டியருள் செய்ய வேண்டியது கஉபாவையுடைய நாயனே.

மச்சி லிருந்த மயப்பொருளை மகிழ்ச்சி யுடனே மருவிமனம்
உச்ச முறவே யமுதாக்கி யூனி நுகத்தில் அலிபாக்கிப்
பட்சி பறந்தாப் போலெடுத்துப் பைய மவனத் துடன்நடத்தி
அச்சி யடக்க மழதாகும் அஹதாங் கஃபத் துல்லாவே. (3)

(இ-ள்):—மச்சி மாளிகையாகிய காபகௌஸைனியில் வாசஞ் செய்து கொண்டிருக்கும் மயமாகிய பரம்பொருளை நாங்கள் கண்ணாரக்கண்டு தெரிசித்து உறுதியுடன் சாதித்து அதில் சேர்மானமாகி இந்த நிலையற்ற இருதயப் பசாசமானது ஒருகால் வாயால் நின்று கலிமாவை அமிர்தமாக்கி வாசியாகிய நினைவை ஹூவில் ஊணி நுக்தை அலிபாகத் திருப்பி உஜூதென்னும் பரமாத்ம வடிவை ஒரு பறவை பறந்ததுபோல வாசியில் தெரிசனை செய்து மெல்ல மெல்ல மௌனம் என்னும் கூண்டிற்குள் ளடையவைத்து உன்னுடை சொருப அச்சியில் எங்களைப் பதியவைத்து ரட்சித்தருள்வாய். கஉபாவை யுடையநாயனே. எ-று.

வாங்குங் கலையு மொன்றாகும் வழங்குங் குலமும் பன்னிரண்டில்
தூங்கிக் கழியும் நாலையுந்தான் சுழற்றிப் பிடித்தாற் குருவாகும்
தாங்கி யடங்கத் தரசாகித் தட்டா துனது ஈமானைக்
காண்கும் படியே கபூலாக்கும் ஹக்கே கஃபத் துல்லாவே. (4)

(இ-ள்):—வாசியில் ஏற்றி இறக்கின்ற கலையானது ஒன்றேயாகும். அதுவானது குப்பகம் ரேசகம் என்பதை குப்பகத்தில் கொண்டுபோய்நாட்டி ரேசிக்கிரதாக இருக்கும். அவ்விரண்டில்பாயும் கலைபன்னிரண்டிலும் நான்கு சரம் நீங்கலாக கழியக் கூடியதை வாசியில் பொதிந்து பார்த்தால் அது சற்குருவின் ரூபமாக இருக்கும். டி குருவின் மகாமில் அரசாங்கம் செய்யக் கூடிய ஈமான்

என்ற நம்பிக்கையை உண்டாக்கி உன்னைக் காண்கும்படியாக என் அமல்களைக் கபூலாக்கித் தருவாயாக. கஉபாவை யுடைய நாயனே (எ-று.

சங்கு மணியுந் தவளநிறம் தக்கோ னிறைந்த தங்குநிலம்
எங்கு முழங்கு மேகமதா யௌமல் கியாமத் திறகூலே
நங்கு படங்கு மஹ்ஷரிலே நடக்கு மெரிக்கும் வேளையிலே
அங்குட் பழியை யடக்கிவைக்கு மருளுங் கஃபத் துல்லாவே (5)

(இ-ள்):—கடையுஹ நாளையில் சமஸ்தர்களையும் மன்ருடிக் கரைசேர்க்கின்ற நமது ரசூல்நாயக சிரோமணியானவர்கள் ஹயாத்துல் கைபாறில் ஒருவெண்மையான வலம்புரிச்சங்கில் இருந்து அல்லாவை திக்று செய்து முழங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த சங்கில் முழங்கின தொனி யோசைதான் படைகோலங் கொண்டு வந்த வஸ்த்தடங்களிலும் உள்ளே முழக்கம் செய்யக் கூடிய பகாவுடைய வோசையாக அறியவேண்டியது. இன்னும் சூரியனை ஒரு ஒட்டைப் பொழுதில் திருப்பிக் கேள்வி கணக்கு கேட்கும் மஃஷர் மைதானில் நாங்கள் செய்த பாவதோஷங்களை லேசாக்கிக் கிருபை செய்ய வேண்டியது. கஉபாவை யுடைய நாயனே. எ-று.

மூச்சு முனையு மொன்ருக்கி முடுகுந் தனத்தை முகமாக்கி
காச்சுங் கருணைக் கருவெழுத்தாற் கருத்தி லிருத்தி ஹலாலாக்கிப்
பாய்ச்சு மமுத மணியாக்கிப் பற்றும் பார்வை யட்சரத்தால்
வாய்ச்சு தெனவே வடிவாக்கும் வளரும் கஃபத்துல்லாவே. (6)

(இ-ள்):—மூச்சாகிய கழிமுனையை ஒன்றுபடுத்தி, நப்சாணிய்யத்தால் செய்யும் சேஷ்டைக் குரங்கை வெற்றிய டையச் செய்து. கூடுந்தானதை முகமாக்கிக்கொண்டு, தவத்தில் பூதிய குணங்களை நன்கு புடம்போட் டெடுக்கப்பட்ட கருவெழுத்தாகிய ஹூமந்திரத்தை நினைவென்னும் கவனத்தில் நிறுத்தி தின்னப்பட்ட ஆகாரவஸ்துக்களை யெல்லாம் ஹலால் செய்து விந்தை அமிர்தந்தரக்கூடிய மணியோசை யாக்கி. நேத்திரத்தில் ஜகஜோதியாய்துலங்கும்படியான உஜூதைக் கண்டவுடன் எல்லாவாழ்வும் வாய்த்தது என்று பூரணத்தில் குணங் கொள்ளச் செய்தருள் வாயாக கஉபாவை யுடைய நாயனே! எ-று.



முழங்தம் பொருளு மதுவாகும் மூச்சும் விழுப்பு மதுவாகும்
புழுங்குங் கேள்வி யதுவாகும் போற்றுங் கலிமாத் தலந்தனிலே
கமுவும் கமல முருவாகும் கணனே ககனப் பொருள்மணியே
வழுவும் வழுவா துறவாக்கும் வடிவே கஃபத் துல்லாவே.

(இ-ள்):—விந்து நாதத்தில் கலந்து வந்த சிங்கநாத வோசையானது, சதாவும் ஜடத்தில் முழங்கக்கூடியதும் அதுவே. சுவாசமும், நினைவும் அதுவே. இன்னும் கேள்விஸ்தலமும் அதுவே. கலிமாவின் தேனமிர்தமும் அதுவேயாகும். ககனஜோதிவீடாகிய இரண்டுவிழிகளிலும் நின்றிலங்கும் ஜோதிமயமும் அதுவேயாகும். அதைக்கண்டு உறுதி கொள்வதில் யாதொரு சந்தேகமும் இல்லாமல் என்னையும் உன்னுடைய உருவத்தில் ஆக்கியருள் வாயாக கஉபாவுடைய நாயனே. எ-று.

வாடி யிருந்து மயங்காமல் வைத்த பொருளைக் காணுதற்குத்
தேடி யிருந்து தியங்காமற் றேகத் தேசப் பரியேறி
ஓடி யோட்டம் வரும்வழியி லாறு தாரத்தை யுங்கடந்து
கூடி யிருந்து கூவுதற்குக் கூட்டுங் கஃபத் துல்லாவே.

(இ-ள்):—யாதொருவாட்டம் மெலிவுமில்லாமலும், மயக்கம் என்னும் சந்தேகமில்லாமலும், வைத்தபொருளாகிய ஜடலசெளரூபியைக்கண்டு கொள்வதற்கு வழி ஒன்றிருக்க வீணில் மலை செபிகளிலும் நடைபாதை மைதானங்களிலும் தரித்திருந்து கள்ளயோகஞ் செய்து தியங்காமல் திரேகமென்னும் தேசத்தில் பிறந்த கவனவாம்பரியை ஏறி நடத்தியோட்டிக் கொண்டு வருகிற வழியில் ஆறு ஆதாரங்களையும் கடந்து உன் ஸமதியத்தைக் கூடிக் கலந்திருந்து ஹூவென்னும் மணி மந்த்ரஞ் செபிப்பதற்கு அருள் செய்வாயாக கஉபாவை யுடைய நாயனே.

கருணை விழியின் நடுவாக ஹாமீ மெனுமஹ் முதுவிழி
உருமைக் கருமை யுண்மையிலே யுறைந்த நுகத்தை அலிபாக்கித்
தரும நினைவைத் துணையாக்கித் தாஸீன் தாஹா ஷெய்கானுல்
வருமே முருத்தின் வழியாக வழங்குங் கஃபத் துல்லாவே. (9)

(இ-ள்):—மகுமூதுடைய விழியாகிய உஜூதானது இரண்டு கண்களின் நடுவாக தோன்றிக் கொண்டிருக்கின்றது. அதுதான்

ஹாமீம் ஆக இருக்கும். அதை சேர்மான மாக்கிக் கொள்ளும் பக்குவமானது எப்படி என்ருல், அந்த உஜூதென்னும் நுக்தாவை அலிபாகத்திருப்பி நினைவென்னும் கவனப் பரியைத் துணையாக்கி தாஹா என்னும் தாசீம் சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள் ஷெய்காகிய சற்தருவாக ஆகிவிட்டார்களானல் இனி எப்படிப்பட்ட நாட்டமும் தேட்டமும் கை கூடப்படும் கஉபாவை யுடையநாயனே, எ-று.

வஞ்ச மஞ்சு புலனுமொன் ருய் வாகாய்த் திருத்தி வடிவாக்கி
வஞ்ச னிபுலீ சஞ்சிடவே வரங்கொண் டருளு மெண்குருவே
வஞ்சந் துரத்தி வடிவுடனே வாசிப் பருளும் றஹுமானே
வஞ்ச மனுகா நெஞ்சகத்தே வளருங் கஃபத் துல்லாவே. (10)

(இ-ள்):—வஞ்சகத்தை யுடைய பஞ்சபூதங்களின் சேஷ்டைகளையெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாய்த் திருத்தி உன் சற்குணத்தின் வடிவத்தில் அமையச் செய்து இன்னும் வஞ்சப் பாதகனுகிய மல்ஊனுடைய கெடுதலையை விட்டும் வெற்றி பெறச்செய்து நல்லமோட்ச வரத்தையருள் செய்யவேண்டும். குருவானவனே! இருதயக்கமலத்தில் வந்து ஊசாடுகின்ற கெட்ட எண்ணங்களை யெல்லாந் துரத்தி விட்டு உன் நல்லெண்ணத்தில் நான் அமையும் படிச்செய்வாய் றகுமானே! இன்னும் வஞ்சகமற்ற மஹான்களின் நெஞ்சத்தில் குடிகொண்டிருக்கின்ற கஉபாவை யுடைய நாயனே. எ-று.

அஞ்சீ ரஞ்சு மொன்ருக்கி யாக மகிழ்ந்தே யுறைந்திடவும்
அஞ்சீ ரொன் று மொன்ருக்கி யணுகும் ஈமா னிஸ்லாமாகி
அஞ்சீ ரேழும் பறுலாக்கி யாக வணங்க வுருவாகி
அஞ்சீ ரணுகாக் காவல்செய்யு மரிய கஃபத் துல்லாவே. (11)

(இ-ள்):—ஐந்து குணங்களையும் பலதடவைகளாக மாறி மாறி வரச்செய்கின்ற ஐந்து புலன்களையும் ஒன்ருகிய நப்சு காமிலாவில் கொண்டிருத்தி ஒரே சொல் மகிழ்ச்சியான நிலபரத்தில் நாவில் நடைபெறவும், ஐந்து பறுலுகளும் சரிவர நிறைவேறிய நப்சு முத்மஇன்னவின் குணத்தில் தரிபட்டு இந்த ஜடலம் ஈமானிலும் இஸ்லாமிலும் நடைபழகி வந்து, உன்னுடைய இஷ்க்கின் யோக வெள்ளமானது வஹதானிய்யத்தின் துறையில் கிடந்து



நீந்தி கரைகாணுமல் தத்தளித்து மிதந்து பரமானந்தங் கொள்ளவும், உன் தஜல்லியாத்தையுடைய சொருபத்தில் நான் பதிந்து கொள்ளவும் எனக்கு நீகிருபை செய்யவேண்டும் கஉபாவை யுடைய நாயனே. எ-று.

அந்த ஹாமீ மதுவாகு மந்த யாசீனது வாகும்
அந்த மீமுக் குள்ளாகு மடங்குங் குதுபு மதுவாகும்
அந்த மீமில் சூட்சமதி லடங்கியிருந்த வட்சர மும்
அந்த மீமி லனைத்தையுந்தா னுளுங் கஃபத்துல்லாவே. (12)

(இ-ள்):—ஹாமீம் என்னும் நுக்த்தல் முத்லகாத்தும் உஜூது கிதம் பகாவும் அந்த ஒளிவேயாகும். இன்னும் யேயும் சீனும் அதுவே ஆகும். ஆதிமுஹம்மதியாவின் ரகசியத்தில் உறைந்து ஹயாத்துல் கைபாறுக்கடலில் விளைந்த மணி முத்தின் வடிவாகிய குத்புல் குபுருவாகிய எம்பெருமான் சற்குரு முகியித்தீனும் அதுவேயாகும். இன்னும் முதல் மீமில் சூட்சியம் வாய்ந்த அட்சரமாகிய ஹவும் கலிமாவும் அதுவேயாகும். இன்னும் ஆதி மீமில் நூறுல் முகம்மதியாவை வெளியாக்கி அந்த நூறில் நின்றும் சகலமான உலகங்களையும் சகலமான ஜந்துக்களையும் படைகோலம் உண்டு பண்ணி காப்பாற்றி ரட்சிக்கின்ற கஉபாவை யுடைய நாயனே. எ-று.

கஃபத்துல்லாப் பதிகம்
பூரணமாயிற்று.

## கண்மணிப்பதிகம்.

*எழுசீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

நினைத்ததை முடித்தான் நிசப்பொருள் தரித்தான்
நினைவுகொண் டாய்ந்ததை யுளத்தில்
பினைத்ததை யறுத்தான் பிசுகில்லா திருந்தான்
பெருவழிப் பாதையை யுகந்தான்
தனைத்தின முகந்தான் தரித்தனன் மனத்திற்
சரத்தொடு ஜலால்ஜமா லியத்தை

அனைத்துரு வாக்கி அசுலிய்யத் திருந்த
　　　　வருப்பொரு ளரியகண் மணியே. (1)

(இ-ள்);— ஆதியில் கன்சுல் மக்பியாவில் யாதொரு ஊசாட்டமுமில்லாமல் இருக்கும்போது இந்த ஆலத்தை உண்டு படுத்த நாடிய நாட்டத்தை முடித்தான். உள்ளமையான அவனுடைய மஅரிபாவை தன் கலாமில் விபரித்துக்காட்டி வைத்தான். அவன் திருநினைவில் ஆராய்ச்சி செய்த வஸ்துவாகிய ஹக்கீக்கத்துல் முஹம்மதியாவை ஒளிவின் சூறத்தில் உதயஞ் செய்யச் செய்தான். இன்னும் அந்த இல்மில் நோட்டமிடக் கூடிய மஹான்களின் மனதில் உள்ள இருட் பிழம்புகளை யெல்லாம் களைந்து கதிருலாவச் செய்தான். இன்னும் அவர்கள் மனதில் யாதொரு பிசகும் இல்லாமல் இருந்து வந்தான். பெரும் வழியாக மஅரிபாவை மனதில் உகந்திருச்செய்தான். இன்னும் காமிலான குருமார்களின் உதவியை அதற்கு ஏணிப்படி யேற்றமாக வைத்தான். ஜலால் ஜமாலியத்துக்களின் சரமாகிய சந்திர சூரிய கலைகளை ஜடலங்களில் தரிபடுத்தி வைத்தான். அந்தரூபத்தில் அனைத்தையும் சமையச் செய்து உண்டாக்கினான். இன்னும் அஹதியத்தென்னும் ஆலத்தில் குடி கொண்டிருந்தான். அவனே றப்பென்று சொல்லக்கூடிய அரிதான கண்ணில் இலங்கும். மணிச்சுடரானவன்

குருமணி யெனும்பேர் குவலயத் தழைத்த
　　　　குப்பபூ ரணத்தினிற் கொளுத்தித்
துருப்பெனப் பழிந்த சுடர்விரிந் தெழுந்த
　　　　சுடுவனக் காட்டினிற் புலியைக்
கரும்பென முறித்துக் கருத்தினிற் புலியைக்
　　　　கமலக்கண் மணியினுற் கோத்து
வரும்பனி யகற்றி அஹதிய்யத் திருந்த
　　　　பகாக்கடல் மீமின்கண் மணியே. (2)

(இ-ள்):— குருமணி என்று சொல்லக்கூடிய நூறுல் முஹம்மதியாவை இந்தஉலகத்தில் பல பல பெயர் சொல்லி அழைக்கக்கூடிய மகுலூக்காத்துகளை யெல்லாம் ஒன்று படுத்தி, சந்திர சூரிய கலைகளில் நிறுத்தி ஆசையைக்கொழுத்திவிட்டு முக்காமிய மென்கின்றன வேங்கைப் புலியை வைராக்கிய மென்னும் காட்டில் விட்டுவேட்டையாடிப் பிழந்து விட்டு ஒரு கருத்தாகிய புலியை கமலக் கண்மணியாகிய உஜூதில் விட்டு அடைத்துப் பழக்கி பகா என்னும் கடலில் விளைந்த நேத்ர ஒளிவாகிய றப்பை சேர்மானம் செய்வோமாக மீமாகிய கண்மணியே. எ-று.



கண்டறி பொருளைக் கமலசுக் கூனிற்
　　　　கருதிய காதலை மூட்டி
விண்டிடப் புவன மெழுத்தினுற் றூக்கி
　　　　விசையுட னூதிடப் பறக்கும்
மண்டல மூன்று மதுக்குமேற் சென்று
　　　　மவுனமுச் சுடரையும் பிடித்துக்
கண்டது காட்சி தேர்ந்தது மூச்சு
　　　　தெரிந்தது கமலக் கண்மணியே. (3)

(இ-ள்):—கமல சுக்கூனுகிய நேத்திரத்தில் கண்டு தெரிசித்த றப்பைப் பொருந்தி கொள்வதற்கு வேண்டிய முக்ய சாதனமாகிய ஆசையை முன்னிருத்தி, இந்த பூமியை உண்டாக்கிய அட்சரமாகிய ஹூ என்பதை நாட்டத்தில் தூக்கி வைத்து ஊதின உடன் பூமியின் காமவிகார வினைகளெல்லாம் உடனே பஞ்சாய்ப்பறக்கும். இன்னும் மூவுலகங்களும் அதற்குள் மௌனமாக இருந்தால் உடனே முச்சுடர் விளக்காக உனக்குள் நின்றெரியும். இந்த மகாமில் நீ கண்டதே காட்சியாகும். இனி சதா காலமும் உன் சுவாசமானது ஜடலத்தில் நிலையாகநின்று போய்விடும். ஆல மெல்லாம் உன் கண் எதிரே பளீரென்று விளங்கி ரகசியங்களெல்லாம் ஸ்பஷ்டமாய் விளங்கிவிடும். இதுதான் கமலக் கண்மணி என்பதாக இருக்கும். எ-று.

தோயத்தை யிறைத்துத் தோணியி லேற்றித்
　　　　தொடுகுறி யுப்பினை யெடுத்துப்
பாயபத் திரியாய்ப் பத்துடன் கரைத்துப்
　　　　பயனிலாப் பொருளினு லுணர்த்து
மாயமந் திரமோ மவுனமோ வலுத்த
　　　　மயக்கமோ மாசில்லாக் குருவோ
ஆயமோ வரனோ ஜனினி லுதித்த
　　　　அரும்பொரு ளாயகண் மணியே. (4)

(இ-ள்):—தோயமாகிய தண்ணீரை, இதன் கருத்தாவது உதிரத்தை ஜடலத்தில் இறைத்து தோணியாகிய சுவாசத்தை கீழிருந்து மேல் வரையிலும் ஏற்றிவைத்து, இன்னும் உப்பாகிய வஸ்தை உள்ளும் புறமும் அடைத்து வைத்து பத்து எண்ணப்பட்ட விரல்களினுல் கால் கைகளைத் திரி திரியாகச் சமைத்து ஆட்டம் அசைவுகளை நடத்தாட்டிவைத்து ஜடல உலகத்தில் ஒரு ஸ்தானத்தில் வந்து குடி கொண்டிருக்கின்ருன். அந்த இடத்தில் சென்று அவனை கூப்பிட்டுக் கலந்து கொள்வதற்கு என்ன உபாயத்தால் காரியம் நடக்கவேண்டும். அதுவாகிறது மாய மந்திரத்தினுலேயா? அல்லது மௌனத்தினுலேயா? பூலோகத்தின் வலுத்ததான காம மயக்கத்தினுலேயா? அல்லது சற்குருவின் நம்பிக்கை காரணத்தினுலேயா? அல்லது அந்த மாசில்லாத ஒளிவானது அரனு? அல்லது மும்மூர்த்திகளின் உதயமா? அதன் ஆலயமானது இருநேத்திரங்களாக இருக்கின்றது. அது மணி முத்தாக இருக்கின்றது. எ-று.

வட்டவெண் மணிபோ லாடிய கடலில்
வரும்நுரை வெளுமையுஞ் சிவப்பாய்க்
கட்டமா யுறைத்த கார்நிற மேகக்
கழலடி பெருகிய கமலம்
திட்டமா யுறைந்த திருவடி மூலத்
திறந்தனைத் தெரிசித்த குருவே
இட்டமா யெனது நினைவினுட் படுத்தி
யிருந்ததில் வளர்ந்தகண் மணியே. (5)

(இ-ள்): — வட்ட வடிவமாகிய ஒரு முத்து போல் இருந்து விளையாடிய ஹயாத்துல் கைபாறெனும் சமுத்திரத்தில் உண்டாகிய நுரையானது வெண்மையாகவும் சிவப்பாகவும் எழுந்து கார்நிறம் கொண்டமேகம் ஆனது அதுவே றசூலுடைய கமலக்கண்ணுக இருக்கும். இந்த இரகசியத்தை திட்டப்படுத்தி இதன் மூலவீட்டின் அகமியப் பெட்டியைத் திறந்து விளக்கிக் கொடுத்த மஹானைத்தான் சற்குரு வென்று சொல்லவேண்டும். அப்படிப்பட்ட மஹான்தான் திட்டமாக என் நினைவினில் கலந்திருக்கின்ற கமலக் கண்மணியாக இருக்கும். எ-று.

தனைநிற மறியத் தவளசத் திரத்திற்
றாளவெண் மணியினை யுருட்டி



உனைநினை வாக்கி யுறும்பொருள் தேக்கி
யுரைநுகத் தலிபினை நீட்டி
மனதினி லறிய வருமலி பதனை
வகுத்திடு முனையிரு பிளவாய்க்
கணையினைத் தொடுத்துக் கண்டறி தாத்தைக்
கலந்ததுங் ககனகண் மணியே. (6)

(இ-ள்):— அல்லாகுத்த ஆலாமின் நிறத்தை நீ யறியவேண்டுமானுல், தவளசத்திரமாகிய லிவாவுல் ஹம்து என்ற கொடியை கண்டு அதில் உன்விந்து நாதத்தின் மணியை திரட்சி செய்து உருட்டி உன்னை நீ மறந்து உன் நினைவையே உனையாகப் பாவித்து றுக்தாவை அலிபாகத் திருப்பி நீட்டி மனதில் சதாநேரமும் அலிபின் சொரூபத்தை நினைத்து அதை இரண்டு கலையில் பிரித்து வைத்து கணையாகிய புருவமத்தியில் தொடுத்து விட்டு தாத்தை தெரிசித்தாயானுல் அதுவே அருஷின் ஒளிவாக கண்ணில் தோற்றரவாகித் துலங்கக்கூடிய கமலக் கண்மணியாக இருக்கும். இதன் மேற்சொன்ன விபரத்தை என்னிடம் நேரில் வந்து விசாரிக்கும் கனவான்களுக்கு அறிவித்துக் காட்டப்படும். எ-று.

விரிந்தது தாலிம் விளங்கிய ஸிபத்து
விசையுடன் பறந்தொரு அலிபு
பிரிந்திரு தலையும் வளைந்துகா லூன்றிப்
பிலத்துட னுருவெடுத் ததுதான்
மரத்துட னுயர்ந்து மவுனமந்திரத்தை
மறுகரங் கொடுத்தினி துயர்த்திச்
சிரத்துடன் தூக்கிக் கேள்வியுட் படுத்தித்
தெரிந்தது ரூபகண் மணியே. (7)

(இ-ள்):—தாலில் விரிந்து ஆல மெல்லாம் விளங்கித் துலங்கிய றப்புடைய சிபத்தானது வெகுவிசையாகப் பறந்து அலிபாய் எழுந்து தலை இரண்டு பிரிவாக பிரிந்து அந்த தலையும் அப்பால் வளைவாகவளைந்து காலூன்றி ஆலத்தில் இருவினை சம்பந்தப்பட்ட ரூபங்களை எடுத்திருக்கின்றது. அது ஒவ்வொரு வஸ்துக்களின் நினைவுகளிலும் நின்று உலக காரியத்தை உண்டு படுத்துகின்றது. அதன்

விசைகள் எல்லாம் கேள்வியாகிய வாசியில் உட்பட்டு நிற்கின்றது. அதுதான் மனு கமலத்தில் கண்மணியாக நிற்கின்றது. எ-று.

அரும்மணி நோக்கி வரும்நிற மறிய
மலர்விரி கமலத்துள் ளிருத்தி
திருமணி யெழுந்த தீன்சுடர்க் கொழுந்தைத்
திரும்பியே விலாப்புறம் நோக்கி
விருதுடன் பார்க்க விசையுட னெழுந்து
வெண்மதி சூரியன் பேரலே
தருவினி லுதித்துத் தவுசில்ஹே யிருமீம்
தாலையுந் தெரிந்தகண் மணியே. (8)

(இ-ள்):— அருமைப் பொருந்திய அந்தக் கண்மணியின் ரெங்கை யறிய வேண்டி புஷ்பம் போல் பூத்து விரிந்திருக்கா நின்ற நேத்திரத்தின் மத்தியில் நோட்டத்தை விட்டிருத்தி ஷை திருமணியாகிய நேர்வழியான பரஞ்சோதிக் கொழுந்தை ரூபத்தில் தெரிசிக்க இடது விலா புறத்தில் நோக்கிக் கொள்ள வேண்டியது. அவ்விதம் நோக்கியவுடன் மஹா உன்னத வடிவின் ரூபத்தில் வெண் மதியும் சூரியனும் கலந்திருந்த தோற்றம்போல இரண்டு மீம் ஒரு தாலில் வந்து பொருந்தித் தெரியும். அப்படி யிருக்க தெரிசித்தாயானால் திட்டமாய் அதுதான் கமலக் கண்மணியாகிய தாத்தாக இருக்கும். என்று சந்தேகமறத் தெளிந்து கொள். எ-று.

கண்மணிக் குருவே குறையில்லா திருந்த
காரணக் குமரிமந் திரத்தை
எண்படா திருந்தா லவன்பிழை யனைத்து
மிறையவன் பொறுப்பது மிலையே
மண்படாக் காட்சி அவ்வலு ருவாகி
மாயவன் கரத்தினைப் பிடித்துக்
குன்குண மறிந்து கூவத்தி லிருந்த
குருநிற மணியுங்கண் மணியே. (9)

(இ-ள்) ;— அந்தக் கண்மணியாகிறது சர்குருவாகிய கமல முகியித்தீனுக இருக்கும். அது குறைவில்லாமல் நிறையக் கூடிய காரணகுருவாகிய முஹம்மதியாவின் மணிமந்திர மாகிய லாயிலாஹ



இல்லல்லாஹ-வை யறிந்துவிட்டானுனல் அவன் செய்த கணக்கற்ற பிழையான பாவமானாலும் சரி பொறுத்து ரட்சிப்பான் இல்லையேல், ஒரு நாளும் பொறுத்துக் கொள்ளமாட்டான். அந்த மந்திரந்தான் பூலோகத்தில் உடலெலுத்து வந்திருக்கின்ற வஸ்துகளிலெல்லாம் இருந்து வோசை செய்கின்ற வலுவாகிய கண்மணியாக இருக்கும். எ-று.

குருவென வெழுந்த குணமறி மனமே
குறையிலை யுன்றனக் கொருநாள்
வருமவள் பதத்தை வருடியே பிடித்து
வாக்குறை மூலத்தைக் கேட்டே
உருவெனக் கலிமா வுறைந்திடு மெழுத்தை
யுரைத்திடு மவள்முன்னே திருத்தி
வுரித்திடு மீமான் விரைத்திடு மிஸ்லாம்
விளைந்திடுந் தீனின்கண் மணியே. (10)

(இ-ள்): — ஆனபடியால் ஏமனமே! நீ குரு என்ற பதவியில் குணம்படைத்து வந்த தத்துவம் எது என்று முதலாவது அறிந்து கொள்ளவேண்டும். அந்தப்படி உணர்ச்சிசெய்து கொண்டபோது உனக்கு எக்காலமும் யாதொரு குறைவும் கிடையாது. என்று திடனுக நீ நம்பிக்கொளளவேண்டியது. அந்த சற்குரு நாதனுகிறது, கமல முகம்மதாக இருக்கும். அதுவாகிறது அல்லாவின் மஹ்பூபாகிய ஒரு இளங்கன்னிகையான வாலைரூபியாக இருக்கும். நீ அவளை நினைவில் ரூபப்படுத்தி சமீபித்திருந்து கொண்டு அவளுடைய பாதத்தை மெல்ல வருடிப் பிடித்து தயவுடன் அவன் சமுகத்தில் இருந்து மூலாதாரமாகிய முடிவின் மெய்ஞ்ஞானத்தைப் பற்றிக் கேட்பாயானுல் அப்போது கலிமாவின் திரவியத்தைக் கையாட்சி செய்யும் முறையைப்பற்றி உனக்கு குறிப்பான மகா மர்மத்தை அவள் எடுத்துப்போதனை செய்வாள். அப்போது தான் உனக்குப்பதவிகள் ஒன்ருென்ருகத் தோன்றும். நீதவறியதையும் அவள் திருத்தியமைத்தும் தருவாள். அக்ஷணமே ஈமான் தெரிந்து இஸ்லாம் பூரணமாகும். இதுவே தான் பண்டுள்ள கனவான்களான அவ்லியாக்களின் தத்துவ வழியாக இருக்கும். எ-று.

தீனுடன் வளர்ந்து நெறிமுறை செலுத்திச்
சிறந்திடு மமுதமு முண்டு
கானிடத் திருந்து கசாறியி லொளித்த
கடுகவே மவுத்தினை யெழுப்பி
மானுடன் கலையைச் சேர்த்துரு வாக்கி
மயக்கத்தி னனலிலே தாக்கிப்
பூணுற நெருப்பில் வாசிவந் தெழுந்த
பொறிபுல னறிந்தகண் மணியே. (11)

(இ-ள்): — மெஞ்ஞான மென்னும் தெளிவை ஷரீஅத்தின் ஒழுங்கில் நின்றும் ஒரு சிறிதேனும் தவறவிடாமல் எடுத்து நடந்து அப்பால் படிபடியாய்க்கண்டு கொள்ளவேண்டியது. அப்பால் காமிலான நல்ல பீர்மார்களிடத்தில் பியாலா என்னும் ஞானாமிர்தப உட்கொள்ள வேண்டியது. அப்பால் கசாரியாகிய திரையில ஒர்ருக ஒளித்த தாத்தை நிரப்பமாக்குவதற்கு ஒரு மறைவான ஸ்தலத்தைத்தெரிந்து அங்குசென்று உலகத்தின் மூவாசை பந்தங்களையும் அறவெறுத்து மவுத்தாகிய மனம் லயடபடுவதை ஏற்படுத்தி மான்கலையாகிய சந்திர சூரிய வாசியை ஒன்றுபடுத்திக் கொண்டு உருவாக்கி இஷ்க்கென்னும் நெருப்பில் வைத்துப் புடம்போட்டு அப்பால் அந்தவாசியில் பொறி புலன்களை அறியவேண்டியது இது தான் கண்மணியாக இருக்கும். எ-று.

அனலுடன் வாசி யெழுந்துவந் துதித்தே
யதனிடை நீர் தலை சொரிந்து
பனலுடன் பருவக் கயமண்ணி லீந்து
பைக்குள்ளே யெழுந்தொரு பயன்கேன்
எனதுடற் பார்வை மூச்சுடன் மேச்சு
மின்பமாய்க் கேள்வியு மொன்ருய்
மனதுடன் றிருத்திப் பகாவினி லிருத்தி
மகிழ்றப்பி யானகண் மணியே. (12)

(இ-ள்): — அவ்விதம் ஆசை என்ற நெருப்பில் பற்றிக் கொண்ட நினைவானதில் ஒருவித அமிர்தம் வடியத்துவங்கும் அப்போது ஜடலம் கிழப்பருவம் சென்று போய் புதுப்பருவமாகிய பழைய வாலிபம் திரும்பும். அந்தப் பயனானது என்னவென்ருல்



கேட்பாயாக. இந்த உடலிலுள்ள பார்வை, கேள்வி, மூச்சு, பேச்சு இவைகளெல்லாம் ஒருமிக்க ஒடுங்கி பகாவாகிய நித்திய வஸ்தில் கொண்டுபோய் பொதியச் செய்து விட்டால், அதுதான் பரமாநந்தம் என்று சொல்லக் கூடிய கண்மணியான றப்பாக இருக்கும். எ-று.

கண்மணிப் பதிகம் சம்பூர்ணமாயிற்று.

## நினைவுப் பதிகம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.*

சுடருமிநவிழி நடுவினிலாடிடுஞ் சூட்சமதானதுதான்
படரும்பெரியவஞெளிறப்பில்ஆலமீனென்றுபகர்ந்ததுவும்
திடம்படவருமூச்சதுதலைமூலத்தில்திருக்கியெழுந்திடவம்
அடருமட்சரத்தொடெழுத்தையும்பூட்டியடங்கிடுமென்நினைவே. (1)

(இ-ள்): — இரண்டு கண்களின் நடுவே ஒரு கடுகுப்பிரமாணமாய் இலங்கக் கூடிய ஒரு பரஞ்சுடரானது இந்த உலகத்தின் பெரிதான படைகோலங்களின் சூட்சத்தின் கருப்பொருளாக இருக்தம். இன்னும் எங்கும் சமதாக நிருப்பிய பரிபூரண வடிவாக இருக்கும். இன்னும் அதுவே றப்பாகவும் இருக்கும். இன்னும் அதுதான் தலை மூலமாகிய மூளையில் இருந்து கீழ்ப்பிண்டத்தின் மூலாதாரம் வரையிலும் திருக்கி எழுந்து வரக்கூடிய சுவாசமாக இருக்கும். இன்னும் அதுவானது அலிபு இருபத்தொன்பது எழுத்தையும் ஒருங்கே பொதிந்து கொண்ட நினைவாக இருக்கும். எ-று,

பூட்டியவம்பொளிவில்லெறிநாணைப்புகட்டியயாஹுவல்லா
வீட்டுமையாகவிலங்கியவொளிவில்விரசோதிபார்வையைநி
காட்டிதமாகவேசோரவிடாமலுங்கலையதுமோயாமல்
வீட்டியமாவென்றிருத்தியயாஹுவை வீசிடுமென் நினைவே.

(இ-ள்): — நினைவில் பூட்டிய ஒளிவாகிய அம்பை யாஹு அல்லா என்று பிரயோஹிக்கவேண்டியது. ஆனல் புருவமத்தியின் புறத்தால் இலங்கக்கூடிய ஒளிவில் உன் பார்வையானது இருக்க வேண்டியது. அத்துடன் சரத்தை நாம் ஞானசரநூலில் வி தி த்

திருக்கும் முறைபோல செய்து கொள்ளவும். அப்போது யாஹூ என்ற மணிமந்திரம் ஒலி நினைவாக நிரம்பி இருக்கின்றதாக இருக்கும். எ-று.

கூசாத நினைவதுகுறித்ததில்நின்றிடுங்கூர்மைமுஷாஹித்தாவைப்
பேசாரேயதனுடைப்பெருமையைமனதறிபேரறிவாளரென்ருல்
ஆசாரவுறக்கமுமயக்கமுந்தூக்கமுமவனிடப்புறவிட்லீசாம்
தூசாலடித்துத்துரத்தியேவெருட்டிடுசோப்பாதேயென்நினேவே.

(இ-ள்):—யாதொரு கூச்சமில்லாமல் நேத்ர ஒளியைக்கண்டு கொண்ட மஹான்கள் அக்குறிப்பை விட்டும் முஷாஹிதாவின் இருப்பில் தவறிடமாட்டார்கள். அவ்விதம் தவறுது செய்யும் தவத்தின் மஹிமையைச் சொல்ல யாரால் முடியும் அதன் ரசத்தை உணர்ந்துகொண்ட பெரிய அறிவாளர்கள் இந்த உலகத்தில் வரக்கூடிய சோம்பேறித்தனமும் நித்திரையும் மயக்கமும் இப்லீசான வனுல் உண்டாக்கக்கூடியதென்று தெறறென உணர்ந்து அவைகளை தன் நப்சுகளில் விஜயமாகாதபடி உடனுக்குடன் விலக்கிக் கொள்வார்கள். அவ்விதம் விலக்கிக் கொள்வதுதான் றப்பானியாவின் பூரண நினைவாக இருக்கும்.

அப்படிசொற்கொடுமெய்யோடிருக்கைலங்கோர்வலப்புறமாய்
நட்பொடுமெய்ப்புறவந்துமடர்ந்திடுமநற்பவளமுஹப்மதுதான்
ஒட்புடனங்கையிலுன்சிரசும்பணியுதறியுஞ்சந்திரனை
பெய்ப்புடன்மேல்முடிமீதுறில்மேல்றப்பிலாலமீனென்நினேவே. (4)

(இ-ள்):—இவ்விதம் முஷாஹிதாவின் இருப்பில் சிலகாலம் சென்றவுடன் உனது வலது புறத்தால் ஒரு வடிவம் செம்பவளத்தின் ரெங்கில் தோற்றரவாகும் அது முகம்மதியாவாக இருக்கும். அதன் முகம், கை, கால், சிரசு ஆகிய உறுப்புகளெல்லாம் சந்திரனுடைய ஜகஜோதி மயமாக நிற்கும், அதுவும் றப்பில் ஆலமீனுடைய குணமாகிய நினைவாகத்தான் இருக்கும். எ-று.

கருணைப்பதங்கன்டுதொழுதுகொள்கன்டதேயாயிரத்தென்மலரும்
விரிந்தேயிலங்கிடுமத்தொடுசத்துடன்விரிஹம்சுஜெசமதுவும்
உருவுரைநுகத்தினதிலொருஅலிபெழுமுறவாடிநோக்கிக்கொண்டால்
பதிவானவானமும்பூமியுமொன்ருகப்பார்க்கலாமென்நினேவே. (5)



(இ-ள்):—அப்படிக்கண்ட அந்த வாலே முகம்மதியாவின் சொரூபத்தை நீ தரிசித்த அக்ஷணமே, அதன் திருவடிகளில் விழுந்து தொழுதுகொள். உடனே உன் இருதயமண்டலத்தின் தாமரையானது ஆயிரத்தெட்டு இதழ்களையும் விரித்துப் புளீரென்று பூக்கும். அதில் ஷத்து, ஹம்சும், தெரியும். அப்போது நீ உருவாக்கிய நுக்கத்தையும், அலிபையும் கொண்டு அதை உறவு செய்து நோக்கி விடுவாயாகில் வானம் பூமி இவற்றில் உள்ள சகல ஜீவராசிகளின் அந்தரங்க பகிரங்க ரகசியங்கள் யாவற்றும் உன் எதிர்ப்பில் திரை தூக்கப்படும். அதுதான் உன் நினைவாக இருக்கும். எ-று.

காணலாமாகாசமுலகமுமதனிலேகண்மணிகுத்துபதையும்
ஊணிதமாகவேயுண்டதுக்குள்ளுளேரூபக்கண்ணுடியிலே
நாணுமைநேரிட்டுநானுகநீயென்றுநறுங்கையிற்பீங்கானும்பால்
தேனுகவேயுண்டுமமிர்தக்கலிமாவைச்சேர்ந்துகொளென்நினேவே.

(இ-ள்):—இவ்விதம் சிர்றுல் அஸ்ருருடைய திரைகளை தூக்கப்பட்டவுடனே, ஆகாய உலகத்தின் நடுவே எம்பெருமான் ஜெகத் முஹியித்தீனுடைய சுயம் பிரகாசதத்துவமயமான குத்புத்தாருவை கண்கூடாய்க்கண்டு கொள்வாய். அதன் மகிமையான ஆச்சரியம் சொல்லி முடியும் தரமுடையதல்ல. றப்பின் வாலே ரூபத்தின் கண்ணுடியில் அது தெளிந்து ஹூ வென்று ஓசையுடன் வெளிதோன்றி விடும். ஆச்சரியம் மெத்த! மெத்த!! உடனே அந்த நட்சத்திரத்தில் நின்று பச்சை சொரூபம் வெளியாகி, நான் நீ என்று கீதமபாடிக்கொண்டு கையில் ஒரு பீங்கானும் பாலுமாக வந்து உன் வாயில் தேவாமிர்தம் போல் ஊட்டும். அதானது கலிமாவின் அமிர்தாஞ்சிதமாகிய ஹூவாக இருக்கும். அதுவே உன் நினைவாகவும் இருக்கும்.

தாகமும்மோகமுமின்பமுந்துன்பமுந்தாவவெடுத்தொன்ருய்
மேவியசெயலுடன் மூச்சதிலேகியிலங்குப்விழியன்பால்
பாவந்துலேத்திறசூல்ஷபாஅத்துடன்பாக்கியமீந்தருளும்
பாவாபகிருெலிமுகியித்தீன்நாமத்தைவாரிக்கொளென்நினேவே. (7)

(இ-ள்):— அவ்வித அமிர்தம் ஊட்டப்பட்டவுடனே உனக்கு இனிமேல் தாகம், காமத்துடைய மோகம், இன்பதுன்பம், மயக்

கப், களை, விசனம் முதலிய துர்விதி யோகங்களெல்லாம் அறவே அற்று உன் மூச்சில் உள்ள சிக்கல் ஒழிந்து வாலிபகோலந் திரும்பி சுவாசமும் வஜ்ஜிரமாகி ஒளிவாக இலங்கத்தலைப்படும். ரசூல் நாயக பதியுடைய ஷபாஅத்தென்னும் மன்ருட்டமும் கிடைக்கு! வேண்டிய இருலோக செல்வாக்கு ஸம்பன்னங்களும்தானே வந்து பாதமாட்டில் காத்து நிற்கும், ஆனுல் என்னுடைய நினைவே நீ சர்வ ஜீவராசிகளுக்கும் தந்தையாகிய பாவா முஹியித்தீனுடைய திருநாம ரத்னத்தை எந்தநேரமும்மறக்காமல் உச்சரித்து வாசிக் கொள்வாயாக. எ-று.

பாதையிலங்கிடும்ஜெம்ஹூத்துமாளிகையில்வந்துமலர்விரிந்து
சோதிதுலங்குமதாயிரத்தெண்மலர்தோன்றும்நுக்கத்துமதில்
பாதை அலிபதுவாகவதற்குமேற்பார்த்திடோரட்சரமாய்ச்
சாதகமாமொருமீமென்றெழுந்ததைத்தங்கிக்கொளென்நினைவே. (8)

(இ-ள்):—இனி அறுஷேமு அல்லாவின் ரஸ்தாவான கோணமெல்லாம் வெளியாக ஆரம்பிக்கும். உடனே ஜப்ஹூத் தென்னும் மாளிகையானது வெளியாகிவரும். என்ன புதினத்தைச் சொல்வேன். மகனே அதில் ஒரு அலங்கிருதமான பூந்தடாகம் காண்பாய். அதன் நடுவில் ஆயிரத்தெட்டு பரஞ்சோதி கமல மலர் விரிந்து ஒவ்வொரு ஆனந்த சூரத்து தெரியும். அதில் நுக்கத் துடையவும். அலியுடையவும் சூரத்து வெளியாகி நிற்கும். இன்னும் ஏக அட்சரமயமாக ஒரு மீம் வெளியாகும். அது சகல லோக குருபரனுகிய காமில் முஹியித்தீனுக இருக்கும். அதை நீ பொருந்திக் கொள்வாயாக என் நினைவே. எ-று.

மாவென்றெழுத்தகணையாழிவட்டத்துன்நாற்பத்துமுக்கோணம்
ஹீயென்றஹாஹூவட்டத்துட்கண்டதுமிரண்டுமொன்ருகவேதான்
ஹாமீம்ஹாவுக்குள்ளாகியவட்டத்துள்ஹேமீமுமஞ்சாகவே
தாமீமாநீநின்றடங்கிடுசூட்சுமந்தக்கிக்கொளென்நினைவே. (9)

(இ-ள்):—கலிமா என் மீமுடைய சூரத்தி லுதயஞ் செய்த கணையாழிபோல் உள்ள சுறுமா வட்டத்தில் நாற்பத்திமூன்று கோணங்கள் உண்டும். அவைகளாவன:—ஹீ என்ற கலிமாவிலும் ஹாஹூ என்ற கலிமாவிலும் நிரப்பமான வட்டமாக இருக்கின்றது. அந்த கலிமாவின் வட்டங்கள் இரண்டாயிருந்தாலும் கரு



மத்தில் அவ்விரண்டும் ஒன்றுதான். ஒன்று ஹாமீம் என்றும் மற்ரென்று ஹேமீம் என்றும் இருக்கின்றது. இது அஞ்சு அனாசிறுகளும் பொருந்திக்கொண்டிருக்கின்றது. இதுதாலும் மீமும் பொதிந்து கொண்ட ஒரு சூட்சமாக இருக்கின்றது. இதின் ரகசியம் சற்குருக்களிடம் தெரிந்து விளங்கவேண்டியது. எப்படியும் இந்த ரகசியம் நினைவாக இருக்கும். எ-று.

தக்கிக்கொளில்லமிலங்கிடுமங்கொருசாதனைரண்டலிபு
ஒக்கவிணைந்துறுஐன்கலிமாவினிலோர்மையிலானதுவைப்
பக்கமிளக்கியேபையமவுனத்தைப்பந்தாடிக்கொண்டிருந்தால்
இக்கிடுமொன்பதிரேகையுங்கண்டேயிறுக்கிக்கொளென்நினைவே. ()

(இ-ள்);—ஆகையால் நினைவாகிய என் பரமாத்மாவே! நீ ஒன்று செய்து பக்குவியாகு அதாவது நிட்சயத்திற் கிடமில்லாத உலக வாழ்க்கைகளை விட்டும் ஒதுங்கிக் கொண்டு, இரண்டு அலிபுகளும ஓர் நிலையிற் கூடியிருக்கின்ற ஐன் ஆகிய நேத்ரத்தில் துலங்கித் தெரிகின்ற கலிமாவில் நீ பொருந்தி ஒன்று சேர வைராக்ய சாதனை செய்து அதற்குரிய மௌனசா தனங்களைக் கடைப்பிடித்து வாசினயப்பந்தாடி விளையாடிக் கொண்டிருந்தாயே யானுல் ஒன்பது வாசலாகிய நவரேகைகளும் தானேமூடி அண்டகோள அலங்காரக் காட்சிகள் மெல்லமெல்லத் தோன்ற ஆரம்பிக்கும். எ-று.

கொண்டதுமென்மனநாற்பத்துமுக்கோணங்கூர்மைகொண்டாடியதும்
மண்டலந்தன்னிலேதோணுமனுவத்துமங்காதரத்தினம்போல்
பண்டொருநூனும்பொருந்தியஜெசமுமப்பானுகத்திம்மூன்றும்
வெண்டகைமுத்துடன்பச்சைபவளமொன்ருக்கிக்கொளென் நினைவே.

(இ-ள்):—இன்னும் ஏ நினைவாகிய மனமே! மேலே சொன்ன நாற்பத்திமுக்கோண மென்ற அலங்காரத்திரைகளும் ஒரு மிக்கத் திறந்து தோன்றும். கூர்மையுடன் கண்டு கொள்ள சக்தி உனக்குக்கிடைக்கும். இனி இந்த மண்டலத்தின் மேலுதித்து வந்திருக்கா நின்ற சகல பிராணிகளுடைய இரகசிய ஸ்தூலங்களும் ஸ்பஷ்டாப்ஸம் போல் தோன்றும். அவைகளிலுள்ள ஜீவ இரத்னமாகிய பரமாத்மாவுந் தெரியும். நூனுடைய ஜெசமும் தெரியும் அந்த மூன்றும் முத்து, பச்சை, பவளம் ஆக நீ எண்ணிப்பொருந்திக் கொள்வாயாக. எ-று.

முத்துமுறைமதைமுக்கோணவட்டத்துள்முடுக்கிகொள்முந்திரியைக்
குத்திலெழுத்தெல்லாமொன்ருயிருந்தகுழந்தையின்வாயதிலே
பத்திபிறந்ததுபாலகனென்றறிபாரமடிமீதிலேதான்
சித்தாயிருந்ததுயாகௌதுலஃலமூச்சல்லாஹூவென்நினைவே. (12)

(இ-ள்):—முக்கோணவட்டத்தில் இலங்கித் தெரியா நின்ற ஒளிவை, நீ முத்தாகிய முகம்மதியாவாக உறுதியுடன் கண்டு பிடித்துக் கொள்ளவேண்டியது. அப்படி உறுதியாகப் பிடித்து அதிற் சேர்மானஞ்செய்துகொள். அதற்காகவேண்டி உன் ஊசாட்டங்கள் அனைத்திலும் முத்திரைபோட்டுக்கொள். அப்போது உன் சூரத்தில் ஒரு அழகிய பாலகன் உதயமாகி உன்மடிமீதில் கிடந்து விளையாடும். அதற்கு நீ செங்கீரை விளையாட்டுக் காண்பித்துக் கொண்டிருப்பாயாக;—அதுதான், எம்பெருமான் கௌதுல் அஉலம் சற்குரு முஹியித்தீனாக இருக்கும். அதுதான், உன் மூச்சாகிய அல்லா ஹூவாக இருக்கும் என் நினைவே. எ-று.

நினைவுப்பதிகம்சம் பூர்ணம்.

# இலாஹிப்பதிகம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.*

ஆயத்து முத்த லக்கென் றரும்பொரு ளாதி நாதன்
ஹேயொத்த மீமுங் கூடி கிளர்ந்துயிர் சீவ னுகி
மரயுற்ற லாமுக் குள்ளே வருஜச மடக்க மாகும்
சாயுற்ற ஹூவுக் குள்ளே தங்கிடு மிலாஹி நீயே. (1)

(இ-ள்):—மூத்தலக்காகிய ஆயத்தால் அதில் நின்றும் அரும் பொருளாகிய ஆதி கன்சுல்மகுபியா என்னும் மோகரசத்தில் லுதய மான நாதவிந்துவாகிய இரகசிய வஸ்துவாகி, அப்பால் ஹேயாகிய வரட்சியும் மீமாகிய குளிர்ச்சியுங்கூடி ஜடலம் உருவாகி அப்பால் அனுசிறுகளின் முக்ய சத்து காரத்தில் நின்று ஜீவன் உண்டாகி அப்பாலே கலிமாவின் வட்டத்தில் நின்றும் ஐனுடைய ஆலத்தில் ஒளிவாய்த் தெரிகின்ற சாயுச்ய பதவியான ஹூ மந்திரத்தை நினைவில் அடக்குவதே இலாஹியத்தாக இருக்கும். எ-று.



ஹூவ்வுமே ஹூவுக் குள்ளே குறித்தது மடங்கி நின்ற
செவ்விதாய் மீமுக் குள்ளே சிறந்தது ஹூவு மாமே
நவ்வுமே அலிபு லாமும் நடந்திடுங் கீத நாதம்
குவ்விலு மடக்க மாகுங் குதுறத்தி லாஹி நீயே. (2)

(இ-ள்):—சகல சராசரங்களில் நின்றும் உதயமாகுவதும், இன்னும் உயிர்ப்பிராணிகளின் சுவாசத்தில் கொழுவி நிற்பதும், ஹூ மந்திர ரகசியமாக இருக்கும. இன்னும் முகம்மதியாவாகிய ஓங்கார வட்டத்தின் முழுவதும் ஒழுங்காய் அடங்கியிருக்கின்றதும், அந்த ஹூவுடைய தன்மையாகவே இருக்கின்றது. இன்னும் நாவில் நின்றும் வெளியாகின்ற கீதநாத தொனியடங்கலும் அந்த ஹூவாகவே இருக்கின்றது. இதை ஒன்ருகப்பகுத்து விளங்குவது தான் இலாஹியத்தின் வல்லமையாக இருக்கும். எ-று.

லாமலி பதுவென் ருேதுமி லாஞ்சினை றுாஹூக் குள்ளே
மாமத அலிபொன் ருகு மகிழ்ச்சியாய் நூனுக் குள்ளே
ஜீமதா யடங்கி நின்ற ஸிபத்தது சிர்றுக் குள்ளே
தாமொத்தே யடங்கி நின்ற தரும்பொருளி லாஹி நீயே. (3)

(இ-ள்):—லாமும் அலிபும் சரீரத்தில் இலாஞ்சினையாகிய ஆத்துமாவாக இருக்கும். நூனாகிறது ஜடலத்திலுள்ள சர்வ ஆநந்த பாஸ்கரமாக இருக்கும் இன்னும் ஜீம் என்ற கோலத்தில் இருக்கப்பட்ட வஸ்துக்கள் அடங்கலும் ஜடலத்தின் இரகசியமயங்களாக இருக்கும். இனி "தம்" என்ற வாசியைக் கண்டறிந்து அதில் சேர்மானிப்பதே இலாஹியத்தின் கொள்கையாக இருக்கும். எ-று.

சிர்றுமுத்தலக்கு பால னடங்கிய சித்தெ ழுத்தாம்
துர்றத்துச் சூட்ச மான துணைப்பொரு ளறிய லாமோ
அர்றஹ்மா னிர்ற ஹீமென் றணிநுகத் ததனில் நின்றே
அர்றஹீ மலிபு லாமி லல்குஹல் கிலாஹி நீயே.

(இ-ள்):—சிர்ருகிறது முத்தலக்காகிய முன்சொன்ன பாலகன் அடங்கிய சித்தெழுத்தாக இருக்கும். துர்றத்தென்றது முன் சொன்ன பாலகனை விளங்கிக் கொள்ளக்கூடிய துணையட்சர சூட்சமாக இருக்கும். இனி அர்றகுமா னிர்றஹீம் என்றது, சர்வத்ர ஜெந்துக்களிடத்தும் கிருபை செய்யப்பட்ட கருவியாக இருக்கும்.

இனி நுக்தாவில் நின்றும் வெளியாகிவிட்ட, அர்றஹீம் அலிபு லாமும் இலாஹியுடைய தத்துவ நிலையாக இருக்கும். எ-று.

ஒருஅலி பொருலா மாக வோர்மையி லொருஹே றாஹாய்
ஒருவெழுத் துருவே யாச்சு தொத்து இல் லல்லாவானால்
மருளற்று அலிபு லாமும் மகிழ்ந்திடக் கமலத் துள்ளே
இருளற்று மொளிவாய் நின்ற இல்லல்லா இலாஹி நீயே. (5)

(இ-ள்): - ஜடலத்தில் ஒரு அலிபும், ஒரு லாமும், ஒரு ஹேயுங் கூடி றாஹா உண்டாகி, இல்லல்லா வென்னும் கலிமா நிரப்பமாயிற்று. இனும் ஒரு அலிபும் லாமுங்கூடி ஷை இல்லல்லாவென்னும் அட்சரங்கள் தொனித்தே அப்பால் ஹூவாயிற்று இந்த ஹூவை சதா இடைவிடாது உளமகிழ்ந்து தியானம் செய்து, இருதைய கமலத்தின் கண் சூழபபெற்ற மனமாய்கையென்ற அந்தகார இருள் பிழம்பற்றபோது, சற்ஜோதிமயமாய் இலங்கி நிற்கும் சுடரொளியே இலாஹியத்தாக இருக்கும். எ-று.

நீயது ஈமா னாகும் நிசப்பொருள் முஹம்ம துக்கு
வாயதுக் கினிமை யான வரும் பொருள் லாயி லாஹா
பூவது வான வாசம் பொருளமுஹம் மதுர்றசூ லுல்லா
ஹூவென் று ஹீயுக் குள்ளே கூடிய இலாஹி நீயே. (6)

(இ-ள்):—நீ என்பது ஈமான் என்பதாக இருக்கும். இஸ்லாம் என்னும் உண்மையானது, முகம்மதாக இருக்கும். லாஇலாஹ என்ற கலிமாவானது, இன்பமான தேனாக இருக்கும். அதில ஹா, ஹீ, ஹூ வென்றது பூமியும் வானமும் வாசஞ்செய்கின்ற பரிமளவாடையாக இருக்கும் அந்த ஈமான் உள்ளே இலாஹியத்து அடக்கமாக இருக்கும். எ-று.

அந்தமா முஹம்ம தென்றும் மரும்பொரு ளதுக்குள் நின்று
மிந்தமா வுலக மேழு மெழும்பிய வண்ட மேழும்
தந்தையே ஆத மாகித் தருமனுப் படைப்புக்கெல்லாம்
சொந்தமா யுறைந்து சேர்ந்த சோதியே இலாஹி நீயே. (7)

(இ-ள்):—எல்லா வஸ்துவுக்கும் அழகைத்தரக்கூடிய நூறுல் முகம்மதியாவில் நின்றும் இந்த பூமி ஏழும் வானமேழும் உண்டாகி, மானிடபிதாவாகிய, பாவா ஆதமுடைய சூரத்துண்டாகி, அதில் நின்றே ஞானப்பரஞ்சோதி உதயஞ் செய்யத்துடங்கிற்று. அதுதான் இலாஹியத்து. எ-று.



நீயென்று சொன்னாற் சுத்தம் நிலைப்பொருள் தன்னைக் கேளும்
தீயென்று சொன்னால் வித்தாம் தெரிபொரு ளறிந்த பேர்க்குக்
காயென்று சொன்னாற் பச்சை கலந்திடும் நூஹூக் குள்ளே
ஹீயென் முகியித் தீனே யெழுப்பிடு மிலாஹி நீயே. (8)

(இ-ள்):—இனி நீ என்பது மஹ்லியத்து கலப்பற்றவஸ்து. நான் என்பது அக்னியாக இருக்கும். அது விந்து நாதம். காய் என்பது வாசிவலமாகிய பச்சைரேகையாக இருக்கும். அது ரூஹூக்குள்ளே கலந்துறவாடி இருக்கும். ஹீ என்பது, சகல வஸ்துகளுக்கும் கருப் பொருளாகிய குரு முஹியித்தீனாக இருக்கும். அதுவே இலாஹியத்தாக இருக்கும். எ-று.

அந்தமீம் பேச்சுக் குள்ளா மறிந்தமீம் ஐனி லாகும்
முந்தலா மாக நின்ற முதற்பொருள் நுகத்துக் குள்ளே
வெந்துவா யோடி யோடி வேறொரு அலிபே யாகும்
சொந்தமா யுறைந்து சேர்ந்த சோதியே இலாஹி நீயே. (9)

(இ-ள்):—இரண்டு மீமில் ஒன்று வார்த்தையின் தொனியாக இருக்கும். மற்றொரு மீம இரண்டு விழிகளிலும் இலங்கக்கூடிய மாசற்ற ஒளிவாக இருக்கும். ஆதியில் லாமாக எழுந்தது மோக நெருப்பால் வெந்து ஒடிப்பாய்ந்த விந்தாக இருக்கும். இனி அலிபானது அதில் நின்றும் சோதிவிட்டெரியும் துண்டாமணித் தீபமாக இருக்கும். இதுதான் இலாஹி என்றறியவேண்டியது. எ-று

அகப்பொருள் ஹாமீ மாகும் அதன்பொருள் யாஸீ னென்றுந்
தருமிது விரண்டு மொன்றாய்த் தரும்பொருள் தாஹா வென்றும்
நகமிக மௌஜூ தாகி நடனங்கள் மஹ்பூ பாகும்
உஹதுடன் பரத்துக் காளா யுதவிசெய் இலாஹி நீயே. (10)

(இ-ள்):—எல்லாவித அறிவிலும் இரகசியமயமான பொருள் ஹாமீம் என்றதாக இருக்கும். அந்த ஹாமீம் என்பதற்கு இரகசியம் யாசின் என்பதாக இருக்கும். இந்த இரண்டும் ஒன்று சேர்ந்து உருத்திரண்டதானது, தாஹாவாக இருக்கும். இனி தாஹா என்பது மவ்ஜூதில் அடக்கமாக இருக்கும். அந்த மவ்ஜூதானது, மஹ்பூபாகிய முஹியித்தீனில் அடக்கமாக இருக்கும். அதுவே பராபரவஸ்துவாக இருக்கும். அதில்தான் இலாஹி பூரணம் பெற்றதாக இருக்கின்றது. எ-று

தசுநது வென்று தன்னைத் தாபரத் துடனே தேடி
வசுகதுக் கமலத் துள்ளே வாஜிபு அஹதிய் யத்தில்
அசுகதை யோதி யோதி யடங்கிய இல்முக் குள்ளே
ஒசிகது வுனக்கா ளாக்த முன்பர மிலாஹி நீயே. (11)

(இ-ள்):—இனி தகுமான பொருள் எது என்று, உலகமெல்லாம் தேடிப்பார்த்தும் வஹதானிய்யத்தின் துறையில் சேர்மானிக்கத்தகுந்த ஒருமைப்பொருள் ஒன்றும் வாய்க்காததினால் இல்மின் அந்தரங்கமாகிய அந்த குரு முஹியித்தீன்தான் கருமம் என்று கண்டு பிடித்தபோது இலாஹியத்தின் சிபத்து உடனே வெளியாகித் தெரியலாயிற்று எ-று

தருமது வெனது தந்தை தாய்வழி தமருக்கெல்லாம்
உறும்பிழை பொறுத்து நீதா னுன்பிறு தவுசி லாக்கி
மருகமழ் வாவி மக்க முஹம்மது நபிஷ பாத்தும்
திருமணக் காட்சி காட்டுன் திருவுள மிலாஹி நீயே. (12)

(இ-ள்):—இலாஹியாகிய ஆண்டவனே! நீ என்னுடைய தாய்தந்தை ஆகிய இருவரின் பிழைகளும், அவர்களின் மரபினர்களின் பிழைகளும் பொறுத்து உன்னுடைய பிர்தௌஸின் அலங்கார செல்வாக்களும் நல் கொடை கொடுத்தருளி உன் ஹபீபாகிய எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் ஷபா அத்தும் கொடுத்தருளி அந்நாயகபதியவர்களின் சுவர்க்க லோகத்தின் திருமணக்காட்சியும் நாங்கள் பார்க்க நீ உதவி செய்ய வேண்டியது. (எ-று)

இலாஹிப்பதிகம் ஸம்பூரணம்

## நாட்டப் பதிகம்.

*எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்*

கோஜால மானவெங்கள் நபியி றசூல்
கோவருளுங் கல்பிதனை மெய்யாச் சென்று
ஆசார சாலமறை முதியோர்க் கெல்லாம்
அஹமதென்றும் மருளுந் தீனைக்
கூசாதே நபிஷறகைக் குறித்துக் கொள்ளு
குணமான முஸ்லீங்க ளவரே யென்றும்



பேசாத பேச்சொன்றும் பேச வேண்டாம்
பெரியோன்றன் திருநாமம் பேணிக் கொள்ளே. (1)

(இ-ள்):—மெய்ஞ்ஞான சற்குரு ஸ்தானங்களில் ஆதிபீடமாகிய, நபிகள் சிரோமணியவர்களின் திருளவுப்பொருத்தமான உபதேசத்தை உண்மையாய்க்கொண்டு செலுத்தவேண்டி ஏற்பட்ட குருமார்களே! அந்த மேலானதவத்தில் நீங்கள் காரியம் பெறவேண்டுமானால், அவர்களது அரியஞானமான ஷரீஅத்தை ஒரு சிறிதும் தவறவிடாமல் பற்றிப்பிடிக்கவேண்டும். அந்த ஷற ஆகிறது. அஹ்மது முகம்மதாக இருக்கும். அதுவே ஞானத்தின் வேராக இருக்கும். முஸ்லீமானவர்கள் எந்த சந்தர்ப்பங்களிலும் அல்லாவின் மஅரிபத்தை வாய்திறந்து அகமிய மில்லாதவர்கள் வாழக்கூடிய ஸ்தலங்களில் பேசிவிடாமல் பேணி நடக்க வேண்டியது, முதலாவதுபடியாக இருக்கும். எ-று.

கொள்ளவே நிலையென்ற வமுதந் தன்னைக்
குறித்துநீ யனுபவித்துக் கொள்வையானால்
விள்ளாதே சிறியோர்க்கும் வேசை கட்கும்
விதமறியா வீணர்கட்கு மாகா தப்பா
தள்ளாதே பெரியோரைச் சார்ந்து கொண்டு
தயவுடனே யவரமிர்த குணம்போ லானால்
உள்ளமெல்லா முலாவிநின்று பக்கந்தேறு
முயர்ந்தமணி வட்டத்துள் நாதந் தானே. (2)

(இ-ள்):—அவ்விதம் நீ மஅரிபத்துல்லாவை உணர்ந்து கொண்டு விட்டேயானால், அந்த மஹா இன்பக்கனியான அமிர்த ரசத்தை புண்ய பலன் தெரியாத அற்ப புத்தியுள்ள முரட்டு ஜனங்களுக்கும், பல மோக லாகிரியுள்ள வேசைப் பெண்களுக்கும், அறிவில்லாத பால்யர்களுக்கும் நீ இலேசாய்க் கொண்டுபோய் சொல்லிவிடாதேயப்பா. இந்தச்சொல்லைக் கடக்காதே! மஹான்களின் வாசனையுள்ள சகவாசத்தில் இருந்து கொள். நாளாவட்டத்தில் அவர்களின் அமிர்தமான குணத்தில் நடை பழகிக் கொண்டுவா. அப்போது உன் இருதயத்தின் மாசாகிய அழுக்குகளெல்லாம் கழுவப்பட்டு நாதமணிச் சுடரின் தேஜஸானது பளீரென்று ஒளிவு செய்யத்துடங்கிவிடும். எ-று.

நாதனிலே யென்ருல்... .... அலியே யென்றும்
நமனுடைய சூட்சமது சுழின மென்றும்
காராய்ந்த விருளகத்திற் கருவே யென்றும்
கருவென்ருல் கமலத்தில்முச் சுடரா மென்றும்
ஆராய்ந்து நீர்நானென் றுரைத்தா ரென்றும்
அஹதுக்குள் உஹதான மஹமூ தென்றும்
சீராய்ந்த பேர்சுட்கே யூரா மென்றுந்
தீர்க்கமாய் ஞானப்பெண் ணெடியிற் கண்டார். (3)

(இ-ள்):—அந்த நாதமணியின் நிலையானது எதுவென்ருல், அதுதான் அலிபாக இருக்கும். இனி நமனுகியமவுத்துடைய சூட்சியம் என்னவென்ருல் அவசியம் அறியப்படுத்துகிறேன். அதுதான் சுழினம் என்கிற சூனியம், இருள்வட்டம்போல் தெரிவதுதான் உடலுக்கு கருவென்று உறுதிகொள்ளு. அந்தக்கருவுக்குக் கருவானது கண்கமல நடுவில் தெரியும் சிறிய ஒளிவட்டமாக இருக்கும். அதைத்தான் நமது முகம்மதியா மிஃருஜியில் தெரிசனை செய்தபோது, அது வாய்திறந்து "நான் அஹ்மது, நீ அஹ்மது, நீதான் நான்" என்று சொல்லிற்று. அதுதான் மஹ்பூபு என்ற கன்னிவயதுள்ள முகவரைகீருத பெண்மணியாக இருக்கும். இதைக்கலந்த இன்பத்தைத்தான் அக்மல் ஷுஹூதாக இருக்கும். இந்த சூட்சியத்தை வெகு சீருடன் ஆராய்ந்து கொள்ள வேண்டும்.
எ-று

காணப்பா சிவசிந்தை கோடி மாந்தார்
கலங்குகிருர் மலங்கிவெகு பேர்கள் மாண்டார்
பூணப்பா புதுமலர்க்குட் பூப்பூத் தாற்போற்
புகழ்பெரிய நடுவணையைப் புதின மாக்கு
ஞானப்பா சரமென்ற பார்வை நாட்டு
நடக்குகின்ற வாசியைநீ தளைந்து கட்டு
தோணப்பா முக்கோண வட்டத் துள்ளே
சுடரொளியைக் கண்டுவெகு பதனம் பண்ணே. (4)

(இ-ள்): - ஏ! சிவசிந்தை என்பதைகாண்க எவரால் முடியுங் காரியம்? அதைக்காண்க வேண்டியதற்காக எத்தனை கோடி சித்தாதி சித்தர்களெல்லாம் தேடியலைந்து, மனங்கலங்கி



மாண்டழிந்து போனுர்கள். அப்பா. அதானது புதுமலராகிய முகமண்டலத்தில் ஒரு ஜலவாகி உண்டு. அதில் பூப்பூத்த வண்ணமாக ஒரு நவீன புஷ்பம் விரிந்திருக்கின்றது. அதன் நடுவணையாகிய மகரந்தத்தில் தோன்றி மின்னித்தோன்றும். என்ன அளவற்ற ஆச்சரியம் அப்பா! அதில் உன் ஆசை உறுதிப்பாடென்ற கூறிய பார்வையை நாட்டு. வீணுய் அங்கு மிங்கும் ஓடித்திரிகின்ற சுவாசகலையை ஒரு நிலையிற் கொண்டுபோய் கட்டிவிடு. அப்பால் முக்கோணம் என்ற புருவமத்தியின் உள்ளே தாத்தின் பகா வடிவான திருமணி ஒளியைக்கண்டு வாயைப்பதனம் பண்ணிக்கொள்வாயாக.
எ-று.

பண்ணவே பரமென்ருல் ஹக்கு மாகும்
பகுத்துநீ பார்த்தாக்கால் முஹம்ம தாகும்
அண்ணல்தாம் குத்துபில் அஃல மாகும்
அருணவொளி பாய்ந்தாக்கால் குருவு மாகும்
முன்னமே முருகபா றூஹே யாகும்
முளைத்தெழுந்த ஹக்குநீ தானேயாகும்
சொன்னமாங் கலிமாவில் திக்கி ருகும்
சுடர்மணியின் சூட்சமோ ரெழுத்து மமே (5)

(இ-ள்)—அப்படி நீ பதனம் செய்து மௌனியானபோது உன்னில் நின்று ஹக்தஆலா ஒரு அற்புத உற்பனமான சூறத்தில் வெளியாகிவருவான். அதன் ரூபலாவண்ணியத்தை என்னென்று சொல்ல முடியும்! அதை நன்கு உற்றுணர்ந்து பார்த்தாயானல் அதுவே முஹம்மதியாவாக மலையிடை வெள்ளிபோல் விளங்கிவிடும். அந்த மகத்தான வடிவில் நீ மோகித்து நின்று ஆநந்தப் பரவசியானபோது அதுவே குதுபுல் அஉலாமாகிய எம்பெருமான் சற்குரு நாதன் திருமுகியித்தீனுகத் தெரியும். அதுவே சூரியனுடைய ஒளிவுபோல் உனக்கு வழிகாட்டியாகிய காமில் குருவாக நின்று சகலமும் உபதேசிக்கும். அப்பால் அது ஆதியில் நீ நடத்திக்கொண்டுவந்த முருக்கபாவில் வெளியான கண்காட்சியான றூஹூடைய சூறத்தாக இருக்கும். அது வேறுமல்ல நீயாகவே இருக்கும். இது உண்மையே. அந்த சுடரானது, கலிமாவில் நின்றும் ஒரெழுத்தாகிய ஹூவின் மந்திரமாக இருக்கும். எ-று.

ஒன்ருகும் ரண்டல்ல வூமை யாகும்
உறைந்திருந்த சங்குதலே வட்டத் துள்ளே
நின்ருடும் சூட்சமது மவுன மாக
நிலேயறிந்தா லுன்றனுக்கு நாலு மாச்சு
கண்டார்க்கு விபரமது பேச்சு மூச்சுக்
களவில்லாப் பார்வையுடன் கேள்வி யாச்சு
விண்டாலுந் தெரியாது கருமி கட்கு
விளப்புகிறேன் கேளும்பா ரின்ன மொன்றே (6)

(இ-ள்);—அதை எந்த வஸ்துவில் ஒட்டிப்பார்த்தபோதைக்குப் ஒன்ருக இருக்குமே ஒழிய இரண்டு பட்டுத்தோன்ருது. ஆனுல் அது ஊமை அட்சரமாக இருக்கும். இந்த ஜடலத்தில் வலம்புரி சங்காக இருக்கும். சிரசின் வட்டத்தில் தெரியப்பட்டதாக இருக்கும். அதை மௌனமாகப் பதனஞ்செய்து அதனுடைய நிலேயை அறிந்து கொண்டாயானுல் இனியுனக்கு நாலா காரியங்களுங் கைகூடுவதற்குத் தகுந்ததாக ஆயிற்று அதைக்கண்டவர்கள் பேச்சுக்குப்பதிலாக மனவாசியைப் பற்றிக்கொள்ளவேண்டியது. யாதொரு கள்ளமில்லாமல் சொல்லிவிட்டேன். அதுவாகுறது கேள்வியும் பார்வையுமாக அடங்கி நிற்கின்றது. இதன் அந்தரங்க ஞானமயத்தை சண்டாளர்களான பாலகர்களுக்கு விடுத்துச் சொன்னுலும் தெரியவராது. இன்னமொரு ரகசியம் சொல்கிறேன் கேட்பாயாக. எ-று.

இன்னமொன்றுண் டதுவுங்கே ளுறவுன் னுடே
ஊக்கமுடன் மண்டலமூன் றுண்டு தாண்டு
மின்னலில்லா முப்பாழுண் டப்பாற் போந்து
முடிவற்ற வெட்டவெளி முடுகி நின்ருல்
கின்னரமும் வாசியுமே கிளப்புக் கோடிக்
கிளம்பியொரு மயில்மின் நின் ருடும் வாசி
இன்னுமகா தேவுடனே முனிவு மற்றும்
என்மகனே மவுத்தாய்நீ யெழும்பு வாயே (7)

(இ-ள்);—அதாவது உன்னுள்ளே மூன்று மண்டலங்கள் உண்டும், அவைகளேக் கடந்து அப்பால் சென்று விடு, அதற்கப்பால் முப்பால் உண்டும், அதையும் கடந்துவிடு. அப்பால் வெட்டவெளி ஒன்று தோன்றும், அதை முடுகிக்கொள்ளு. அங்கே கோடிக்கணக்கான கின்னரசங்கீதங்களுடன் வாசியானது முழங்கும். இன்னும் அந்த வாசியானது ஒரு மயிலின் ரூபம்போல் ஒரு கன்னி ரூபம்தோன்றும். அதைச்சூழ முப்பத்து முக்கோடி தேவமுனிகளும் கிளம்பிவரும். அதில் நீ மவுத்தாகி உயிர்பெற்றெழும்புவாய். எ-று.



எழும்புவது சூத்திரந்தா னென்று கேளாய்
எளியோர்க்கும் பெரியோர்க்கும் வேசைகட்கும்
களிம்பற்ற களங்கம்போல் நினேவொன் ருகும்
கனகமணி போலாடும் ஜனி னுடே
தழும்பில்லா வழியதுவே யாகு மப்பா
தயவுடனே வாலேநீ பிராய மாக்கும்
அழும்பிள்ளே குரலடங்கும் அம்மா அப்பா
அரைவாசி வாலேக்கு வகையைக் கேளே. (8)

(இ-ள்); — அப்படி எழும்பும்படியான சூட்சியம் எப்படியென்ருல் மகனே இதைக்கருத்தில் பேணிவைத்துணர்வாயாக. சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் சரி. அல்லது வேசைகளுக்கும் சரியே. களங்கம் அற்ற தங்கம் போல நினேவானது ஒன்றுதான். அதானது ஒரு கடுகுபோல் ஒளியாக கண்ணின் நடுவே நின்ருடுகின்றது அதுதான் சந்தேஹமற்ற மெய்ஞ்ஞானமாக இருக்கும். முடுகினுல் இளம்பிராயமான கன்னிகையாகத் தெரியும் முதலாவது குழந்தை அழுகிற சப்தப்போல அம்மா அப்பா என்று கேட்கும். அது அந்த வாலேயுடைய வாசித்தொனியாக இருக்கும். அதன் வகையைக் கேட்பாயாக. எ-று.

வகையான சூத்திரத்தின் வகையைக் கேளு
வகாவான வாசிக்குள் உகாவைப் பூட்டிப்
பகாவான ஹேஎழுத்து கையை மூட்டிப்
பண்புடனே பதனமாய்க் காத்துக் கொண்டு
நகையான மணிவட்டத் துள்ளே நின்று
ஹஹூஹ வென்றஞ்சு பத்து வட்டம்
துகைவகையாய் நீ பார்த்துக் கேட்பா யானுல்
சுடர்மணியாம் முஹம்மதுவுந் தோன்றும் பாரே. (9)

(இ-ள்):—எப்படி என்ருல் வாசியாகிய நினைவில் உகாவாகிய ஹூ மந்திரத்தை உறுதியுடன் பூட்டப்பா. அப்பால் ஹே எழுத்தை அதாவது ஒரே நிலையாகிய நாட்டத்தை அதில் மூட்டி அப்பால் அதை மற்ற தீங்காகிய, இருவினைப் பந்தங்களான இப்லீசு வந்து அழிமானஞ் செய்து விடாமல் காவல்செய்து, மணிவட்டமாகிய நூறுல் ஐனில் கூட்டுறவுசெய்து, ஹூஹூ ஹூவென்று உள்ளே முழுங்கச்செய்து விட்டால், ஐம்பத்தோரட்சரக் கொலுவாகிய சுறுமா வட்டத்தின் நடுவே முகம்மதியா ஒரு பிரமாண்ட பரஞ்சோதியாகத்தோன்றி வெளியாகும். எ-று.

தோன்றுவது மென்ன நிறம் பச்சை யாகும்
தொகுத்துநீ பார்த்தாக்கால் பவள மாகும்
போன்றுகழல் மறுவற்ருல் தரள மாகும்
பொறுக்கமனம் வாராது ஆத்தா ளென்பார்
மூன்றுதர முகவணையை முத்தி முத்தி
முச்சுடரி னிவ்வறிவை யறிந்தா யென்று
தான்றியென்னை . ...யெடுத் தணைத்த
தருமனத்தை யெட்டடா லன்னந் தானே. (10)

(இ-ள்);—அவ்விதம் முகம்மதியா வெளியாகின்ற நிறமானது என்னவென்ருல் பசசையாக இருக்கும். இன்னும் நீ கூர்க்கப் பார்த்தக்கால் பவளத்தின் நிறமாகக் காட்டும். அதில் யாதொரு சந்தேஹமற்ற நின்று சாதித்தேயாகுல் உடனே அது வெண்முத்தின் ரெங்காகும். அந்த ரெங்கின் ரூபாலாவர்ணியத்தை மெய்ஞ் ஞானவான்கள் தெரிசனைசெய்த போது, மோகந்தாங்காமல் சிவ காமி ரூபத்தில் வண்டாய்ப்பிரண்டெழுந்து ஐ! என் அன்மணி! என்று கெஞ்சுவார்கள். அப்போது அம்மனியானவள் உன்னை நோக்கி, கிர்பை விழிகொடுத்து, இவ்வரிதான மகத்துவத்தைப் பெரிதும் கஷ்டமெடுத்துத் தேடியுணர்ந்து வந்தவனே! என்று உன் முகவளையை மூன்று விடுத்தம் முத்தி ஆலிங்கனம் செய்து போற்றுவாள். அப்பேர்ப்பட்ட பரமாநந்த சுகத்தை நீயடைந்து முத்திவாகுக வேண்டும். அப்போது அது ஒரு அன்னப்பக்ஷியின் ரூபத்திலிருக்கக்காண்பாயப்பா. எ-று.



வன்னமது நின்ருடும் பட்சி போல
வடிவதுவும் மாருது நிறுத்திப் பாரு
அன்னமது கோழியுடன் காக மாகும்
அலையாது வல்லூறு ஆந்தை யாகும்
சொன்னபடி சொர்ணமதா யறிந்து பார்த்துச்
சொகுசுடனே அக்குறியி லூடே நின்ருல்
தன்னவர்க்கும் முன்னவர்க்கும் ஏம ஞன
தாட்டிகனுங் காலன்வந் துயிரை வாங்கான் (11)

(இ-ள்):—காருண்யக்கடலான நூருல் முகம்மதியாவானது அந்த மகாமில் ஒரு அன்னப்பக்ஷிபோல நின்ருடுவதை நீ கண்ட மாத்திரம், அதன் பரிசுத்மான ரூபத்தை நீ மறக்காமல் உன் நினைவில் நிறுத்திப்பார் உடனே அவ்வன்னமானது சேவற் கோழியாகி அப்பால் காகமாகும். அப்பால் ஒன்ருென்ருய் மாறி மாறி வல்லூறு ஆகி ஆந்தையாகும் இங்கு நான் சொன்ன பிரகாரம், பஞ்சகோலாகலங்களிலும் உன்னை சொரூபிக்கத் தெரிசனை செய்துகொண்டு வந்தாயேயாகுல், முன்ஞேர்களையும். இனிவரும் பின்ஞேர்களையும், வந்து வந்து உயிர்பிடுங்கிய வல்லாள கண்டனுகிய ஏமஞனவன் வந்து உன் உயிரை பிடுங்குவதற்கு மார்க்கமே கிடையாதப்பா. எ-று.

வாங்கானே வகையறிந்த வடியா ரென்று
வளமைபெற வல்லபந்தா னுரைப்பா னப்பா
தேங்கானு மிகுராயி லிங்கே வாவென்
...ரனு மியம்பியுரை கேட்கும் போது
பாங்கான மனமோடு பயமாய்க் காத்துப்
பையஇபு லீசதையும் வென்றசீமான்
தேங்காம லென்ஞேடு முறையாய்நின்ற
சீமான்மு ஹம்மதுடைத் தீனு மென்ருர். (12)

(இ-ள்):—இவன் அல்லாவின் வல்லபத்தைக் கண்டறிந்தவனென்றுகண்டு, உன்னைப்புகழ்ந்து வணங்கி நிற்பான். நின்று உன்னை அன்புடன் இங்குவாடாவென்று, பாதார்ச்சனை செய்து, இனிஉன்னை நான் தொடமாட்டேன் என்று, உருதிசெம்துகொடுப்பான். இவ்வளவு அருமை பெருமைகளும் வல்லமைத்தனமும்

எதினுல் கிடைத்ததென்ருல், இப்லீசு லஅனத்துல்லானவ வெற்றியடைந்த மஹோமஹானுகிய, நமதாண்டவர் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் தவ்ஹீதின் பாதையைத்துடர்ந்த புண்ணியவசத்தினுலல்லவா, அவர்களின் தீனை எடுத்து நடந்த அருமையானது மரணபந்தத்தையும் தாண்டிவிட்டது. எ-று.

நாட்டப்பதிகம் சம்பூர்ணம்மாயிற்று.

# பஞ்சபட்சி பதிகம்.

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்*

ஏம பஞ்சபட்சி யஞ்சும் நெஞ்சில்வாழ
வேக வல்லோனருள் குதுறத்தால்
சாமம் நாளொன்றுக் கஞ்சு தரமுமாறு
தரமும் நாழிகை சொல்லவே
நாம பட்சிபெரு மயிலுங் காகமும் நமனு
மாந்தை வல்லூறுள் கணக்கையும்
சோம சோமுடன் வேத மஞ்செழுத்துந்
தொகுத்துச் சொல்லவெகு சூட்சம்பார் (1)

(இ-ள்):—நூறுல் முகம்மதியாவின் குதுறத்தாகிய பஞ்சபட்சிகளின் ரூபங்களை எந்நாளும் மனதில் ரூபப்படுத்தும்படியாக ஒரு நாளொன்றுக்கு ஐந்து ஜாமங்களிலும் ஐந்து ரூபங்களும் நினைவில் பதியப் பெற்றுவரவேண்டியதற்காக, ஒரு ஜாமம் மயிலும் ஒன்றில் வல்லூறும், ஒன்றில் காகமும், ஒன்றில் ஆந்தையும், ஒன்றில் சேவலும் வரவேண்டிய கணக்கை விவரிக்கவேண்டியதற்காக ஆண்டவன் தன் கலாமுல்லாவில் அல்ஹம்தென்ற அஞ்சுபஞ்சாட்சரங்களை இறக்கிவைத்தான். அதன் சூட்சியத்தை இனிவரும் பாராவில் நீ பார்த்துதகொள்ளப்பா. எ-று.

அலிபு சவருமொன் ருக விருபத்தெட்
டடங்குங் கூட்டில் வட்ட காபுன்னே
மெலிவி மொடுக்கும்பட்சி மயிலு மரசையொக்கு
மெவருங் கணக்கைவிரித் தறியவே
பலுகு மனுவினுச்சி யனுவுப் நொடியிற்சித்துப்
பகருங் காமவழி யுருவதாய்



நலியும் ஆவுமட்ச ரத்திற் பூட்டிக்கூட்டி
நாவும் பார்வையூணும் நமசூட்சம்பார். (2)

(இ-ள்):—ஒன்ருவது அலிபு, அப்பால் சவருய் நிரப்பமாயுள்ள இருபத்தெட்டு அட்சர மடங்கியுள்ள கூடாகிய இந்த ஜடலத்தில் முகவட்டத்தில் உள்ள காபு என்றதற்குள்ளே அரசாட்சி செய்வதானது மயிலாக இருக்கும். இதை முதலாவது குருமார்கள் அறிந்து உபதேசஞ் செய்ய ஆரம்பிக்கவேண்டும். அதாவது உச்சியின் கபால மண்டலத்தில் ஒரு அனுவுப்போல் தெரியும். அதுதான் இஷ்க்கின் புதையலாக இருக்கின்றது. அதுவே ஆ, வு, என்ற அட்சரத்தில் பூட்டப்பட்டிருக்கின்றது. அதனுல் தான் நாவில் தொனியும், விழிகளில் ஒளிவான பார்வையும், ஊண்தீனும் கிரஹித்துக் கொண்டிருக்கின்றது. இதை உணர்ந்துபார். எ-று.

நவ்வு மவ்வுமலி பாக நின்றனுஞ்
சூட்ச நற்கருவைச் சொல்லவே
எவ்வுஞ் சூறத்தொளி யெட்டு மூன்றில்வைத்
தெண்ணில் காருமொரு வட்டத்தில்
குவ்வுங் குத்தெழுத்தைக் கூட்டி மாட்டிவைக்கக்
குறைக்கு மின்சாஹெளி பாதைக்குமே
கவ்வும் ஹப்செழுத்துக் கருவு மம்பதுக்குள்
காட்டுங் கமலக்தரு சூட்சம்பார். (3)

(இ-ள்):—நூனும், மீமும், அலிபும் சேர்மானமான சூட்சியக் கருவைச் சொல்கின்றேன். ஏய் ஆகிய அட்சரத்தில் ரூபங்கொண்டெழுந்த எட்டெழுத்தையும் மூன்று அட்சரத்தில் வைத்து, எண்ணற்ற மகிமையுடைய ஒரு சுருமாவட்டத்தில் ஒரு குத்தெழுத்தாகிய ஒரு ஒளிவட்டத்தைத் தெரிசனை செய்து, அதில் நாட்டத்தை சேர்மானிக்கவேண்டி காரியஞ்செய்தால், இன்சானின் ஆத்ம ஒளிவானது ஆத்திரத்துடன் பதை பதைக்கும். இதுவாகிறது ஹம்செழுத்தான ஆதியான கருவை ஐம்பத்தோரட்சரத்திற்குள் காட்டக்கூடிய கருவாகிய கமலத்தின் குருவாகிய முகியித்தீனின் இரகசியமாகிய சூத்திரத்தை நீ கண்டு கொள்வாயாக. எ-று.

பாதை கண்ணெளிவு பறக்கும் மலிபிற்கணை
பாய்ந்து சரத்தைவெட்டுங் கனலைப்பார்

தாதை வழியைவிந்து தாழ்த்தி யுயர்த்தியூனுந்
தமருஞ் சுழிவட்ட ம மமருமே
காதை விழியில்வைத்துக் கண்ணி னிடையிற்குத்தக்
கருவுங் குருவுங்காணும் ஹக்கனே
ஒதை வழியைப்பற்றி யோர்மை நினைவையுற்றே
யொத்துக் கணக்கிற்குரு சூட்சம்பார். (4)

(இ-ள்): — மெய்ஞ்ஞானத்தின் பாதைக்கு முதல் வழியானது நேத்திரத்தின் நடுவில் இலங்கும் தாத்தொளிவாக இருக்கும். அந்த அலிபில் வில்லைப்பூட்டி சுவாச சரத்தைப் பிரயோகித்தால், ஆல மெல்லாம் ஜோதி செய்கின்ற தோத்ர ஒளிவு வெளியாகி காந்தி செய்யும். ' அதில் தகப்பனுடைய நாதவிந்தின் வழியாக அமர்ந் திருந்த முச்சுடர்ப் பிரகாசமும் உனக்குத் தோன்றித் தெரியும். அதானது சுழிமுனை வட்டத்தில் காணப்படும். அப்பால் கேள்வி யைப்பார்வையில் வைத்து, நேத்திரத்தின் நடுவில் நினைவைக் கொண்டுவைக்கவே கருவாகிய ஒளிவானதுடன் சூறத்தில் வெளி யாகுவதைக்காண்பாய். இதுதான் ஹக்குடைய சொரூபமாக இரு க்கும். இது சற்குருநாதனுடைய உபகார ஆதாயமே அன்றிவேறு சாமார்த்திய முன்னல் என்னமுடியும். ஆனதால் அந்த பரத்தில் உன் நாட்டத்தையும் ஒன்றுசேர்த்தால் அது சற்குருவின் தோத்ர வடிவாகத் தெரியும், அந்த சூட்சியத்தை நீ பார்ப்பாய் (எ-று)

பறக்கும் பறவைக்காகம் நடக்கும் வழியைக்கேளு
பகரும் லாமும்ஹேயும் பக்கமே
அறுக்குஞ் சரமுந்தெக்கை யடங்குமி யீயுமாரு
மறிந்திலை யென்னிறை யவனே
இறக்குஞ் சமையமெட்டு மேகி வாங்கிக்கட்ட
விசையுங் கடைசிமூல வட்டமே
அறுக்குஞ் சமையசத்தி யஞ்சு சரமும்வரு
மாவு மீயுங்குரு சூட்சம்பார். (5)

(இ-ள்): — இனி காகம் என்னும் பட்சியின் சூட்சியமானது நடக்கின்ற மார்க்கத்தைக்கேள். லாமும், ஹேபும், அதன் பக்கத்தி லாக இருக்கும். அதில் சூரியகலையின் சரமானது ஒத்து நடக் கின்றதாக இருக்கும். இந்த சூட்சியம் ஹக்தஆலரவைத்தவிர



வேறு ச்ந்தேகப்பட்ட மாந்தர்கள் அறிந்துகொள்ள முடியாது. இறக்கும்படியான சரங்கள் எட்டையும் வாங்கிக்கொண்டு நிற் பாட்டினவுடன், மூலாதாரத்தின் தீர்மானமான வாசிவட்டமா னது. உனக்கு இசைந்துகொடுக்கும். இனி நீ செய்த தோஷங்கள் முற்றும் வெந்து நீறி சத்தியின் ஐந்து சரங்களும் மீமில், அதாவது சற்குரு முகியித்தீனில் வந்து நடனஞ்செய்து திருவிளையாட்டுச் செய்யும். இதுவுங் குருநாதனுடைய சூட்சியமாக இருக்கக்காண் பாய். எ-று

எட்டு மட்டுமூன்று மேவல் கண்டபேருக்
கேங்கு மூச்சைப்பாய்ச்சவெவ்விடங்
கட்டுந் தலத்தில்முட்டுங் காவல் நபியையுண்டுங்
காணுங் குக்குடந் தோணுமே
பட்டு ஹேயுப் ஏயும் யையுப் பாய்ந்துமெய்யைப்
பாய்ச்ச லோடிவரும் பக்கமே
செட்டும் பலிக்குப்பார சேத மூனக்குமில்லைத்
தெள்ளுங் குருவினருள் சூட்சம்பார். (6)

(இ-ள்):—இனி எட்டுச்சரத்தை மனவாசியிற் கொண்டு உறாச் நுகூல் அதாவது ஏற்ற இறக்கப்பழக்கம் செய்யுந்தலசி கலை ஆதியில் சற்றுப்பதம் பார்க்கும், கண்டத்தில் கீழும் மேலும் அங்கங்கே தட்டி முட்டி மயக்கத்தில் கொண்டுபோய் நிறுத்தி வைக்கும் இந்த மகாமில் நபிகள் சிரோன்மணியின் காருண்யமே ஒரு காவலாகவந்து நின்று சாயுச்யம் புரியும். அப்பாற் சேவற் கோழியானது சொரூபத்தில் வந்து பூரணம் பெற்று நிற்கும். அதானது ஹேயும் ஏயம் பக்கத்தில் வளர்ந்து வரப்பாய்ந்து ரெக்கையடித்துக்கூவி மெல்லஓடி வந்து உன் பக்கத்தில் நிற்கும். அப்போது உன்நாவின் அமிர்தமானது இக்கடல் சூழ்ந்த உலக மெல்லாம் பளீரென்று செல்லும், இனி உனக்கு ஒரு சேதமும் இல்லை. இதுவுங் குருநாதனுடைய கருணையாக இருக்கும் உணர்ந் துபார். எ-று

ஆரு மறியாரிந்த வஞ்சு நிறத்தின்பட்சி
யான கோலமது மைப்புலன்
பாரு வன்னைக்கலைப் பரனை யாந்தைவரும்

பாக மறிந்துமனந் தேங்கியே
வாரு மீழமைந்து வண்ணக் கோலமதில்
வஞ்சி நின்றுகுறை யாமலே
காருங் கற்பனைக்குக் காட்சி மெத்தவுண்டு
காரணக்குரு சூட்சம்பார் (7)

(இ-ள்):—அந்த பஞ்சபட்சிகளின் கோலங்களின் சூட்சியத்தை உலகவாசிகள் எவரும் அறியமாட்டார்கள் இவைகளைந்தும் ஐந்து புலன்களாக இருக்கும். இனி வல்லூறு ஆந்தையின் சூட்சியத்தை அறிந்து மனந்தேறிக்கொள்வாயாக. இது மீமின் தத்துவமாக இருக்கும். எல்லா விதியின் கற்பனைகளும் இதில் நின்றுமாக இருக்கும். இதுவுங் காரண குருநாதனுடைய சூட்சியமே. உணர்ந்து பார்த்து ஆநந்திப்பாயாக. எ-று

வன்னி கொட்டும்வழி வார வாசியிலே
வவ்வு மவ்வுங்கூட்டி வாங்கியே
உன்னி யெட்டுவைத்து மோதி யுற்பணத்தை
யுற்ற வுள்ளில்ஐ ஞேதவே
மன்னி வல்லூறுடன் மாட்டு மஞ்செழுத்து
மவுன மந்திரம தாகுமே
கன்னி சாத்துடனே கலந்து தாலும்போட்டு
கல்லிற் பூட்டியொன்ற தாக்கியே
எண்ணி மவுனம்வேணு மிசங்கிக் கட்டிநின்
றிலங்குந் திசையைநோக்கி யெண்ணிப்பார். (8)

(இ-ள்):—வன்னியாகிய சூரிய ரேசக வாசிவருகிற வழியில் வரவும், மீமும் கூட்டி இழுத்துவாங்கி, கலிமாவில் எட்டு அட்சரங்களைப் பொதிந்து உற்பன கோலமாக்கிவிட்டு, இருதயத்தின் அகமியக்கண்ணால் உற்றுநோக்கி ஐனில் எக்கீன் பதவியை முடுக வேண்டியது. அகமியக்கண் என்பது நினைவாக இருக்கும். கண்டு பிடி. தவறிடாதே. இதில் வல்லூறு ஆனது பஞ்சாட்சரங்களுடன் ராஜாங்கம் செய்திருக்கின்றது. இந்த மந்திரம் தியானத்தில் வைத்துக்கொள்ளும்படியான வஸ்துவாக இருக்கும். கன்னியாகிய முகியித்தீன் இந்த மகாமில் தாத்துடைய ஒளிவடிவில் வந்து தோன்றி வெளியாகும். இந்த தவத்தில் சாதிக்கப்பட்டமஹான்கள் திட்டமாகமௌனசாதனை செய்யவேண்டியது அவசியமாக இருக்கும். எ-று



கட்டுஞ் சித்துவழிக் கமலக்கண் ணுடியே
கையிற் பிடித்துப்பாரு மெய்யிலே
தொட்டுப் படியும்வித்தை தோஷ பாவமோட்டி
சுடரு மெரியும்வழி நடுவிலே
மட்டு மளவில்லாத மகிழு மனதுக்குள்ளே
மான மேழும்வருந் தானமே
சொட்டும் ஆவுமசியுந் தோற்றுரு மேகமலந்
தோணு மெய்க்குருவின் சூட்சம்பார். (9)

(இ-ள்),—இனி ஒளலியாக்களெல்லாம் காட்டுகின்ற சித்துக்கள் என்ற கஷ்பு கராமாத்துகளெல்லாம், அவர்களின் சாதிக்கப்பெற்ற நினைவென்னும் கமலக்கண்ணுடியின் பளிங்கி ரூபத்தில் தெரிந்து செயய்யப்பட்டதேயன்றி வேறல்ல. இதை உண்மையான மஅரிபாவைச் சேர்ந்து நினைவை ஒருமை வழியின் தோரணையில் விட்டு கைமெய்யாகக் கண்டுகொள் மஅரிபாவானது காமிலான ஷெய்கின் கையைத்தொட்டவுடன் பளீரென்று சோதி தெரிவது தான் முக்ய அடையாளமாக இருக்கும். உடனே உன் இருதயக் கமலத்திற்குள்ளே ஏழுவானங்களின் சிர்றும் தோன்றும். இதுவும் காமில் குருவின் சூட்சியமே அன்றிவேறல்ல. எ-று.

காலு மஞ்சுபட்சி கருதும் நாளொன்று
காகுஞ் சாமமஞ்சுங் காதிலே
பாலன் குஞ்சுநாலும் பறக்கும் பருவம்வேறே
நடப்பி ருக்குந்தூக்க மூணுமே
சால மரசுகாலஞ் சரமும் நடையும்வெகு
சாவுங் குறியுந்தட்டுஞ் சாத்தியம்
மால மவுனமென்ற மந்தி ரத்திஞெடு
மண்ணுங் காலும்நீர்க் குறியும்பார். (10)

(இ-ள்)—இன்னும் சுவாசத்தில் பஞ்சபட்சிளும் கூடியிருந்து அக்னி மகாமில் அண்டசமிட்டு குஞ்சுகள் பொறிக்கும். அதுதான் உன் புத்திரசந்தானங்களாக இருக்கும். அவைகள் அடங்கித் தூங்கும்போது நீ தூங்குவாய். அவைகள் விழித்திருக்கும்போது நீ எவ்வளவு சௌரியத்துடன் சயனித்தாலும் உனக்கு நித்திரை செய்யமுடியாது. அவைகளுண்டால் நீ ஊண் அருந்து

வாய். மற்றபடி உனக்கு ஊனில் பிரியங்கொடுக்காது. பஞ்சபட்சிகளின் காலங்களும் சரங்களும் ஆநந்த காலங்களும், நடவடிக்கைகளும், செல்வ சம்பத்துகளும், மரணகால வித்தியாசங்களும் அந்த ஐந்து பஞ்சபட்சிகளில் நின்றுந்தான் உண்டாகின்றதாக இருக்கும். இதில் பழகியவனுக்கு சரத்தாலும், மண்ணாலும், நீர் வருகிற நிறக்குறியாலும் மரணகாலம் தெரியவரும். எ-று.

ஆகு மந்தரங்க மாலம் பதியதுக்குள்
    ளனலைக் கொழுத்தியிருளில் வெளியைப்பார்
வாகு தலமுங்கண்டு வாசி யதுவுஞ்சென்று
    வளரும் வன்னரிக்கது குருவிலே
மாகு மவுனமதை மகிழு மண்ணில்விட்டு
    மாட்டுந் தண்ணீர்பட்டுக் குளிருமே
பாகு மலிபுலாம்ஹே பகருமீ முந்தாலும்
    பாக நபுஸஞ்சும் பழகும்பார். (11)

(இ-ள்):—இரகசியப் பதியாகிய இருதய கமலத்தில் நினைவாகிய நெருப்பைக கொளுத்தி, இருளாகிய அமாவுடைய ஆலத்தில் வெட்டவெளியைப் பார்த்துக்கொள். அந்தஸ்தலமோ சூரிய மண்டலமாக இருக்கும். வாசியை அதற்குள் சேர்மானஞ் செய்யவிட்டால் அப்பால் சற்குருவின் மகாம்தோன்றும். அதில் நீ தரிபட்டிருக்கின்ற காலங்களில் மவுனபூரணமாக இருக்கவேண்டியது. அப்போது மண்ணுடைய நிரப்பமும், தண்ணீருடைய நிரப்பமும் உன்னில் பூரணமாகும். அத்துடன் நப்சுகள் ஐந்தும் உனக்கு பழக்கமாகிவிடும். எ-று

தூக்குங் காபுஹே துடரு மேயுமைன்
    சுழியுஞ் சாத்துக்குள்ளே யாகுமே
பார்க்கு மலிபுலாமீம் ஹேயுந் தவுசில் நிற்கப்
    பழக்க மலிபுலாமீ மாகுமே
காக்குந் தேயும்ஹேயுங் ...
    கருவு மெழுத்தைக்காணு முனக்குள்ளே
ஆக்குஞ் சகலகுரு காபும் நூனுக்குள்ளே
    யடங்குந் தமிழட்சரக் குருவும்பார். (12)

(இ-ள்): — இன்னும் வாசியில் நுட்பமுடைய காபு, ஹே, ஐன் சாது, அலிபு, லாம், மீம், தேய், ஹேய், இன்னும் குருவில் நிரப்



பமாகக்கூடிய சாபு, நூன், இவைகளுக்குள்ளே இதில் தமிழ் அட்சரத்தில் ஓங்காரம் என்று சொல்வதும், குருவுடைய சூறத்தில் நீ தெரிசனை செய்யவேண்டியது. எ-று.

பஞ்சபக்ஷிப்பதிகம் சம்பூரணம்.

# இல்முல் இன்ஸான் பதிகம்.

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.*

ஆதி நாயனருளுநின் வண்ணமொரு ஆத மாநபி மக்களில்
சோதி நாதனொளி விந்து வந்துமே துலங்கி வந்தவர லாற்றையும்
ஓது மிந்தநபி யாதி யந்தறுஷி லொளிரும் வெம்புலி யாலிக்கு
மாது தங்குகலை கூடி யங்கவனை மருவு மில்முலின் ஸானிலே. (1)

(இ-ள்):— ஆதி நாயகனாகிய றப்புடைய தோற்றத்தில் நின்றும் வெளியாகிய நபி ஆதம் அலைஹிஸ்ஸாம உடையமக்களில் நின்றும் விந்து நாதித்தின் சோதியானது, பரம்பரை வழியாகத் தோன்றிய விபரங்களையும், நமது ஆண்டவர்கள் மிஃறுஜியில் செல்லும்போது ஒரு புலியுடைய ரூபத்தில் நின்ற அலியவர்களுக்கு உபதேசித்த மகத்துவ ஞானங்களும் இந்த இல்முல் இன்சானாக விருக்கும். எ-று.

இணக்கமான வெண்சானுடம்பிலுறு மெண்ணமாம்பதி னஞ்சிலும்
கணக்கதிர்ச் சந்திர னுதித்திடு மக்கணக் கையெண்ணி யறிந்திடும்
மணக்கு மாமயில் பேதைமார்களில் மருவு சாதியது நாலையும்
வணக்க மாயறி ஐங்குலங்களும் வன்னமில்முலின் ஸானிலே. (2)

(இ-ள்):— இன்னும் இன்சான் உடம்பில் உள்ள சகல எண்ணிக்கையான கிரஹப்பலன்களில் நின்றும் முக்கியப்பட்ட பதினைந்து கணக்கையும், இன்னும் சந்திரனுடைய பதினாறுகலைகளின் கணக்கையும், அதன் பலாபன்களும், கணக்கெடுத்துச் சொல்லும் படியாகவும், இன்னும் ஸ்திரி ஜனதிகளில் நான்கு ஜாதி வகுப்புகளையும், இன்னும் ஐந்து குலங்களும் உணர்ந்து கொள்ளப்பட்ட இல்மானது இன்சானுடைய இல்மில் நின்றுந்தான் உண்டாயிருக்கின்றன. எ-று.

எல்லை கண்டவர்க் குரைத்திடு மரியவேகமேது அல்லவா
கல்லையாகிய நீசருக்குரை காட்டவல்லவ மில்லையே
நல்லமாமயி லாண்பெண்ணுகவே நடக்குஞ்சாதியு ரைக்கிறேன்
வல்லைவில்லைப்பழம் பத்மினிக்குவர லாறுமில்மூலின் ஸானிலே. (3)

(இ-ள்):—மெய்ஞ்ஞானம் உணர்ந்த மகான்கள் உலகவாசிக ளாக இருந்து குடும்பபயிர்ச்சி செய்யும்போது, அவர்கள் இந்த இல்மில் கூடியபட்டிலும் ஆராய்ந்திருக்கவேண்டியது அவசியம் எப்பேர்ப்பட்ட சற்குருவும் இதைக்காட்ட எவ்வளவும் திராணியி ருக்கமாட்டாது. ஆனதால் இல்லற ஞானிகள் ஆண் பெண் ணென்றிருப்பவர்கள் வில்லைப்பழத்தின் வாசனையையுடைய பது மினி ஜாதி ஸ்திரியானவர்களுக்கு இன்சானுடைய இல்மில் பேசி வரப்பட்டதாவது என்னவென்றால், எ-று.

பிரதமைக்கொரு பத்மினிப்பெணைப் பிறைமுதற்றினஞ் சேரவுஞ்
சரகுமெய்க்குமே சிவகலைத்திறந் தாவுநாலதே யங்குலப்
பிரபைமெய்மொழி யச்சர மலிபிலுந் தாலுக்குளு மூட்டியே
கரையில்லாமலை யச்சமாசுகை காட்டுமில்மூலின் ஸானிலே. (4)

(இ-ள்):—ஒவ்வொரு மாதத்தின் ஆரம்ப நாளையின் இரவில் ஆநந்திக்க வேண்டியது ஷரஇன் பரிசுத்தமான சொல்லாக இருக் கும். தமிழ்ஞானிகளும் இதற்கு அத்தாட்சி கூறியிருக்கின்றார் கள். ஆனால் தாலுடைய மகாமில் வைத்து சரத்தில நினைவை வாசிசெய்யவேண்டியது இதுதான் இன்சானுடைய இல்மாக இருக்கும். எ-று.

கன்னிமாபயில் சொர்ணமாகிய கமல அல்குல்வி ரிந்திடும்
சொர்னமாரி சொரிந்திடும்மொரு வட்சரத்தினது பெருமையால்
வன்னம் பாடியே கொஞ்சுமாமொழி யாஹூயாறப்ப லாலமீன்
எண்ணியாடி யிரங்கி நினைறிடு பேசுமில்மூலின் ஸானிலே. (5)

(இ-ள்):—அவ்விதமான பரவசஞ்செய்தால் அம்மயிலுடைய மோகமலையான தக்க கீதநாத ஓசையும நாலாபக்க குமுதத்தா மரையில நிறை வெள்ளம் பிரண்டு சொரியும். பாபுர் றகுமாணியா வின் திருவாசலுந் தளதளப்புடன் திறந்து மகரந்தக் கமலமானது விரிந்து உல்லாச விரகதாபங்கொடுக்கும். அக்கமலத்திலிருந்து வண்ணசங்கீதத்தொனிகள் நவீன சாஹித்யத்துடன் கேட்கும்.



சப்தத்தின் விபரமாவது,யாஹூ என்பதாக இருக்கும். இதானது இன்சானுடைய இல்மின் இராஜ தந்திர ஞானமாக இருக்கும். இந்த இல்மின் பரிபூரணம் வரையிலும் தெரிந்து கொள்ள ஆசித்த வன் தக்கமுதலுடன் என் சமூகத்தில் வந்து சின்னாள் வாசஞ் செய்தால் முற்றும் தெரிந்து கொள்ளத்தடையில்லை. எ-று.

ஆதியாந்தொழி லுருகுப் பொங்கியே யானநாத னெழுந்திடும்
சோதி யோடியி ரங்கிடும்வழி சூறத்தில் அயினைதில்
மீதில்மீமி லெழுந்த லாமலிபு மிஞ்சுப்ஹேயுந்தால்கூட்டியே
சாதிமாமபில சமத்ததாகிய சாருமில்மூலின் ஸானிலே. (6)

(இ-ள்);—ஆதியாகிய கன்சன் மக்பிதாத்தின் மனமோகன அக்னி சுவாலித்து வடிந்துவிட்ட நாதமானது, ஆலம் அமா அள வில் சென்றவுடன் றப்பின் இலாஹியத்தாகிய சூறத்தென்னும் இயந்திர அச்சியில் ஒழுகி அதுபோல் பதியப்பெற்று. இரண்டு நேத்திரம் என்ற சிம்மாசனத்தில் குதுறத்துடை ஒளிவின் வட்ட வடிவமாக நின்றிலங்கிற்று. அதில் மீமும் அலிபும் ஹேயுங்கூடினால் பெண்ணாகவும், அல்லது லாமும் அலிபும் தாலும் கூடினால் ஆணா கவும் சமைந்துவிடும். இது இன்சானுடைய சிர்ருகிய இல்மாக இருக்கும். இது அறியாத குருமார்கள் மனிதனாகவேமாட்டார் கள். எ-று.

உகாரமாகிய வக்கினிக்கலை யுத்தரிக்கவு முத்தமம்
இகாரம் ரண்டுமீ மானிலாகி யிலங்கிடும்குய்ய ஹம்சனில்
அகார சந்திர னேழிலங்கலை யஞ்சுமொன்ப திலங்கியே
சிகார மெய்க்கலங் கொண்டுசுற்றிட சிபாவுமூல்மூலின் ஸானிலே. (7)

(இ-ள்): – உகாரம் என்னப்பட்ட சூரிய வாசியை உன்ன தப்படுத்தி இழுத்து நிற்பாட்டினவுடன் உனக்கு அவ்விஷயத்தில் உத்தமம் ஏற்படும். இகாரம் என்னப்பட்ட சந்திரகலையை மட்டுப் படுத்தினவுடன் ஸ்திரியின் அமுதநிலையானது, கொதிக்க எத்த னிக்கும். அதானது இரண்டு மீமுடைய தத்துவமாக இருக்கும். ஹம்சென்பது மய்யத்தாமரையாக இருக்கும். இதுவும் வெகு சுலபமாக இருக்கும். இன்னும் சந்திரனில் அகாரம் வைத்து இழு த்து நிறுத்தும்போது, அந்த ஆனந்தத்திற்கு எல்லை சொல்ல உன் னால் முடியாது. அநுபவித்துப்பார். சிகாரம் என்ற மெய்க்கலன்

அதாவது கலிமா விரலாக இருக்கும். அதனால் சுற்றி அமிர்த மடையைத்திறந்து கொள். இதானது இன்சானுடைய இல்மில் நின்று முள்ளதாக இருக்கும். எ-று.

மத்து சத்துடலு ஜெசமாகிய மருவெழுந்திடும் வேளையில்
சத்து மாகிய வத்தலத்திலே தங்குமாமதி விந்துமாம்
பத்து மாகிய விந்திரக்கலை பதிநாலுமொத்த விரவிலே
எத்து மேவிய நாலுமொக்கவே யிலங்குமில்மூலின் ஸானிலே (8)

(இ-ள்):—மத்து சத்து, அதாவது ஜலால் ஜமால், அதாவது வரட்சி குளிர்ச்சி, அதாவது ஆண் பெண், ஆக இரண்டு விரகதாபத்தாலும் கபால உள்ளவரை மண்டலத்தில் விளைந்து வந்த விந்து நாதமானது, தேவேந்திரன் கொலுவாகிய ஐனுல் எக்கீனில் நின்று நிறம்பெற்று, முஸ்தபா என்ற தெளித்து வடித்த திருமணி முத்தின் வடிவு எடுத்துக்கொண்டது. அவ்வாறு எடுத்த சூறத்தில் நான்குபூதங்களின் தற்குணங்களும் போய் பூண்டுக்கொண்டன. இன்சானுடைய இல்மையறிவதில் இந்த மகத்துவங்கள் தெரிய வரும். எ-று

உச்ச மாகிய மூன்றிரேகையு மொத்தவுட்கம லத்துளே
பச்ச மாகிய பாதைவாசலை பையவேதுற மந்திரம்
கெச்ச மாடிய ஹேயும்மீமுங் கிளர்ந்துகூடிய லாமும்ஏ
ஒச்சமாகி யிரைந்திடும்வகை யோசை யில்முலின் ஸானிலே. (9)

(இ-ள்);—ஆனால் இது மூன்று ரேகைக் குறிப்புடைய நாதமாக இருக்கும். இது உட்கமலமாகிய மோக நெருப்பில் நின்று விளைவுசெய்யப்பட்டதாக இருக்கும். இதன் ரஸ்தாவாகிறது, வலம்புரி வாசியாக இருப்பதினாலே கூட்டவும் குறைக்கவும் உன்னால் முடியும் அப்படியே செய்து ஜெயம் பெற்றுக்கொள். இதற்கு மணிமந்திரமானது, ஹே, மீம், லாம், ஏ ஆக இருக்கும். இவைகளை நல்ல வியாபகசக்தியுடன் வைத்து திக்றுசெய்துக் கொள். அப்பால் ஒரு ஓசையானது நாதத்தில் கொடுக்கும். இது தான் இன்சானுடைய இல்மாக இருக்கும். எ-று.

மருவெழுந்திடு வாசனைக் குழல் மங்கைமாமயில் கொஞ்சியே
கருவுறைந்திடு மவ்வெழுத்தது கமல சிங்கார குதுசியில்



அறுஷுறைந்திடு அலிபுஸின் அயின் லாமும்ஏமீமுங் கூட்டியே
சருவுக்காஹாமி மாகவேகியே சாதும் மில்முலின் ஸானிலே. (10)

(இ-ள்):—மேற் கூறியவாறு வில்லப்பழத்தின் வாசனை தரக் கூடிய கூந்தல் பாரத்தையுடைய பெண்மணியின் கருப்பவரையில் குழவி சமைகோலங்கொண்டு விடும்படியான இன்சானுடைய இல்மானது எது வென்றால் நீ யறிந்துக்கொள், கமல சிங்கார குதுசியாகிய நேத்தாக்கொலுவில் றூஹுல் குதுசி என்கின்ற தாத்தின் அச்சியந்திர வடிவில் நின்றும் விந்து நாதமானது, உறைந்து நின்று, அலிபு சீன், அயின், லாம், ஏ, மீம், அறுகோண அட்சரங்களின் மகிமைகளால் சுரூபந்திரண்டு காப் ஹா, யா, சாது, என்பதாக றூஹு விளையப்பட்டு தெளிந்து பழுத்து வெளியாகின்றது. எ-று.

வாசியெல்லை யிருத்திட அயின் வாவுக்காவுமீம் லாமும்ஏ
பூசித்தொக்க விணங்கி யேபதி நாலுங்கூடி யமைந்திட
மாசியற்று மயக்கமற்றிட முழுக்கு மற்றுத் துடக்கறப்
பூசையொத்து மிகுந்த தாலறை பூட்டுமில்முலின் ஸானிலே. (11)

(இ-ள்):—றூஹு எப்படி விளைந்த தென்றால் சூரியகலையாகிய வாசி உள்ளே உந்திக் கமலமாகிய மாக்கொடியில் நூரையீரலின் மார்க்கமாக வந்ததே:—அயின், வாவு, காபு, மீம், லாம், ஏ, இந்த ஆதாரங்களும் ஒக்கக்கூடி, பதினான்கு இல்முகளும் பொதியப்பட்டு உண்டாயிற்று. ஆனதால் இதை ஒருவன் பொருந்தி ஒன்றுபட்டுக்கொள்ள வேண்டுமானால், அவன் இருதயத்தில் யாதொரு அழுக்கும், இல்லாதவனாக சந்தேஹம் என்ற பாழ்ங் கிடங்கில் விழுந்துவிடாதவனாகவும், யாதொரு நஜீசில்லாதவனாகவும், துடக்கு என்னப்பட்ட பாவதோஷ பந்தங்கள் அவனைச் சூழ்ந்தில்லாதவனாகவும், வழிகாட்டியாகிய சற்குரு நாதனுடைய கோபாக்கினி என்னும் சாபவேதனையில் அகப்படாத சமர்த்தனாகவும் இருந்து, பூசை என்னும் புடம்போடப் பெற்றால்தான் அந்தப் பருப்பு வேகும். இதுதான் இன்சானின் சிர்றாகிய இல்மாக இருக்கும். எ-று.

அஹதுமாகி அஹமதுமொருவன் புகொண்ட முஹம்மதைச் [லிலே
ஷஹதுகொண்டுஹறி வென்றுமுள்ளே யுறைந்தறகுலுல்லாகு

பஹூ துமாகிப் பதுங்கியேவரு பதினெண்ணாயிர மாலமும்
ஒஹூது வொன்பது மாகியொக்கவே ஒருக்கமில்முலின் ஸானிலே

(இ-ள்):—ஹே! மெய்ஞ்ஞானம் என்னப்பட்ட கூரிய கருவி எடுத்துக் கையாட வந்த மகனே! இந்த இடத்தில் சற்று நிதான யோசனையுடையவனாக உணர்ச்சி செய்துபோகவேண்டியது. உன் மனவாசியை உன்னில் பூர்ணகோலங்கொள்ளத் தேடிக்கொள்ளு வையானால் அந்த சமர்த்து எவ்விதந்தெரியுமா? அஹது என்ற எல்லையற்ற ஒளியின் இரகசியத்தில் நின்றும் பரஞ்சோதி மாணிக்கமாகி அஹ்மது என்ற திரு நாமமுண்டாகி, அப்பால் நூறுல் முகம்மதியாவாகிய நம் நபிகள் சிரோமணியவர்களை, உன் சுவாச வோட்டங்கள் அனைத்திலும் தியானஞ்செய்து திக்று தஜல்லியாத்தில் பழகிக்கொண்டு வருவையேயானால் அது நாளாவட்டத்தில் யாஹூ வென்று உள்ளே தொனிக்கத்தலைப்படும். அப்போது றூஹானது உன்னில் "சூல்" என்ற சூறத்துடன் ரூபங்கொள்ளும். அச்சமயம் உன்னில் பதினெண்ணாயிரம் ஆலங்களின் ரூபங்களும் தோத்ரவடிவாய்த் தெரியப்படும். ஜாதிகள் சமஸ்த்தமும் தத்தம் வேற்றுமை என்ற பிணக்கை அவிழ்த்துக்கொண்டு உன்னில் வந்து ஒன்று பட்டுப்போகும். நீயே ஆலங்களின் சிர்றுகளுக்கு அடையாளமுடைய ஏகசமதாயிருப்பாய். இதுதான் ஆலமுல் இன்சான் என்று சொல்லுவதாக இருக்கும். எ-று.

இல்முல் இன்சான் பதிகம் சம்பூர்ணம்

# அறைதிறப்புப் பதிகம்.

*எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்*

அச்சுலவு கொச்சுமொழி யம்பரஞ்சு ழித்துவர
　　வத்தினி மயிற்கு ரளையே
தற்சொருப வச்சஅறை தப்பற வுரைக்கவினி
　　தச்சுமொரு பன்னி ரண்டுமே
வச்சவிரல் அத்தனையில் உற்றமயி லாளையவண்
　　வச்சுவினை யாடு குணமே
மூச்சுகுமி ழைச்சரிந்து முப்படி நடக்கைவரு
　　மூச்சறை திறப்ப தெவரோ. (1)



(இ-ள்):—இதானது மனமோகன ஸ்திரீயின் அமிர்தநிலையை அழிக்கச்செய்யும் சம்ப்ரதாய இல்மில் நின்றும் சொல்வதாக இருக்கும். அன்னவளின் விரகவெள்ள மடையுடைத்து வரும் சமயம் கொச்சையான பல பரிகாச மொழிகளையும் வாயிற் பழக்கமிடுவாள். மதன குமுதவரையில் உன் உகிர்கொண்டு சுழற்றும் போது அம்பரகோலாகலங்கள் அவள் செய்து சுற்றுவது வெகு விமரிசையாக இருக்கும். இனி வாசி நடைகில் பன்னிரண்டும் கையாட்சி செய்யும்போது, அன்னாளை அமிர்தக்கடல் ஓடிவரும் ஓர் வள்ளத்தில் ஒரு மயிலை வைத்த வண்ணமாகத் தோன்றும். இது குமிழின் அருகில் உள்ள கரிகரஸ்தாபரங்களாக இருக்கும். இதற்கு முக்யமாக சூரியகலை வாசியை சுவாசத்தில் நிறுத்தி நடத்தவேண்டியது. இந்த இல்மின்படி நடக்கும் மன்னர்கள் உலகத்தில் யார் இருக்கின்றார்கள்? எ-று.

கத்துகட லேழுமொரு வெற்றிநட மாடிவருங்
　　கைத்திருகை போல வவள்தான்
சுற்றுமினி யச்சமிலை சம்பிரதா யவுச்சமது
　　தட்டியேகை கொட்டி மொழிவாள்
நச்சுவர திக்கயலை நம்புவான் அலிபுஹேயும்
　　நாமொரு மீமுந் தாலுமே
பற்றுமயி லேயவள்கண் பம்பரஞ் சுழித்துவருமுன்
　　பச்சறை திறப்ப தெவரோ. (1)

(இ-ள்):—அப்போது அலை முழங்கும் சமுத்திராதிகள் ஏழும் ஒருமிக்க எழுந்து நடனமாடி வருந்தன்மைபோல் விளங்கும் அன்னவளுடைய இருகரங்களும் திருகை சுழல்வது போன்றுவட்டமாடும். இன்னும் உன்முகமானது சந்திர மண்டலம் போன்று அன்னவள் நோக்கத்திற்குக் காட்டும். அடிக்கடி உன்னை மெய்ச்சிப்புகழ்வதும், கையைக் கொட்டிப் பாடுவதும் நீ கண்டு உள்ளாநந்த முறுவாய். இன்னும் அலிபும் ஹேயும் வாசியில் சுழற்றிவிட்டபோது இருகண்களும் பம்பரங்களைப்போல் சுற்றிவரும். இதுதான் இல்முல் இன்சானுடைய தத்துவமாக இருக்கும். எ-று.

நந்துகலை சுந்துவளை நண்காம நெருங்கிட
　　நறுமணங் கமழ்ந்த மலரும்

செந்துகள் வெருட்டிவருஞ் செருக்கான மேகமது
செம்பினிற மான குழலுங்
கந்துகரி யந்திவரும் கந்தாக்கு வட்டிடைமிற்
கட்டியபொன் தந்த மதுபோல்
விந்துகலை செண்டுதனம் விற்பன மெழுப்பிவர
விஞ்சறை திறப்ப ரெவரோ. (3)

(இ-ன்): — வலம் புரிச்சங்குபோல் ஒரு தாமரையானது நின்று நறுமணங்கமழவும், மேகங்கள் படர்ந்த வண்ணமாக உள்ள அளகபாரலட்சணமும், சுரோணித வாசனையும் தோன்றும், இது இன்சானுடைய இல்மையறிந்தால் வெளியாக்கத்தத்துவம் பெறலாம். எ-று.

சந்தனங் கதம்பமமு தாதிகைபன் னீருடன்
சத்தத்துட னெடுத்தே யணிவாள்
பந்தடிபற் ருமநடை பைந்தொடியி றுக்கியிடை
பந்தபைங் கொடியுடுத்த கலைதான்
முந்தெனத் தரித்தகதி ரிந்திரன் மதத்தவொளி
மும்மதந் தரித்த வவள்தான்
வந்தென விருதேயவள் வண்சுவை யடக்கிடவுன்
வண்ணறை திறப்ப ரெவரோ. (4)

(இ-ன்):—இன்னம் பதுமினி ஸ்திரீயின் சுய அடையாளமாவது என்னவெனில், அதன் சுபாவமே சந்தனம், பன்னீர், கஸ்தூரி, ஜவாது இத்திரவியங்களை எடுத்தணிவது சதர வழக்கமுடையதாகும். மிர்துவானரப்பர் பந்துகளைப்போல் ஒசிய நடையையுடையதும், இளமிர்துவான வஸ்திரங்களைத்தரிக்க விருப்பமும், தேவ இந்திரன் கொலுபோன்ற அழகிய மேன்மாடிகளை தமக்கு வாசனை இடமாக்கக் கருதிகிறதும், இதை சரிவரக்கலந்து சுகாநுபவத்தையடைகின்றவர்கள் யாவராக இருக்கும். எ-று.

காரிகை கடக்கவொரு கால்படம் நெருக்கவெகு
காசுகள் பறிக்க வவளாம்
மாரிகை யுருக்குர்வெகு மாசுக வெடுக்கும்வகை
மத்தள முழக்க மதுகேள்



பூரிகை நவுரியொரு பூட்டுங்காபு மீழுமாக
பூசல்வினை வாவு மதிலே
சாரிகை நடத்தியொரு நாழிகை யிருத்தியேகை
சாவறை திறப்ப ரெவரோ (5)

(இ-ன்):—காரிகை என்னும் நிலையை அடக்கித் தாண்டவும் கால்படங்களின் குறிகண்டு சமர்த்துச் செய்யவும், இன்னும் அன்னவர்களிடம் மிக்க ஆதாயங்களைப் பெற்றுக்கொள்ளவும், மத்தளங்களைப் போன்ற இளநீர்களைப்பற்றும் மார்க்கம் எது வென்று கண்டு பிடிக்கவும், இன்னும் காபு, மீம் உடைய வாசியில் வைத்துக் காரியம் செய்துகொள்ளவும் எவரறியப் போகிறார்கள். எ-று.

கிங்கிணி கிணுங்குமரு டங்கும் நெருங்கிடக்
கிணிக்கரங் கொடுத்துப் பினியாம்
சிங்கார மடமயிலை யிங்கிதமா லாமலிபைச்
சிந்தையி லிருத்தித் தவுசில்
ஒங்காரங்கொ டுத்துயர்த்தி யோங்கார நிலைநிறுத்தி
யொப்பியொரு தப்பு மயிலை
வங்காம் வரிச்சிரசில் வன்காதல் மஜானுனையுன்
வாசறை திறப்ப ரெவரோ. (6)

(இ-ன்):—இன்னும் கிரீடந்தரிக்கப்பெற்ற மகுடத்தலையில் முத்தமிட்டு மேளதாள விப்பங்களைத் தொடுக்கவும், அலிபை இருதயத்தில் இருத்தி, ஒங்கார வாசலில் செய்யவேண்டிய பக்குவங்களைச் செய்து காரியம் நடத்திக் கொள்ளவும்;—பித்தமாகிய மஜ்னூனையடக்கியாளவும், வாசலைத் திறக்க திறமையுடைய மன்னர்கள் யார்? எ-று

மடமடவென் றேமுழங்க மண்டல நடுத்தெருவில்
மச்சதல முச்ச மதிலே
படபடவென் றேறியது பச்சைமர வுச்சியிலே
பட்டுருகும் வேளை தனிலே
கடகடவென்றுமொரு கணைகடனை நேர்ந்துதிகழ்
கண்ணறு மோட்டி வரவே
தடதடமென் றுன்னமுதில் தங்கியே விளங்குகன
தன்னறை திறப்ப ரெவரோ. (7)

(இ-ள்):—இன்னுப நப்சானியத்தின் வாசலில் நின்று மட மடவென்று ஊசாட்டங் கொள்ளும்படியான சூரிய வாசியை உச்சியின்மேல் நிறுத்தி, இன்னும் பச்சை ரெங்காகிய் உச்சி ரோபத்தையிசைத்து வண்மை படுத்தவும், அறையில் உள்ள அமுதத்தைத் திறக்கவும் சாமார்த்திய புருஷர் யார்? எ-று.

காலினைப் பிணைத்துமிரு காலையாட் நெருக்கியே
    கைத்தா ளடித்த லத்திலே
மாலிகை பொருந்துமன மாவடி நடந்தவழி
    யஞ்சியிவள் கொஞ்சி மொழிவாள்
சாலிகை துரத்தியகண் மாலிகை நடத்தியதால்
    மாசறக் கலந்த அலிபால்
பாலிலே சுகித்தவெகு பானகமி னித்தசுவைப்
    பாசறை திறப்ப ரெவரோ. (8)

(இ-ள்):—அன்னவரது பாதங்களை உச்சியின் நேராகக் கொண்டு சந்திர சூரிய சரங்களை அதற்கு நேராக நிறுத்தி மதன நடையில் கொழுக்கினவுடன், வாய்குளரி ஒன்பதும் தடமாறி செஞ்சியவார்த்தையுடன், நின்று கிரகும். அலிபின் ஓட்டத்தில் சரத்தைப் பிடித்து வைக்க உடனே மோகன சமுத்திரம் கொந்தளிக்கும். இது யார் அறிவார்கள்? எ-று.

உன்சர மிருத்தியொரு பஞ்சரக் கிளியைப்பிடி
    யொப்பரவு தப்பி லாமலே
வஞ்சரத் தவத்துடைய வன்னகலை யானவளை
    வன்புகழ் விளைக்க விதியோ
பொன்சரங்கள் கோத்தவணி போலவொரு அத்தினியைப்
    பொற்றவிசு மீதி ருத்தியே
பஞ்சரச்சு ரிகைசுற்றி யஞ்சனக்க லல்குலரை
    மத்தெனத் திறப்ப ரெவரோ. (9)

(இ-ள்):—உன் சரமாகிய நினைவைத்தட்மாட விடாமல் பொறுமையுடன் நிறுத்திவைத்துக் கொண்டு, ஒரு கிள்ளையைக் கரத்தில் கொடுத்து, காரியம் செய்தல்தான் அத்தினிமாதின் திறப்புக்குரிய யோக்கிதி. எ-று.



மாதூதித் துற்றவரும் மாசுகலை மிச்சமது
    மனமதஞ் சுகித்த பொருளோ
காதுகணும் நாசிவிழி காட்டிய துடுக்குமொழி
    கயசவள மெத்த வளையதே
தாதுவளி சித்தாகு கொட்டிய விஷக்கடுகு
    தப்புற மயக்கு மதுபோல்
மீதுரைபொல் லாதவளை மீன்கலை தொடுத்ததே
    மின்னறை திறப்ப ரெவரோ. (10)

(இ-ள்):—இது போக மற்ற எல்லா ஜாதிகளுக்கும் மகரத்தில் நகம்வைத்து அகரத்தில் அகம்வைத்து நடுவணை சயனிக்க கிடத்தி வார்த்தை வையாளியால் தடவி குரும்பை திறந்து நீர்வடிய இயற்றுவது அறைதிறப்பாக இருக்கும். எ-று.

பஞ்சவான் நவக்கிரகம் பத்துமடி யத்திசுரம்
    பஞ்சாய மெடுத்து ரைக்கவோ
நஞ்சுகொடி தெனச்சரீர முப்புநிற வப்பெழுப்பி
    நக்குகலை விப்பு ருதியே
இஞ்செனத் தரித்தமேகங் குஞ்சியோ டிரங்கிவரு
    மின்பமயில் மோக மதனால்
வஞ்சமது வுன்செயலை வந்தியது செய்தெடுக்க
    வஞ்சறை திறப்ப ரெவரோ. (11)

(இ-ள்):—நவக்கிரகங்களும் அஸ்திவாரம் குலைந்து கொட்டும்படியாக நஞ்சிருக்கும் வாசியை நிறுத்தி அமுதிருக்கும் வாசியை உட்கொண்டு மதிலின்பேரில் படர்ந்த மேகங்கள்போல் வளைந்த விரகதாபங்களை பஞ்செனப் பிரித்து அறை திறக்கத் திறமுடையவர்கள் யார்? எ-று.

ஆடுமொரு வித்தைவழி மாலுமொரு நற்கலிமா
    ஆகுமொரு வித்தை யதுகேள்
சாடுமொரு வெற்றி அலி பாகுமது வுற்றஹேயும்
    ஜாதிமீமும் தாலுமாகவே
கூடிவர வொத்ததையும் ஹவைதையு முத்துமனக்
    கும்மியடி மீமும்ஹே தால்மீமுமே

பாடியசிங் காரமடிப் பவளநிறப் பெண்மயிலே
பச்சறை திறப்ப ரெவரோ. (12)

(இ-ள்):—நன்மைதரக்கூடிய கலியின் அச்சரங்களைக்கொண்டு சித்தாடி இருக்கின்ற ஞானவித்தையால் எதையும் கைவசஞ் செய்யும் விதத்தைத் தெரியவேண்டியதைக்கேள். அலிபையும், ஹேயையும், மீமையும், தாலேயும், ஒன்றுபடச்செய்து ஹூ மந்திர வாசியைத் துணைக்கருவியாகப் பிடித்து கும்மியடித்தால் அறையானது திறக்கும். எ-று

அறைதிறப்புப் பதிகம் சம்பூரணம்.

# வ ல ம் பு ரி ப் ப தி க ம்.

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்*

திருமது வெழுப்பத் திசையது நாலிற்
செம்மையூ ணறுசுவை யதனிற்
கருதிய வாறு கருணேரே சினையைக்
கலந்திடு முடலினிற் பகுப்பை
மருவியே கலந்தே யொருபிடி சாத
மருந்திய வமுதின்பங் கயந்தும்
உருகியே வாங்கு முள்ளுறைக் கமல
முறைந்தது வலம்புரிச் சங்கே. (1)

(இ-ள்):—வலம்புரிச்சங்கின் வல்லமையைப்பற்றிப் பேசப்படுவதாக இருக்கும். இந்த உடலில் அழகு என்று சொல்லப்பட்ட உதிராக்னியின் சாராம்ஸத்தை தரக்கூடியது. இன்னும் அறுசுவை உண்டி பதார்த்தங்களை உள்ளுலகங்களில் கொண்டு சென்று குடர்க்கருவிகள் தோறும் செல்லவைத்து ஐந்து பூதிய ஸ்தானங்களிலும் அடையச்செய்து சத்துகாரங்கொள்ளச் செய்து இருதயத்தாமரைக்கு மிகுந்த ஆதாரப்பொருளாக நிற்கின்றது. எ-று.

தங்கிய தலம்பூ தரபத்தின் நொய்தாய்த்
தருநிலந் திருக்குலா மதுக்குள்
பொங்கிய மூல முத்தடுப் பதனில்



பொருந்திடு மீன்கனல் கொளுத்திச்
சங்குபா லதனுங் கொதித்திடும் வேளை
தருந்தவி அலிபினுற் கடைந்து
முங்கவே யுறைவிட் டுறைந்திடுந் தயிரை
முடித்தது வலம்புரிச் சங்கே. (2)

(இ-ள்):—இன்னும் இந்த நிலவுலகத்தின் கண்ணுண்டான சகல ஜீவராசிகளின் மோகாக்னியிற்கொழுவி நின்று, ஆகாரங்களை உதிரமாக்கி, அவைகளை அன்ருடம் ஜீரணிக்கச் செய்து, விந்தை திரட்டுவித்து அவ்வித்தில் நின்று இன்னொரு ஆலத்தை உண்டாக்கி பாலாக்கி, அதை மாதாவின் கர்ப்பத்திற் கொண்டு போய்விட்டு உரையுண்டாக்கி, அப்பால் ஆலம் அஜிசாமில் வைத்துத் தயிராகக் கடைந்து, அலிபை அதற்கு மத்தாகவைத்து, நிறுத்தி இன்சானை முடித்து விட்டதும், வலம்புரிச் சங்காக இருக்கும் என்பதை இதனாலறிய வேண்டியது. எ-று.

சகிக்கருங் கல்லுத் திரண்டது வெண்ணெய்ச்
சாந்தொடு வுருகநெய்க் கலசம்
பகிரொடு மேந்தி யதினிறஞ் சிவப்புப்
பழகியே யுறைந்தபின் முளைத்த
மகிழ்வொடு ரண்டா மொருபகுப் புதிர
மறுபடி யும்பொடு சிறுநீர்
சுகிழ்வுடன் மறிகா லுன்பலந் தவிரச்
சுழகிடு சக்கையொன் றதுதான்
ஒகியொரு கூறு முன்னிடத் திருந்து
முறைந்தது வலம்புரிச் சங்கே. (3)

(இ-ள்):—இனி கல்லுக்கு சமானமான மட்டியறிவை சிறிது காலம் வெண்ணைபோல் வைத்து, உலகத்தை நடத்தச்செய்து, அப்பால் முன்செய்த பாக்கியத்தின் விதிவசத்தின் பயனால் அந்த வெண்ணையை மெய்ஞ்ஞான ஆராய்ச்சி யென்ற அக்னியால் உருகச்செய்து கடைத்தேற்றிற்று அந்த அக்னியாகிய உஜூதே ஒன்று மில்லாது போய்க்கிடந்த அமாவுல் முத்தலக்கு என்கின்ற இரகசியத்தில் நின்றும் பகாவுடைய நாட்டத்தில் பரமாத்மாவை உண்டு பண்ணி ஜடலத்தில் ஊண், உறக்கம், சிறுநீர், மலம், உப்பு

நாட்டம், தேட்டம் யாவும் வைத்து வெளியாக்கி விட்டதும் வலம்புரிச் சங்காக இருக்கும். எ-று.

ஆகவே பங்கு வகையொரு வஞ்சும்
        அறிந்திடு மாகமெய்க் கருத்தால்
தாகமு முன்னுத் தகையொடு மோகம்
        தருமத முருக்கிட வகைகேள்
பாகமு மனுகாப் பதுமசித் தினிசங்
        கினிமயில் முகத்தைக்கண் ணோக்கித்
சோகநீந் தவளைச் சுருதிநா ளிரைத்து
        சுழித்ததும் வலம்புரிச் சங்கே. (4)

(இ-ள்):—ஆனதால் இந்த ஜடலமானது ஐந்து பூத நட்சுகளின் பங்காக நின்று ஆடிவருகின்றது. ஷ வகை ஐந்தும் அறிய வேண்டியது மனிதனுக்கு முதற்கடமையாக இருக்கும். அப்பால் பதுமஸ்தானங்களைக் கண்டறிய வேண்டியது, அப்பால் தவ நிலையில் கற்ப சித்துக்களைத் தேடவேண்டியது. அல்லது விந்துகளை உருப்போட்டு முடிக்கவேண்டியது. மிக்க அவசியமானதுவும் வலம்புரிச் சங்காக இருக்கும். எ-று.

நலம்பெறக் குயிலான் குலவிப விரைச்சல்
        நடந்திடு மறுபத்து நாலில்
தலம்பதி யாகிக் கமர்தலம் வெடித்துத்
        தயங்கியே மயங்குமவ் வேளை
குலமறி மேகக் கார்நிறம் பொழிந்த
        கருணைப்பேர் கொண்டவிற் துருகி
விலகிய குழந்தை யிளம்பிறை மடந்தை
        விழித்ததும் வலம்புரிச் சங்கே. (5)

(இ-ள்):—நலமாகிய திவ்யஞானத்தை அடைவதற்கு நூறுல் முகம்மதியாவென்னும் மயிலை நூறுறு கருதியவுடன் உதிரங் கொதித்து, நாதவிந்துஸ்தானம் பொங்கி வடிந்து வந்து, கமலதாமரை விரிந்து, இளம்பிறை மடந்தையின் ரூபத்தில் நிறுத்தி சுயம்பாக வெளியாக்குவதும் வலம்புரிச் சங்காக இருக்கும். (எ-று)



மின்வெட்டி மறைந்தாற் போலசித் தினியை
        மிடுக்கிக்கொள் முன்முகக் கண்ணில்
தன்னிதழ்த் துகையைச் சுவைத்திடுந் தலத்தில்
        சடுதியி லொருநொடிப் பொழுதில்
மென்னிடு நுனிநா நுணைத்திடு நோகா
        மேதியைப் பிடித்திரு காத்தால்
உன்னியே யேற வுறைப்பொடு வழியை
        யுரைத்தது வலப்புரிச் சங்கே. (6)

(இ-ள்):—இனி சித்தினிமாதுடைய இல்மில் செய்யவேண்டிய உபாயதந்திரமானது என்னவென்றுல், வெகு அவசரமாகவும் மின்னல் வெட்டி மறைவதுபோல் முடுகவேண்டியது. எப்படியானுல் முன் முகப்பால் வெள்ளம் வளரச்செய்து நாவை விழியின் நடுவே வைத்துத் தட்டவேண்டியது. அந்நேரம் காரியம் அடங்கலும் பின்னடையாமல் நிறைவேறி விடும். இதுவும் வலம்புரிச்சங்கு எனப்பட்ட சூரிய வாசியாக இருக்கும். எ-று.

பூவெழு வெண்மைக் குரலைசிற் றிடையும்
        பூரித்துக் குவிந்துள தலையும்
பாவெழுஞ் சோதிப் பதுமத்தி னிதழ்போல்
        பரந்திடு மல்குலை யுடையாள்
தாவத்தி னுடனே குதுசியின் நிறுத்தித்
        தயவுட னுனிநா வதனுல்
வாவியை யுலவி வருந்தலை யுளத்தை
        வளைந்ததும் வலம்புரிச் சங்கே. (7)

(இ-ள்):—இனி அத்தகைய வடிவையுடையதை பதுமம் என்ற நிலையை உடைத்து இதழை விரியச்செய்து கரிகர இன்பத்தில் வைத்து குதுசியின் வாசலாகிய விழியின் காரியம் செய்து மதுர வார்த்தையாடி மகிழச்செய்து விடுவதும் வல்ம்புரிச் சங்குடையதத்துவத்தைக் கொண்டே சகலமும் யோசனையாக நடப்பிக்கவேண்டியது. எ-று.

அன்னத்தி னடையா மவள்மொழி குயிலா
        மழகிய வல்குலின் வாசம்
வெல்லத்தின் மதுவாம் விளக்கொளிக் கருவாம்

வெக்குத்தின் கூறுடற் குழலாள்
மல்லுற்று வாது பேசிய மருகு
சித்தினி குரலைப்பெண் மயிலை
வல்லத்தின் கோட்டை வாசற்சஞ் சிவியை
வாங்கிய வலம்புரிச் சங்கே. (8)

(இ-ள்):—அன்னப்பட்சியின் நடையைப் போன்ற திவ்ய குயிலைப்போன்ற மதுரித்த வார்த்தையையுடைய சித்தினிமாதின் வாசமான வெல்லக்கட்டியை முகந்த தன்மைபோன்றதாக இருக்கும். அவளுடைய ரெங்கானது விளக்கின் சுடர்போன்றதாக இருக்கும். இன்னும் முகம்மதிய்யத்தான அன்னவளின் கூந்தல் பாரமானது கரிய மேகத்திலும் சிறந்த தன்மையுடையதாக இருக்கும். இன்னும் வல்லமாகிய புருவமந்தியாக இருக்கும. அன்னவளுடைய திருவாசலானது அதற்கு சஞ்சீவியாக இருக்கும். அதன் அம்ஸமானது வலம்புரிச்சங்காக இருக்கும். எ-று.

செம்மலர் மாலை சொருகிய குழலைச்
சேரவே தவிசினி லிருத்திப்
பம்மிய கலையைப் பயபய விறக்கிப்
பருகவே மயிலவள் தனக்குக்
கும்மியை யிறுக்கி யுறைந்திடுந் தலத்தைக்
குவிந்திடு தழுவிடுங் கழுத்தை
இம்மியின் கணக்கை யியம்பிடத் தருமோ
விடம்பிடி வலம்புரிச் சங்கே. (9)

(இ-ள்):—முகம்மதியாவென்னும் அப்பெண்மயிலின் கூந்தலை உன்னில் சேர்மான மாகும்படியாக சிம்மாசனத்தில் இருத்திக் கொண்டு ரேசக கும்பிகக்கலைகளை மெல்ல மெல்ல ஏற்றி இறக்கி விட்டு. கும்மி என்ற ஹூ மந்திர உருவை முக்காலுந் தியானத்தில் வைத்து முடுக்கி விட்டக்கால் அந்த இன்பவெள்ளத்தின் பரவசத்தை சொல்லி முடித்தற்கு யாரால் கூடும். அதுவும் வலம்புரிச் சங்காகத்தான் இருக்கும். எ-று.

புகைமலர்க் குழலைப் பற்றியே நெருங்கப்
பிடித்திடு கரத்தினு லிறுகச்



சுகத்திடு மிதழைப் பறித்திடு முகத்தை
முகத்திடு வாசியை வாங்கி
அகத்திடு கலத்தைப் புகட்டிடு சுகத்தை
அன்பது மஞ்சையு முருக்கி
மகிழ்ந்திடு குய்யம் நிறைந்திரு கரையு
மலர்விரி வலம்புரிச் சங்கே. (10)

(இ-ள்):—முகம்மதியா என்னும் வாலையின் திவ்ய கூந்தலைப் பற்றிப்பிடித்து, அதரபானத்தை அருந்தி மும்மண்டலத்தை உகப்புடன் முததி முகந்து சந்திரகலை வாசியை இழுத்து வாங்கி அகத்தை ஒரு கமல மணிபோல் பளிங்கியாகும்படியாகத் தீட்டி சுத்தம் பண்ணிப்பாரு வலம்புரிச் சங்காக இருப்பது தோன்றும். எ-று.

அங்குல மெழுமே லொன்பது வரையும்
அணிபெரு விரல்புறங் காலும்
தங்குமே யமுதம் படம்முழங் காலும்
தரிபட மூலமல் குலுமே
பொங்குமே குய்யம் மார்புகண் மூடும்
பொருகழுத் தடையிதழ் நெற்றி
குங்குமத் தடஞ்சூழ் முஹம்மதென் றுதித்துக்
குதிகொளும் வலம்புரிச் சங்கே. (11)

(இ-ள்):—முகம்மதியாவென்ற அந்த வாலைக்கு வாசியுடைய புறத்தால் ஏழு அங்குலந்தொடுத்து ஒன்பது அங்குலம் வரையும் அவளது அலங்காரமான விரல்கள் ஒளிவுசெய்து கொண்டிருக்கும். இன்னும் முழங்கால் தொடுத்து மூலாதாரம் வரையிலும் அமிர்தகலையாகிய சூரிய சந்திர ரூபப்படமானது பளபளவென்று தோன்றித்தெரியும் இன்னும் அவளது நெற்றியும், மார்பும், புருவ வளைவும் பெரியதோர் கண்காட்சிப் பொருள்போல் அதிசயமாகக் காணப்படும். எங்கு நோக்கினும் குங்குமத்தின் ரெங்காகவே தெரியும். இதுதான் வலம்புரிச் சங்குடைய தோற்றமாக இருக்கும். எ-று.

வலம்புரிப்பதிகம் ஸம்பூர்ணம்

# விழியுறைப் பதிகம்.

கலிவிருத்தம்

வல்லன்கதி ரெல்லைதனில் வந்தபிற சூல்தாஞ்
சொல்லுமிறை வேதமதிற் சொந்தவுரை தன்னை
நல்லகலை யுள்ளநடை நாமறிய வெண்ணிக்
கல்லைமதங் கொண்டகயல் காட்டும் விழியாளே. (1)

(இ-ள்):—மகத்தான அஹது. ஐன், என்ற வஹதத்தில் ஒரு பேரொளிவாய் எழுந்துநின்ற முகம்மதியாவானது தனக்கு உதாரணமாக வேதகலைஞ்ஞானங்களின் உரைப்படி, ருஹூல் குதஸியாகி, இன்ஸானில் மஹப்பூபுடைய தோத்ரப்பெண் வடிவங்கொண்டு முரஷஹிதாவில் வெளியாகிடக்கண்டபோது ஆசித்துத்தவிக்கும் அப்தாகிய இருதயத்திற்கு தனது கெண்டை மீனைப்போன்ற கண்ணை மருட்டிக் காட்டும்படியான விழியையுடைய பெண்மணியே! என்று ஆசிரியர் இஷ்க்கின் புறத்தால் அழைத்து நிற்கின்றார் காண்க. எ-று.

கோகனக முத்துசங் கினிக் கொளுகைசொல்ல
மாகனக மானமேனி மாதுவை பழுக்க
நாகரச மாகுமவள் நப்பிடும் புருடர்
தாகரச மாய்கைதரு சகருவிழி யாளே. (2)

(இ-ள்):—இன்னும் அவள் விழியானது, வலம்புரிச்சங்கும். திரளைமுத்தும், நீலோற்பன புஷ்பமும், அழகிய தங்க சன்னங்களின் மின்னலும், புள்ளிமான்களின் மருண்டசாயலும் தோற்றும். மாதுளம புஷ்பத்தின் அலங்காரம் போன்று, அன்னவளை நம்பிவிட்ட சாதுக்களான நாயகமார்களின் தாகமான மரணத்தை விலக்கி விடும்படியான இருகண் பார்வையுடைய மின்னரசே. எ-று.

சங்கினி சாருமொழி சக்கரஞ் சுழித்தே
பைங்கிளி மதத்தையெடு பையக்குறி தன்னால்
சிங்கிசிர சங்குழலைச் சீரிடை யவிழ்த்தே
பங்கைநகம் பூண்டுமுளி பாட்டும் விழியாளே.



(இ-று):—அந்த வலம்புரியை ஒத்த சிவகாமியாகிய அவளது ஒருமோக மதன சரிகரப்பார்வையானது, சக்கரமான முக்கோணங்களிலும், ஆடும் வாசி வட்டத்தின் நடுவே சுழித்து வீசியோடி பசியகிளியாகிய பனிரண்டு கலைபாயுகின்ற ஸ்வாசக்குறியோடும் கலந்து, தன்னாலே தானாகி சிங்கியாகிய முகம்மதியாவாகியவள் தன தலையின் கூந்தலை அவிழ்த்து உதறிவிட்டு தாமரை மலர்ந்த வண்ணமாக சிறித்து நிற்கும்போதே கண்முழி பிரளும்படியான விழிகளையுடைய பெண்ணரசே.

சங்கித முழங்குமவன் சரசரத்தின் வாதி
பைங்கிளியின் பஞ்சைதலை பம்பரந் துதிக்க
நங்கைநகை கொள்ளு முன்னை நனவிலவி னூடே
தங்கைகொடு சேரவரு தப்புவிழி யாளே (4)

(இ-ள்):—இன்னும் வாயனது உயர்ந்த குரலோசையை ஸ்வாச சரத்தோடும் தொனிக்கச்செய்யும். இன்னும் பைங்கிளியாகிய வாசியின் சேர்மான கருவிகளான ஐந்து பூதியங்களும் பம்பரஞ்சுழன்ற மாதிரி ஆடிவர, அன்னவளது தந்தவரிசைகள் ஒவ்வொன்றும் தன்னைத்தானறியுமவர்களின் சொற்பன சாம்பல்யமான காட்சியாகவும், இவ்வுலக இச்சைகளைக்கவர்ந்து தப்பித்துக் கொள்ளும் யோகமான விழியையுடைய மாதரசே. எ-று.

பட்டுடுத் தினிரவுக்கை பச்சட மணிந்து
ஒட்டுமிஞ் சிமினிட மோர்வழிவி னூடே
முட்டும்பரிக் கெட்டும்வாசி மீமும்வாவும் சீனும்
விட்டிலகப் பட்டதுபோல் வெம்பும்விழி யாளே.

(இ-ள்):—இன்னும் நினைவான கனவில் வெளியாகும்போது, பட்டாடை என்னும் கலிமாவை யணிந்து, பச்சைவடமாகிய வாசியை ஆபரணமாகப் பூண்டு, இரவுக்கை என்னும் ரேசகம் கும்பம் என்பதை அணிந்து, முட்டுத்தட்டாகிய ஒரு எல்லைக்குள் அதாவது உள் நாவுக்குமேலே கபாலமண்டலத்தின் விஸ்திரமான ஹைறோட்டின் வழியாகச்சென்று உலாவிய விட்டிலானது அகப்பட்டுக்கொண்டமாதிரி, வாவு, சீன், வலது இடது நெத்தியின் மத்தியில் ஆடும் கண்மணியே. எ-று.

தன்மனமென் றும்மிடந் தயங்கிமொழி சொல்வாள்
எனமத மடங்குசிங்கி யேழுமொரு யாமம்
மன்மதப்போர் செய்யவரு மாதலல்குல் லீலை
முன்மத முடிக்கடலில் மூழ்குவிழியாளே. (6)

(இ-று):—யாரப்பா, அகமல்ஷுஹூதில் மிதந்து பரமானந் தங்கொள்பவனே! நீ உன் அகங்காரங்களை ஒடுக்கிசுத்தசாத்விகத்தில், இருந்து அவளைக் கேட்பாயாகில், கருமத்தைச்சொள்வாள். நப்ஸானியாக்கள் ஏழும் ஒவ்வொன்றுக, மகாம் விபரமாக ஒரு ஜாமத்தில் உடைப்பாள். இதுதான் மிக்ருஜியின் ஸம்பாசணையாக இருக்கும். அதானது, அந்த சிவகாமிருபியின் இருகால் அல்குல், அதாவது, சந்திரசூரியஸ்வாசகலை, இருள்வட்டம், இதில் லீலையாகிய, இஷ்கில் பிரமைக்கொண்டு உற்று தனித்திருக்கச் செய்யும் பார்வை நளினத்தையுடையவளே! எ-று.

ஐம்பொனு லுருக்குகணை யாளிமணிவட்டஞ்
செம்பென வுருக்கவெகு சேசினைகளுண்டு
கொம்பென வருங்கலத்திற் கூறுமையமேத்திச்
சும்பெனச் சுருக்குநாது சூட்சவிழி யாளே. (7)

(இ-ன்):—ஐம்பொன் என்ற, வெணமை, சிகப்பு, பச்சை, மஞ்சள், நீலம், என்ற ஐந்து ரெங்குகளையுடைய, பஞ்சரத்ன மோதிர வட்டத்தில் அதாவது, நேத்திரத்தின் கமலமத்தியில் உன் அசலை நீ கண்டபோது, அதில் செம்பாகிய கழிம்பானது உண்டு அத்துருவைப்போக்குவதற்கு ஒரே நிலையென்னும் கலமும், வைராக்கியமென்னும் மையுங்கொண்டு தீட்டிக்கழுவிவிட அவன் கிருபையான திருக்கண்பார்வையே காரணகுருவானவளே! எ-று.

கச்சகலை யிச்சைகனி யொக்குமிதுவொக்கும்
அச்சிகடு வுச்சிநீ ரருந்துமது போலே
பச்சைகுழல் பச்சணிக் குழந்தைபயந் தீர
வைச்சுமடி தவிசிருத்தி வெல்லுவிழி யாளே. (8)

(இ-ன்):—மனது கசக்காத இன்பக்கனியாகிய கலிமாவின் ஹூ என்பதை, ஒரு தீப வொளிவைப்போல் கொளுத்தி, மூளையில் நின்று நினைவில் வடிந்து ஒழுகும் நெய்யை வார்த்து பச்சைக்



குழந்தையாகிய வாசியின் ஆதாவை முன்னேற்றி இன்ஸானியாவின் பயமாகிய பித்தை அறப்போக்கி, ஜயவீடென்னும் மகாமன் மருமூநாவில் இருத்தாட்டும் கிருபையான கண்களையுடையவளே!

எவ்வுகணை ரண்டெழுத்து மேவிமேலெங்கும்
சவ்வுகலை யொத்தவுடன் சததுக்கு ளூற்றுப்
பவ்வுகட லேழுமொரு பாருலகைச் சுற்றி
மவ்வு திரை கொண்டெரியுமங்கை விழியாளே. (9)

(இ-ன்):—கபாலத்திற்கு மேலாலே உறூஜ்நுஸூலாகின்ற வாசியானது மேலுக்கு இயங்க சமத்துவம் ஒத்தவுடன், நுக்தாகிய ஒளிவானது கீழ் உலகமாகிய ஏழுசமுத்திரங்களும் அலைசுழற்றி வீசிக்கொண்டிருக்கும்படியான மோகவிழியையுடையவளே. எ-று.

நாலுசாதி யாகுமென நங்கையர்கள் தங்கள்
பாலில்பஞ்ச தாரைரசம் பத்மினியாமயில்தான்
சூலுருகு பாலில் பழம் சித்தினியாங்குயிலாள்
சாலுருகு சங்கிலியசள் தேனின்விழி யாளே. (10)

(இ-ன்):—அத்தினி, சித்தினி, சங்கினி, பதுமினி என்கின்ற நான்கு ஜாதிப்பெண்களில் நின்று முதன்மைப்பருவமாகிய மயில் ருபத்தில் றகுலானது சூலூற்றிருந்தது. பஞ்சதாரை என்ற அறுசிறுகள் ஐந்தும்சேர்ந்து இந்த பூலோகத்தை சமைப்பித்து, இனி வேதமும் ஞானமென்ற பாலாமிர்தமும் உற்பத்தி செய்திற்று. அதுவே சித்தினியாகும். அதுதான் குயில் ருபம். இனி சங்கினி என்ற வலம்புரிதான் கீதநாதத்தில் ஆலம் இன்ஸானியாவில் தின்றும் ஆதம் வெளிப்படையாயிற்று. அதுதான் தேன் போன்ற தௌஹீதாக விளங்கும் விழியையுடையாளே. எ-று.

மாதுவளை கொஞ்சுமது மாதழம்பழம்போல்
வீதுவளை விற்புருவம் வில்வப்பழம் மார்பு
சாதுமயில் மங்கைசங் கினிக்குமார்புசொல்லச்
சாதுமிள நீரதுபோல் தங்கும்விழியாளே.

(இ-ன்);—இனி பத்மினியின்மார்பானது, ஷுஹூதுடைய ஹாலில் மாதுவளையின் கனிபோன்றும், இனி சித்தினியின் மார்

பானது வில்வப்பழம்போன்றும், புருவக்காளானது வானவில் லைப்போன்றும், இனி சங்கினியின் தோற்றமானது இளநீர்க்கு ரும்பையைப்போன்று மிருக்கிறது. இதெல்லாம் வாலையின் விழி யில் தெரியும்படியானவளே. எ-று.

அன்னநடை போலவொரு வம்புவிழி யாள்தான்
வண்ணமயில் போலவொரு வஞ்சி நடையாகுங்
கொன்னுகதிர் கூர்மையிலுங் கொக்குநடை யொக்கும்
உன்னுகுறி யித்தனையு மூன்றுவிழி யாட்கே. (12)

(இ-ள்):—பதுமினியின் நடையானது வெள்ளன்னத்தைப் போன்றும், சங்கினியின் நடையானது மயிலின் தோற்றம் போன் றிருக்கும். அத்தினியின் நடையானது கொக்கு. அதானது கலை வாசியின் பேரில்வைத்து ஆடி நடக்கும். ஆக இத்தனை நடை யும் நீ முஷாஹிதாவில் எதைக்காண்பாயோ அதுவே வாலை ஸ்ருபம் அதில் இத்தனையும் காணும்படியான விழியையுடைய வள். எ-று.

விழியுறைப் பதிகம் முற்றிற்று.

# பதமருள் பதிகம்

*அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்*

அருணவொளிவு பளபளென வழகாயொளிருமருளறைக்குள்
குருவி னருளைக் கரங்குவித்துக் கூடி யிருந்தா லப்படியாம்
மருளு மயக்கந் தனைநீக்கு மறுகா லருளை வருத்திவைக்கும்
தருணஞ் சமைய மிதுவேயே தருவார்பதத்தையருள்வாரே (1)

(இ-ள்):—மூலாதாரக் குகைக்குள்ளே இளஞ்சூரிய சுடரைப் போல் பளபளவென்று பிரகாசிக்கும். அதுவே சற்குருவின் சுட ரொளிவாக இருக்கும். அப்படி தெரிசித்தால் அக்ஷணமே அதற்கு நமஸ்காரஞ்செய்து விட்டால், அப்பால் சந்தேஹமயங்களைப் போக்கடித்து வாசி மாறிய சக்கர் மக்கர்களை திருத்தியமைக்கும். நல்ல தருணம் சற்குருமுஹியித்தீன் வந்து பாததரிசனை தருவார் கள். எ-று.



ஆசைநினைவு மனமுமொன்ரு யசையாதெழுந்தஹறுபதனில்
ஓசை யிரைச்சலொலியெழுத்து ஆ, ஊ, கும்மென் றலங்கரித்து
வாசங்குதித்து மருள்மயங்கி வடிவாய் மருவியதிற்சிறந்தாற்
காஜா முகியித் தீனருளுங் கனகப் பதத்தையருள்வாரே. (2)

(இ-ள்):—நினைவு, ஆசை, மனம், இம்மூன்றும் ஒன்ருகின வைராக்கிய நிலையைவிட்டும் நீங்காமல் பளீரென்று உதயஞ்செய்து எழுந்து நிற்கின்ற ஹூ வென்ற அட்சரத்தில் ஒருதொனி இரைச் சல் கொண்டு ஹா, ஹூ, ஹூம் என்று அலங்காரத்தோற்றத்து டன் உலகை உற்பத்தி செய்து அருள்பெற்றிருக்கும். அந்த ரகசி யத்தில் கலந்து கொண்டால் காஜா முஹியித்தீனுண்டகையின் அருளாகிய பதத்தை வந்து கொடுத்தருள்வார். எ-று.

ஈந்தார் கருணை யிருகண்ணு மிசைந்த காதுமிருநாசி
வாய்ந்தாரமிர்தக் கனிவாயும் வணங்கவிருகைகாலுடனே
ஓர்ந்தாலாகா தொருகாலு மொருமையொருகண்முகத்துடே
சேர்ந்தால்நந்தி முஹம்மதுவாஞ்சேரும்பதத்தையருள்வாரே

(இ-ள்):— அவ்விதம் தந்தவுடனே கருணையான இருகண்க ளும், இருகாதுகளும், இருநாசிகளும், அமிர்த வசனத்தையுடைய வாயும், வணக்கத்துடைய இருகால் கையுடனே எல்லா உறுப்புக ளையும் ஸ்மரித்துப் பூட்டி, ஒருகால் அதாவது கும்பகம்வாசி' ஒருமையாகிய நினைவும், ஒருகண் அதாவது மணக்கண் என்ற தன்னுணர்ச்சி முகம் என்ற அகநிலையுடனே பூரணப்படுத்திக் கொண்டால், அப்போது நந்தியாகிய முகம்மதியாவானது வந்து பதமருள் தரும். எ-று

ஈமான் நிலையுங் குதிகொள்ளுமிஸ்லாம் நெறியும்பயிர் விளைக்கும்
ஆமாங் தருவுங் கிதாப்களும் அதிக பயித்தும் அவ்வெழுத்தாங்
கோமான் குதுறத் தொளிவாகிக் குதிக்கும்நடுவிலீ மானுந்
தாமா முஹம்மத்நபிகோஜா தருமபதத்தையருள்வாரே. (4)

(இ-ள்):—ஹூ என்ற ஒரு அட்சரத்தின் தத்துவத்தில் பழ கினவுடன், ஈமானிலையென்ற வைராக்யமும் உறுதிப்படும். இஸ் லாம் என்றதும் இணையென்ற குபிரியத்தை விட்டும் பரிசுத்தப் பட்டு களை நீங்கும். வேதபாராயண சாஸ்திர சரஸ்வதி உதிப்பு களும் அந்த அட்சரத்தில் நின்றுந்தான் உதயமாகும். வல்லப

வஸ்துவின் குதுறத்தும் வந்து அருள் குதிக்கும். நடுவே வாசியும் நிலை நின்று ஒரு ஸ்தானங்கண்டு அடங்கும். கோஜா முகம்மதும் தன் அருளான பதத்தை வந்து தரும்.

உவ்வென் றருளுமோரெழுத்தையுருளுங்கமலத்துள்ளிருத்திச்
சிவ்வென் றருளுமருட்கண்ணுற்றெளிந்த ஹக்கென் றனல்மூட்டி
நவ்வும் நடனச் சுழிவழியே நடக்த மவுன கரத்தெழுப்பி
எவ்வுங்குதுபில்அஃலமென் னுமிசையும்பதத்தையருள்வாரே

(இ-ள்):—ஹூவாகிய ஒற்றையட்சரத்தை வாசி கமலத்தில் வீசியுருண்டு உந்தியின் கீழ் ஆதாரத்தில் வைத்திருத்தி எழுப்பி. அருட் ப்ரசன்னத்தின் திவ்ய கண்ணால்கண்டு ஹக்குதய வீட்டில் வைத்து இஷ்க்கென்ற தீயைமூட்டி, நபியின் அந்தத்தின் வெட்ட வெளியில் வாசியைவிட்டு நடனஞ்செய்து. அப்பால் ஓசைசெய் யாது செல்லும் வெண்குழல் அதாவது றூஹின வீட்டில் சரத்தை நுழையவிட்டு எவ்விவிட்டால், குதுபுல் அஃலமாகிய சற்குரு நாதன் முஹியித்தீன் வந்து பாதமுத்தி, வரங்கொடுக்கும். எ-று.

ஊரு குவ்வில் ஆருக வொளிவா யோடு மச்சுனையில்
மாருக் கலிமா வமுதூட்டி மகிழுங் கமல வாவியிலே
கூரு யிதழா யிரத்தெட்டுங் குறியார்ந் தெழுந்த வட்டமதில்
தாரார் முகியித்தீனருளு தந்தொண்பதத்தையருள்வாரே (6)

(இ-ள்):—ஹூவைக்கொண்டு மயமான மூளையில் ரம்மித்த வுடனே கபாலத்தின் அறிவுததும்பி கொதித்து அமிர்தமானது ஒரு பிரமாண்ட நதியைப்போல் ஊறிவழியும். அதில் முகம்மதியா வென்னும் சுடர் கிடந்து மின்னும். அந்த மின்னல் யாவும் ஒரு சோத்திரண்டு கூடிவந்து, உன்னை அந்த அமிர்த நதியில்விட்டு அமு தூட்டும். அதுதான் கலிமாவின் நிரட்பமாக இருக்கும். அப்போது ஆயிரத் தெட்டிதழ் தாமரையானது பளீரென்று இதழ்விரிந்து மறைபொருட்கள் வெளியாகும். நாபியந்த வட்டமும் பிரமாண்ட மான தன்மையில் காண்பாய். சற்குருநாதன் முஹியித்தீனும் பிர சன்னமாகி வந்து பதத்தை அருள்வார். எ-று.

இசங்கி யெங்கு மெழுத்தநனை யெவ்வா றறிவே னறிவதற்குக்
கசங்க முடலிற களவறுத்துக் கண்டாற் ககன மூடுருவி



மசங்கும் புலனுஞ் சொன்ருகி வாரு வன்பு கொடுநின்று
அசங்கற் கறிய திருவருளி னரிய பதத்தை யருள்வாரே (7)

(இ-ள்):—அவ்வித கருணை வெள்ளமாகிய அவ்வட்சரத்தை எப்படி நான் அறியக்கூடும். அறியவேண்டுமானால், இந்த சரீரத் தின் கோள்களான துடக்குகளை யெல்லாம் அறக்களைந்து கண் டால், சுவன உலகமெல்லாம் தாண்டி அப்பாலும் நிரம்பி நிற்கும் கண்புலன் நடுஸ்தான ஒளிவு தெரியும். அதில் இஷ்கு வைத்து நின்றால் அக்ஷணம் வாலைமகபூபு சுபுஹானியின் அருளான தரிச னந்தந்து உதவிசெய்யும். எ-று.

ஐயுங்கலையும் அங்குந்தே யசையா தொழுப்புமவ்வேளை [டுமாம்
நெய்யுந்திரியுஞ்சுடருமொன்ருய்நொடிக்கும்நொடியிலெரிந்தி
எய்யுஞ் ஜிபுரில் வழியடைத்தே யிசையு மிசுரு பீலிசையும்
தொய்யுமீக்காயீலிடையில்தொகுத்தபதத்தையருள்வாரே (8)

(இ-ன்):—முஹம்மதியா வென்னும் ஒளிவும், கலிமா என்னும் வாசியும் ஒன்று கூடி ஆட்டம், ஓட்டம் ஒன்று மசையாமல் நிதான நிலையில் வந்து நின்ற மாத்திரம் ஐனில் தெரியும் நூறுல் ஐனுது, எண்ணெயும் திரியுஞ்சேர்ந்து எரிகின்ற மாதிரியாகத் தெரியும். அவ்விதம் தெரியுஞ்சுடரானது ஒரு நொடிப்பொழுதில் வெட்டி மறையும் மின்னல்போல் தெரிந்து மறையும். இந்த கடவு எது வென்றாலோ? வெளி நாவின் ஓசைகள் எழுந்து வரா நின்ற உள் நாவுக்குள்ளே அவ் அத்து என்ற ஸ்தானம், இதில் வாசி செல்லாது. உள்நாவு மப்டிலுந்தான் கபால அரைவடிவு கொண்டு சிதுறத்துல் முன்தஹா என்னும் மூளை என்ற விருட்சமானது படர்ந்த பணர்களுடன் கிளைகள்விட்டு ஆலம்பதினென்னாயிரமும் நிழல் விட்டு நிற்கும். இதின் அடித்தளம் தான் சங்காங்குழியாக இருக்கும். இதுதான் நாலாம் வானமாக இருக்கும். இதற்கப்பால் பனியும் ஒளிவுமாக இருக்கும், அந்த சங்காங்குழியில்தான் ஜிபுரீ லுடைய தங்குஸ்தானம் இருக்கின்றது. இதையடைத்திருக்கும் சூனியத்தைக்கடந்தால், இஸ்ராபீலுடைய மகாம். அப்பால் மீக்கா யில் இருப்பு. பனி அதாவது நீருடைய மகாம். இதுதான் மூளை யின் ஜவ்வுக்கள். இந்த மகாமில் ஏற்றி வாசியை நிலை பெறச் செய் தால் றப்புடைய மோட்சபதங்கிட்டும். எ-று.

ஒருமையொரு கண்மணிவிளக்கை யொளியினொளியையுற்ற
ளருமையறிந்தேயுதவித் திருவருளார்கடலையாவருக்கும் [வர்க்கு
உரிமையொரு பொன்மணிவண்டினுசைகொடுக்குங்கீதமதை
தரும மூஹியித்தீனருளித் தந்தொண்பதத்தை யருள்வாரே. (9)

(இ-ள்):—ஒப்பேர்ப்பட்ட றப்பானி என்னும் ஒன்றுபட்ட கண்மணியான கிந்நீல் தீபமதைத் தெரிசித்தவர்க்கு மஹா அன்புடன் பிரீதிவைத்து எல்லா வல்லபத்தையும் வாரிக்கொடுக்கும் திருவருளான ஆநந்தக்கடலை, பொன்வண்டின் கீதசப்தம்போல் ராகம் கேட்கா நின்ற லைப்புரி முழக்கமானதை எந்நாளிலும் கேட்டிருக்கும் படியயாக நமது தரும சற்குருவான முஹியித்தீன் உதவி புரியும். எ-று.

ஓயாதோடு பெனுயாசி யொடுங்கும் நாலு முள்ளாக்கி
மாயார் மாயு முடலமதில் மசக்குமவுத்தை யுள்ளடக்கிக் [குத்
காயசம்பழத்தைக் கனியாக்கிக் கனித்தவமுதைப் புசிப்பதற்
தாயாயெனக்குவந்தருளுஞ் சாகிப்பதத்தையருள்வாரே (10)

(இ-ள்):—எக்காலநேரமும் கடல்மறை திறந்ததுபோல் ஓடிக் கொண்டிருக்குப் சுவாசத்தில் நான்கலை ஒடுங்கி முண்டகத்தில் வந்து பூரணித்து, சாகாமல்சாவுகின்ற உடலாகிய சூக்குமசரீரத்தில் சந்தேக மயக்கமென்கிற மவுத்தை சுக்கிலசரீரமாகிய நினைவிலுள்ளே அடக்கிவிட்டு, காயாக இருக்கும் அறிவைத்தெளிந்து பழமாகிய வைராக்கிய நிலையில் பழக்கி, இனிப்பான அமிர்தமான இஷ்க்கில் நடையாக்கி விட்டால், தாயைப்போல் வந்து அருள் செய்யா நின்ற சாஹிபாகிய முஹியித்தீன் அபயமென்று முன்னிற்கும். எ-று

ஔவால்சவ்வையறுத்துத்தொதுக்கி யடங்கியிருந்தவிருளகத்தில்
ஹாவ்வாலறிந்து தெளிந்திடவுங் கூடியுதவியெனக்கருள்வார்
தவ்பாமொழிந்து முரியதவந் தானேயடியேன்செய்துதக்வா
நவ்வால்முகியித்தீன்மலுக்கு முதலி பதத்தையருள்வாரே (11)

(இ-ள்):—ஆதியில் அறிவு கலங்கற்பட்டுக்கிடந்த காலத்தில் அதன் மூடத்தனமென்ற ஜல்லையறுத்து ஒதுக்கி இருளை விலக்க ஹாவு என்ற கிந்தீல் வெளிச்சத்தை பிரகாசிக்கச்செய்து அதாவது தன்னை இன்னதென்று விசாரித்து தெளியச்செய்து உதவிசெய்து



நான் முன்பின் செய்த பாபந்தங்களுக்கு தக்கமருந்தாக தௌபாவை வழிகாட்டி, தவத்தில் இருத்தாட்டி நிலையானது குலைந்திடாமல் இவ்வடிமையை தக்வாவில் தீபகரிகசெய்த என் குருநாதன் முஹியித்தீனே. மலுக்குமுதலியின் அவதாரத்தில் வந்து அருள் தந்தார். எ-று

பதமருள் பதிகம் முற்றிற்று.

---

# குருசீஷப்பதிகம்.

கொச்சகக்கலிப்பா.

நினைவென்று மனதுக்கு நிச்சயஞ்சொல் லென்குருவே
பனுவென்று வாராத பார்மகனே நீகேளு
வினுவாக நீயிருந்து முன்முரு கபாவானுல்
தனுவான இல்மிலெகீன் தரும்ஹக்கு ரஹ்மானே (1)

சீஷன்:—நினைவு மனது என்று சொல்லப்பட்டவைகள் என்ன? அதன் நிட்சயத்தைத் தாங்கள் எனக்கு சந்தேஹம் வராதபடி சொல்லவேண்டும். என் சற்குரு நாதனே! என்று கேட்க,

குரு:—மகனே! அவை இரண்டும் கருமத்தில் ஒன்றுதான். நீ உன்னை உன்னுடைய பல வகைப்பட்ட வியாபகத்தில் நின்று அற ஒழிந்து உன்னை நீ இல்லாமலாக்கி விட்டால் அதில் சமதாகி விட்டாய். அப்போது இல்முல் எகீன் நிறை பூரணமாயிற்று. அதுவே ஹக்குர்றதுமான், என்றபதவி என்றறிந்து உணர்ந்து கொள்ளப்பா. எ-று.

முச்சுடரு மொன்ருகி முப்பொருளுந் தானுகி
அச்சொருபாய்ப் பாய்ந்தசுடர் யார்கானு மென்குருவே
வச்சொருப தாக்கிவந்த வாழ்மகனே நீகேளு
அச்சொருவும் பார்வையன்ரே ஐனிலெகீன் றஹ்மானே. (2)

சீஷன்:—ஆமாம், என் சற்குருவே! முச்சுடர் என்ற மூன்றும் ஒன்றுபட்டு முப்பொருள் என்பவைகளும் தான்தானுகி ஷை. ஒன்றித்த ஒரு சுடரும் அவனுடைய கோலத்தில் பாய்ந்து சொருபங் கொண்டதாமே! அது எப்படி? தேவரீர் சற்று விபரிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

குரு —ஹே! அந்த மகத்துவமான நிலையில் தரிபட விதிவசங் கொண்டு வந்த மகனே! அதைச் சுருக்கமாகச் சொல்கின்றேன் கேட்பாயாக. அது எப்படி என்றால், ஆதியில் மஹ்லியத்தில் புதைந்து போய்க்கிடந்த ஆசையானது அதிமோக அக்னியில் எழுந்த விஷயத்தில் ஒன்று இரண்டு மூன்று உதயங்கொண்டு மும் மூர்த்திகளாகி, அஹது அஹ்மது முகம்மது, என்ற மூக்கோலமாகி, நாத விந்தாகி, உன் நேத்ரமென்ற வாரப்படத்தில் விழுந்து எழுந்த வுடன் அப்பார்வையாகிய ஐனுல் எக்கீன் அல்லவா ரஹ்மானியா விற் சொரூபங்கொண்டது! இது மஹாபாரதூரமான இல்மாக வும் அல்லாவின் சிர்ருகவும் இருக்கின்றபடியால், இந்த இடத்தில் நல்ல ஊன்றி விஜாரித்துப்பார். விதியிருந்தால் உனக்கு விளங்கி ஆச்சரியத்தைக்கொடுக்கும். மஹான்களெல்லாம் இந்த இடத்தில் வெகு சமர்த்தாய் எழுதிப்போயிருப்பதையும் பார்த்துணர்ந்து பிடியப்பா மகனே! குருநாதனுகிய குணங்குடி மஸதான் அவர் கள் வெகு நல்லாயிருக்குது காணும், ஒரு சொல்லாலே இப் படிதோணும்'' என்று சொன்னதையும் ஆழயோசனை செய்து பாரப்பா. எ-று.

நின்றாடும் பார்வையிலே நிச்சயம தாக்கிவர
நன்று யெனக்கருளும் நாயகமே யென்குருவே
ஒன்று யிருந்துமென்னை யோர்மை கொண்ட வென்மகனே
குன்றுச் சொருபடுக்கும் குருஹக்கு றஹ்மனே (3)

சீஷன்:—ஆமாம், என்குருநாதனே! அந்தப்பார்வை என் னும் ஐனுல் எக்கீனில் நின்றாடக்கூடிய தாத்தின் வடிவை தெரி சனை செய்து நிட்சயப்படுத்திக்கொள்ளும் தன்மை எப்படி? அதை தீபரமாக எனக்குதவிசெய்வீர்கள், நாயமானவர்களே! என்றதற்கு.

குரு:—ஹே! ஒரே நிலையின் பிடிவாதத்தால் தத்துவத் தைத்தெரிந்து கொள்ளப்பட்ட வைராக்ய முத்திரையுள்ள மகனே! கேட்பாயாக. அதை நீ ஒன்றுபட்டு விரவி ஆலங்களின் தத்து வக்கிரீடத்தை யடையவேண்டுமானால், ஆரம்பத்தில் குருவின் பேரில் சதாவும் மோகங்கொண்டு, என் அருபத்தில் உன் அரு பமாகக்கண்டு அதில் சம்பந்தஞ்செய்யவேண்டும். அதில் உன்னை



என்னில் பனு செய்துபோட்டு என்னை நிலைக்கச்செய்து ஆடி நிற்க வேண்டும். அப்பால் என்னை றகூவில் பனு செய்துவிட்டு அதில் சிலகாலந்தரித்து நின்று அப்பால் றகூலே றஹிமானளவில் பனு செய்து ஜம் ஆகி பரிபூரண சமதில் மூடுகவேண்டும். எ-று.

மாவச் சரத்தெழுத்தை மாங்கிஷத்தோ டேயடைத்து
வாசியச் சரத்தோடு வருத்துவர் ரென்குருவே
சாவாச் சரத்தோடு சற்குருதே ரென் மகனே
காவாகீகூவச் சரமலவோ இலாகிஹக்கு றஹ்மானே. (4)

சீஷன்:— ஆமாம், மீமென்ற அட்சரமானதை இந்த சரீரத் துடன் வைத்தடைத்து வாசியானதை இக்கூட்டில் எப்படி நுழைக் கப்பட்டது. என் குருவே சொல்வீர்களாக என்று கேட்க,

குரு:—சாவாத எழுத்தை சற்குருவின்சொருபத்தில் வடிவாக் கிக்கொண்ட தேர்ச்சியுள்ள என் மகனே! கேள். அது கலிமாவின் ஹா, ஹேயானது ஆரம்பம் தொடுத்து உண்டாகி யப்பால் மீமை அடைத்தினலே ஆதியில் சுவாசம் உண்டாகி அப்பால் ஒளியின் பவர்விளக்கு சுடர்செய்து உதிராக்கினியானது ஜடலம் ஆதிக்கமும் படர்ந்து பூப்பூத்திற்று. அது இலாஹி ஹக்கு றஹ்மான், என்ற மூவுதயமாகி, நடத்தாட்டிக்கொண்டு வருகின்றதப்பா. இதை நீ முஷாகதாவில் இருந்து பார்த்தால் தெரியும். எ-று

பூவாசத் துள்ளிருந்த பூலா நறுந்தேனே
மாவாசத் தாலெழுப்பு மகிழ்ச்சிசொல்லு மென் குருவே
ஆகாவா நீக்கியருங் காட்சிகண்ட வென்மகனே
நாவான பேச்சலவோ நடனப் ஹக்கு றஹ்மானே.

சீஷன்:—ஆமாம், அந்தப்பூவின் வாசனையாகிய ஹூ என்ற பேரின்ப அமிர்தத்தை நம்முடைய பழக்கத்தில் பிடித்து நடையுண் டாக்கு முறை எப்படி? சற்றுபோதனை செய்வீர்களாக என்றதற்கு,

குரு:—ஆகாதவனுகிய கன்னுசென்னும் மூவாசை காமி யக்கள்ளனை அறநீக்கி, ஒரு நீக்கமற்ற தானத்தில் ஒழிந்திருக்க வேண்டியதே. அதற்கு அவசித்த கருமமாக இருக்கும் டை பூவின் வாசனையால்தான் ஒவ்வொன்றின் நாவிலும் வார்த்தை தொனிக்கின்றது. அதுதான் அல்லாவின் நடனமாகுமென்று உணர்ந்து கொள்வாயாக. எ-று.

பாலை செறிந்தவனப் பவதோஷ மற்றநிலம்
நாலையுமொன் ருக்கிவர நடனஞ்சொல் லு மென்குருவே
தாலால மென்றுசொல்லித் தமாமாக்கு மென் மகனே
மாலான் சொரிந்த இல்லில் மகிழ்ச்சிஹக்கு றஹ்மானே (6)

சீஷன்:—ஆமாம், இந்த பாலைவனமாகிய துணியாவின் கெட்ட பாவதோஷங்களை விட்டும் பரிசுத்தஞ்செய்வதற் கேதுவானது எப்படி? சற்று வழியருளவேண்டும் என்று கேட்க அதற்கு,

குரு:—அப்பா மகனே! பூதகுணங்கள் நாலையும் ஒன்றொன்ருகக்கடந்து நப்சு முத்மஇன்னவின் சுயமான சற்குணத்தில் கோலங்கொண்டு அதேவழமையாக நிற்கவேண்டும். இல்அல்லா என்ற மணி அப்போது மணிமந்திரத்தால் சர்வமான ஆநந்தமும் உனக்கு கிடைக்கப் பெறுவாய். இநு ஹக்குர்றகுமானாக இருக்க அநுபவித்துப்பார் தெரியும். எ-று.

அறுநான் கெழுத்தான வமிர்தக் கலிமாவில்
உறுநான்கி லொன்றுண்டு மோர்மைசொல் லு மென்குருவே
கருநான் கறிந்திருந்த கண்மணியா மென்மகனே
பெருநான் கெழுத்தூமை பேசும்ஹக்கு றஹ்மானே. (7)

சீஷன்:—ஆமாம், இருபத்து நான்கு அட்சரத்தில் அமையப்பட்ட கலிமாவில் இல் லல் லா ஹூ என்ற நான்கிலொன்று உயிரட்சரமாக இருக்கின்றதே, அதென்ன தேவரீர் கிருபை கூர்ந்து அறிவிப்பீர்களாக என்றதற்கு,

குரு:—அப்பாமகனே! அந்த அட்சரமானது ஊமையாக இருக்கின்றது. அதில் நின்றுந்தான் ஜந்துக்களின் வார்த்தைகள், பாஷைகள், கீததொனிகள் யாவற்றும் நடைபெறுகின்றது. அதுதான் ஹக்கு றகுமானுக இருக்கின்றது. எ-று.

ஊமையென்ருற் சோதியன்ருே வுல்லாசப் பிள்ளையது
ஊமையென்று சொன்ருக்கா லுறவுமுண்டோ வென்குருவே
ஊமையென்ற வுள்ளெழுத்தை யுயிராக்கு மென்மகனே
ஊமையென்ற வுடலுயிரு மொன்ரும்ஹக்கு றஹ்மானே. (8)



சீஷன்:—ஆமாம்! அந்த ஊமையட்சரத்தை மஹான்களெல்லாம் ஒளிவென்று உறுதிகூறிப் போயிருக்கின்ருர்களே! அப்படியிருக்க இந்த மகனுக்கு அதை ஊமை என்று மாத்திரம் சொல்லிவிட்டால் போதுமா? என்றதற்கு

குரு:—மகனே! அது அப்படியா? இதுவும் ஒரு நல்ல கேள்விதான் ஊமை என்ற பதத்தை பகுத்தால், ஊ, மை, என்று ஆகுதல்லவா! அது ஹேயும் மீமும் என்று வைத்து, உயிரும் உடலும் என்று நிட்சயித்து அவ்வுடலைத் தூக்கி உயிரில் சம்பந்தப்படுத்தி விட்டால் கல்க்கு காலிக்கில் சேர்மானமாகி விடுவான், அப்பால் பேச்சென்ன இருக்கிறது. எ-று.

பற்றுமந்த வோரெழுத்தைப் பையவட் சரத்தோடே
ஒற்றுமுட லாக்கிவந்தா லொடுக்கஞ்சொல்லு மென்குருவே
உற்றுற்றே யுச்சரித்த வுளஞ்சுமனே யென்மகனே
அற்றறுத் தொன்ருக்கல் ஹம்துவில்லா றஹ்மானே. (9)

சீஷன்:—ஆமாம்! தேவரீர் திருவாய் மலர்ந்தருளியபடி அந்த ஊமை எழுத்தை உடலுயிராக்க வழிதேடிக்கொண்டு வந்தால், அப்பால் ஆகின்ற துறையானது எப்படி? எடுத்துக்கூறுங்கள் நாயகமே! என்றதற்கு,

குரு:—அப்பா! அதன் மகிமையான வல்லபத்தை நான் என்னென்றுரைப்பேன். அதை உட்சரிக்கும்போது, உன் நாட்டமென்ற பலபட்டரையான நினைவை பரமாத்மாவின் ஓர்மையளவில் நிறுத்தி வைத்துக் கொண்டு யாதொரு கவலையுங்கொண்டு வராதபடி கமலத்தில் பார்வையைச் செலுத்திவர, கொஞ்சங்கொஞ்சமாக காரியம் ஒப்பேறி சகலமும் அல்ஹம்தின் வட்டத்தில் வந்து ஒன்றுகூடி விடும். அப்பால் விபரிக்கவேண்டியது அழகல்ல அப்பா. எ-று.

றகுமானெ னும்பொருளை ரகசியமாய்க் கொண்டுவர
ஒகிமாநீ சொல்லிவர வும்பரம்நா னென்குருவே
தகுமான மாயிருந்தவென் றன்மகனே நீகேளு
வகாவாஞ் சிவவெழுத்து வாசிஹக்கு றஹ்மானே. (10)

சீஷன்:—அடிமைத்தனமா யிருக்கப்பட்ட இந்த ஜடல சொருபியானவன் றகுமான் என்ற பதவியை யடைந்து அந்த வல்ல

மையை எடுத்தாடுவதற்கு காரணம் எப்படி? அதைத் தாங்கள் விபரித்துக் காட்டவேண்டும். என்றதற்கு,

குரு:—அப்பா! அது அந்த சிவ சொருபியான ஊமை எழுத்தை வாசி என்ற பிராம தத்துவத்தால் உருவாக்கிக் கொண்டு நினைவை ஒன்றித்து விட்டு நிலைநிற்கச் செய்வதால், அச்சிவசொருப ஊமை எழுத்தானது வாசிமயமாய் இலங்கும் ஹக்குல் றகுமான் என்ற பதவினய பெறுகின்றது. எ-று

வாசியென்ற மாயோக வல்லபமா யென்றனக்குப்
பூசித்தது வோடிவரும் புலன்கள்சொல்லு மென் குருவே
ஆசித்துக் கொண்டிருந்த யாருமற்ற வென் மகனே
மாசற்ற லாமக்கானே இலாஹிஹக்கு றஹ்மனே. (11)

சீஷன்:—என் சற்குருவே! மாயோகமான ஒரே நிலை சாதனையான யோக பீடத்தில் வாசியைக் கையாள வேண்டுமே! அந்த வாசி எந்த வாசி? அதை விபரியுங்கள் என்றதற்கு,

குரு:—அப்பா மகனே! புலன்கள் ஐந்தும் ஐந்து குணகுணத்தில் உன்னை நடத்தாட்டுகின்றதல்லவா? அவ்வொவ்வொரு குணத்திலும் நீ நடந்து கடந்து கொண்டு வந்து அழிவில்லாத சற்குணம் இதுதான் என்று எதைக் காண்பாயோ அதை நீ றப்பென்று தீர்மானித்து, அதில் தரிபட்டு நில். அதுதான் மஹான்கள் லாமக்கான் என்று சொல்லிப்போன பதவியாக இருக்கும். எ-று

லாமக்கா னுள்ளிருந்து லாகிரிகொண் டாடும் நல்ல
பூமகளு மயலாவாள் பூசாரி யென்குருவே
மாமாஹா ஹிஹிஹூ ஹூவென்னு மென்மகனே
வாமாயீ மாயின்ற வருங்ஹக்கு றஹ்மானே. (12)

சீஷன்:—ஆமாம், அந்த லாமகான் என்ற மாளிகையில் ஒரு வாலிபக்கன்னி தோன்றுவாள் என்று காட்டானை ஷெய்கு சொல்கிறார்களே! அக்கன்னிதான் எவள்? அதை விபரியுங்கள் நாயகமே! என்றதற்கு

குரு:—அப்பா! அதுதான் தமிழ் சாஸ்திரிகள் தாமறைமகள் அதாவது இலட்சுமி, சரஸ்வதி என்று இருபால் படுத்தியது. இலட்சுமி, முஹம்மது. சரஸ்வதி அஹ்மது என்று உன் உறுதியில திட்டஞ்செய்துகொள்ளப்பா. அதில் நீ லாகிரி கொண்டால்



அது உன்மேல் மோகங்கொண்டு உன்னில் விஜயமாகிவரும் நீ மாமா, ஹா என்று உன்னு! அது ஹூ ஹூவென்று உன்னில் உன்னும் அநுபவித்துப்பார். எ-று.

குருசீஷப் பதிகம் முற்றிற்று.

# ஓர்மைப்பதிகம்.

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

திருந்துமத் தரீகு தன்னை தீன்நபி ஷரீஅத் தாக
வருந்தியோர் ராசா வான வள்ளல்சேர் நபியே யாகும்
அருந்தவ மதுக்க சாவு மபூபக்க ரவரே யாகும்
பொருந்திய ஷிஹாபுத்தீனும் பொறுத்திடு மோர்மைதானே (1)

(இ-ள்):—அவ்வித மெய்ஞ்ஞானத்தின் அருமைத் துறைமுகத்தை ஒருவன் அடையவேண்டுமானால் அவன் ஆரம்பத்தில் நமது நபிகள் சிகாமணியவர்களின் நடையுடை பாவனையாகிய ஷரீஅத்தென்னும் நீதிமார்க்க நடையில் நடைப்பழகி வரவேண்டும். அவ்விதம் வழிபட்டு நடந்த மஹான் திட்டமாக முகம்மதின் ஸ்ருப அச்சியந்திரத்தில் பதியப்பட்டவனாக இருக்கும் இன்னும் அவர்கள் சொல்லைக் கடக்காதவன் அபூபக்கர் றலியல்லாஹு அன்குவின் பதவியையுடைய மன்னனாக இருக்கும். அதில் சாதித்தால் கடைசிவரையிலும் முத்தியடையலாம் என்ற ஒரு உறுதிப்பாடானது திடனாக முகியித்தீனாக இருக்கும். எ-று.

சொந்தமா மலக்கு மாராஞ் சொற்றுணை ஜபுற தான
சிந்துமே யழகு கொண்ட சிதுறத்தில் நின்ற தான
முந்தஹா விதமதாக வியம்பிடும் நாசூத்தென்று
விந்தையா யுன்னதென்று விசைபெறு மோர்மைதானே. (2)

(இ-ள்):—இந்த ஓர்மைதான் றசூல் நாயகம் சிதுறத்துல் முன்தஹாவைக்கடந்தவுடன் மயங்கி நின்ற ஸ்தானத்தில் சந்தித்த வஸ்தாக இருக்கும். இதற்கு நாசூத்து மகாம் என்று சூபியாக்கள் வர்ணித்தார்கள். இதை உணர்ச்சி செய்வது முதலாவது முரீதீன்கள் பேரில் கடமையாக இருக்குப். எ-று.

தரீகத்து தன்னி லாகுந் தவநபி யீசா வுந்தாம்
மரீகத்து அசுஹூா பாவும் வருமும றுடனே யென்னத்
தரித்திடுப் பீர்ம தார்த பகாத்தெனுந் திரமீக் காயில்
பரிக்ஜ மவ் வறுஷேயென்று பழகிக்கொ ளேதர்மைதானே (3)

(இ-ள்):—இனி தறீக்கத்து என்பது நடையாக இருக்கும். இதில் குடிகொண்டிருந்தால் அது ஈஸாநபியுடைய நடையாக இருக்கும். அதில் தரிபட்டவன் ஹஸ்ரத்து உமறுடைய பதவியைப் பெறுவான் இதற்கு சற்குரு சிந்தாஷாமதாருக இருக்கும். வழியானது தபகாத்தியாக இருக்கும். மலக்கானி மீக்காயீலாக இருக்கும். பாதையானது அருஷாக இருக்கும். என்றறிய வேண்டியது. எ-று.

அன்றிடும் ஹக்கீகத்துக் காதமாம் நபியே யாகும்
கன்றிடு மசாப துக்குக் ககனுது மானுஞ் செய்கு
விண்டிடும் இசுரா பீல்தாம் விளம்பிடும் பகுறு சாமும்
சென்றிடும் ஜபறூத்தென்று தெளிந்திடு மோர்மைதானே (4)

(இ-ள்):—இன்னும் ஹக்கீக்கத்தென்னும் தரீக்கத்துக்கு நபியாரென்ருல் ஆதமாக இருக்கும். அதற்கு அஸ்ஹாபி ஹஸ்ரத்து உதுமாணுக இருக்கும். அவரே ஷெய்குடைய பதவியாக இருக்கும். மலக்கானியாகிறவர் இஸ்ராபீலாக இருக்கும். இதானது ஜ றூத்துடைய மகாமாக இருக்கும். என்றறியவேண்டியது எ-று.

கா திறு வழியைக்கேளு கலாமிபுருகீ மாகும்
மாதுதி யாகவந்த அலியுடன் முகியித் தீனும்
வா திசு ருயீலாகும் வளங்குமலக் கூத்துலெவுகு
சாஹிது வெவ்லாஞ்சொல்ல ஜவாபுகொ ளோர்மைதானே (5)

(இ-ள்):—இனி மஅரிபா என்று சொல்லக்கூடிய காதிறுடைய வழியைக் கேட்பாயாக அதற்கு நபி இப்ராஹிமாக இருக்கும். அஸ்ஹாபியானவர் ஹஸ்ரத்து அலியாக இருக்கும். பீர் என்னும் ஷெய்கானவர்கள் எம்பெருமான் முகியித்தீனுக இருக்கும். மலக்கானியாகிறது இஸ்ருயீலாக இருக்கும். மகாமானது மலக்கூத்தாக இருக்கும் இதில் தான் லெளஹூல் மஹ்பூல் அடங்கியிருக்கின்றது சமஸ்த குதுபுகளுக்கும் முகித்தீனில் தான பட்டங் கட்டப்படுகிறது. எ-று.



பகுமது வானவுன்றன் சடத்தினிற் பகுப்பைக்கேளு
தகுமது ஷரீ அத் துக்குத் தோல்தசை யெலுப்பு மூளை
மூகமுடன் காதுநாசி மலர்விரி வாயுங்கண்ணும்
தகுமலர் தரீகத்துக்குச் சாற்றுவே ஞேர்மைதானே. (6)

ஐயுமாம் பலனும் மூச்சு மமர்ந்திடா தோடிநிற்கும்
எய்யுமாம் பார்வை தானு மெறியம்பு போலே நின்று
தெய்யுமாங் கேள்வி தானுந் தொகுப்புரை தன்னைக்கேட்டுக்
கையுமே முஷாஹ தாவும் கருத்துள்ள வோர்மைதானே. (7)

(இ-ள்):—இனி மகனே! உன் சடலத்திலுள்ள பகுப்பான சிற்றுகளை நீ கேட்பாயாக. அதாவது:—மேலே சொல்லப்பட்ட ஷரீஅத்தென்பது, உன் சரீரத்தின் தோல் சதை எலும்பு மூளையும், இன்னும் செவி, மூக்கு, கண், வாய் ஆகிய இவைகளாக இருக்கும் இனி தரீகத்தென்பது விபரிக்கின்றேன். அதாவது:—சுவாசம், நேத்ரத்தின் தெளிவான பார்வை, எவையும் கிரஹிக்கப்பட்ட கேள்வி. இம்மூன்றில் நின்றுந்தான் முஷாஹிதாவின் பதவிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். எ-று.

நபுசுஅம் மாரு காபு நடக்கும்ஹேயா அயின்சாத் தஞ்சும்
பவுசுலெ ..... வெண்ணு .....பழக்கலிபுல..... ன்றே
தவுசுடன் முல்ஹி மாவைத் தரிபட அலிபு லாமீம்
கொவுசுடனுள்முன் கன்ருய்க் குறையில்லாவோர்மைதானே.

(இ-ள்):—நப்சு அம்மாருவானது காபு, ஹே, யா, ஐன், சாது, என்ற ஐந்து அட்சரங்களின் தத்துவத்தைக் கொண்டு நடப்பதாக இருக்கும. இனி நப்சு முல்ஹிமாவானது அலிபு, லாம், மீம், இதில் ஒர்மைபெற்று நடக்கின்றது. இதுவும் சத்தில் கலந்ததாக எண்ணப்படாது என்று உணர்ந்து கொள். எ-று.

தோற்றுமே முதுமை யின்ன தொடுநபு சான தைத்தான்
கூத்துமே யாட்ட தாகாக் கொடுசுவந் தனுகா தென்று
காத்துமுத் தலகு தன்னைக் காபுநூன் கருணை கொண்டு
சாற்றுமே தகுமீ தென்று தலைமையா மோர்மை தானே (9)

(இ-ள்):—இந்த நப்சானது ஒருவனுக்கு முதுமைக் காலம் வரையிருந்தாலும் போதுமானது. இந்த நப்சில மனிதன் அவ்

வளவாய்க் கெடமாட்டான். கூடியவரைப் பேணுதல் உள்ளவனு வான். இது காபு நூனக இருக்கும். இதன் கருணை அவனைக் கெட வொட்டாமல் பரிபாலிக்கும். ஆனல் உறுதிடபாடுடையவனுக இருக்கவேண்டும். எ-று.

சுல்பியென் றுரைத்து நின்ற தொடுகுறி ரண்டு தன்னில்
உலவியே யுயர்ந்ததொன்று வுசையில் கீழ் தாழ்ந்த தொன்று
மல்கியே தாந்தா தன்னில் மருவியே யிருப்ப தாணுற்
பல்வித குபிலை யெல்லாம் படுத்துமே யோர்மைதானே (10)

(இ-ள்):—இனி நப்சுகளின் குணதிசயங்களில் நின்று சுல்பி என்று ஒரு நப்சு இருக்கின்றது. அது உயர்ந்த குணம் தாழ்ந்த குணம் என்று இருவகுப்பு உண்டு. அதில் உயர்ந்த குணத்தில் பொருந்திப் போவானுனல், அது சகலமான குபிரியத்தென்னும் கர்ம தோஷங்களை யெல்லசம் சங்கரித்து, இவனை வழி சருக விடாமல் அன்ருடம் விலக்கிக் கொண்டு வந்து, கடைசியில் சூபியாக்களின் வையாளி நடையில் கொண்டு போய்ச் சேர்த்துக் கண் பார்க்கும். எ-று.

தம்பமா மற்ற சுல்பி தாமுயர்ந் ததிலே யுள்ள
சும்புமார் தாவு மாகச் சுழிமுனை வாசி வாவில்
கம்பமாய் முளைத்து நின்று கரும்பாகி யதிலே யார்க்கும்
ஒன்பதா மெகீனி லீமா னெடுக்கமா மோர்மை தானே. (11)

(இ-ள்):—இன்னும் அந்த சுல்பியானது உன்னை நாளுக்கு நாள் உயர்த்திக்கொண்டு வந்து, உன்னிலுள்ள கர்ம தோஷ குப்மை கூழங்களை யெல்லாம் அறத்துடைத்து, சுழிமுனையாகிய மனவாசியை சுவாச வாசியில் வைத்து நிரப்பமாக்கி, லாமகான் என்னும் காப கௌஸைனில் நின்று ஒளிவட்டஞ் செய்யக்கூடிய உஜூது என்னும் மலிக்குல் குத்தூஸை இஷ்கென்னும் கரும்பாக இனித்து ஒட்டச் செய்து, கடைசி ஒடுக்கத்தில் ஈமானுடைய நிலையை பரிசுத்தமாக ஆக்கி, எக்கீன் உறுதிப்பாடு உண்டாகி ஜயம் பெறும்படியாகச்செய்யும். எல்லாம் ஓர்மைதான் காரியஞ் செய்விக்கும். எ-று.

ஓர்மைதா னென்று சொன்ன வொருமொழி அறுஷில்நின்று
கூர்மையாய் வந்த தாது கோஜால கவுதா மென்றும்



சோர்மையாந் தேஷமில்லை தோற்றிடுந் தவுபா கூடுந்
கீர்மையாய் முகியித் தீனுந் திருவுள மோர்மை தானே. (12)

(இ-ள்):—நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கள் அறுஷேமு அல்லாவை அடுத்தபோது "ஐ! என் ஹபீபே! உன் ஓர்மைதான் நான்" என்று ஒரு திருமொழி உதய சப்தம் தொனித்தது. அந்த தொனியானது தாத்துல் கிபுரியாவாக ஒளிவிட்டு பரஞ்சுடராய் குலாவிற்று. அதுதான் எம்பெருமான் கௌதுல் அஃலமாக நின்றுக்கலறதிற்று. இந்த இடத்தில் உள்ளபடியே இன்காரு அல்லது சந்தேஹமாவது கொண்டு வரப்பட்டவனுடைய இருதயம் திட்டமாக ஷெய்த்தானுகிப் போகும். நம்பிக்கையுடையவன் தன் தௌபா கபூல் செயயப்பட்டவனுய் ஔலியாக்களில் சங்கமாகுவான். இனி எம்பெருமான் ஜகத்முகியித்தீனுடைய திருவுளப்பொருத்தத்திற்கு ஆளசகி வையாளிபோடுவான். இதுவே ஓர்மையாக இருக்கும். எ-று.

ஓர்மைப்பதிகம் சம்பூர்ணம்

# மனப் பதிகம்.

*எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.*

பதிநா லெழுத்துமது வொன்று மிணங்கிப்
பறக்குமா காச நிலையில்
அதின்கீழே நின்று மறுகோண வாயுவுக்
கருவா மெழுத்து மதுசீன்
அதிலே சிகாரம் ஆமென் றெழுந்த
தருதேசி யான ஹேயும்
மதியான வக்கினி யதின்மூன்று திசைமாறி
மறிவோ டறிந்திடென் மனமே. (1)

(இ-ள்):—கலிமாவில் பதினுங்கெழுத்தும் ஒன்று கூடி நினைவு என்று சொல்லப்பட்ட, ஆகாயத்தின் நிலையின் கீழே உள்ள அறுகோண வாசி என்ற மனக்கமலத்தில், உட்கருவாக நிற்கக்கூடிய எழுத்தானது சீனுக இருக்கும். அதைத்தான் தமிழ் ஞானிகள் சிகாரம் என்று சொன்னார்கள். ஆம் என்றெழுந்த வாசியானது

ஹேயாக இருக்கும். இது வலபக்கத்தின் ஒட்டமாக இருக்கும். இனி சந்திரனும் சூரியனும் வாசியில் வையாளிகொண்டு. சூனியத்துடன் முக்கோண திசையில் ஓடிச்சென்று வருவதை மனமே நீ அறியவேண்டும். எ-று.

தரிப்பொடு மிருகோணந் தருநீர் மகாரமது
          தாமா யெழுந்த மீமாம்
மதிப்பொடு மண்ணு நூகாரத்தி னுள்ளே
          மலப்பூ வெழுந்த வுருவாம்
நரிப்பா யிந்நாலுக் குள்ளுள்ளந் தாயான
          நற்காப கவுசைனி மணியா
லுரிப்பாகி வருமதலை யிருபங்கு வானகையு
          முருவா யருகிடென் மனமே. (2)

(இ-ள்):—இனி இருகோண மென்கின்ற கபால அரையில் வோடிச் செல்லும் வாசியானது மீமாக இருக்கும். அது மன்னுடைய மகாமில் உள்ள சகல ஆசையுமுள்ள மலப்பூ என்ற உபாதிகளையுடையதா இருக்கும். ஆனல் இந்நான்கு வாசிகளுக்கும் இல்லிடமானது காப கௌசைனக இருக்கின்றது. இதில் வந்துதான் சிசுக்கள் உருக்கோலங்களை எடுத்துக் கொள்கிற விதத்தை நீ அறிந்துகொள் மனமே. எ-று.

வகையான பலதுண்டு கலிமாவி லுரைகேளு
          மசையாத வறு நான்கிலே
துகையாக வறுரண்டி லுருவாகு மொருநான்குந்
          துறையான சூல் மூன்றிலே
தகைப்பாரு மில்லாம லம்மூலா தாரத்தின்
          தானவிஞ்சி நால்வாச லாமா
முகையான பகையாகி யெதிர்வா யுடல்சிரசு
          முல்லாவென் றேகு மனமே. (3)

(இ-ள்):—அந்நான்கு வகையிலும் பலபல வகையான சித்து சப்ப்ரதாய ஆட்டங்களெல்லாம் உண்டும். அது கலிமாவின் மணி மந்திர ஹூவில் வைத்து அடக்கிக் கொண்டபோது, அது ஒரே பூரண கோலங்கொண்டு உலகமெல்லாம் ஒரே நிராமயித்தில் கூடிக் கொள்ளும். இனி அதை றசூல் நாயகமவர்களின் உதவியைக்



கொண்டு மூன்று ஹேயில் எல்லா வல்லமை யடையும்படியாக, சரீரத்தின் சகல உறுப்புகளையும், ரஹிதப்படுத்த இயலும். அதானதுலா, இலாஹ இல்லல்லாஹு என்ற பன்னிரண்டு அட்சர சக்தியால் எல்லாம் ஹூவின் ரூபத்தில் உருவங்கொள்ளச் செய்கிற பிரமதத்வமாக இருக்கும். குழவி வண்டானது எப்படி இலந்தையின் கிரிமியைத் தூக்கிக்கொண்டுபோய் மரத்துளையில்வைத்து, ஹூவென்று வட்டமாடி தன் உருவத்தில் திருப்பிக்கொள்கின்றதோ அப்படி இதில் தெளிந்த அறிவைச் செலுத்தின மஹான்களுக்கு காரியம் சித்திக்கும். இனி மூலாதாரம் என்பதற்கு நான்கு வாசல்களுண்டும் அந்நான்கில் வைத்துத்தான் சந்திர சூரிய விந்துக்கள் சகல உறுப்புகளையும் சமைத்தெடுத்துக் கொள்கின்றதை நீ அறிந்துகொள் மனமே! எ-று.

ஆகவோ ரிரண்டு மோரஞ்சு மூன்றும்
          அவ்வென் றெழுந்த சிரசாம்
வாகாக வொன்றுவர வாவா வெழுத்தினது
          வகைசொல்ல வேகே ளும்நீர்
தாகமதி யானஞா னமிலே மதில்ஹீயும்
          தாமான ஒருஹேயுந்தான்
மாகரண்டு பங்காக வியுமது பங்காக
          மாங்காயென் றறியு மனமே, (4)

(இ-ள்):—ஆனதால் கலிமாவில் இரண்டும் அடுத்த மூன்றும் ஐந்து அட்சரங்களும் "அவ்" என்று எழுந்து விட்ட தலைவட்டமாக உருக்கொண்டது. வாவா வென்று நின்ற வாவு அட்சரமானது, கலிமாவின் ஹூ எழுத்தும், மற்றொரு ஹேயுங்கூடி, இன்சானில் தாமறை மாங்காயாகக் கோலங்கொண்டது, என்று உணர்ந்து கொள் மனமே. எ-று.

றேயைப் பிரிந்ததொரு மாங்காய் வலப்பியும்
          ரேகைக் கொருவாயு மதுவாம்
மாயசைச் செறித்தமட மாங்காய தன்னில்
          வருமாய சூனத்தை யதுகேள்
தாயைச் சுகாதசதி மதிகெட்ட கொட்டாவி
          தருவிக்கல் நோயு மதுதான்
காயைக் குறித்தவிட மாங்காயி னிற்குறியை
          யறிவாகக் கேளென் மனமே. (5)

(இ-ள்):—றேயைக் கொண்டுண்டாக்கிய அவயவ உறுப்புக ளெல்லாம் மாங்காயைச்சூழ உள்ள வலது பிரிவுகளாக இருக்கும். அதில் நின்றுந்தான் காமாகர இச்சைகள் மேல் எண்ணங்கள் எல் லாம் உண்டாகின்றன. இனியதில் ஏற்படுகிற சூனியங்களைக் கேட் பாயாக. தாயின் சுரோணிதத்தில் நின்றும் உண்டாகின்ற மதி கெட்ட கொட்டாவியும் அதில் நின்றும் வரப்பட்ட உஷ்ண வாய் வைப்பற்றிய நோய்களுமாக இருக்கும். இனி மேலே கூறிய தாம ரைக்காயில் நின்றும் உண்டாகின்ற குறிப்புகளைச் சொல்கின்றேன் நல்லறிவுடன் கேட்பாயாக மனமே. எ-று.

அகாவென்று அன்னமதை அறையாமலுண்டுறக்க
மதுகாண கண்ட கறுப்பு
நிகாவென்ற நிறமுள்ளே நிச்சயம் தானதுக்கு
நிலைகெட்ட வோர்மை யதுதான்
வகாவென்ற அல்ஹம்து வகையன்று மேயஞ்சு
வாயுநெருப்பு நீர்பு வியுமே
ககாசமான வெழுத் தஞ்சாகும் ரூபமது
கனிகலிமா வின்வகைகே ளென்மனமே. (6)

(இ-ள்):—மாங்காயைப் பற்றிய குணங்களாவன என்னவெ னில் சோறு முதலிய ஆகாரங்களை அருந்துவதும், அவைகளில் வேட்கைப்பட்டு நிற்பதும், சுகமாகக் கட்டையைக்கிடத்தி, சய னித்துக்கொண்டு கிடப்பதும். ஆக இருப்பதுடன், அந்த மாங்கா யின் உள்ளே ஒரு கறுப்பு ரெங்கு தெரிகின்றதே, அதுதான் வியர்வை முதலியனவாக இருக்கும். இனி அந்த மாங்காயே அல்ஹம்து என்ற பஞ்சாட்சர சொரூபியாக இருக்கும். அதில் நின் றுந்தான் பஞ்சபூதியங்கள் அமைந்து அப்பூதிய சிபத்துகளான மண், தண்ணீர், காற்று, அக்கினி அவைகள் உண்டுபட்டு சரீரத்தை நடத்திக்கொண்டு வருகின்றன. இதில் ஐந்தாம் அறிவாகிய ஆகா சம் என்பதை நீ அறிவதுதான் காரியமாக இருக்கும் மனமே. எ-று.

உரைக்குமது வுன்னுடைய வுடலிலது மண்ணுளுந்
திசையாக வந்த வாயில்
உரையொன்று பல்குத்தி யதுதானே அம்மாரு
வோஸையது தானு மதுவாம்



நிரைகொண்ட சொல்ஜெபு றயில்வந் திருக்குமிடம்
நிறமதுவும் வெள்ளை யதுகாண்
தரையான ரேசிணையினிற் பதுவான வாயுவு
தானென் றறியு மனமே. (7)

(இ-ள்):—உனி சொல்லப்பட்ட சிபத்துகளின் சிர்ரை நன்று யுணர்ந்துகொள். பூத சிபத்துக்கள் ஐந்தினுள் ஒன்றுவது மண் என்பதில் பல்குத்தி உண்டாய் விட்டது. அதுதான் நப்சு அம்மாரு என்று சொல்லப்படுகிறது. அதில் நாலுடைய வோஸை உண்டா கின்றது. அதுதான் ஜீபுரீல் இருக்கப்பட்ட பீடமாக இருக்கின் றது. அதின் நிறமானது வெள்ளையாக இருக்கின்றது. அதில் குடி யிருக்கும் ஒரு வாயுவுக்கு பிராண வாயுவென்று சொல்லப்படும். அதை நீ உணர்ந்து கொள் மனமே. எ-று.

சிரத்தின்வகை பத்தாகு மொன்றும காமினிது
சித்தமறி யென்றன் நினைவு
சிறந்தவழி சிவந்தநிற மீரல்து நீரிஞெடு
தித்தியிரு கோண மதமீம்
வரத்தருமீக் காயிலிடம் வாகா யிருப்பிடமும்
வருரேசினை யுப்பா குமே
குறையிடா திருப்பதிரு மகாமே யிருகண்ணு
குலெவ்வாமத் தென்றன் மனமே. (8)

(இ-ள்):—சிரசானது அமைந்திருக்கப்பட்ட வகையானது பத்து அட்சரமாக இருக்கும். இதில் முதலாவது மகாமானது எது வென்றால் நினைவாக இருக்கும். இதுவே மெய்ஞ்ஞானிக ளெல்லாம் ஒன்றித்து நடக்கப்பட்ட நேர்பாதையானது. அதற்கு நிறம் சிவப்பாம இருக்கும். மகாம் செவ்வீரலாக இருக்கும். அதா னது தண்ணீரின் சம்பந்தியாக இருக்கும். அது, இரண்டு கோண முள்ள மீமாகக் காணப்படும், இன்னும் அது மீக்காயிலுடைய பீடமாக இருக்கும். அதன் சுவை உப்பாக இருக்கும். அதன் திவ்ய மணி வாசலானது இரண்டு நேத்ரமாக இருக்கும். அதை யறிவதுதான் பரிபூரணமாக நீ உணர்ந்துகொள் மனமே. அது லவ்வாமா என்பதாக இருக்கும். எ-று

மூன்றும காமதுவை முறையாக வேசேளு
முல்ஹிமத் தென்ற வதுதான்
என்றமது வாசியறு கோணம் பச்சையெ ற்
றெழுத்து வளைஹே யுமாம்
ஆன்றபதி யிசுருபீ லிடது புரஞ் சிமூக்
கண்டபரி கொண்ட வாசி
காண்டபதி நுரையீரல் கருமைரேசினை புளிப்ப ங்
கனகமணி யான மனமே. (9)

(இ-ள்):- இனி மூன்றுவதான மகாமைப்பற்றிக்கேட்பாயாக. அதுதான் முல்ஹிமா என்று சொல்கின்றது, அதில்தான் அறு கோண வாசி நடனம் பண்ணுகிறது. அதன் நிறம் பச்சையாக இருக்கும். ஹேயானது வளைந்து கொண்டிருக்கின்றது. அது இஸ்ருபீலுடைய பீடமாக இருக்கின்றது. அதன் இடது பக்கத்தில் வாசியானது வையாளி நடனமாட்டியம் ஆடிவருகின்றது. அதுதான் நுரையீரல் என்று சொல்லப்படுவதாக இருக்கும். அதன் சுவையானது புளிப்பாக இருக்கும் இதையும் நீ ஆராய்ச்சி செய்துக்கொள் மனமே. எ-று.

ஆனவகை பத்துமதின் மூன்று மகாமதை
அன்புடனே சொன்னே னதின்பின்
தானான நாலா மகாமது பித்தாகும்
தருலெழுத்து லாம ரூபமாம்
[illegible]னமது வான இசுருயி தான் வாசலது
பதிகாது வகைகேள் வியாம்
சானமது நாலாறு நாலா மாகாமிலுள்
தரிப்பா யிருப்பென் மனமே. (10)

(இ-ள்):—இதுமட்டிலும் மேற்கூறிய பத்து வகையான பதவிகளில் மூன்று வகையான மகாம்களையும் நல்லபடி விபரித்தயிற்று. இனி நாலாவது மகாமைச் சொல்கின்றேன். அதானது பித்தாக இருக்கும். அதன் ரூபம் லாமாக இருக்கும். அதில் பீடங்கொண்டிருக்கின்ற அரசரானவர் இஸ்ருயீலாக இருக்கும். அதன் வாசலானது, செவியாக இருக்கும். இந்த மகாமின் நிறமானது கறுப்பாக இருக்கும் இதில் ஒன்றுபட்டிருந்துகொள் மனமே. எ-று.



நனவதுவு மாகாசம் நாமறியச் சொன்னேனே
நன்றான தாமறைக் காயும்
சனமான பச்சையொளி கலந்தே யிருக்குமது
கல்போ டினிப்பு மதுவே
மனையான வட்டமொளி யுயர்மூளை மட்டுமொரு
அலிபா யமைத்த விறையோன்
சனுவான ரூபமது மொருவீடு தன்னிலே
தானஞ்சா குமென் மனமே. (11)

(இ-ள்):—இனி ஐந்தாம் மகாமின் சிறை அவிழ்த்து விடுகின்றேன். அது நினைவென்று சொல்லியப்பட்ட ஆகாசமாக இருக்கும். அதுதான் தாமரைக்காய் என்பது. ஒருவித பச்சை கலந்த நீல நிறமாக இருக்கும். சுவை இனிபபாக இருக்கும். அது நேரா வட்டந் தொடுத்து மூளைமண்டலம் வரையிலும் ஒரே ஜோதிமயமாக இருக்கும். அது அலிபுடைய சூறத்தில் நீண்ட ஷுக்குர் நிலையாக இருக்கின்றது. அது அல்லாகுத் தஆலாவின் சுய சொருபத்தில் ரூபங்கொண்டதாக மேற்கூறிய நான்கு வஸ்துகளையும் தன் அதிகாரத்தில் வைத்து நடத்தாட்டி வருவதை நீ உணர்ந்து அதில் சேர்மானிக்கவேண்டும், மனமே. எ-று,

புத்தியொடு வித்தாரம் வித்தை விரைத்துட்
புதைப்பொரு ளித்த னையுமே
உத்திகம தன்னினொடு முறஅலி புட்கமல
முச்சமது மேலு மிலையே
கற்றபொய் யறிவினையுங் கமலமது மில்லாமற்
கண்டறிவ தொன்று மிலையே
சத்துமலர் வாசமது திரிநெய்யு மக்கினியுந்
தான்ஹக்கு நபிகுது பென்மனமே. (12)

(இ-ள்):—ஞானவாசியைத் தெரிந்து அறிவு தெளிந்த பிறகு அப்பால் அலிபின் நிலையைந் பிடிப்பதற்கு மேலே இன்சான அடையவேண்டிய செல்வமானது யாதொன்றுங் கிடையாது. மேலே நான் சொல்லி விபரித்துக்கொண்டு வந்த மகாம்களின் குணுகுணங்களை நடைபழகியறிந்த பிறகு ஒருவன் அப்பால் இன்னும் என்னவேண்டும் என்று அதிக மேலெண்ணம் வைத்தவனாக,

ஊரூராய் அலைந்து தேடக்கூடிய அறிவும் கிடையாது. அப்படித் தேடவேண்டிய அறிவானது, பொய் பித்தலாட்டஞ் செய்யக் கூடிய, மட்டித்தனமான பஜார் அறிவைத்தவிற இந்த பைத்திய காரன் அடையக்கூடிய உள்ளமையான அறிவு வேறொன்றுமல்ல. சுருங்கச்சொல்ல வேண்டுமானால் ஞானவான் கண்டறிய வேண்டியது, திரி, எண்ணை, நெருப்பு. ஆகிய மூன்றும் ஒரு விளக்குக்கு ஒற்றுமைக்குரிய வஸ்த்துகளாக இருப்பதுபோல றப்பு, முகம்மது, முகியித்தீன், ஆகிய இம்மும் மூர்த்திகளும் ஜடலமென்னும் விளக்குக்கு உபயோகக் கருவிகளாக இருந்து ஆட்சிசெய்கின்றது. இதை உணர்ந்து கொள்ளத்தான் மனிதன் பஞ்சபூதிய அறிவு ச தனங்களுடன் சமைந்து வந்திருக்கின்ருன். எ-று.

மனப்பதிகம் சம்பூர்ணம்.

---

# த ர ஜா த் துப் ப தி க ம்.

சந்தவிருத்தம்.

அல்லாவிற சூலேகுரு வருளே அஹ்மதுவே
ஒல்லாவுள்ளே மகிழ்ந்தேயொரு வொளிவையவன்பிரிந்தே
லில்லாஹுநீ யென்றேநிறைந் தென்சூலுளேந் தென்ன
குல்லாகவே வந்தீர்குரு வருளும்தற ஜாத்தால். (1)

(இ-ள்)—அல்லா வென்னும் பெரிய திருநாமத்தின் கன்சுல் மக்பி, என்ற தோத்ரமற்ற புதையற் பொருளானது, 'சூல்' என்ற ஒரு சூட்சத்தை நாட்டத்தில் கருதியவுடன் அது ஒரு ஒளிவின் வடிவில் மீண்டது. அதுதான் குருமுகம்மதாக இருக்கும். இதற்கு திருமணி என்றும், கருவானது உருத்திரண்ட பரஞ்சோதி என்றதால் கரு, உரு, வென்றும் மெய்ஞ்ஞானிகள் இடுகுறி காரண நாமங்கள் சூட்டினார்கள். ஆனபடியால் அந்த சுடரை தன் எதிர்ப்பில்வைத்து அழகுபார்த்தான். அப்பால் அவ்வடிவில்தான் விஜயமாகி வந்து வர நினைத்தான். இதற்குத்தான் இலாஹி என்ற நாமம் உண்டாயிற்று. இதன் அம்ஸங்களைத் தெருவழியாக எழுதிக்காட்ட ஜகத் குருநாதனுடைய திரு உத்தாரம் இல்லாதபடியால் இங்கு நாம் எழுத்தில் சொல்ல இயலாது. வரக்கூடிய விதமாகிய தக்க பொருட்சாதனத்துடன் என்பால் வந்து அருட்சாதனத்தை



யடைந்து கொள்ளவேண்டும். ஆனதால் அந்த நினைப்பில் நின்றும் தன் ஆஷிக்கு இம்மக்லூக்காத்துகளைக் கருப்பமாக வைத்திருந்து ஆலங்களைத் தன் வழியாக வெளியாக்கி விட்டது. இந்தப்பரம ரகசியங்களைத் தெரிந்து ஒவ்வொரு ஆலங்களாக நுழைந்திருந்து எம்பெருமான் மௌன தேசிக சற்குரு முகியித்தீனுடைய தற்சொருபத்தில் ஒன்றுபட்டுக் கூடிக்கலந்து காலகாலமும் அழியாவரம் பெற்றிருக்கின்ற நித்திய வாழ்வில் மனிதன் ஆய்விடும் பதவிதான் தரஜாத்தென்று சொல்கின்றது. முகம்மதியாவானது, ஒரு முரீதுக்கு பிடிகயிருகவும், ஹக்கு உள்ளமையான நாட்டத்தின் தூண்டுகோலாகவும். எம்பெருமான் மௌன தேசிக வள்ளலவர்கள் கண்காட்சிப் பொருளாகவும் இருப்பதை முதலாவது. அறிந்து தவஞ் செய்யவேண்டியதுதான் தெளிந்து கொண்ட நல்லறிவாக இருக்கும். எ-று.

அங்கங்கதி ரெதிர்கொண்டவ ளகரம்மிற சூலே
பொங்குகலை நாலாறுடன் பொருந்துமாண்டிற் சிரசே
மங்குல்குடை யிடவேமேனி கமழுப் நபி ஞரே
தங்கும்பதந் தரவேவர வருள்வீர்தற ஜாத்தால். (2)

(இ-ள்);—அங்கமாகிய சரீரம் உண்டான இரகசியம் அடங்கலும் றசூல் நாயகம் அவர்களின் சிபத்தாகவே இருக்கும். ஆனால் சிரசு உண்டானது இருபத்து நான்கு அட்சரக்கலிமாவாக இருக்கும். ஆனதால் மௌனகுரு பீடத்தில் கல்வத்திருக்கும் ஒவ்வொரு ஒலிமார்களுக்கும் கஸ்தூரி வாசனையுடைய நம் நபினாாகிய முகம்மதியா அவர்கள் வந்து தரிசனங்கொடுப்பதுதான் மேன்மையான தறஜாத்தாக இருக்கும். எ-று.

முன்னேனிறை முன்னிலொரு முத்தாக வெழுந்து [தான்
சொன்னலொளி சொல்லன்றிறை தொகுத்தான்வெகு வரத்
குன்னென்றெழு கடல்நின்றது குனியும்பனி சொரியும்
என்றும்நபி பதமேயெனக் கருளுந்தற ஜாத்தால். (3)

(இ-ள்):—இனி ஆதிமுகம்மதியாவானது, அல்லாவின் சமுகத்தில் ஒரு வெண்முத்தின் வடிவத்தில் உதயமாகி இருந்து அப்பால் அவனுடைய கிர்பையான பார்வையின் நின்றும் ஆலத்தளவில் வெளியாகி வெகுவான வரங்களைம் பெற்றுக் கொண்டது.

எப்படி என்றால், உதயத்தில் நின்றும் குன்னென்று ஒரு சப்தம் பிறந்தது. அதில் நின்றும் ஹயாத்துல் கைபர் சமுத்திரம் பொங்கிற்று. அதின் வழியாக ஒரு விதமான பனியானது பொழிந்து சொரிந்தது. அப்பனியே உலகங்களை யெல்லாம் அடையவளைந்து சிருஷ்டிப் பிண்டங்கள் நெளிந்து எழுந்தன இதையறிவதே பெரிய தறஜாத்தாக இருக்கும். எ-று.

தன்னுள்ளத் திருந்தேயொரு தானுதர மோதும்
பன்னும்அலி பொடுஸீனுறப் பாயுமொரு மீமில்
கண்ணுண்மணி யானகுரு வானையுரு வாக்க
முன்னும்படி பதமேநபி முழுதுந்தற ஜாத்தால். (4)

(இ-ள்):—அல்லாவின் திருநாட்டத்தில் இருந்து. ஒரு அலிபு உண்டாகி, அதில் இருந்து ஒரு சீன் உண்டாகி, அதில் இருந்து ஒரு மீம் உண்டாகி, அதில் இருந்து கண்மணிக் கமலம் உண்டாகி, அதில் இருந்து கமல முகம்மதியாவானது சகல ஜீவராசிகளாக வடிவெடுத்தது. இதை விஜாரனை செய்து உணர்வதே மனிதனுக்கு அவசியம் வேண்டிய தறஜாத்தாக இருக்கும். எ-று.

அவ்வல்அறு ஷொளிவே அஹதிலே அஹ்மதுமீன்
எவ்வல்கொடு வருமேபெரு விலேயோடொரு முளையாய்க்
கவ்வல்ஹம் சாருங்கரு வங்கம்வெகு பங்காய்
மவ்வல்கொடு வருமேபத மஹறுமுத்தற ஜாத்தால். (5)

(இ-ள்):—ஆதியில் வெளியான அறுஷின் ஒளிவாகிய முகம் மதியாவாக இருக்கும். அது அஹது, அஹ்மது ஆகி அப்பால் ஒரு மீமுடைய சூறத்தை எடுத்தது. அதன் அம்ஸத்தைக்கொண்டே இந்த லோக சராசரங்களின் வித்தை தன் நாட்டத்தைக் கொண்டும் ஊன்றி அதனதன் முளைகளை முளைக்கக் காரண கருவியாக நின்று ஒரு ஹம்ஸானது அதானது கருவங்கமாகி ஒவ்வொரு வஸ்துவிலும் சரிசரியாகப் பொருத்தச்செய்து நடத்தாட்டுகின்றது. இதை அறிவதே மனிதனுக்கு வேண்டிய தறஜாத்தாக இருக்கும். எ-று.

அஞ்சீர்கனி யுண்டேயதி லன்பிலுரு வானால்
வஞ்சீரருள் கொஞ்சிமயில் வடிவானதை யறிந்தால்



கொஞ்சிக்கனி கொஞ்சிக்குரு வமுதானதை யுண்டால்
மஞ்சுக்குடை நபி தாம்பத மருள்வார்தற ஜாத்தால். (6)

(இ-ள்):—இந்த உடலென்ற விருட்சத்தில் ஐந்து குஷிகரத்தை உடைய ஐந்து ரெங்குள்ள ஐந்து கனிவர்க்கங்கள் உண்டாயிருக்கின்றன அதில் ஒன்று காரிய காரணமானது, அதில் நீ அன்பைப்பூட்டி உருவாகிக்கொண்டாயானால் அது ஒரு மயிலின் சுருபத்தில் தெரியக்காண்பாய். அந்த மயிலுடன் நீ உறவாடிக் கலந்தாயானால் அது கேட்கும்படியான எந்த வஸ்துவையும் உனக்கு தந்து அமுதூட்டிக் காக்கும். அதை உண்டு விட்டாயாகில் அதுதான் றசூலுடைய தறஜாத்தாக இருக்கும். எ-று.

ஆதம்நபி ஒருபால்மெரு ஆதவாம்நபி மாரை
மாதும்வழி வேதப்படி யோதும்வடி விறசூல்
நாதம்வெகு கீதம்மொழி நடனம்வெகு கொலுவாம்
பாதம்வரத் தாரும்பய காம்பர்தற ஜாத்தால். (7)

(இ-ள்):—ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஒரு பக்கமும், மற்றய நபிமார் றசூல்மார்கள் ஒரு பக்கமும் நிற்க, நடுவே கமல முகம்மதியா வந்து திருவருட் காயசியைத்தந்து ஆதரிக்கும். அதன் இராக சங்கீத நடன உல்லாசங்களைக்கண்டு தாங்கிக்கொள்ள யாரால் இயலும். அதைக்காண்பதுதான் பெரிதான தறஜாத்தாக இருக்கும். அப்போது வேண்டிய வரங்களை அது தரும். எ-று.

வந்தேயொளி கண்டேவடி வென்றேமன மொன்றாய்
விந்தைவிளை கொண்டேதலை தந்தேவர வென்றால்
சிந்தாமயில் நின்றால்கினம் சினவென்றவன் மனமாய்த்
தந்தாரிற சூலின்பதம் தருவாய்தற ஜாத்தால். (8)

(இ-ள்):—அவ்விதம் வரந்தரப்பட்ட ஒளிவானது கமலமுகம் மதியாவின் சுயரூபமான வாலைமனோமணியாக இருப்பாள் அவள் இல்ஹாமுடைய ஐன் என்ற திருவாசலில் வந்து எதிர்முகமாகுவாள். சொரூபத்தின் மனோஹர வடிவைக்கண்டு மனந்தாங்க ஆண்பிள்ளை உண்டா? அப்படிப்பட்ட மஹ்பூபு நாயகியின் வடிவைக்கண்டதும், தலைமயங்கின கோலமாக நில்லு, உனக்கு வேண்டிய அருளை வாரித்தருவாள், அப்போது உன் மனக்கமலமானது ஒன்றுபட்டு வஹதானிய்யத்தின் துறையில் முழுதும் சம்பந்தப்

பட்டு ஆநந்தமாக மிதக்கும். அது ஒரு பச்சைவடிவாவ மயிலின் சூறத்தாத மாறி யாஹூவா என்று நாதிக்கும். அதுதான் றசூல் நாயகத்தின் தரிசனமாக இருக்கும். இதுவே பெரிய தறஜாத்தாக அப்பவே உனக்குத்தெரியவரும். எ-று.

ஆலைக்கொரு சோலைப்பதி சேரும்அறு ஷதின்மேல்
மாலைத்தெரு வீதித்தலை யோடிவிளை யாடப்
பாலைக்குடம் மேலேறிடப் பாயும்பத ருதே
கால்மேல தின் கீழேபதங் கண்ணும்தற ஜாத்தால். (9)

(இ-ள்):—அந்த ஸ்தலந்தான் அறுஷுல்லாவாக இருக்கும் அதில் பலபல விதமான அமிர்தக்கனிகள் குலைகுலையாகப் பழுத்து மதுரங்கனிந்து ஒழுகக்கூடிய தோற்றத்தையுடைய பூங்கர்வன சோலைகள் எப்புறங்களிலும் காணப்படும. அதன் மேல் சற்று உற்றுப்பார்ப்பாயானால் அங்கே மேல்மண்டலமாகிய சுல்த்தானன் நசீருவுடைய சிங்காசன ரதவீதியானது பச்சை மரகதத்தாலும் நீல ரத்னங்களாலும் வரிசை வரிசையாகத் தெரியும். அதில் நந்திமுகம்மதியாவின் நடன வைபவ இந்திரஜோதி உல்லாசங்கள் மஹா உன்னத சாங்கோப சாங்க மகிமையில் காட்சிமயங்கள் வெளியாகும். அவ்வீதியெல்லாம் தேவாமிர்தங்களான ரஞ்சபில்களும், ஷநுபன்த ஹூர்களும் பொற்குடங்களில் வைக்கப்பட்டு அழகிய ரத்னக்கிண்ணங்களில் ஏந்தியவண்ணமாக வரும். உன் நப்சை முந்தவிட்டுப் பதருதே. நந்திமுகம்மதியாவின் அலங்கார சிங்காரதரிசனமானது கால்மேலாகவும் தலைகீழாகவும் உன்னில் பின்னப்பட்டு வந்து அது எடுத்து மஹா உபசரணை மாமோஹத்துடன் ஊட்டும். அப்பால்தான்உனக்கு தறஜாத்து எத்தினது. எ-று.

கம்பக்களை யிப்புக்கிணை மேலேறினர் கணையை
வம்புற்றவ ளெற்புத்தின வாவாவெனக் கூவி
வம்புத்தனம் செய்யத்தனே அம்ம உமா சொம்மால்
உம்பத்திரம் நபிபாதமே யொளிவாம்தற ஜாத்தால். (10)

(இ-ள்):— அந்த மஹா இன்பமான கண்காட்சியானது இலேசானதல்ல. கபமாகிய மனவாசியைப் பிடித்து நூலேணியாகிய அலிபென்ற நிலையின்மேல் ஏறினபிறகு இஷ்க்கின் பரஞ்சோதி மாளிகையின் திருமணி வாசல்கள் திறந்து நந்திமுகம்மதியா என்



னும் வாலைரசக்கன்னி வெளியாகிவந்து அடா என் அருமைச் செல்வமே! வருக வருக என்று அருமை பெருமை தோன்ற கைகளை நீட்டி வரவேற்பாள். அவ்விதம் அழைக்கின்ற அவள் திருவாயின் அமிர்தரஞ்சிதக் கிஞ்சுகமொழியின் இன்பமோ! என்னென்று உன்னால் சொல்லதிராணி உண்டும்! கண்களை அடிக்கடி விநையத்துடன் வெட்டிக்காட்டும். சரசமோக சல்லாப விரகதாப நோக்கங்கள் ஒருமட்டிடமுடிந்ததல்ல. அவளைத்தான் தமிழ் மதஞானிகள் பார்வதி என்று பேர்வைத்தார்கள். அதுதான் அஹ்மதியாவின் தற்சொருபவடிவாக இருக்கும். இந்தக் காட்சிதான் மஹான்களான ஔலியாக்களுக்கெல்லாம் அரிதான தறஜாத்தாக இருந்தது. எ-று.

கம்மென்றது கமழும்வெகு கரணகரு விளும்
கிம்மென்றதுக் குள்ளேயொரு கிரிநாதகிங் கீதம்
கும்மென்றது கூமாவெடு குறியாவரும் வழியில்
தம்மென்றுமா நபிபாதமே காணும்தற ஜாத்தால் (11)

(இ-ள்):—அது வெளியானவுடன் அண்டகோண புவனங்களெல்லம் ஏகபரிமள கஸ்தூரிவாடைகள் கமகமவென்று கமழ்ந்துவிடும். அங்கோர் மூலையில் அடங்கிய கருவி காணுதிகள் என்னப்பட்ட முந்நூற்று முக்கோடி தேவாதி தேவர்களும் அவ்வாசனையைத் தாங்காமல் தலைவணங்கி நின்று அர்ச்சனைபுரிந்து நிற்பார்கள். நந்தி முகம்மதியாவானது கையில் ஆயிரத்தெட்டு நாதத்துவாரங்களையுடைய சங்கீதத்தம்பூர் ஒன்றைப் பிரயோஹித்து அவளது திவ்யகாந்தளம் பூவரிசைகளைப் போன்ற அழகிய திருமணி விரல்களால் தட்டும் ஸாஹித்யங்களால் சந்திர சூரியர்களும் நட்சத்திராதிகளும் வானவுலகங்களும் பூலோகத்திய சமஸ்தஜீவாத்மங்களும் சமுத்ராதி கோடான கோடி ஜாஞதிகளும் அசஷ்ணமே கும்மென்று அரவமொடுங்கி சயனித்து மயங்கும். அந்நேரவேளையில் உஷாராயிருந்து அம்மஹா மஹாமகிமைகளை அநுபவிக்கும் வல்லமைப் புருஷனுக்குத்தான் சதா நித்யப்பெரும் வாழ்வாகிய குதுபு பட்டம்கொடுத்து கிரீடத்தை அவன் சிரசிலணிந்து சராசரங்களின் சர்வாதி காரங்களையும் அருள்புரிவான். இதுதான் றசூல்வர்களின் கிர்பாநுகூலமென்ற தறஜாத்தாக இருக்கும். எ-று.

ஆ ஆவொரு வண்ணல்வெகு வழகாகிய மின்னல்
ஈஈவன்னல் அவளிருந்தால் வெகு கன்னல்
ஊஊவெனும் ஊதல்லல முச்சமவே பச்சம்
பாமாவரும் நபியேபதம் மாலாம்தற ஜாத்தால் (12)

(இ-ள்):—மேற்கூறிய சங்கல்பத்தைதான் மஹாத்மாவாகிய குணங்குடி மஸ்தானவர்கள் "வாசனையாகிய மாசற்ற வஸ்த்து" என்று சயிக்கினை செய்துபோனார்கள். அப்படியிருக்க, அந்த மகத்துவப் பொருளாகிய நந்தி முகம்மதியாவானது வெளியாகும் ஆரம்பத்தில் ஆஆ! நான் என்ன சொல்வேன்! வெகு அழகிரகிய பூஞ்ஜோதி ஒரு மின்னலான அலைப்போலும் பளீர் என்று சற்று நேரம்பட நின்று மறைவதும் மறுபடி நின்றது நிற்கத்தோன்றுவது மாகக்காட்டும். அப்பால் சிலகாலம் முஷாஹிதாவின் வைராக்யம் அதிகரிக்கும் தாரதன்மியம்போல் ஒரு ஒளிவீடு மஹா சித்ர விஜித்திரமாக ரூபங்காட்டி மறையும். அந்நேரத்தில் ஈ என்று பல்லை இழித்துக்கொண்டு இழிச்ச வாயாளுக நீ இருந்து கெட்டுப் போகாமல் காரியத்தில் மெத்தவும் பலமுடையவனாக இருந்து கலிமாவில் பூரணப்பட்டுக் கொள்ள வேண்டும் அப்படிச்செய்து கொள்ளாமல் மதிகெட்டு மண்ணாய்ப் போவாயாகில் அது உன்னைக் கெடுத்து, கோலப்பட்டுந் திரியவைக்கும். ஆனதால் மெத்தவும் பத்திரமாக இருக்கவேண்டும். எப்படி என்றால் ஹூவென்று வாசியில் சேர்த்து வையாளி போகுவதை ஒரு நிமைகொட்டு நேரமாவது பிந்கவிடாமல் எடுத்து நடத்தவேண்டும். அவ்விதம் தபோதனபத்தியம் நடத்திக்கொண்டு போகையில் அகஸ்மாத்தாக தேவகிருபையின் திருமணிமாளிகையின் திருவாசல் திறந்து உன்னை உள்ளே கொண்டுபோய் மஹா உன்ன ஸம்பன்னங்களை வாரிக்கொடுக்கும். இதுதான் நமது மகத்தான முகம்மதிய்யாவின் பெரிய உபகாரமான தறஜாத்தாக இருக்கும் உனக்கு அப்போதே தெரியவரும். எ-று.

தாஜாத்துப்பதிகம் சம்பூரணம்.

---



# றஹ்மான் பதிகம்.

## கலிவிருத்தம்.

நித்தமருள் பொங்குமலர் நின்கமலத் தாளைப்
பத்தியென வுட்சிபத்தில் பார்த்திருந்து கேட்டு
முத்துமுறை யிட்டுழடி யாமலென் துவாவை
உற்றகபூ லாகவுறை வானறஹ் மானே. (1)

(இ-ள்):—கால காலமாக அதாவது காயும் தாயுமாக என்னில் பெருந்தலமாகிய காப கௌஸைனில் நின்று பொங்கிப்பூத்து வாசனை கமழ்ந்து கொண்டிருக்கா நின்ற நந்தி முகம்மதியாவின் திருக்காட்சியை நான் பாடுபட்டுத் தேறிக்கண்டு அந்த நாயகபதியின் பாதகமலங்களின் மோட்சத்தைப் பெற்று சதாமுத்தியடையும்படியாகவும், என் துஆவை நீ கபூல்செய்து கொள்ளும்படியாகவும், நீ எனக்கு சொந்தமான கிருபை செய்தருள்வாயாக என்னில் பீடங்கொண்டிருக்கின்ற றகுமானாகிய ஆண்டவனே! எ-று

கத்தனரு ளும்படிக ணக்குடன்வ ணங்க
உற்றபல னென்றதுக்குள் முப்பதையுங் கூட்டிப்
பற்றுமீமி லெட்டுந்தாலும் பரிந்துசவு லாக்க
முற்றும்படி கூட்டும்முஸ்த கீமேறஹ் மானே. (2)

(இ-ள்);—அல்லாஹு ஜல்ல ஜலாலஹு தனது திருக்குர்ஆன்ஷரீபில் விதித்திருக்கின்ற, ஐந்து வேளை நேம கடன்களையும் ஒழுங்குடன் செய்துவந்து தேறி, அதில் வைத்து குணத்தை சாதுவாக்கிக்கொண்டு முப்பத்தி ஒன்றில் பதிந்தோடக்கூடிய வாசிநிலையாகிய அல்லாவின் றகுமத்தான பாதையாகிய மஆரிபாவை விஜாரணை செய்யும் கருமத்தில் இடுப்புக்கட்டி ஒருதக்கன வழிகாட்டியைப் பின்பற்றி மீமில் எட்டு வழியையும் தாலையும் சேர்த்துப் பிடித்து, நேர் முகமாகச் செல்வதுதான் சிறுத்தல் முஸ்தக்கீம், என்று உணர்ந்துகொள்ள எனக்கு அருள்செய்வாய் றகுமானே! எ-று

நித்தனைவ ணங்கவகை நிச்சயமு ரைக்கப்
பத்தி நிலை யுற்பனப்ப குந்தவித மோரடீ

உ ற்றிரும னத்திலுரு வா னதுவா தன்னை
வெற்றிகபு லாக்குவெகு வேதறஹ் மானே. (8)

(இ-ள்):—எக்காலத்திலும் நித்திய வஸ்துவாயிருந்து ரட்சிக்கின்ற றப்புல் ஆலமீனை வணக்கஞ்செய்வதற்கு இன்றியமையாத முதல் சாஸனமாவது பக்தி என்று சொல்லப்பட்ட பக்குவ நடைகளாக இருக்கும். அதில எத்தனையோ பகுப்புகளிருப்பதை நாளா வட்டமாக நீ ஞானிகள் பணிவிடையில் அமர்ந்து தெரிந்து கொள்ளவேண்டியது. அப்படி பகுத்தறிந்துக் கொண்டதில் எது எல்லா வஸ்துகளிலும் பொருந்தியதாகவும் எல்லா வஸ்துவிலும் அது பொருந்தியதாகவும் இருக்கக்கண்டாயோ அந்வ நிராமய கோலத்தை உன் மனவாசியில் வைத்துப் புடம்போட்டு உருவாக்கிக்கொள். அதற்கு றகுமான் துணைசெய்வானாக. எ-று

கத்துகட லேழுங்கரு வோசைக்கு ளமைந்த
மத்தும்வெகு சத்துக்குள் மதுரசத்கி னூடே
குத்தும்நுகத் தோடலிபுங் கூட்டிதுவா வாக
உற்றகபு லாக்குவுற வானறஹ் மானே. (4)

(இ-ள்):—நான்கு வகைப்பட்ட பூதநப்சுகளையும் உள் மகாம்களான எண்குணங்களில் பொதியவைத்து ஒன்றொன்றாக சேர்மானஞ்செய்து கொண்டால் சகல கஷ்பு கருமாத்துகளும் தானே உண்டாகும். இன்னும் சிறப்புப் பொருந்திய றுக்கூன் என்றதாத்தின் வடிவில் விட்டு கலந்து உறவாடச்செய்து, ஐயம் பெறுவதற்கு உதவி செய்யவேண்டும் றகுமானே! எ-று

.........நாலையும் எட்டதுக்கு லாக்கச்
சித்ததுமு ளைத்திடும் சிறந்தறுக் கூனில்
வத்திரலா மொன்றுமுற வாக்கியுற வாக
வெற்றிதர வெனக்குதவி வேண்டும்றஹ் மானே. (5)

(இ-ள்):—ஏழுசப்த சாகரங்களும் கருவோசை என்று சொல்லப்பட்ட (குன்) என்ற விந்து நாதத்தின் தொனியில் அடக்கமாக இருக்கின்றது அதையறிவது மெத்தவும் மதுரமான ஞானரசமாக இருக்கும். அதைப்பார்த்தால் ஒரு நுக்கத்து, குத்தியது போல ஒரு சிறிய வட்டத்தைப்போல் தோன்றும். அது அலிபே



அன்றிவேறொன்று அல்ல. அதில் என்னைப் பொருந்தச் செய்து பனுஷுனுக்கியருள் றகுமானே! எ-று.

கொத்னிகு வித்திடகு ருண்மலக்கு வெல்லாம்
பத்தினிய தாகவுன்னைப் பார்த்தவர் வணங்க
மற்றொருநி னைவிலாமங் காதலிபு லாமும்
எத்துஞ்சுஜூ துங்கூட்டு மேகறஹ் மானே. (6)

(இ-ள்):—இன்னும் நீயாகிறது மகாமன் மஜுமுதாவில் ஆசனங்கொண்டிருந்து, சரஞ்சரமான இரத்னாபரணங்களை வாரியணிந்து அண்டர்கணங்களும் உன்னைக்கண்டு மஹா பத்தினியிலே என்று உபசார வார்த்தைகளுடன் போற்றி விளங்கி நிற்க இன்னும் நினைவென்னும் ஏகதத்துவ கோலத்தில் அலிபு, லாம் என்னும் நிலையில் வஸ்தடங்கலும் உன்னை ஸஜதாஸுக்குச் செய்யும்படியாக வெளியான றகுமானே! ஏகபராபரப் பொருளானவனே! எ-று.

ஆத்துமஷ ரீஅத்தில் வணக்கமது தன்னைக்
காத்தெனக் குன்னுதவி காணுதரி கத்தில்
பூத்துமன மும்பொருந்தும் பொங்குஹகீ கத்தில்
பார்த்தபறு லாக்குபகு மானறஹ் மானே. (7)

(இ-ள்):—இன்னும் ஆத்மா என்றதை ஷரீஅத்தின் வணக்கமாகவும், சகல சிற்றுகளையும் கண்டறியக் கூடிய பிர்மதத்துவத்தை தரிக்கத்திய நாவை தரிபடுவதிலேயும், இன்னும் ஹாகீகத் தென்று சொல்லகக்கூடியதில் ஆலமெல்லாம் மணக்கின்ற வாசனையாகவும், நான் ஆகி வெற்றி பெறும்படியாக நாயனே! நீ இந்த ஏழைப்பயலுடைய முகத்தைப் பார்த்தாவது மனதிரங்கி அதை எனக்கு நித்திய பறுலு என்னும் நேமகட்டளையாகு றகுமானே!

பித்தனிபு லீசுவந்து பின்னல்சமை யாமல்
குத்தூசு மலிக்கின்குத் றத்தான கலிமா
.. ....... துரத்தி பாரமஃரி பத்தில்
சித்திரச்சீ ரொளிகாணுந் தினின்றஹ் மானே. (8)

(இ-ள்):—ஜடலத்தில் பித்துடைய அங்கத்தில் இருந்து எழுந்து சேஷ்டையாகிய முரியாட்டத்தைச் செய்கின்ற மல் ஊனுகிய ஷெய்தானின் கோளாறுகள் என்னை வந்து படுமோசஞ்செய்து

விடாமல் மலிக்குல் குத்தூசாகிய ஜனுல் எனுடைய கலிமாவின் நிலையின் ருஷிசத்தால் என்னை கல்வத்துப்பீடத்தில் இருப்பாட்டி அதற் சாதனை வைராக்யத்தின் கூரிய வேலாயுதங்கொண்டு அவனைப்பிளந்து தூராக்கி, பாரதூரப்பொருளாகிய மஅபத்துல்லாவின் விசித்திரச்சுடராகிய அவ் அதுறுவின் ஒளி நிலையைக்காட்டியருள் செய்வாயாக றகுமானுகிய ஆண்டவனே! எ-று

முத்திநிறம் முச்சுடரில் முன்னில்முகப் பாடல்
புத்திகலங் காமலொழி போர்வைநடு வாக்கிச்
சுற்றுபச்சை பவளமுடன் சூழ்ந்தஇல்மீதி தாலில்
உற்றவணக் கத்தையுற வாக்குறஹ் மானே. (9)

(இ-ள்):—நபிகள் சிகாமணி யவர்களிருந்த வெண்முத்தின் திருமணி ஒளிவை என் முன் முகப்பாகிய நேத்ர நடுவே விளையாடச்செய்து, அதில் என் அறிவு சந்தேக மென்னும் படுகுழியில் விழுந்து தவிக்காமல் ஓர்மை என்னும் பரிவட்டத்தை எனக்குப் போர்த்தி தெளிவென்ற மணிவிளக்கை ஆராய்ச்சி என்னும் மலையளவில் உயர்த்தி எரியச்செய்து, சுற்றிலும் பவளக்கடலாலும் உள்ளில் பச்சை மரகதக் கடலாலும் சூழவளையப்பட்டுள்ள, ஒருதால் போன்ற மகத்துவ வஸ்துவைக்கண்டு தரிசனையுன் உறுதியாக வணக்கஞ்செய்ய எனக்கு உதவிசெய்தருள்வாயாக றகுமானே! எ-று.

இற்றைக்குப காரஞ்செய்யு மிம்மைமறு மைக்காம்
... ... — ... ...
பத்திலுற்றி ரண்டையும் பழக்கியுரு வாக்கக்
கத்தனே யெக்குமுன் காட்சிறஹ் மானே. (10)

(இ-ள்):—இந்த அடியானுக்கு இற்றையாகிய இந்த காற்றுக் கடலான நிலவுலகத்தின் கண்ணே நீ செய்த பேருபகார சகாயத்தைப்போல இகபரங்கள் இரண்டிலும் உதவி புரிந்து, நான் கற்ற கல்விப்பொருள் அனைத்தையும் ஒரு சேரத்திரட்டிக் கூட்டி ஒரு ஞானப்புதையலாகக் கொடுத்து அதை கருவில் நின்றும் உருவாகிய பன்னிரண்டு அட்சரக் கலிமாவின் நிலையில் என்னைப்பழக்கி விட்டு, என் மண் ஜடலத்தை ஒளியின் ஜடலமாக ஆக்கியருள் கர்த்தனுகிய ஆண்டவா! ஏ றகுமத்தான நாயனே! எ-று.



வெற்றிமனத் துள்ளகத்தை வெல்லும்லாயி லாஹ
தொத்துஇல் லல்லாஹுவென்று தோத்திரஞ்செய் தாக்கால்
எத்தும்தற ஜாந்துவழி யாக்கவென்து வாவைச்
சுத்தகபு லாக்குநல்ல துய்யறஹ் மானே. (11)

(இ-ன்):—எப்பேர்ப்பட்ட மஹான்களையும் தவபி மென்ற யோக நிஷ்டையில் கெடுத்து இஸ்லா மென்ற செஞ்சூரிய வடிவில் நின்றும் ஒருவிநாடிப் போதில் கெடுத்து மூஞ்சியில் கருப்பிறங்க வைத்து கேடு கெட்ட குபிரியத்தென்னும் லஅனத்தின் வழியாகிய காபிராக்கி கற்பூரங் கொழுத்தச்செய்து போடுகிற பாதகனுகிய இப்லீசென்னும் அம்மாறத்தை வெற்றி யடையக் கூடிய மூல மந்திரக் கலிமா என்னும், லா இலாஹ இல்லல்லாஹு. என்னும் திக்று ஜல்லியை மனதில் வைத்து தியான தோத்ரஞ்செய்து வந்தால் எப்பேர்ப்பட்ட பாப தோஷபந்தங்களும் அறநீறிப்போய் நேர்வழியாகிய பரமாநந்த தறஜாத்தின் மெஞ்ஞானமுத்தி வழி உண்டாகும். ஆனதால் அப்பேர்ப்பட்ட மோட்சநிலையில் தீனுனாதக்களாக யாக்கும்படி நான் கேட்கும் துஆவை நீ கபூல்செய்தருள்வாயாக றகுமான் என்ற நிராமயப்பொருளே! எ-று

சுத்தனருள் பெற்றவிற சூல்கருணை மெய்யில்
ஒத்துவுற சத்துடனே யோதியே மகிழ்ந்து
எத்தும்ஷபா அத்துடனே யேற்றதுவா தன்னை
வத்துவருள் வாக்கிவடி வானறஹ் மானே. (12)

(இ-ன்):—உன்னுடைய தேவ கிர்பை முழுவதுக்கும் பாத்திரவானுகிய எங்கள் சற்குரு நாயகம் முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் உள்ளமையான நடக்கையில் நின்றும் ஆயிரம்பங்கில் ஒருவழியாவது நடந்து உன் கருணை வடிவில் நான் திருவுருவாகி வளர்ந்து ஏகபோக ஆநந்த பாஸ்கர வெள்ளத்தில் மிதந்து இன்னும் அந்த வள்ளலாகிய நாயகபதி அவர்களின் திருஷபா அத்தென்னும் மன்ருட்டம் பெற்று நாங்கள் ஈடேறும் படியாக எங்களை அடிமை கொண்டு ரட்சித்து உன்னுடைய றகுமானியா என்னும் வடிவாகிய இயந்திர அச்சியில் எங்களையும் பதித்து முத்திபெறச் செய்தருள்வாயாக, றகுமத்துக்குரிய வஸ்தாகிய ஆண்டவனே! எ-று

றஹ்மான்பதிகம் முற்றிற்று.

# ஞானவிகடசமர்த்து.

பஃறொடை வெண்பா.

குன்னென் றெழுபடைப்புங் கூசாம லேபடைத்து
மன்னுங் கிருபைசெய்த மன்னவனே—முன்னமே
ஆவென் றெவர்க்குமுயி ரானந்த மாய்வகுத்து
ஈயென்று நிற்கநிலை யீந்தோனே—ஊவென்றும்
கோமானே யுன்னை நிதம் குல்ஹுவல் லாவென்று
சீமானே யான்சொல்லுஞ் சீர்ஞானம்—தேமானே
நல்லமொழி ஞான விகட சமர்த்தனைச்
சொல்லவிறை யோனே துணை.

(இ-ள்):—விதையாலும், சினைகளாலும், உற்பனப்பிறவி கோலங்களாலும், முட்டைகளாலும், வியர்வையாலும், ஒளி அக்னியாலும், பனிக்கட்டியாலும், அதாவது, விதையால் பூலோகத்தின் மரங்கள் முதலிய புற்பூண்டுகளையும், சினையைக்கொண்டு தண்ணீரில் வாழாநின்ற மீன்வர்க்கங்களையும், உற்பனப் பிறவியைக் கொண்டு இன்சான், ஜின்னுத்து, பரிஸாத்து, விலங்கினங்கள் முதலிய வைகளையும், முட்டைகளைக் கொண்டு ஊர்வன பறப்பன முதலிய சில மீன் வகையராக்களையும், வியர்வையைக்கொண்டு ஈறு, பேன், மூட்டை, செள் முதலிய சில வஸ்துக்களையும், ஒளிவு அக்னியைக்கொண்டும் ஆமை, நாங் கூழ்ப்பூச்சி, மலக்குகளில் சிலரையும், நரகத்தின் விகார குருபிகளையும், இன்னும், பரலோக வாசிகளையும், பனிக்கட்டியால் ஒருவித வானவர்குழிங்களையும் (குன்) என்ற ஒரு சப்தத்தைக்கொண்டு உண்டாகசெய்து, அவைகடோறும் விரவிப் பேரயிருந்து, ஒன்றிற் றொன்றை யாகாரப் பொருளாக்கி ரட்சிக்கா நின்ற தனிராஜாங்கப் பொருளானவன். இன்னும் ஆதியில் ஹா, வென்று ஒரு சுவாசத்தில் நின்றும் ஜடலங்களை நெளியச்செய்து, அலிபின் நிலையில் நிற்கும்படியாக நிறுத்தியவனே! இன்னும் உலகத்தின் பல வேறுபட்ட சமஸ்த கோடி ஜனன வஸ்துக்களிடத்திலும் ஹூவென்று தொனியாக்கிவைத்து அதில் தன்னையும் நுழைத்துக்கொண்டு அன்ன ஊஞ்சலாடக்கூடிய வல்லபமுடையவனே! நான் உன்னை குல்ஹு அல்லா என்னும்



மந்திரமாக்கி சொரூபித்து திக்று செய்வதே வெகு சீரான பாதையான ஞானமாக இருக்கின்றதே அப்பேர்க்கொத்தவனே! தீர்ச்சையில் நின் கமலமுகம்மதியாவின் அகழிய நிலைக்கண்ணுடியில் சகல ரூபாதி ரூபங்களையும் வெளியாக்கி விட்டவனே! இந்த நன்மையைத் தரக்கூடிய ஞான மொழியாகிய ஞான விகடசமர்த்தைச் சொல்ல இறையவனாகிய நீயே! இதற்குத் துணை புரிந்தருள்வாயாக ஆமீன்!

*அறுசீர்க்கழி நெடிலடியாசிரியச் சந்த விருத்தம்.*

அவனிமே லறுஷினி லரசெனும் வெளியொளி
யழகழ கழகழகாய்
மவுனமோ டொருபொருள் நிறைநிறை மறையினில்
பளபள பளபளென
கவுனமோ டொருகலி மாவினின் விழிவிழி
கிருபையின் மறைமொழிசேர்
தவனமோ டொருவனைப் பிடிதிரு சினைபுரி
ஹூஹூ ஹூஹூ.

(இ-ள்):—அவனியின் மேலும் அறுஷினும் ஒரு இராஜன் உண்டும் அவன் மெத்தவும் அழகு, அழகு, அழகானவன். வேதத்தில் ஒரு ஊமை ஒருத்தியிருக்கிருள். அவள் மெத்தவும் பளபள பளவென்றிலங்குகிருள். கவனமென்ற கலிமாவில் ஒரு குதிரையின் கண்ணுனது, என்நேரமும் விழிவிழி என்று விழித்திருக்கின்றது. சர்வ வேதபாராயணங்களிலும் தேர்ச்சியுள்ள ஒரு யோகியானவனைப்பிடித்துப் பார்த்தால் அவன் ஹூ ஹூ ஹூவென்று தாளம் போடுகிருன். என்ன அதிசயம்!! (எ-று.)

கமலமி லிருதிரு வருள்வரு வதுகண்
கண்கண் கண்கண்
உமையது முடியிது யாதுநல் லொருவனை
உண்உண் உண்உண்
இமையவர் சிறகினி லிருப்பவர் வருவதும்
இன்இன் இன்இன்
சுமைதலை யுடையவன் நபிமுஹம் மதுமொழி
ஹூஹூ ஹூஹூ.

(இ-ள்):—கமல மென்ற ஒரு செந்தாமரையில் ஒரு நீல மலர் பூத்திருக்கின்றது அதில் நிறைய இவ்வுலகத்திலுண்டான சர்வ ஜந்துக்களின் கண்களும் உண்டாயிருக்கின்றது. உமை என்ற ஒரு கன்னியின் கூந்தலில் கியானமென்ற பரமன் ஒருவன் உண்டாயிருக்கிறான் அவனை அவள் உண்டுக்கொண்டே யிருக்கின்றாள். ஒரு மண்டலத்தில் மலக்குகள் சிலர் இருக்கின்றார்கள் அவர்கள் இரக்கைகளில் சிலர் இருந்து கொண்டு வருவதும் போவதும் இன்றன்ற பெரிய அதிசயமாக இருக்கின்றது. ஒரு கிழவன் தலையில் இட்டிருக்கின்ற ஜடாமகுடத்தில் ஒரு முகம்மது இருக்கின்றார், அவர் வாயில் ஹூ ஹூ ஹூவென்று மொழிச்சலுண்டாகின்றது, என்ன ஆச்சரியம். எ-று.

காலிலிருத்தி யெழுத்தை யுயர்த்தி வளைத்திடும்
ஹாஹா ஹாஹா
பாலையசுற்றிப் பாலைகட்டிறைப் பரிமொழி
ஹீஹீ ஹீஹீ
சேலை யுடுத்தொரு எழுஎழுத்தையுந் தினமொழி
ஹேஹே ஹேஹே
கோலை நடத்திய நபிதிருபுறுக்கான் குருமொழி
ஹூஹூ ஹூஹூ.

(இ-ள்):—மூலக்குகை என்ற உந்திக் கமலத்தில் நின்றும் எழுந்து முண்ட கமலத்தின் நடுவே வந்து சூழ்ந்து மாங்காயின் வழியாய் மேலுலகங்களுக்கு சென்று கபாலத்திற் போய் நாசியின் வழியாய் ஆகாய வெளிகளிற்போய் வீணாயழிகின்ற சுவாசக் காற்றை வெளியாகி அழியவிடாமல் ஹூ என்ற அட்சர மந்திரத் தாற் பிடித்து இறுகக்கட்டி மேலே இல்லல்லா அல்லது அல்லா வென்று உயர்த்திக்கொண்டு சுழிமுனையின் யாதில் வளைத்துக் கொண்டு அதில் ஊறிவருகின்ற அமிர்த பானத்தை அருந்தாதவர்களெல்லாம் ஒடுக்கத்தில் ஆ ஹா ஹா என்ற விசனக்குறிக்குஆளாகித்தவிப்பார்கள் காமப்பால் என்ற ஆணும் காமியம், மாயை என்ற முப்பாலையும் மனதை விட்டும் தள்ளி விலக்கி இஷ்க்குல்லா என்ற ஞானப்பாலை முகம்மதுர்றசூலுல்லாஹி என்னும் நடவடிக் கையால் கட்டளைத்து. வார்த்தைகளை வாயில் அடக்கம் செய்து



கொள்ளவும். இரத்ன உடையுடன் வெளியாகும், வாலை முகம்மதியாவை ஏழுசிபத்தில் உருப்போட்டு அவளைத் தினசரிவார்த்தை பேசிக்கொண்டிருக்கச் செய்யவேண்டியது, இதானது உலகத்தில் இஸ்லாம் என்ற நேர்வழியின் செங்கோல் நடத்திய புறுக்கான் என்னும் ஞான சுலேசஹ கிரந்தத்தையுடைய எங்கள் நாயகம் குரு முகம்மது நாதனுடைய திக்று சிர்றியாகிய ஹூ ஹூவென்னும் மணி மந்திர சாத்வீகமாக இருக்கும். எ-று.

ஞானத்துறவுகோல்.

கலிவிரு

முப்பொரு ளாகிய முன்னிறை சொற்படி
தப்பிலா துபதேசந் தந்தெனைக் காத்தபின்
ஒப்பிலா துவமையு மொளிவுந் தங்கிய
றப்பனு துறவுகோல் தந்தெனைக் காத்தருள்.

(இ-ள்):—அஹது, உஹது, வாஹிது என்ற றப்பு, அஹ்மது, காதிறு, என்ற அறியப்பட்ட மூன்று பொருளும்கூடி, ஒரு பொருளாய் முடிந்திருக்கின்ற' அருபியத்தான வஸ்தை அதன் கலாயின்படி குருநாதன் திறந்து காட்டிய பின்னால் யாதொரு ஒப்புவமையில்லாத ஆதி வஸ்துவாகிய கண்மணியே! நீயே இனி அதைத் திறக்க உன் கையிலிருக்கின்ற திறவுகோலை என்கையில் தந்து ஆதரிப்பாயாக.

ஞானத்தித்தி.

கலிவிருத்தம்.

திருவுரு வாகுமுன் றிகைத்து நின்றது
அருவுரு வாகிய வமிர்த மானதும்
கருவுரு வாகிய கலக்கந் தீர்ந்தபின்
வருமிறை யொளிவதை வணங்கிப் பாடுவாம்

(இ-ள்):—திருமணிக்கோலமாகிய கமல முகம்மதியாவானது நந்தி முகம்மதியாவாகுவதற்கு, முந்தி ஆசை என்னும் மோகப் பந்தத்தில் கொழுவப்பட்டு அமா என்னும் இருட்டறை ஆலத்தில் திகைத்து நின்றதும், அப்படி யந்த அருபியானது, பலபல புடைகோலங்களும் எழுந்து வந்து அதனதற்குரிய ஆகாரங்களா

னதும் அவ்வாகாரங்களில் கருவாகிக், கண்ணுகி, அப்பால் உருவாகி, வந்ததும், அக்கலக்கமாகிய இருவினையானது, என்னில் சிலகாலமிருந்து அப்பால் அதை அதுவாலறிந்த பின்னல் அதையதைக்கொண்டே வணங்க இந்த நூலை நான் பாடிவைத்தேன். எ-று

(கருத்து):—கருமம் ஒரு கொஞ்சமாயிருந்த போதைக்கும் அதைப்பகுத்தறிய வேண்டிய அளவுக்காகவே இப்பேர்க்கொத்த விரிவான நூல்களை யெல்லாம் நாதாக்கள் வெளிப்படுத்தி விட்டு உதவி செய்திருக்கின்ற படியால் அன்பர்கள் ஞானமென்ற தேவதா அமிர்தத்தை வெகு சுலபமாக அருந்துவதற்கு எவ்வளவோ இலகுவான பாதைகள் கைவசமிருப்பதால் விதியுள்ள மன்னர்கள் கண்டு பிடித்துக் கொள்ளவேண்டியது. எ-று.

ஞானமுச்சுடர்ப் பதிகம் அவதாரிகை உரைமுற்றிற்று.

ஹூ

# ஞான ரத்தினக் குறவஞ்சி

இதில்

தர்க்கலையூர் மெய்ஞ்ஞான பிரபுவாகிய குதுபுஸ்ஸமான் ஹலரத்து பீர் முஹம்மது சாஹிபு ஒலியுல்லா அவர்கள் அருளிச் செய்த மூலமும்,

அதற்கு

பாண்டிய மண்டலம்-செவ்வல் மாநகரம்
மஹாவித்துவான்
எம். ஏ. நெயினு முஹம்மதுப் பாவலர் செய்த

## ஞான விளக்க உரையும்

அடங்கியிருக்கின்றன.

சென்னை, திருஅல்லிக்கேணி,
யூனனி மதாரிய்யா மெடிக்கல் ஸ்டோரின்
சொந்தக்காரராகிய மகாகனம் ஸ்ரீமான்
டாக்டர், எம். ஏ. ஷேக்மதார் சாஹிபு
அண்டு சன்ஸ், அவர்களால்,
தமது
மதாரிய்யா அச்சி எந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்] 1927 [விலை ரூ 1—8—0

ஹு-௭

# ஞானரத்திரக் குறவஞ்சி

# ஞானதிரவிய உரை.

காப்பு—கொச்சக்கலிப்பா

பொன்னுலகு பொருந்துமனப் பொருளறியத் தனமறிய
மின்னுலகில் மெய்ஞ்ஞானம் விளங்குகிற வஞ்சிதனை
உன்னுமத் தன்னினைவி லுன்னியுதிப் பொருநான்காய்த்
தன்னிறையைத் தன்நினைவாய்த் தரிப்பதுவே காப்பாமே.

இதன்பொருள்:—ஞான உலகமான சுவர்ன லோகத்தில் குடி கொண்டிருக்கும் தகுதியைப் பெறுகிறதற்குக் காரண கருவியாகிய மனமாயை என்னும் அந்த காரங்களை அறுத்து விடக் கூடிய உபாய வழிகளை அறிகிறதற்கும், அதற்குறிய திரவிய சாதனங்களான கல்வி, யூகம், ஞானம், மௌனம், கியானம் பின்சாயாத வைராக்கியம் ஆகிய வேண்டுமான ஸாதனங்களைக் கைவல்யப்படுத்திக் கொள்ளவும், பெண்களின் மாயா விநோத வலைகளால் சிக்குண்டு அவல நினைவென்னும் போர்வையைப் போர்த்துத் திரிகின்ற உலக வாசிகளான பாபஸ் பாப ஜனங்களுக்காக வேண்டி மன இரக்கம் வைத்துச் செய்கின்ற மஹறா விளக்கமான பொருளாகிய என்னுடைய ஞானக்குறவஞ்சி என்னும் மஅரிபாவின் களஞ்சியத்தை, இந்தப் பூலோகத்தில் நல்ல வெளி ரங்கமாகச் சொல்லி விடுவதற்காக எந்தப் பொருளும் ஒரு கருமத்தை நினைத்து உதிப்பளவில் தன் நாட்டத்தை உயர்த்துவதற்கு முன்னமே தனது "அறுஷ்" என்னும் கொலுவின் உத்தியோகஸ்தர்களான நான்கு அனுசிறு, அதாவது பூதங்களைக் கொண்டு உன்னத உஷ்ண ஆவியின் மார்க்கமாய் உதயமாகி வந்து நடத்தி விடுகின்றனே; அந்த மகத்துவப் பொருளானது, படைப்பினங்களின்

மன உதய நாட்டமேயன்றி எந்த விதத்திலும் வேறல்லவே யல்லவென்று உறுதிகொண்டு, அந்த உறுதியையே என் ஞானக்குறவஞ்சிக்கு காவலாக முன்னிலையாக ஏற்படுத்தி நிற்பாட்டுகின்றேன்.

இதன் பின்னுல் வரக்கூடிய ஷஹதா நீய்யத்தின் துறையிலுள்ள ரகசிய அம்ஸங்களை, அன்பர்கள் தாங்கள் தமது சற்குருமார்களிடம் கற்றமட்டும் நில்லாமல், தன் மதியைக் கொண்டும் தூண்டியறிய வேண்டும். எப்படியும் இருதயத்தை ஒருமையளவில் திருப்பி என் உரையை நோக்கும் பட்சத்தில் நல்ல தெளிவாய் வஸ்து அகப்பட்டுக் கொள்ளும் என்பதை நான் வெகு தீவிரமாய் ஜனங்களுக்கு இரங்கிச் சொல்கின்றேன்.

# ஞான திரவிய வுரை,

(நூல் முகம்)

## சிங்கி, சிங்கா, என்றதன் சாராம்ஸமான விபரம்

வெளிப்படையான அர்த்தத்திற்கு இந்த நூலானது குறவஞ்சியாய் இருப்பதனுல் குறப்பெண் என்பது சிங்கியாகவும், விடை கேட்கக்கூடிய குறவனுனவன் சிங்கனுகவும் பொருட்படும். ஞான விதமான அர்த்தமானது எப்படியென்ருல் சகலமான ஜீவாதி உலகங்களுக்கும் தாய்க் கருவியாகிய நூறுல் முஹம்மதிய்யா என்ற ஒளியானது. சர்வஞான வியாபகியாக இருப்பதினுல் அதை சிங்கியாகக் கொண்டும், அதனிடத்தில் சிங்கனுகிய ஆதமி, தான் மறந்து விட்ட அமானித சிர்றுகளைப் பற்றி விடை கேட்கின்ருன். அவ்வாறு கேட்கும் ஆதமியானவன் ஒரு தாலிபான சீஷனுகவும், அதற்கு விடை கூறும் முஹம்மதியா வென்னும் சர்வார்த்த சற்குரு மணியானது ஒரு காமிலான பீராகவும் வைத்துக் கூறப்படுகிறது. இவ்வாறு கூறப்படும் ஞான திரவியங்களை அள்ளிக் கொடுக்கும் அந்த அஸலியத்தான முஹம்மதென்பதே ஆஷிக்கான பெண்ணுகவும், அதை அன்பிற் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆதமி என்னும் மறதியுள்ள அடியான் என்பவன் மஉஷூக்காகிய மகனுகவும் வெள்ளிடை மலைபோல் தோன்றப் படும். இந்தப் பாரியான அர்த்தத்தை வெளிப்படுத்திய தோடும்



நூலின் சாராம்ஸத்தை முடித்துக் கொண்டு இனி ஞானக் குறவஞ்சியின் ஞான திரவியமான மஹா அர்த்தத்தை, நமது மனித வர்க்கத்தார்களுக்கு உரிய பொருட் சாதனங்கள் யாவற்றையும் விட அதிகமான அரும் பெரும் பொருளாக உடைத்து விடுகிறேன். உள்ளறிவுள்ள விவேகவான்கள் பிடித்துக் கொள்வார்கள். மற்ற மந்த அறிவு அதாவது கலங்கலுள்ள அறிவுடைய ஈனர்கள், கிட்ட இருப்பவர்களைத்தெரியாத விழிகண் குருடனைப்போல் ஏமார்ந்துபோயிருந்து வாய்சன்னதம் பேசுவார்கள் என்றறியுங்கள்.

கண்ணிகள்.

## 1-வது திருப்பாடல்

ஆதிக்கு முன்ன ரநாதியு மென்னடி சிங்கி அது
அந்தக் கருங்குழி முந்த விருளறை சிங்கா.

## திரவிய வுரை.

வினு:—ஏ ஆஷிக்கானவளே! ஆதியாகிய இந்த ஆலம் இன்ஸானுக்கு முன்னுல்; அதாவது இந்த சரீரத்திற்கு முனனுல் இதை ஸமைப்பித்துக் கொண்டு வந்ததான அநாதியாகிய பரஞ்சோதியானது எதுவாக இருக்குப்? அதை நல்ல விபரப்படுத்திச் சொல்வாயாக.

விடை:—ஏ மஉஷூக்கானவனே! கேட்பாயாக. அதாகிறது ஆலம் அஜ்ஸாம் என்று சொல்லுகிறது. அதன் மக்ஸதானது, தாயுடைய கர்ப்பக் குவளரையாக இருக்தம் அதற்கு முந்தின அநாதியென்பது, பூர்வீகமான அருவமாகிய இருளரையாக இருக்கிறது. அந்த இருளில் இருந்துதான் அநாசிறுகளான பூதம் ஐந்துப் வெளியாகி உலகங்கள் உண்டாயின. இப்படிதான் நீஞானத்தை உணர்ந்து பழகிக் கொள்ள வேண்டியது.

## கருத்துரை

ஒரு விதையில் இருந்து பல பணருகளாக முளைத்தெழுந்த விருட்சமானது, ஆதியில் அந்த விதையில் மறைந்து இருளாக

இருந்ததைப்போல் ஆலத்தில்வெளியான மக்லூக்காத்தின் அந்தரங்கமானது இருளாகத்தான் இருந்ததென்று ஆராய்ந்து கொள்ளவும்.

## 2-வது திருப்பாடல்

ஆதியாய்வந்த வரும்பொரு ளேதடி சிங்கி அது
சோதியி லாதி சொரூபா மெழுந்தது சிங்கா.

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! அப்படி உற்பத்தியான இந்த சரீரத்திற்கு ஆதி என்று எப்படி பேர் உண்டாயிற்று. அவ்விதம் என்ன அருமையான திவ்விய பொருளை அது சுமந்தது. அப்படியேதும் சூட்சமம் உண்டாயிருந்தால் அதை மெதுவாக வெளியாக்கி விடவேண்டியது.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! நீ கேட்பது நியாயந்தான். ஆசை என்ற அக்கினி மூலாதாரத்தில் நின்றும் இருபத்தையாயிரம் நரம்பு ஸ்தானத்தின் வழியாக எழுந்து வரும்போதே அந்த விந்து நாதத்தின் உள்ரங்க வடிவமாக அந்த அக்னிக்குள்ளே முதன்மையான ஆத்மா என்னும் றூஹுல் குதுஸியானது மெதுவாக நுழையப்போய் தான் தாயுடைய உதிரப் பிண்டத்தைக் கொண்டு சிசு உருவங்கொண்டது. அந்த உருவத்தை உண்டாக்கின தச்சனுகிறவன் அந்த ஆசையாகிய 'றூஹுல் குதுஸி'' யாகத்தானிருக்கும். ஆனதினுற்றுன் அல்லாவும் குர்ஆன் ஷரீபில் அல்லது ஹதீது குதுஸியில் ''கலக்குல் இன்ஸான அலா சூறத்திர் றகுமான்'' என்று திருவுளம் பற்றியிருக்கின்ருன். இதன் அர்த்தமாவது, மனிதனைப் படைக்கப்பட்டது அல்லாஉடைய வடிவில் நின்றுமாக இருக்கும். இதை விபரிப்பது இதை விடக்கடப்பாகச் சொல்வதில் ஷரீஅத்தின் மரியாதையாகாது.

### கருத்துரை

சூரிய வெயிலின் வெப்பத்தினுலும், தண்ணீரின் குளிர்ச்சியாலும், ஆசையான மண்ணிடத்திற் புதைந்த ஒரு வித்தானது, எவ்விதம் தன் அசல் சொரூபத்தைக் காட்டிக் கொண்டு முளைத்து



வெளியாகின்றதோ அதுபோல் ஒருமையாயிருந்த உஷ்ணம் என்னும் தன் ஆசையானது, தான் நினைத்த நாட்டத்தில் தானே நுழைந்து, மண்ணென இரத்தத்தில் புதைந்து; ஜடல வெப்பமும் இரத்தத்தின் குளிர்ச்சியும் கூடி முளைத்து தான் அர்வாஹில் இருந்த தன் அசலான சொரூபத்தில் வெளியாகின்ருன். ''அக்லு'' என்னும் நுணுக்க புத்திமான்களுக்கு இன்னும் விவரிக்கவா வேண்டும். அப்படியும் வெள்ளையாய் உடைப்பது எம்மதத்திலும் அது சிலாக்கியமில்லாத தோஷமாகத்தான் இருக்கின்றது. ஆனதாலே இது நிரம்பவும் போதுமான விஸ்தரிப்பான அர்த்தமாக இருக்கும்.

இனி மூன்ருவது கண்ணியின் அர்த்தம் என்னவென்று சொல்லுகிறேன் கேளுங்கள்.

## 3-வது திருப்பாடல்

சோதியி லாதி சொரூபமான தெப்படி சிங்கி அது
வேதமாய் முப்பொரு ளொன்ருய் முடிந்தது சிங்கா.

### திரவிய உரை.

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! அவ்விதம் கூடி வந்துள்ள ஜோதியில் ஹக்தலாவின் வடிவம் எவ்வாறு வந்தது? அதை நல்ல விபரப் படுத்தியருளவேண்டும்.

விடை:—மஉஷூக்கானவனே! வேதமென்ற அறிவு தன் நாட்டமென்னும் உதிப்பிற் கலந்து நினைவாகி, நினைவு ஆசையாகி ஆகக் கூடி அறிவு உதிப்பு நினைவின் ஆசை என்ற மூன்று பொருளாகவும் பிரிந்து இஷ்கின் உபாதிகளால் கலந்து கொண்டு, அப்பால் அம் மூன்றும் ஒன்று கூடி இன்ஸான் என்ற சூக்கும சரீரத்தைக் கொண்டு வந்தது என்பதாம்.

### கருத்துரை

ஆதியின் சொரூபம் என்பது இரண்டு நேத்ரங்களுக்கு இடையே ஆசனங் கொண்டு இலங்குகிற ''நூறுல் ஐன்'' அல்லது காப கௌஸைன் என்பது. அதைத்தான் தமிழ் ஞானிகள் வாலை மனோன்மணி என்றும், இன்ஸான் காமில்காரர், றூஹுல் குதுஸி என்

றும் வழங்குகிருர்கள். சொருபம் என்று சுட்டிக் காட்டியதின் தாற்பரியமாவது, அந்த ஒளியானது வெளிப்படையான ஹவா என்னும் நித்திரையிலிருந்து உற்று நோக்குகிறவர்களுக்கு ஒரு சிறுகஸகஸாப் பிரமாணம் தான் தெரியும் டி நித்திரையில் நின்றந் தெளிந்தவர்களான மஹான்களுக்கு அது ஹக்கான தன் அசல் சொருபமாகத் தோன்றும் எதுவரையிலும் இன்ஸான் என்கிற மனித வர்க்கத்தான் தன்னைப் பற்றி யார் என்று விசாரனை செய்தலாகிய உள் உணர்ச்சி செய்யவில்லையோ, அது மட்டும் ஒவ்வொருவனும் கேவலப் அடிமைத் தனம் என்கிற ஈனப்போர்வையைக் கழற்றி யெறியாத பெண் சொருபத்தில் தான் இருக்கின்ருன். வஹதானியத் தென்னும் ஒன்றுபட்டு வஸ்துடன் வஸ்த்தாய் கலந்து விரவிக் கொள்ளும் வரையிலும் இன்ஸான் செய்கிற எவ்வித நிஷ்டைகளிலும் வெளியாகும் போதெல்லாம் அது பெண் சொருபத்தில் தான் வெளியாகும்.

ஏ! நாட்டமுடைய ரஸ்தாவில் நடக்க வந்தவனே! இதற்கு உதாரணமாக ஒன்று வேண்டுமானல், மஹாத்மா ஹஸனுல் பஸரீ என்பவர் ருபிஅத்துல் பஸரியாவை விவாகஞ் செய்யக் கேட்டனுப்பின போது அந்த அம்மாள் மறுமொழியாக அவரிடம்போய் நீர் தற்போது பெண்ணுக இருக்கிறீரா? அல்லது ஆண்பாலா யிருக்கிறீரா? என்று கேட்டுவா! என்று சொல்லியதை நன்கு உணர்ச்சி செய்துபார்! தெளிய விளங்கும். அவ்விதம் இருக்கும் ஸ்திரீசொருபந்தான் ஒருவன் மரணிக்குஞ் சமயம் அவனை மருட்டி நாதத்தைக் கழற்றிவிட்டுப்போய் விடுகிறது. அந்த நாதம் வெளிப்பட்டதும் சரீரம் பிணமாய் விடுகிறது இதனல் கருமம் எதை ஒட்டி நிற்கிற தென்பதை யூகித்துப்பார்! எண் ஜாண் சரீரத்திற்கும் சிரசே பிரதானம் என்பது எது? அதுதான் மூளையுடைய பீடமாகிய நேத்திரம் நேத்திரந்தான் பிரதான ஆத்மாவாகிய அந்த "ரூஹுல் குதுஸின்" கொலுவிருக் கையாக ஏற்பட்டிருக்கிறது. அது மயங்கினல் சரீரம் மயங்கும். அது எழுந்தால் சரீரம் எழுந்து நடக்கும். அது ஏவினல் சகலமும் இந்த சரீர பூதியங்களான நப்ஸுகள் சரீர உறுப்புகளுக்கு ஏவும். ஆனதால் அது இன்ஸானுக்கு இன்றி யமையாத அசல் வடிவமாக இருப்பதினலே தான், அது



நாட்டப், ஒட்டப், ஆட்டம் இம் மூன்றுக்கும் இராஜ கருவியாயிருந்து தன் தொழிலை சர்வ ஒழுங்கு போல் நடத்திக் கொண்டு, இன்ஸான் என்னென்ன சமயங்களில் என்னென்ன கருமங்களை செய்கின்ருனே அவை முழுமையுங் கணக் கெடுக்கின்றது. இதை தான் குணங்குடி மஸ்தான் தமது பாடலில் "நேத்திர மிரண்டினும் நேராய் விளங்குது நீடொளி போன்றது தேடரிதாகிய காத்திர முள்ளது" என்றும்; காட்டானை ஷெய்கு ஒலியவர்கள்.

### வெண்பா

"கற்பித்தார் கற்பித்தார் கஷ்கஷவின் ப்ரமாணம்
கற்பித்தாரே எனக்குக் கற்பித்தார் — மெய்ப்பித்தார்
கைச்சீட்டுந்தந்தார் காசினி யெல்லாம் ஆள
* மைச்சீட்டுக் குள்ளே மயம்"

என்றும் தற்கலையார் "இலங்குங் கருங்கடல் லக்கணத்தில் இருக்கும்வளை வெள்ளை இடைகொண்டோடி, அலங்கும் தெளிவாகக் காண்பியாணுல் அததான் குதுஸியென றறிந்து கொளளே" என்றும் திருவாய் மலர்ந்திருக்கின்ருர்கள்.

## 4-வது திருப்பாடல்

முப்பொருளென்றுநீ முன்சொன்ன தாரடி சிங்கி அது
அப்பனு மாயு மாதையாம் நாமடா சிங்கா.

## திரவிய உரை,

வினு:—அமா ஆஷிக்கானவளே! நீ இதற்கு முன் கூறியதில் மூன்று வகையான பொருள் என்று விவரித்துக் கொண்டு வந்தாயே அதன் முழுத்தாற்பரியந்தான் என்ன. அது சொருபிக்குத் தன்மையில் ஆராக இருக்கலாம், அதை வெளிப்படுத்துவாயாக.

விடை:—மஉஷூக்கானவனே! அதாகிறது; மேற் கூறிய இஷ்க்கென்னும் ஆசைக்குக் காரணமாக இருந்த நமது தகப்ப

---

* மைச்சீட்டுக்குள்ளே என்பது நேத்திரத்தின் கருப்படலத்தின் உள்ளே என்று பொருள். மயம் என்பது - ரூஹுல் குதுஸியாகிய உஜூது, அதாவது "தான்" என்கிறதற்குறிய ஒளிவு என்று பொருள் உணர்க.

னும் அப்பால் அந்த ஆசையென்ற விந்து நாதமானது சென்று குடியிருந்து விளைந்து உருவெடுத்ததற்குக் காரணமாக இருந்த நமது தாயானவளும், இவைகள் இரண்டும் கலந்து சம்பந்தப்பட்டு விளைந்து இன்ஸான் கோலத்துடன் வெளி வந்திருக்கின்ற ஆதமி என்ற தூல சரீரியான நாமுமாக இருக்கின்றோம் என்பதாம்.

## கருத்துரை

முச்சுடர் என்று ஞான வான்கள் சொல்லியதன் கருத்தும் இது தான். முச்சுடர் என்றால் மூன்று ஒளிவு என்று பொருள். அது இன்னொரு அர்த்தத்தில், மூன்று உயிர் என்றுஞ் சொல்லலாம். மூன்று உயிர் என்றால் தகப்பன் ஒரு உயிர், தாய் ஒரு உயிர், இவை இரண்டின் மூலமாக ஜனித்து வந்த சிசு ஒருஉயிர் ஆக மூன்று உயிர். இதுவே முச்சுடர் என்று ரம்மியமாய் வழங்கிற்று. இதன் முழு நிச்சயக் கருத்தும் ஆசிரியர் கீழே சொல்லப்படுகிற சில குறிப்பான கவிதைகளில் புத்திமான்கள் இலேசாகவே விளங்கியறிய முடியும். இதைப்பற்றி சில ஷெய்குமார் தமது முரீதுகளுக்கு முச்சுடர் என்பது அல்லா, முஹம்மது, ஆதம் என்று சொல்லி வைப்பார்கள். அப்படவும் அது இப்படித்தான் சரி அர்த்தம் கொள்ளும். வேறே எவ்விதத்திலும் மாற்றமாகப் பொருள் கூற இடந்தராது.

ஞான வெட்டியானில் அந்தலூர் "முப்பாலும் பாழாய் முடிவிலொரு சூனியமாய் அப்பாழும் பாழென்றறி." என்ற தென்னவென்றால்:—தானான நினைவு உதிப்பில் புகுந்து உதயமாகி, உன்னலாகி, ஆசையாகி நாதமாயிற்றே, அந்த மூன்று கிருத்தியங்களும் உபாதியால் பாழ்பட்டு அதாவது பணுவாகி முடிவில் மீதியாயிருந்த தூல சரீரமானது சூனியமான இந்த உலகப்பாழில் வந்திருக்கிறது. இதுவும் வழிதெரிந்து தப்பித்துக் கொள்ளாத பட்சத்தில் வீண் அபத்தமாய் கைசேதத்துடன் பாழ் பட்டுப் போய், முன் அசலாய் இருந்த குறிப்பற்ற பூதிய வாயில் தோறும் போய், ரஹித்துக் கொள்ளும் என்பதாம். ஆனபடியே மனித ஜனனமெடுத்து வந்த ஒவ்வொருவனும் தன்னை விசாரணை செய்வதில் தன் அறிவைத் தன்னளவில் தனிமையாகவே நிற்பாட்டி நட-



வடிக்கை நடத்திக் கொண்டு தானவனாக வேண்டியது பெரியதோர் அவசியமான கடமையாக இருக்கிறது. இதைப்பற்றி "சூத்திரமாகிய தோணி கவிழுமுன் சுக்கானை நேர்படுத்து இக்கணமே சொன்னேன்" என்று நமது மஹானாகிய மஸ்தான் அவர்களும் ஜனங்களுக்கு வற்புறுத்தியிருக்கிறார்கள் அறிவையுடைய மஹான்கள் என்னமோ பிதற்றி யிருக்கின்றார்கள்; நமக்கென்ன நமது வேலையென்னமோ நல்ல காரியத்துடன் பார்ப்போம் என்று மனிதன் தன்னைத் தவறவிட்டு அஞ்ஞானப் புலியானது பதிவு பார்த்துக் கொண்டலைகின்ற கானகத்திற் குள்ளே மருண்டுபோய் திரிகின்றான். அகஸ்மாத்தாய் ஒரு நாளையில் புலிபிடித்தால் அப்போது முழிப்பான். முழித்ததனால் ஒரு உதவியுங் காணமாட்டான். இப்படிப்பட்டவன் பாழாய்ப் போவதே நிச்சயமென்பதாம்.

## 5-வது திருப்பாடல்

எப்படி யுலகத்தி லிப்படி யுருவானோம் சிங்கி அது
அப்பன் தன்னட்புக் கொப்பிய தாயாலே சிங்கா.

## திரவிய உரை.

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! இந்த உலகத்தின் கண்ணே நாம் இந்த தூல சரீரத்தை எந்தவிதமான காரணத்தைக் கொண்டு உருவெடுத்தோம்! அதன் விபரத்தை தெளிவாகச் சொல்ல வேண்டியது.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! நமது தகப்பனுடைய இந்திரியமாகிய சுக்கிலத் துளியை தன்பால் பொறுப்பாக ஒப்புக் கொண்ட நமது தாயாலே இந்த சொருபத்தை எடுத்துக் கொண்டோம் என்பதாம்.

## கருத்துரை

தகப்பனது சுக்கிலமாத்திரம் தனியே யிருந்ததானால் இந்த சரீரம் உற்பத்தியாகாது. அத்துடன் தாயின் சுரோணிதமும் கலந்து இரண்டும் ஒன்று கூடி அக்னி கலையுடன் திரண்டு உதிர மண்டலத்தில் தங்கி அவயவங்கள் உண்டாயிற்று. உதர

ரணம், வெறும் மழை மாத்திரம் பெய்யும் பட்சத்தில் அதனால் ஒரு புற்பூண்டும் எழுந்து நிற்காது. அதை மண்ணானது தன்னிடம் தங்கிக் கொள்ள சம்மதித்தாலே தான் அதுவும் இதுவும் ஒன்று சேர்ந்து மூன்றாவதான அக்கினியென்னும் சூரிய வெப்பத்தின் சிபத்தைக் கொண்டும் எல்லாவித விளை பொருளும் முளைத் தெழுந்து உலகப் பிரயோஜன மாயிற்று. இந்த தூல உடம்பானது உருவந்திரள்கிறதற்குக் காரண கருவியாயிருந்த தாயின் உதிரமான அசுத்தத் தொடக்கில் கிடந்து முழு ஜடலமும் துடக்கே உருவாக விளைந்து இவ்வாறு வெளியாகி யிருக்கின்றான். இதற்கு உதாரணமாக திருக்குர்ஆன் ஷரீபில் ''மானிட வர்க்கங்களே? நீங்கள் சில வெளிப்படையான தவங்களை மாத்திரஞ் செய்துவிட்டு மோட்ச வீடாகிய சுவர்க்கத்திற்குள் புகுந்து விடலாமென்று நினைக்கின்றீர்களா? உங்கள் உருவாகிய அந்தத்துடக்கை நன்கு அறக்கழுவி துப்புறவு செய்து வந்தாலொழிய அப்படியாகாது என்று தேவகட்டளை சொல்லியிருக்கிறது. ஆனதால் தான் மனிதனுக்கு மறந்தவன் என்ற பெயருங் கொடுக்கப்பட்டது. அதற்கு சிகிச்சையானது, ஒரு மந்திரமும் ஒரு மருந்தும், ஒரு தந்திரமுமாக இருக்கின்றது. அது என்னவென்றால் மந்திர மென்பது (ஹூ) என்ற உச்சரிப்பு, மருந்தென்பது அந்த உச்சரிப்புடனே நினைவை ஒரே கூர்ய சுழிமுனைப் பார்வையில் நிலைக்க வைத்தல். தந்திரமென்பது அப்படி நிறுத்திய நினைவு இடவலம் பிரிந்து ஓடி விடாமல் அதிலேயே கவனமாக இருத்தல் என்பதாம்.

## 6-வது திருப்பாடல்

பரா பரத்தினிற் பஞ்சவர்ன்ன மேதுசிங்கி அது
வேராகித் தூரான விந்து நிறமடா சிங்கா.

## திரவிய உரை

வினா—ஆமா ஆஷிக்கானவனே! இந்த ஜடலத்தின் அகன்ற வெளியாகிய நேத்திரத்தின் கண்ணே ஐந்து வித நிறங்கள் இருக்கின்றனவே; அவைகள் எக் காரணத்தினால் உண்டாயின. அந்த விபரத்தை நல்ல தெளிவு பெறச் சொல்ல வேண்டும்.



விடை:—கேள் மஉஷூக்கானவனே! அது தான் ஆதியாக வந்து கடைசி வரையிலும் ஜடலத்துடன் கலந்து நடத்துகின்றதே! அந்த வல்லமைப் பொருளான நாதவிந்தினுடைய சுய குண குணங்களிலுண்டான வர்ணங்களாக இருக்கும் என்பதாம்.

## கருத்துரை.

தானாயிருந்த நாட்டமானது ஒரு உதிட்பை நிர்ணயித்து ஆசையை வெளிப்படுத்தியது; அதுவே ஆகாயமாகவும் நீல் நிறங் கொண்டது. அப்படி எழுந்த ஆகாயமானது ஆசையில் கலந்து உஷ்ணமாகிய நெருப்பானது கருப்பு நிறங் கொண்டது; அவ்விதம் நெருப்பானது ஆவியாகி அசைவு பெற்றுள்ள உதான வாய்வானது காற்றாகி பச்சை நிறங் கொண்டது. அவ்வாறு காற்றானது குளிர்ச்சியைப் பெற்று சுத்த ஜலமாகி சிவப்பு நிறங் கொண்டது. அவ்விதம் ஜலமாகியபின் நுரைத்து பல அணுக்களின் சப்பந்தமாகி மண்ணாகி வெண்மை நிறங் கொண்டது. அவ்விதம் மண்ணாகிய பூதியமானது தன்னில் நின்றும் பலவித சிருஷ்டிகளை நிர்ணயித்து தன்னிறத்துடன் கூடிய இந்திரியத்தைத் திரளச் செய்தது. அவ்விந்திரிய மானது இந்த சரீரமாய் உருவெடுத்துக் கடைசியில் தனது முன் அவதார பூதியங்களான ஐந்து வித நிறங்களையும் நல்ல பயிரங்க கோலந்துடன் காண்பித்துக் கொண்டு சரீரத்தின் பிரதான ஆத்துமாவாக நேத்ர பீடத்தில் நிலை நடத்தி வருகிறது. அதைத் தான் ஞானவான்களெல்லாம் றுஹூல் குதுஸி என்றும், ஐனுல் எகீனென்றும் ஒருமித்துக் கூறியிருக்கின்றார்கள். அதைப் பற்றி அறிவிக்கத்தான், இலட்சக் கணக்கான தீர்க்கதரிசிகளான நபிமார்களையும், ஆயன்களான றஸூல் மார்களையும், வேதாகமங்களையும், கோடிக்கணக்கான தத்துவ சாஸ்திரங்களையும், மனித வர்க்கங்களுக் கிடையில் அநேகானேகம் எம்பிரானைப் பிரமாணத்துடன் வெளியாக்கப்பட்டிருக்கின்றன. இதன் சூட்சம் விதங்களைப் பற்றி ஆசிரியர் கீழே நல்ல தெளிவாய் சொல்லிக் கொண்டு வருவதைக் கவனியுங்கள் என்பதாம்.

## 7-8 வது திருப்பாடல்

ஒன்றுக்கு ளேவர்களுண்டானதெப்படி சிங்கி அது
வொன்றேடே யொன்ருக வோடி யிணைந்தது சிங்கா
மூலக் குகைக்குள்ளே மூச்சுட ரேதடி சிங்கி அது
நாதத்தி லேப்பூத மன்பா யுதித்தது சிங்கா.

## திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த சரீரத்திற்கு அடிமூலமாகிய கீழாஸனத்தின் கண்ணே முச்சுடருடைய வல்லமையானது விதை சப்பந்தமாக நிற்கின்றதே அது எப்படி வந்து விட்டது? அதன் விபரத்தைச் சொல்வாயாக.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! அதன் ரகசியமாவது மனுஷீக இந்திரியமாகிய விந்து நாதத்தின் உள்ளே ஆகாயம் நெருப்பு, காற்று, தண்ணீர், மண் என்ற ஐந்து பூதியங்களும் குடிபுகுந்ததினுல் அவ்விந்திரியத்தின் அஸ்திபாரம் மூலாதார மாகையால் அதில் தான் தாய் தந்தை நாம் என்னும் மூன்று சுடருங்க சுயம்பாகவே அமைந்து கொண்டது வாஸ்தவமே என்பதாம்.

## கருத்துரை

ஆலம் அறுவாஹில் ஒருவன் எக்கோலமான ஆவியில் உற்பனமாய் இருந்தானே! அதே பிரகாரம் அவன் தகப்பன் தாயுடைய ஆவியையும் அந்த ஆவியுடன் சம்மந்தப்படுத்தி வைத்திருந்தது. அக்காரணத்தினுற்ருன் தான் என்ற ஆவியானது பூதங்கள் அதாவது ஊண் முதலியவற்றில் புகுந்து மற்ற இரண்டு ஆவிகளான தாய் தகப்பன் மார்களுடைய சரீரத்துடன் கலந்து உதரமாகிப் பிறகு விந்தாய் திரண்டு அப்பால் நாதம் என்னும் சுடரொளியாகிய மோகப் பல்லக்கில் ஏறிக்கொண்டு இந்த உலகத்தார் ஒருவருக்குந் தெரியாமல் பிதாவின் ரகசியமண்டலம் சென்று இந்த மாநுடம் என்கின்ற வேஷத்தைத் தரித்து வெளியாகினுன் (உதாரணம்) கோட்டாற்று ஞானேசர் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருக்கின்ற அம்மானை ஆயிரத்தைப்பார் அதில்:—



ஊரார் அறியாமல் ஒருத்தர் கண் காணுமல்
ஊரினடுவேவந் தொளித்திருந்தான் அம்மானே
ஊரினடுவேவந் தொளித்திருந்தா னேயாகில்
பேருமறியாமல் பிறந்தானே அம்மானே
பிறந்தல்லோ லோகமெல்லாம் பிறக்கின்ருனம்மானே

என்று பாடியிருக்கும் ஞானப்புதையலை மிக ஊன்றிபார் அப்போது. தான் முச்சுடர் இன்னது இனியது என்று பட்டப் பகல் போல் விளங்கும். அதுவேயன்றி தலைப்பாகையைப் பெரியதாய்க் கட்டி நீளமணி பிடித்து பகல் வேஷம் போட்டுக் கொண்டு வரும் கள்ளப் பயல்களைக் கேட்டால் அவன் என்ன சொல்வான். எதையோ ஒரு இஸ்மைச் சொல்வான். அது ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? உதவாதே. அதுபோல் அவன் இஸ்மானது உன் துடக்கைக்கழுவ சக்தி யுடையதாகுமா? ஆகாது. அல்லாவுடைய ரகசியமாகிய மஅரிபாவானது தென்னை மரத்திலுண்டான இளநீர்க்குள்ளே எவ்விதம் தண்ணீர் வந்து கூடிற்ருே அவ்விதம் ஒவ்வொரு இன்ஸானுக்கும் விதி மதிகளின் புறத்தால் தானே உதயமாக வேண்டும். அவ்விதம் உதயமாகினதால் உணர்ச்சி செய்யும் ஞானந்தான் அஸ்திபாரமான நறசாதனமாக இருக்கும் என்பதே.

## 9-வது திருப்பாடல்

மூலக் குகையென்னுங் கோட்டைக் கரசன்யார் சிங்கி அது
முப்பொரு ளொன்ருய் முடிந்த நினைவடா சிங்கா.

## திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! நீ முன் சொன்ன மூலக்குகை யென்றும் இந்த சரீரக் கோட்டைக்கு ஒரு அரசன் வேண்டுமே! அவன் யாரா யிருக்கலாம். அதை இன்னது தான் என்று நல்ல தீர்மானமாகச் சொல்.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! அதாவது நான் முன் பாட்டில் சொல்லி வந்தேனே அந்த உஜூதே கிதம்களான மூன்று பொருள்களும் ஒன்று சேர்ந்த நினை வென்னும் ஹக்கானியாக

இருக்கும். அதுதான் சகல உலக சிருஷ்டிகளையும் உண்டாக்கி வஸ்துகள் அடங்கலையும் தீர்மானமாக நடத்தாட்டிக்கொண்டு வருகின்றது. அதுதான் முப்பொருளின் முடிவில் ஏற்படுகிற மிச்சமாக இருக்கிறது என்பதாம்.

## கருத்துரை.

மூன்று பொருள்களும் ஒன்ருய்ச் சேர்ந்து நினைவானது எப்படி என்ருல், ஆகாரமானது உதிரமாகி, உதிரமானது நாதமாகி நாதமானது நினைவாகினது என்று நல்லுணர்ச்சி செய்து கொள்ள வேண்டியது. இதுதான் தீர்மானமான முடிவு. அப்பால் அது இன்ஸான் என்ற சரீரக் கோட்டைக்கு அரசன் என்று கூறியதாவது, அது இராஜ கருவியாகிய உஷ்ண நாடியாக பித்தத்துடன் கலந்து நிற்பதனுலே அதுவே தாமரைக்காய் என்னும் மாங்காயில் அதாவது குர்ஸினிடத்தில் உதயமாகி அப்பால் அறுஷென்னும் நேத்ரத்தின் நடுவே சிறிதான தோற்றமாக இலங்கிக் கொண்டிருக்கிறது. அதுதான் இந்த ஜடலத்தில பிரதான வடிவமாக இருந்து அதன் பின் மக்களான பூத நப்ஸுகளை தன் பிரதி நிதிகளாக வைத்து நடத்திக் கொண்டு வருகிறது. அதற்கும் மூலாதாரமாகிய உந்திக் கமலத்திற்கும் ஒரே குழாய் நீண்டு இடது விலாப் பக்கமாக வளைத்து வட்ட மிட்டுக்கொண்டு வியாபித்திருக்கின்றது. அதன் வழியாகத் தான அந்த பிரதான ஆத்மாவானது ஆதியில் நுழைந்து அவ்வழியாகவே நேத்திரத்திற்குப் போயிற்று. அதுதன் பின் மக்களான பூதநப்ஸுகளைப் பார்வையிட வர நாடிற்ருனுல் சரீரம் மயங்கி நித்திரை செய்யுப். அது அந்தக் குழாய் வழியாக எந்த எந்த நப்ஸுகளைச் சந்திக்கின்றதோ அந்தவித மெல்லாவற்றையும இன்ஸான் என்னும நப்ஸு அம்மாருவானது ஸ்மரணையில் சாபிதமாய்க்காணும். அதுதான் சொர்ப்பனம் அல்லது கனவு என்று சொல்லப்படும். இதன் ரஸ்த்தாவில் வந்து நடக்கின்றவனே! நீ ஆண்மகனுக இருப்பையேயானுல் அறிவை நன்ருய்த் தீட்டிக் கூர்மைப் படுத்தி வைத்துக் கொள். உலக வாசிகளின் மருட்டான பகட்டைப் ஏறிட்டுப் பாராதே. விலகி நட வென்பதே.



## 10-வது திருப்பாடல்

மூலக் கிழங்கு முளைத்திட மெவ்விடஞ் சிங்கி  
நாதத்திலான நடுநிலை யல்லவோ சிங்கா.

## திரவிய உரை

வினு:— ஆமா ஆஷிக்கானவளே! நீ மேற்கூறிய மூலாதாரத்தின் அஸ்தியான வேர்க்கிழங்கானது முளைத்து எழுந்த ஸ்தலமானது எதுவாக இருக்கும். அதை நல்ல தீர்மானமாகச் சொல்,

விடை:—கேள் மஉஷூக்கானவனே! இந்திரியத்தின் காரணமாக வெளி வந்த ஸ்தூல சரீரத்தின் நடு மத்திய நிலையான கண்ணுக இருக்கும் அதுதான் நடு நிலை யென்று ஞானவான்கள் சொல்லிக்கொண்டு போனது என்பதாம்.

## கருத்துரை

மூலாதாரத்தின் வேர்க்கிழங்கென்றது குருநாடி என்கிற பிரதான உஷ்ணவாய்வாக இருக்கும். அதாவது இரத்தாருட்டியமாய் நாதவிந்துவின் சூட்சம வெப்பமாய் ப்ரகாசித்து, மூளையென்ற அருஷின் இடமாக ஒளிசெய்து, அறிவுக்கும் அறிவாக நேத்திரத்தின் உள்ளே இலங்கின்ற பரஞ்சோதி எதுவோ அதுவாக இருக்கும் அது எக்காலமும் நின்று ஜொலிக்கின்ற இடம் நேத்ரமாக இருப்பதினுலே, மஹாத்மா சாஹிபவர்களே அதை கண் என்று சொன்னுல், ஞானத்தெளிவு போதாத எளிய ஜனங்களின் சொற்ப அறிவுக்கு எட்டாமல் நழுவி விடும் என்று தெரிந்து அப்படிச் சொல்வதை மறைத்து அறிவுடைய கனவான்களுக்கேற்கும்படியாக "நடு நிலை" என்று நிமிட்டிக் காட்டினுர்கள். அரசன் நகருக்கு நடுவாக இருப்பது போல அந்த உஷ்ண நாடி என்னும் உஜூதானது சரீரத்தின் அரச அங்கமான கண்ணிடத்து நிற்கின்றது. விதியுள்ள அன்பர்கள் தெளிந்தறிந்து சாட்சி சொல்லி ஈமானை உறுதிப்படுத்திக் காமிலாகிக் கொள்வார்கள் என்பதாம்.

## 11-வது திருப்பாடல்

முன்னே முளையாய் முளைத்திட மெவ்விடம் சிங்கி அது  
மூளை முனையிரு கண்ணிக ளல்லவோ சிங்கா.

## திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! நீ முன் சொன்ன அந்த மூலாதார அஸ்தியென்னும் பரஞ்சோதியானது, ஆதியில் அதாவது கருப்பத்தில் சிசுவு உற்பத்தியாகுந் துவக்கத்திலேயே வேரூன்றி முளைத்த ஆதிஸ்தலம் என்பது ஒன்று வேண்டுமே! அது எததான விளக்கிச் சொல்.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! அதாகிறது மூளையின் அஸ்திவாரமாகிய சுழிமுனை அதாவது மூக்கந் தண்டின் "நுனை" யைப் பிடித்து முளையில் அஸ்திவாரம் போட்டு, அங்கிருந்து கண்களுக்குச் சித்திரப்படம் (வரைந்து அதன் வழியாக மற்ற எல்லா அவயங்களையும் சமைத்து, மேற்சொல்லப்பட்ட கண்ணிடத்திலேயே சதாவும் நின்று வெளிச்சம் செய்கின்றது, என்பதாம்.

## கருத்துரை.

விந்துநாதமானது தன் அசலான நிறமாகிய வெண்மையை மூளையாக ஸ்திரப்படுத்தி, அதன் வலுவிலேயே தன் குதுறத்தான தஜல்லியாத்தெனும் அறிவை நுழைத்து அதற்கு றகுமத் தென்னும் நாமஞ் சூட்டி அங்கிருந்து பிரதா— கல்பாகிய சுவாச மண்டலமாகிய சுழிமுனையின் ஆதாரத்தினாலே இருதயம் வந்து காரியஸ்தர்களான பூதநப்ஸுகளை ஆக்ஞாபித்து, அதாவது அதிகாரஞ் செய்து கொண்டு, இரு கண்களில் ஒளித்தும் ஒளியாமலும் இலங்கிக் கொண்டிருக்கின்றது. அதனுடைய காந்தியான வெளிச்சந்தான் சரீரத்தின் நாலாயிரத்து நானூற்றி நாற்பத்தெட்டு இடகலை, பிங்கலை யென்னும் சுவாச நரம்பு ஸ்தானங்களுக்கும் உதிரவோட்டங்களுக்கும் ஊக்கமும் வல்லமையுங் கொடுத்து நிலைக்கச் செய்கின்றது. இதுதான் அல்லாஹ் என்னும் திருநாமத்துடனே இந்தப் பெரிய உலகமெல்லாம் பேர் வழங்கிக் கொண்டு வருகின்றது. இன்னும் இதற்கு ஆயிரம் விதமான சுய குணங்கள் உண்டு அதில் ஒவ்வொரு குணங்களுக்கும் ஒவ்வொரு பெயர்களுமுண்டு. நாலாவது வசனத்தில் ஜென்மிக்கின்ற சூரியனுடைய ஒளிக்காந்தியானது எப்படி உலகத்தின் பரந்த வெளிகளெல்லாம் வந்து உஷ்ணஞ் செய்து துலக்குகின்றதோ! அப்படி சரீரத்தின்



நாலாவது வானம். அதாவது:—வாய் ஒன்று, அதற்கு மேல் மூக்கு இரண்டு, அதற்கு மேல் செவி மூன்று, அதற்கு மேல் கண் நாலு, ஆகிய நாலாவது வானமாகிய நேத்திரத்தில் நின்றும் ஜென்மித்து நிற்கின்ற சுயம்பானது, சரீரமாகிய பதினெண்ணாயிரம் ஆலமெலலாம் பரந்து வீசி பேரொளி செய்கின்றது என்று இந்த தெளிவுகளால் புத்திமான்கள் நல்லுணர்ச்சி செய்து கொள்ளவேண்டியது.

"எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும்,

முத்தர் மனமிருக்கும் மோனத்தே", என்று நாதாக்கள் அறிவித்திருக்கின்றனர் சயிக்கினையை உணர்ந்துபார்! என்பதாம்.

---

## 12-வது திருப்பாடல்

பின்னே யுருவாய் முடிந்திட மெவ்விடம் சிங்கி அது
பெண்ணுணு மாகப் பிறந்த தலமடா சிங்கா.

## திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! அவ்விதம் வந்த உஜூதானது, கடைசியாக இந்த சரீரத்தை யெடுத்து முடிவாகிப் போன இடமானது எது? அவை இன்ன தென்று தெளியச் சொல்.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! அதாவது, நமது தாயுடைய உதிரக்குழியில் ஆண் சொரூபமென்றும், பெண் சொரூபமென்றும் சமைந்து கொண்டதே அந்த இடமாக இருக்கும் என்பதாம்.

## கருத்துரை

உஜூது என்பது விந்து நாதத்தில் கலந்திருந்த உஷ்ண ஜோதியாக இருக்கும் அந்த உஜூதானது இந்தஸ்தூலத்தை உற்பத்தி செய்து முடிப்பதற்காக பலவிதமாய் உட்கொண்ட உணவுகளே இரத்தமாகி, அவ்விரத்தம் விந்துநாதமாகி, அவ்விந்து நாதம் சரீரமாகி, அப்பால் தான் என்ற வல்லமையை சரீரமாதிக்கமும் வியாபித்துக் கொண்டு, பிணக்கென்னும் இருவினையைக் காட்டிவிட்டு தன்னை மறைத்துக் கொண்டது. இதுதான் முடிந்த தென்பதற்கு உண்மையான அர்த்தமாகும். அன்றி அற்றுப்போனது

என்று பொருள் படுத்தும் பட்சத்தில், அது பொய்யான குபிரியத்தான அர்த்தத்தைக் காட்டி வழி கெடுத்துவிடும் என்று அறியவும். பெண் சொரூபம் ஆண் சொரூபம் சமைந்த இடம் என்று மஹாத்மா சாகிப வர்களிதுவாய் மலர்ந்த சூட்சுமமாவது வயிற்றில் சிசுவு கருத்தரித்த கெர்ப்பப் பையை, அதுதான் கலிமா பூரணமான தோர் திவ்விய ரகசிய ஸ்தலம். அதை உலகத்தார்கள் மாக்கொடி யென்று சொல் வார்கள். அதில் தான் பதினெண்ணுயிரம் ஆலங்களும் இருக்கின்றது. அதன் விஸ்தரிப்பைப்பற்றி ஆசிரியர் அவர்கள் கீழே சொல்லுகிருர்கள் காணுங்கள்! என்பதாம்.

---

## 13-வது திருப்பாடல்

இந்த வுடலுக்கு வேரென்ன தூரென்னசிங்கி அது
இந்த வுடலுக் குயிராதி மூலமே சிங்கா;

## திரவிய உரை

விஞ:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த சரீரதிற்கு வேர் ஒன்று இருக்கவேண்டுமே! அது என்ன? வேரிருந்தால் துரொன்று இருக்கவேண்டுமே! அது என்ன? அதை நல்ல தெளிவாக விளக்கிச் சொல்வாயாக.

விடை:—கேளடா மஃஷூக்கானவனே! அதாவது இந்த சரீரத்தின் பிரதான ஆத்மாவாகிய றூஹுல் குதுஸி என்னும் உஷ்ண ராஜகருவியே வேராகவும், இந்த சரீரத்தின் முதன்மையான இந்திரிய ஸ்தானமான மூலாதார மானதே தூராகவும் இருக்கின்றது என்பதாம்.

## கருத்துரை.

றூஹு, றூஹானி என்ற இரண்டு ஆத்மாக்கள் இந்த சரீரத்தில் நடைபெறுகின்றது. அஃதெவ்வித மெனில், உலகத்தில் சூரியன், சந்திரன் என்று இரண்டு ஒளிகள் விளங்குவது போல் கருமத்தில் றூஹு சூரியனுகவும், றூஹானி சந்திரனுகவும் இருக்கின்றன. விபரம் சூரியனுனது வலது நேத்திர வொளிவாக நின்று வலம்புரியாகிய வலது நாசியின் துவாரத்தின் வழியாக பிங்கலை, யென்னும் சுவாசத்தைப் பற்றிப் பிடித்திழுக்கின்றது. சந்திரனு



னது இடது நேத்திரத்தில் நின்று இடம்புரியான இடது நாசியின் துவாரத்தின் வழியாக இடகலை யென்னும் சுவாசத்தைப் பிடித்திழுத்து விடுகின்றது. இவைகள் இரண்டும் எப்போது தமது குதுறத்துகளை அதாவது தனது வல்லமையைக் கொண்டு அந்த இடகலை, பிங்கலைகளான சுவாசங்களை இழுத்து விடுகிறதை விட்டொழிக்கின்றனவோ அப்போழுதே ஜடலம் அடித்து விழுந்து விடும். ஆனதினுலேதான் மஹாத்மா ஸாஹிபவர்கள் அவைகள் இரண்டையும், இந்த மானுடத்திற்கு வேர்தூர்களாகச் சொல்லினுர்கள்.

இப்படியாக ஒவ்வொரு மனிதனும் தான் என்ற வல்லமைப் பொருளான இவ்விரண்டில் ஒன்ருகிய றூஹானியை, அதாவது நப்ஸு அம்மாருவைப் பனுவாக்கி, அதாவது இல்லாமையாக்கி. மற்றென்ருகிய றூஹ் என்பதை அதாவது நப்ஸு முத்மஇன்னுவை இன்னும் விபரம், உஷ்ண காந்தி இன்னும் விபரம், தான் என்ற நினைவை காயும் தாயுமாக நிலைபாடாக ஸ்திரப் படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டு அதன் தஸ்தாவேஜுகளான உறுதி, பகுத்தறிவு, வைராக்கியம், கியானம், இவைகளுடன் வெளி வந்திருக்கின்ருன். வந்தவுடன் அந்த அரும் பெரும் காரியாதிகளை யெல்லாம் மறந்து விட்டு உலகத்தில் செய்கிற வேலையை விட்டு சிறங்கு சொறிந்துக் கொண்டிருக்கின்ருன் என்று சொலலும் பழமொழிபோல், ஒவ்வொரு புண்யவான்களும் ஏக தட்புடலாய் தன்னை மறந்து அலைகிருர்கள். அவர்களுக்கு இப்பொழுது தெரியுமா? இறுதியில் தெரிந்து பெருத்த கைசேதப் படுவார்கள். என்னையும் என்னுடைய இந்த அருமையான உலகப் பேருபகாரமான திரவிய வுரையையும் நினைத்து தாம் உணராது கைதவர விட்டதற்காக கண்ணீர் விடுவார்கள். அப்போது ஒரு பிரயோசனமும் அடையவே மாட்டார்கள் என்பதாம்.

சூரியனை நிலைபடுத்தி சந்திரனைபனுப் படுத்திக்கொள், என்ற கருத்துக்கு விபரம் கேட்பாரு முண்டு. அதற்கு உதாரணம் சந்திரன் தன் சொருபம் தெரியும்படியாக உலகமெல்லாம் தெரிவித்து அப்பால் சிறிது சிறிதாக மங்கி இறுதியில் அறவே இல்லாமல் தேய்ந்து அழிந்து போவதை ஊன்றிக் கவனித்துப் பார்.

## 14-வது திருப்பாடல்

இந்த வுடலுக் குயிர்வந்த தெப்படி சிங்கி அது
தொந்தி நடுக்குழி தொப்பூழ் வழியடா சிங்கா.

## திரவிய உரை, கருத்துரை.

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! அவ்விதம் பெரிதான ரகசிய விஞேதத்துடன் சமைந்த இந்த நூதன சரீரத்திற் குள்ளே றூஹான அந்தப் பிரதான ஆத்மாவானது என்னென்ன விதமாக எந்த வழியாக வந்தது. அதைத் துல்லியமாகச் சொல்லி யருள வேண்டியது.

விடை:—ஏ மஉஷூக்கானவனே! அதாவது பாரிய நூதன மானதோர் ரகஸியபாதை தான். அதைச் சொல் லுகிறேன் அறிந்து கொள். இந்த சரீரத்தை உண்டாக்குவதற்கு முன்னதாக விந்து நாதத்தில் கலந்து கொண்டு வந்த அந்த நாதனுனவன், தாயுடைய நேத்ர ஜோதியாகக் கலந்து தன் வடிவம் என்ற பிளாவை அதாவது சித்ரக் கண்ணுடியை கர்ப்பக் குவளரையில் எடுத்துக் காண்பித்து, றூஹானி யென்னும் விந்தானது அந்தப் பிளாவைப் பார்த்து ஜடலத்தின் அங்கங்களை ஒன்ருென்ருக தாயின் துடக்கின் உதரத்தின் ஆதரவால் உண்டாக்கிற்று. அப்படி உண்டாக்கும் காரியஸ்தனுகிய றூஹானிக்கு ஆண் என்றும், பெண் என்றும் ஆக்க சக்தி இல்லாத தினுலே அடிக்கடி தன் காரியஸ்தனுகிய றூஹ் என்னும் எஜமானைக் கேட்டுச் செய்யும் பொருட்டு அவனுடைய ஆசனமாகிய நேத்திரத்திற்கும் தன்னுடைய மகாமாகிய மாங்காய்க்கும் இடையில் மாக்கொடி யென்னும் ஒரு தந்திக் குழாயை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலமாய் நடவடிக்கை நடத்தி வந்தது. கடைசியாக விதி, மதி, இரணம், மரணம், தொழில், பண்பு, வேற்றுமை யாதிய இலட்சணுதிகளையெல்லாம் சரிவரச் செய்து அமைத்த வுடன், தானிருக்கும் ஸ்தானத்தில் றூஹானி அமர்ந்து கொணடது.

அப்போழுதே சிசுவுக்கு இடகலையான சுவாசம் வந்து சற்று நெளிச்சலுண்டாகும். அப்போது தான் கர்ப்பவதியான தாயானவளுக்கு சற்றுப் பிரஸவ நோயானது தோன்றும். அப்பால் மாறிப்



போவதும் மறுபடி தோன்றுவது மான மயக்கம் வரும். இப்படியாகும் வேளையில் "தான்" என்றறூஹானல் குதுஸி யென்னும் றப்பானியாவானது, அதாவது அறிவானது அந்த மாக் கொடி யென்னும் கலிமா ரகசியக் குழாய் வழியாக மற்ற பூதங்களான அஸ்மான்கள் ஒன்றும அறியாத வண்மையாக பிரஸன்னமாகி வந்து அதன் கடைசித் தலைவாசலான தொப்புழ் வழியாக நுழைந்து உட்சென்று தன் காரியக்காரனுகிய றூஹானி என்பவனை இருதய தாமரையில் வந்து சந்தித்து, அப்பால் சுழிமுனை மண்டலத்தின் மார்க்கமாக தன் ஆசனமாகிய அறுஷினிடத்தில், அதாவது நேத்திரத்தின் நடுவில் சென்று பீடங்கொண்டது. அப்படிப் பீடங் கொண்ட, அல்லாஹ் என்னும் சுயம்பொளிவானது தன் வாகனமாகிய சரீரத்தை நோக்கி வெளியாகு என்று நோக்கினதும் குழந்தை பேறு காலமாயிற்று. இது அல்லாவின் மஅரிபாவாக இருக்கும்.

## 15-வது திருப்பாடல்

இந்த வுடலுக் குயிரெங்கே நின்றது சிங்கி அது
அந்தர மாயண்ட மாக்கொடி நின்றது சிங்கா. (15)

## திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! அந்த விதமான நூதன சரீரமாகிய இந்த ஜடலத்திற்குள் வருவதற்கு முன்னதாக அந்த பிரதான ஆத்மாவாகிய "தான்" என்ற ஹக்கானியானது எந்த இடத்தில் நின்றுக் கொண்டிருந்தது? அந்த உண்மையைத் தெரியப் படுத்து.

விடை:—கேளப்பா மஉஷூக்கானவனே! அதாவது ஏக அந்தர வெளியான மாக்கொடியின் கண்ணே வியாபித்திருந்து அவ்விடத்தில் ஒட்டாமல் "தான்" என்ற ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு நின்றது.

## கருத்துரை.

மாக்கொடி யென்ற ரகசிய கலிமாவின் பருதாவில் வந்து மனுஹரான தோற்றப் பொருள்களும், மலக்குகளான நரம்பு

ஊசாட்டங்களும், தன்னைக் கண்டுக் கொள்ளாத படி ஒளிமறைவாய் நின்றது. ஏக அந்தர வெளியான மாக்கொடி என்றது சிசுவு ஜனிப்பதற்கு முன் மாக்கொடி முதலிய வினியோகங்கள் யாதென்றுமே அந்த இடத்தில் இலலாதிருந்து, புதிய தோற்றமாகவே அவைகள் உண்டானதாலே ஏக அந்திர வெளியான மாக்கொடி என்றது ஞானவான்களின் உண்மையான கருத்து, அதுவே தீர்ச்சையான தௌஹீதாகவும் இருக்கின்றது. இதன விஸ்தரிப்பு ஒரு மட்டு திட்டமில்லாமல் விரிந்து கொண்டே போகு மாதலால் இம்மட்டுடன சுருக்கிக் கொள்கின்றேன்.

## 16-வது திருப்பாடல்

இந்த வுடற்கனி யெந்தக் கொடிக்கனி சிங்கி அது
முந்திய தொப்புழு மாக்கொடி யல்லவோ சிங்கா,

### திரவிய உரை,

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த சரீரத்தில் தேமாங் கனி ஒன்றிருக்கிறது என்று மூதாக்களான ஞானவான்களெல்லாம் ஒருமித்துக் கூறி யிருக்கின்றார்களே! அந்தக் கனியானது எந்தக் கொடியில் காய்த்தக் கனியாக இருக்கும். அதை சற்றுச் சுட்டிக் காட்டி யருள்வாயாக.

விடை:—கேளப்பா மஉஷூக்கானவனே! தேமாங்கனி யென்று நாதாக்கள் சயிக்கினை செய்து போனதானது, றூஹல் குதுஸி என்ற "ஹூ" என்ற திரு அட்சரத்தைத் தான் நான் முன் சொல்லி வந்த தொப்புழ் என்றதும், மாக்கொடி என்றது மாக இருக்கும்.

### கருத்துரை.

ஈமான் என்கின்ற உறுதி படுத்துகிற தற்கும், இஸ்லாம் என்னும் ஒன்றுபட்டு ஹக்குடன் ஹக்காய் கலந்து கொள்கிற தற்கும், றஸூலுல்லாஹி என்பதற்கும் நடுவே ஒரு "ஹூ" என்ற மந்திரம் இருக்கின்றது. அதை இன்ஸான் காமில் என்கிற நினைவுடன் ஒட்டின வண்ணமாக கலந்து ஈமான் என்ற உறுதி என்னும்



தொட்டிலில் கிடத்தி தாராட்டு வாயாகில் அப்பால் நீ என்ற பொய் போர்வையானது எவ்விதம் கிழிபட்டொழிந்து போகிறதென்று தானே உணர்ந்து கொள்வாய். இதைப்பற்றி குணங்குடி மஸ்தான் அவர்கள்

"முத்திதரும் வித்தை முனையில் வைத்துச் சீராட்டி
நித்த மறவாமல் நினைத்திருப்ப தெக்காலம்" என்றும்

மற்றும் இந்நூல் மூலபாடல் ஆசிரியரான மஹாத்மா சாகிபவர்கள்

"ஈமான் றனக்கு மிசுலா நெறிக்கு மிதனடுவே
தேமாங் கனியுண்டு செப்பரி தேசெப்பி லஞ்சிலொள்றை
ஆமா மெனக்கலி மாவா லெழுப்பி யறிந்துணர்ந்தாற்
சீமான் றனப்பெற்று வாழ்வீ ரென நபி செப்பினரே"

என்றும், இன்னும் சதகோடி மஹான்களும் அதைப்பற்றி நற்சாட்சி சொல்லி யிருப்பதை ஊன்றிக் கவனித்துக் கொள்ளுங்கள் என்பதாம்.

## 17-வது திருப்பாடல்

மாக்கொடி யென்பதை மானிட ரென்சொன்னார் சிங்கி அது
மட்டி லடங்காத மாகலி மாவடா சிங்கா.

### திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! இப்பேர்பட்ட வல்லாமைப் பொருளான மாக்கொடி என்பதை மானிட கோலத்தில் வந்தவரான நமது நபியவர்கள் என்னவென்று சொன்னார்கள் அதை இன்னதென்று நீ எனக்குச் சொல்வாயாக.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! அதாவது இவ்வளவவ்வளவென்று ஒரு மதிப்பிட்டுச் சொல்வதற்கு அடங்காத கலிமா என்னும் மூல மந்திரமாகவே இருக்கின்றது என்று சொன்னார்கள்.

### கருத்துரை

மானிட கோலத்திற்குக் காரண கருவியாயிருந்த முகம்மது நபி யவர்களின் சிபத்தானது தாத்தான ஒளிவாக இருந்ததினாலே ஸாஹிபவர்கள் நாயகமவர்களை மானிடர் என்று சுட்டி காட்டி

ஞர்கள். மாக்கொடி என்பதை நபியவர்கள் கலிமாவாக இருக்கும் என்றதன் தாற்பரியமாவது, கலிமாவுக்கு இருபத்து நான்கு அட்சரங்கள் இருப்பதுபோல மாக்கொடிக்கு இருபத்து நான்கு பணர்கள் உண்டாகி, அந்த இருபத்து நான்கு பணர்களைக் கொண்டுந்தான் இந்த மனுஷீக உடலின் இருபத்து நான்கு உறுப்புகளும் உண்டாகி, மொத்தம் சரீரம் என்ற பேருடன் வெளியாயிற்று இதன் உண்மையை இவ்விதத் தான ஒளிப்பில்லாமல் தெளிந்துக் கொள்ள வேண்டியது. இதன் ஹக்கீகத்தை நல்ல வெளிரங்கமாய றிய விரும்பும் அன்பர்கள் இந்த அடியானிடம் நேரில் வந்திருந்து கொண்டு தன்னை யறியும் ரகசியங்களை அள்ளிக் கொள்ளையாடிக் கொண்டு போகலாம் என்பதாம்.

## 18-வது திருப்பாடல்.

எந்த வழியினுற் வந்தோ முலகினில் சிங்கி அது
வெல்லா முடிந்த பொருளின் வழியடா சிங்கா

### திரவிய உரை.

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! அவ்விதம் உண்மையின் சூரத்தாக இருந்த ஆதமியான நாம் எந்த வழியின் மார்க்க மாக இந்தப் பூலோகத்தில் ஜனனமெடுத்து வந்தோம்? அதைத் துலங்கும் படியாகச் சொல்ல வேண்டும்.

விடை:—கேளடா மஉஷூக்கானவனே! நாட்டம், தேட்டம், ஆட்டம் என்னும் மூன்ருகி, அம்மூன்றும் ஐந்தாகி, அவ்வைந்து ஐம்பத்தொன்ருகி, அப்பால் எண்பத்து நான்கு நூருயிரமாகி, இறுதியில் ஒன்றும் அற்று முடிவாகிப் போகின்ற ஒரு பொருளாகிய மேற் கூறிய நினைவென்னும் அந்தரமாகத்தான் ஒவ்வொரு சிருஷ்டியும் வந்தன. அது போலவே நாமும் வந்திருக்கின்ருேம்.

### கருத்துரை.

எல்லா முடிந்தபொரு ளென்றதன் கருத்து என்னவென்ருல், இந்த உலகத்தில் எவ்வளவோ காரியாதிகளை நடத்தி எவ்வளவோ சுகங்களை அனுபவித்துக் கொண்டிருந்த இந்த ஸ்தூல



உடம்பானது சத்து அற்று கீழே விழுந்த வுடன் இது எந்த எந்த பூதங்களிலிருந்து என்னென்ன ஆகாரசத்துகளை எடுத்துண்டு ரெத்தமாகி அவ்விரத்தத்தை கொண்டு ஒவ்வொரு அவயவங்களையும் ஒழுங்கு போல் அமைத்துக் கொண்டு வெளிதோன்றியதோ; அந்தப் பூதங்களில் போய் மறுபடியும் மீண்டு கொள்ளும். அது எப்படியானல் காற்றுடன் சுவாசங்களும், நெருப்புடன் உஷ்ண நாடிகளும், தண்ணீருடன் இரத்த ஓட்டங்களும், மண்ணுடன் "ஹவா" வென்னும் நப்ஸு அம்மாருவின் குண குணங்களில் போய்ச் சேர்ந்து சரீர மென்பது அறவே யில்லாமல் ஸ்ரூபம் அழிந்து, உதிர்ந்து போய்விடும். அப்பால் இருப்பது என்ன வென்று யோசி! அது தெரியுமா? அது தான் இந்த நான்கு பூதங்களிலும் பிரதான இராஜ கருவியான ஆகாயம் ஆகாய மென்ருல் என்ன? அதுதான் இந்த சரீரத்தை வைத்து நடாத்திக் கொண்டு வந்து சகல ஜீவாதிவர்க்கங்களையும் படைத்து, பேச, உண்க, குடிக்க, ஆட, ஓட, எழுப்ப, இருக்க செல்கின்றது. அது தான் நமது ஊசாட்ட மென்கிற நினைவு. அந்த நினைவு தான் அல்லாஹ் என்னும் பெரிய திருநாமத்திற் குரியது. அதுதான் அறிவு.

ஆரப்பா! என்னுடைய இந்த ஞான திரவியத்தைக் கையாட வந்தவனே! உன் புத்தியைக் கூர்மை யாக்கி வைத்துக் கொண்டு இப்போது நான் சொல்லி வந்த இந்தக் கடப்பான நினைவளவில் யோசித்து, பொன்னுக் குள்ளே பொன்னை வைத்துக் புடம் போடுவது போல் நிராமயமாகிய அந்த மஅரிபத்துல்லா என்னும் நினைவில் உன் நினைவைப் பொருத்தி இன்ஸான் காமில் என்னும் இணையற்று, நாட்ட ஊசாட்டங்களை பல வழியை விட்டுப், அந்த ஒரு வழியில் நிற்பாட்டி சற்று அதில் அதாய் நீ தரிபடு. அதாவது உன்னை நீ இல்லையென்று லாமக்கான் அளவில் வைத்து பனுவாக்கிப்பார்! அப்போது பேராப்பணம் என்ன இருக்கிற தென்று கண்டு கொள்வாய். இது தான் பாரவான்களான பெரிய பெரிய குதுபுமார்களும், அக்தாபுகளும் இருந்து சாதித்து வந்த வழி வீணுக உலக மருட்டில் ஏமாந்து அலைகின்ற குருட்டு ஜனங்களே பத்திரம்! இதைக் கவனித்து இதனளவில் நடந்து கொள்ளுங்கள்.

## 19-வது திருப்பாடல்

முன்னே யறிவா லறிவகை யென்னடி சிங்கி அது
முச்சுடர் மூன்று முடலுயி ராத்துமா சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! அல்லாவுடைய மஅரிபத்தை அறிந்து கொள்ளும் விஷயததில் முதல் முதலாவது அறிகின்ற ஒழுக்கமான ஞான அறிவின் விதங்களென்ன அவைகளை நல்ல வழி விபரமாக சொல்வாயாக.

விடை:—கேளப்பா மஉஷூக்கானவனே! ஞானத்தில் நீ முதலாவது அறிர்துக் கொள்ள வேண்டிய ஒன்ரும் படிக் கட்டானது முச்சுடர். முச்சுடர் என்ருல் மூன்றுவித வொளிவு. அந்த மூன்று மென்ன வெனருல், அதாவது தந்தை ஒரு வொளிவு, அதன் பிறகு தாய் யொரு ஒளிவு. அதன் பின் தான் ஒரு ஒளிவு ஆக மூன்று முச்சுடறென்று அறிந்து கொள்ள வேண்டியது.

### கருத்துரை

தந்தையின் ஒளிவு, தாயின் ஒளிவு என்பது சுக்கிலம், சுரோணிதம். ஆக இவ் விரண்டும் இல்லா விட்டால் தானென்ற ஒளிவான ஆசையானது கிடையாது. அவர்களிருபேரும் உலகத்தில் அநுபவித்த பல ஆகாரங்களின் மார்க்கமாக "இஷ்க்" என்னும் ஆசையானது ஆகாயமென்ற பூதமாகி, அப்பூதம் நெருப்பென்னும் மோகமாகி, அம்மோகம் காற்றெனும் சுவாசமாகி, அச்சுவாசம் மண்ணென்ற சரீரமாயிற்று. இதனுல் சரீரம் என்ற ஆலத்தில் இன்ஸான் எவ்விதம் இருந்தது? அப்பால் எவ்விதம் வந்தது? அப்பால் எவ்விதம் மோசம் போகின்றது? என்று பெண் பாலும் நல்ல அறிந்து ஞானியாகி விடுவாள். ஆனதாலே இந்தப் பெரிய விபரம் விபரமான நமது திரவிய உரையின் உதவியால் அறியத் தெரியாத பாவியானவன் ஊழிகாலம் ஜன்ம பிறப்பென்னும் நரக



வேதனை அடைவான் ஆனதினுலே தான் பாவா ஸமர்கந்து பியாப்பானி அவர்கள் தமது கலீபாக்களை நோக்கி சொன்னதாவது:—

"ஓ மஹான்களே! நீங்கள் அல்லாவுடைய மஅரிபத்தைக் கொண்டு உலகத்தில் மானுடர்களுக்கு முச்சுடர் மார்க்கமாகத் தெரியப்படுத்துங்கள். அவர்களுக்கது காதில் நுழைந்து கருத்தில் அமையாமல் போகும் பட்சத்தில் அந்த நாய்களை விட்டு விலங்குகள். அவர்களாகிறது "திட்டமாக தோஸக்கே அங்கார்" அதாவது நரகத்தின் நெருப்புக்கு இறைகளாக உள்ள மூதேவிகளாக இருந்து பேர்மாற்றப் படுவார்கள்." என்று திருவாய் மலர்ந்து சொல்லினுர்கள். பேர் மாற்றப் படுவார்கள் என்று சொன்ன சொல்லானது மிக்க பாரதூர மானது. அதை விபரிக்க நமக்கு அவ்வளவு அவசரமில்லை. தேவையான ஆண்பிள்ளைகள் எப்படியாவது என்னிடம் நேரில் வந்து அந்த ரஹசிய வைரமலையை அப்படியே பாளம் பாளமாய்ப் பிளந்தெடுத்துக் கொண்டு போகலாம். அப்படி செய்து கொள்ள வேண்டுமே ஒழிய மற்றப்படியல்ல என்பதே. இன்னும் அந்த முச்சுடர் என்பது இந்த சரீரத்துள்ளே உடல், றூஹு, றூஹானி என்பவைகளாக இருப்பதை ஊன்றிக் கவனிக்க வேண்டியது.

## 20-வது திருப்பாடல்.

பின்னே ரறிவர்க ளொன்ருன தெப்படி சிங்கி அது
பேதக மற்ற பெருவெளி யானது சிங்கா.

### திரவிய உரை,

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! முன்னே அறிந்து கொள்ளும் விதம் அப்படி இருந்தால் கடைசியாக அறிந்துக் கொள்ளும் விதம் எப்படி? அது ஒரே ஒரு வஸ்தென்று மஹாத்துமாக்களான ஞானவான்களெல்லாம் முறையிட்டுக் கொண்டு போயிருக்கின்ருர்களே, அதென்ன ஒரு வஸ்து? அதை மெதுவாக வெளியாக்கி விடுவாயாக.

விடை:—கேள் மஉஷுக்கானவனே! அதாவது என்ன வென்ருல் அது, தான், யாதொரு பிணக்கும் இருவிளையும் இல்லாமல் தான் தாஞகிற ஆகாய மென்கிற நாட்டம் என்னுப் வஸ்தாக இருக்கும்.

## கருத்துரை

பஹாத்துமா ஸாஹிபவர்கள் பின்ஞல் அரியக் கூடிய வஸ்தென்று வற்புறுதி கூறியதன் கருத்தென்ன வென்ருல், ஒருவன் மரணிக்கின்ற காலத்தில் றூஹானி என்ற பூத நப்ஊஸச் சேர்ந்த அஞஸிறுகள் நான்கும் அதனதன் ஒடுங்கும் ஸ்தானங்களுக குள்ளே போய் தானே ஒடுங்கிப் போய் விடும். அதன் பின்ஞல் சரீரம் தன் பிரக்கினை தப்பி மயங்கி ஊசாட்டம் நின்று கிடையாய்க் கிடந்து விடும். அப்படி ஒன்றும் இயலாமற் கிடக்குப் சரீரத்தை ஒரு ஊசாட்டம் நின்று அதை மையத்து என்ற பேர் வரவொட்டாமல் சற்று தடை படுத்தி, தன் சுயம்பைக் கொளுத்திக் கொண்டு நின்று, தாஞகவே குளிர்ச்சி யென்னும் போர்வைக்குள் மறைந்து ஊசாட்டப் ஒடுங்கிவிடும். அப்பால் அந்த சரீரத்திற்கு ஆதமி என்ற பெயர் போய் பிணம் என்ற பெயர் வந்து விடும் ஆனதினலே தான் அவ்வாறு கடையில் அறியும் வஸ்தென்று கூறினர்கள். இதன் விபரம் ஒரு விதத்திலும் அடங்காமல் சமுத்ர ஜலம் போல் பெருகிக் கொந்தளித்துக் கொண்டே போகும். எவன் ஒருத்தன் இந்த பாரதூரமான மகாமளவில் வந்து ஏறி நின்று கொண்டு யூகிப்பானே அவனே அதைத் தெளிவாய் அறிந்து பரமா நத்தியாவான். இத்த விஷயத்திற்குத் தான் குணங்குடியார் "தேனையுண்டு ருஷிகண்ட தேசிகர்க்கு ஆகாயம் தெரியுந்தானே" என்று அறிவுறுத்திப் போய்விருக்கின்ருர், காண்க

## 2[-வது திருப்பாடல்

ஆசை கொண்டு நம்மை யாட்டுவ தாரடி சிங்கி அது
அக்கினி வாயுநீர் மண்ணின் மகிமையே சிங்கா.

## திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! மேற் கூறிய அந்த ஒரு ஊசாட்டம் கடைத் தீர்மான மாக இருந்து முடிவு பெறும்



பட்சத்தில் அதுவரையிம் இந்த சரீரத்தை நடத்தி வந்த மற்ற கீழ் அதிகாரிகள் யார் யார்? அவர்களை இன்னவர் இனியவரென்று ஒரு விடுத்தத்திற்த இரண்டு விடுத்தம் சொல்லிவிடு. அப்பதான் இதற்கு மூன் இந்த ரஸ்தாவை அறியாத எங்களுக்கு அதன் முழு தாற்பரியமும் நன்கு விளங்கும்.

விடை:—கேள் மஉஷுக்கானவனே! அதன் விபரம் என்ன வென்ருல் சொல்லுகிறேன். அந்த ஆகாய மென்னும் மோக நினைவுக்கு காரியஸ்தர்கள் நான்கு பேர்களாக இருக்கும். அவர்களில் ஒன்ருவது அக்னி இரண்டாவது காற்று, மூன்ருவது தண்ணீர், நான்காவது மண் என்பது.

## கருத்துரை

மோக நினைவு என்பது தஜல்லி என்ற "றூஹுல் குதுஸி" இதற்கு மலிக்குல் குத்தூஸ் என்றும் பெயர் உண்டு. அதுதான் அல்லாஹ் என்னும் பெரிய திரு நாமத்திற் குரியது. அப்பால் இதன் காரியஸ்தர்கள் நால்வருள் முதலாவது அக்னி என்றது இஸ்ருயீல், அப்பால் காற்று என்றது இஸ்ருயீல், அப்பால் தண்ணீர் என்றது மீக்காயீல், அப்பால் மண் என்றது, ஜிபுரீல், "மலிக்குல் குத்தூஸான" தஜல்லி இருக்கும் ஸ்தானமாவது நேத்திரம். அதாவது புருவமத்தி அல்லது மூளை. இஸ்ராயீல் உடைய ஸ்தானமாவது செவி. இஸ்ராபீல் உடைய ஸ்தானமாவது மூக்கு மீக்காயீல் உடைய ஸ்தானமாவது கண். ஜிபுரீல் உடைய ஸ்தானமாவது நாவு, இதற்கு எம்பினையாவது :—

ஏ! அறிவைத்தெரிய வந்தவனே! இதில் சற்று நின்று கவனித்துப் பார்! ஒரு சரீரம் சாவும் விதத்தைப் பற்றி உன் உள்ளறிவிடத்தில் விஜாரணை செய்! முதலாவது றூஹுல் குத்ஸி அதன் ஸ்தானத்தை விட்டும் பிரயாணப் படும்போது சரீரத்திற்கு அறிவு நீங்கிவிடும். இஸ்ராயீல் நீங்கும்போது செவி அடைபட்டுப்போகும். இஸ்ராபீல் நீங்கும்போது நாசித் துவாரங்கள் அடைபட்டு சுவாச நிலைகள் ஒன்ருேடொன்று சிக்கலாடி கறட்டுப் புறட்டென்று இழுப்படும். மீக்காயீல் நீங்கும்போது கண் தெரியாமல்

பார்வை அற்று பஞ்சடைந்து வரும். ஜிபுரீல் நீங்கும்போது நாவு விழுத்து மரண ஜன்னி மேலிட்டு சரீரம் பிணமாய்க் கட்டையாய் விடும். இதனுல் அல்லாவின் இல்மின் ரகசியமான உண்மை எதில் நின்று சாதிக்கின்றதென்று அறிந்து கொள்! இதற்கு மேலும் சொல்ல வேண்டுமா.

## 22-வது திருப்பாடல்

ஆசை பாசபல னனுபோக மாரடி சிங்சி அது
அங்கம் பொருந்திய பங்குமண் ணல்லவோ சிங்கா.

### திரவிய உரை.

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த ஆதமி என்னும் சரீரத்தின் ஆசாபாசமென்கிற "ஹவர்" முதலிய பந்தவினைகள் எல்லாவற்றையும் அனுபவிக்கின்ற பூதியமாவது எது? அதை விபரித்துச்செல்வாயாக.

விடை:—கேட்பாயாக. தாலி பான மஉஷூக்கே! அதாகிறது மேற் கூறிவந்த அனுசிறுகள் நான்கிலும் ஒன்ருகிய மண்ணுடைய பங்காக இருக்கும்.

### கருத்துரை.

மண் என்பது நாவு என்றும், அது ஜிபுரீல் என்றும், நான் கூறிவந்தேனல்லவா. அது நப்ஸு அம்மாருவாக இருக்கும். நாவில்லையானுல், தீனில்லை. தீனில்லையானுல், இந்திரிய கிருத்தியங்கள் எதுவுமில்லை. இந்திரிய கிருத்தியங்கள் இல்லையானுல், தூல ஆத்மாக்கள் அத்தனையும் பரமாத்துமாக்களாகவே ஆகும். ஆனபடியால் தான் சரீரத்துள் எல்லா நல்வினைப் பூதியத்தையும் அமைத்து மண்ணுகிய தீ வினைப் பூதியத்தையும் அமைத்து அதனுல்தான், உலக சிருஷ்டிகள் யாவற்றையும் படைப்பித்தாயிற்று. ஒரு உதாரணம்:- ரயில் இஞ்சின் என்று வைத்துக்கொள் அதை மண் அதாவது இரும்



பால் சமைத்து அதில் எந்நெந்த இடத்தில் பூதசாரங்களை அமைக்க வேண்டுமோ, அந்தந்த ஸ்தானத்தில் நெருப்பு, காற்று, தண்ணீர், இவைகளை அடைத்து, ஆகாயமென்கிற அறிவானது விசையைத் திருப்பி ஒட்டுவதுபோல், இந்த சரீரம் என்னும் மண் பாண்டத்தினுள்ளே மற்ற மூன்று பூதங்களும் நுழைந்து கொண்டு சக்தி கொடுக்க, அதை அறிவென்னும் நூஹூல்குதுஸியானது தன் ஞட்டம் என்னும் ஒரு ஹிக்மத்தால் நடத்துகின்றது. இது தான் மஅரிபாவின தீர்ச்சையான விவேகம் என்றறிந்து கொண்டு, நான் மேலே அநேக இடங்களில் நல்ல வெட்ட வெளிச்சமாய் தூண்டிக் காட்டியிருக்கின்ற வல்லபத்தை அந்த ஸ்தானத்தில் வைத்து ஒரு கலப்பற்ற கற்பூர விளக்கைப் போல் கண்டு' கலிமா எனனும் மன உருதியை நிலைக்கவைத்து ஷாஹிது சொல்லிக் கொள். அப்படிக்யல்லாமல் இப்போது நீ சொல்லி யிருக்கும் பொய் சாக்ஷியைக் கொண்டு நீ ஈடேறுவது என்னும் லக்ஷியத்தைக் கடை பிடித்து நீ ஏமாளி யாய்ப்போய் கடசியில் கைசேதப் படுவாய் அல்லா குர் ஆனில் "ஓ! மனிதர்களே! உங்களில் எவன் என்னை இந்த மண்ணுலகத்தில் வைத்தே கண்டு சாட்சி சொல்லா திருப்பானே! அவன் திட்டமாக மேலுலகத்தில் இரண்டு கண்களும் குருடனுக என்னைத் தரிசியாமல் தட்டழிவான்." என்று சொல்லியதன் சாரம்சத்தை சற்றே ஒரு நிமிஷம் மக்கமல்லாந்து படுத்துக் கொண்டு உன் ஹக்கைப்பற்றி யோசித்துப்பார். அப்போது அதன் மகத்தான கிருபை யிருந்தால் உனக்கு வெளியாகும்.

## 23-வது திருப்பாடல்.

தன்னை யறியுந் தலமேது சொல்லடி சிங்கி அது
கண்ணிடை யான நடுநிலை யல்லவோ சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! அவ்விதம் கண்டு ஷாஹிது சொல்லிக்கொண்டு "தான்" என்ற பரமாத்துமா வானது இந்த சரீ

ரத்தில் எந்த ஸ்தானத்தில் அமைந்திருக்கிறது. அதை அறியும் விதம் எப்படி.

விடை:—கேளப்பா தாலிபான மஉஷூக்கே! உன்னுடைய நேரத்தில் இரண்டிற்கு நடுகத்திப ஸ்தானத்தில் வைத்துக்கண்டு அறிந்துக்கொள்.

## கருத்துரை

தானென்ற ஆகாயமானது தன்னுட்ட மென்றும் நினைவாக அதவாது பிரதான ஆத்மவான அறிவாக நின்று, இந்த ஸ்தூல சரீரத்திற்குள்ளே இரண்டு கண்களுக்கு இடையே நின்று இலங்குகின்றது அந்த ஸ்தானத்தைத் தான் அல்லாகுத்தா ஆலா குர்ஆனில் அநேக இடத்தில் ''காபகௌஸைனி'' என்றும் ''ஹதீதுகுதுஸி'' என்றும் ''மாகான் மஹ்மூதென்றும்'' ''சுல்தானன்நஸீரு'' என்றும் பல ஸ்ருபப்படுத்திச் சொல்லி யிருக்கிறான்.

### வெண்பா.

''கம்பத்துக்குள்ளிருந்து கைகாட்டும் பெண்ணரசை
இன்புற்றுச் சேர்வதற் கென்செய்வேன்— அன்புற்ற
மந்திரமே ஹூ ஹூ மருந்ததுவாகும் பார்வை
தந்திரமே க்யானமது தான்''

என்ற அருமைப் பெரியோராகிய காட்டானை ஷெய்கொலி அவர்கள் திருவாய் மலர்ந்து கூறியதன் உட்கருத்தை விசாரணை செய்துபார். இதில் மஹானவர்கள் ''கம்பம்'' என்று சுட்டினது தான் நான்மேலே சொல்லி வந்தகண்களின் நடுமத்தி என்றது. கைகாட்டும் பெண்ணரசென்றது தன்னுட்டமென்கிற றூஹுல் குதுஸி என்று சந்தேஹ மற உணர்ந்து கொள்வாயாக.

இன்னும் உதாரணம் வேண்டுமா இதைப்பார். ''காட்டி மறைத்தென்னைக் கோட்டி கொள்ளாதே கண்ணே பெண்ணரசே, ஒருவாளுலும் நானு மோர் வீட்டுக்குள் பட்டபாட்டைச் சொல்ல நாவாயிரம் போதாது.'' என்று ஜிஷ்த்தியா தரீகத்தின் காமில் சற்குரு நாயகரான கடையநல்லூர் உதுமான் லெப்பை



ஷெய்கவர்கள் திருவாய் மலர்ந்திருப்பதின் உட்கருத்தைக் கவனித்துப் பார்! இந்த பார தூரமான பல உதாரணங்களாலும், குர்ஆனுடைய சுவர்ணசூத்திரங்களின் பாத்தின் அர்த்தங்களாலும் நீ உன்னை அறிந்து உன் சுவாதீன சுயேச்சையைப் பெற்றுக்கொள். வீண் ஏமாளித்தன மாயிருந்து காலமெல்லாம் துனியா வென்னும் மாயாப்பாம்பு சகவாசத்தில் மருண்டு விளையாடிக்கொண்டு இருந்து நீ பெறவேண்டிய சகல வல்லமை உருத்துகளையும் கையிழந்து கடைசியில் நீ வெகு ஆத்திரம் பரத்திரமாய் ஒடி இடுப்பை வளைத்து வளைத்துக் கட்டிக்கொண்டு சம்பாதித்து மெய் யென்று பூட்டி வைத்திருந்த ஆஸ்திகளும் பொய்யாய் போய் உன்னையும் பொய்யாக்கி வீணுய்க்கெட்டழிந்து நாசமாய்ப் போகாதே! பத்திரம் இந்த என்ஞான திரவியத்தை ஒரு கைவல்லியமாய்த் தேடி யெடுத்துத் தோளில் முடிந்து போட்டுக்கொள். சொன்னேன் தவறிடாதே! என்பதாம்.

## 24-வது திருப்பாடல்

என்ன விதமாகத் தன்னையறிவது சிங்கி. அது
தன்னவன் ருய்தந்தை யாகிநா மானது சிங்கா.

## திரவிய உரை.

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! நீ அவ்விதம் சொல்லி வந்த கற்பனைகளால் இன்ஸான் தன்னை இன்னவனென்று எப்படி யறிந்து கொள்கின்றது அதை நல்லதெளிவு பெறச் சொல்வாயாக.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! அதாவது எவ்விதமானுல், உன் தகப்பனை மோகத்தளவில் ஊசாட்டஞ் செய்வித்த தன்னுட்ட மென்னும் வஹதானியத்தை இன்னதென்று, அதாவது தன் நினைவென்று உருதியாக அறிந்து, அப்பால் தகப்பனுடையவும், தாயுடையவுமான இந்திரியங்களால் உற்பத்தியாய் வெளிவந்தது நீ என்று அறிவதுதான் தன்னையறிவதில் முந்தின மன்ஸிலாக இருக்கும்.

## கருத்துரை

தன்னையறிவது இந்த விதமாக அறிந்தால், தான் என்ற வல்லமை இன்னதென்று எளிதில் விளங்கும். அதற்குத்தான்

நபிகள் சிரோமணியான நமது நாயகமவர்கள் ''இன்ஸான் தன்னை அறிவது பறுலு என்றும், அப்பால் தலைவனையறிவது சுன்னத் தென்றும் கட்டளை செய்தார்கள்'' தன்னை இன்னமாதிரிதான் என்று எவன் திட்டப்படுத்திக்கொள்வானே! அவன் மிகவும் இலேசாக அந்த மகாமிலேயே தன் றப்பையும் இன்னதுதான் என்று உணர்ச்சி செய்து விரவிக்கொள்வான். இதைப்பறறி நபிகள் சிரோமணியான நமது நாயகமவர்களும், ''மன் அறப நப்ஸஹு பகத் அறப்பறப்பஹு'' என்று சாட்சி கூறியிருக்கின்றார்கள். இந்த திருவாக்கியத்திற்கு உரிய அர்த்தமாகிறது, எவன் ஒருவன் தன்னுடைய பூதியங்களை அறிந்தானே! அவன் தன்னுடைய றப்பானியா வென்னும் பூரணத்தையும் அறிந்து கொள்வான்'' என்பதாம்! இதனால் சந்தேக மற்று மஅரிபாவை அறிந்து கொள்ளவும்.

## 25-வது திருப்பாடல்

இறையை யறிவது மெப்படிச் சொல்லடி சிங்கி அது
இறையெங்கு நின்றுடுந் தன்நினை வாமடா சிங்கா

## திரவிய உரை.

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! நீ தன்னை யறிவது இன்ன விதம் தான் என்று முடிவு சொல்லி விட்டாய். அது போல் தன் தலைவனையும் அறிவதை இன்ன தன்மை தான் என்று சொல்லி விடு.

விடை:—சேளப்பா மஉஷூக்கானவனே! அதையும் முடிவாக சொல்லுகிறேன். அந்த தலைவனாகிய றப்பானியாகிறது, இந்த வுடலென்னும் பதினெண்ணாயிரம் ஆலத்திலும் ஏகமயமாய் நின்று காரியாதிகளை நடாத்தாட்டி வரும் தன் ஊசாட்டமென்னும் நினைவாக இருக்கும்.

## கருத்துரை

நினைவு எப்படி யப்பானியாவின் சிபத்தில் உள்ள தென்றால், அதாவது நினைவு ஊசாடாத பட்சத்தில் உலகம் ஒன்றுமே கிடை



யாது. எப்படியென்றால், ஒருவன் பேசிக் கொண்டிருக்கும்போது திடீரென்று படுத்துறங்க நாடுகிறான். அந்த நாட்டமே நினைவு. அது அவனை நித்திரையில் வைத்தாட்டுகிறது. அவ்விதம் ஜடலத்தையும் மற்ற பூதங்களையும் மயக்கி தூங்கவைத்து விட்டுத்தான் தூங்காமல் அசையாமல் அரூபியாய் இருக்கின்றது. ஜடலமும் மற்ற நப்ஸுகளும் ஒன்றுடன் ஒன்று விபரீதப்பட்டு மரணித்த பிறகு அந்த நினைவானது தன் குதுரத்தென்னும் வல்லமை ஹிக்மத்தால் அறிவென்னும் வாகனத்திலே பிரயோகம் பண்ணிக்கொண்டு அந்தரமாய் பாய்ந்து விடுகிறது அப்பால் அது மற்ற கோலங்களை தன் முகப்பத் தென்னும் உதிப்பில் நின்றும் ஸ்ருபிக்கிறது. இந்த இல்மில் வந்து நுழைந்து பார்க்க வேண்டிய லட்சியம் முக்கியம் தேவையான தல்ல. ஏனென்றால் மஅரிபா என்பது இரகசியபாதையான தாலே, அதன் உள் உடைவான பாரிய கடவுகளைப்பற்றி சற்று மறைத்துக்கொள்ள வேண்டிய கடமை ஞான நூல் எழுதும் ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. எழுதுவதும் சொல்லிக் காட்டுவதும் சில மகாம்கள் வரையிலும் தான் ஆகும். அதற்கு மேலிட்ட மகாமில் எழுத்தும் பேச்சும் கிடையாது. ஆலோசிப்பும் ஊசாட்டமு மாத்திரம் உபயோகப்படும். அதற்கு மப்பால் உள்ள லாமகானில் ஆலோசிப்பும் ஊசாட்டமும் தானே ஒழிந்துபோய் நெருப்புடன் விரகு கலந்த மாதிரி வஸ்துடன் வஸ்தாய விரவிக் கலந்து சதா ஆநந்தியாய் நினைவுடன் கனவாய் மிதந்து கொண்டிருப்பது தான் ஞானத்தின் அந்த மாயிற்ற. இந்த இல்மை உனக்கு இவ்விதம் உதாரணமாய்ச் சொல்வான்யார்? ஒருவனையுமே இந்தக் கலிகால புரட்சியில் நீ நம்பாதே! இவ்வளவு பார தூரமான அரும்பெரும் பொருளை இப்படி விஸ்தரிக்கத் தக்கன மஹான்கள் உன்னிடம் வலியவரமாட்டார்கள். எல்ல காரியங்களுக்கும் உன் முயற்ச்சியே காரணம்:—உதாரணம்.

''அறிவை அறிந்தவர்கள் ஆயிரத்தி லொன்று
அருளை யறிந்தவர்கள் இலட்சத்தி லொன்று
குருவை யறிந்தவர்கள் கோடியினி லொன்று
கருவை யறிந்தவரைக் காண்பதுவுமரிதே.''

என்ற மாதிரி நீ அவர்களை யறியவும் உனக்கு வல்லமை போதாது. என்னுடைய திரவியவுரையே உனக்கு காமிலான குருவென்று இதன்படி தவத்தைச் செய்து கொள்வாயாக என்பதாம்.

## 26-வது திருப்பாடல்

தன்னுள் விளங்குந் தவமென்ன சொல்லடி சிங்கி அது
தன்னை மறந்து தவத்தி லிருப்பது சிங்கா.

## திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! தானாகிய இந்த இன்ஸான் ஜடலத்திற்குள் விளங்கி யறியக்கூடிய தவமானது, எப்படி செய்கிறது? அதன் விபரம் தெரியப்படுத்தவேண்டும்.

விடை:—கேள் மஉஷூக்கானனே! அதென்ன வென்றால், ஜடலத்தை மறந்து விட்டு ஏக தவத்தில் இருந்து கொள்கிறதாக இருக்கும்.

## கருத்துரை.

ஜடலத்தை மறந்து விட்டு ஏக தவத்தில் இருக்கும் விபரமாகிறது:—ஐந்து பூதிய வாசல்களையும் அடைத்து, உலக எண்ணங்களை அற ஒழுத்து, ஒரு கவலையும் இல்லாமல் அரவம் ஒடுங்கின ஓரிடத்தில் தனித்தும், பசித்தும், தூக்கமற்று விழித்திருந்து சுவாசத்தை ''இல்'' என்று உந்திக் கமலத்தில் இருந்து இழுத்து ''தில்'' என்கின்ற தாமரையின் நடுவே அல்லாஹூ என்று வைத்து, சூரியகலையுடன் சந்திரகலையையும் பரஸ்பரப்படுத்தி அதாவது கலந்துகொள்ளச் செய்து வெளியே விடுகிறது. அவ்விதம செய்யும் சமயம் துனியாவின் வியாபகம் ஒன்றுமே அந்த மன நாட்டத்தளவில் வந்து ஊசாடிடப்படாது. அவ்விதம் ஊசாடுவதால் நீ செய்த தவமெல்லாம் நாச மடைந்துபோய் இங்கும் அங்கும் நற்கெதி கெட்டுப்பாழ் பட்டுப்போவாய். இது இருக்கட்டும்.

அப்பா அறிவுடைய மகனே! நீ நான் சொன்ன விதம் போல் உன்னை பனவாக்கி நினைவுடன் விரவி இஷ்க்கென்னும் க்யான மோகத்தை அதன்பேரில் வைத்து ஓர்மையை நல்ல ஸ்திரப்படுத்து வாயானால், உன்தன்னுட்டமென்னும் பரிபூரண



நந்த நினைவானது உன்னில் நின்றும் இல்ஹாமாசி வெளியாகும். அது வெளியாகும் மஹாபூரண ஸ்தலமானது நேத்திரமென்னும் பெரிய திருநாமத்தின் அறுஷேமூ அல்லாவாக இருக்கும். அதில் நீயும் உன்நினைவும் ஒன்று பட்டு நீ என்பது இல்லாமலாகி ஏக மோகமான பொழுது, நீ என்னும் குதுஸியானது தஜல்லியாத்தாகி, முதலாவது ஒரு சுத்த வெண்மையான ஒளிவாய் ஒரு விளக்குச் சுடர்போல் சுழிமுனை என்னும் மகாமில் வெளியாகி மறைவதும், அப்பால் நின்றது நிற்க பளீர் பளீர் என்று மின் வெட்டி மறைந்தாற் போல சுடர்வீசி மறையும்; அதை கண்காட்சியாக தரிசித்த நாள்களில் உனக்கு ஒருவித மயக்கமும் தியக்கமும் வரும். நாட்டமும் ஒரு இடத்திலும் தறிபடாமல் நோக்கின நோக்க மெல்லாம் உன்கண் பார்வைக்கு ஒரே ஒளி மயமாகவே தோன்றித் தெரியும். அப்பால் சிலகாலம் சுவாசம் பந்தனப்பட்டு இஷ்க்குடன் ரஹித்து உன்னை மறந்த தன்மையாக, சில வாரங்கள் வரைக்கும் சொக்கி வாசியுடன் நாட்டந் தட்டி நின்று சுலாவி அப்பால் பழய நிலைமையில் இறக்கி விடும். இதை இன்ஸான் காமில் ஆசிரியர் ''உறாஜ் நுஜூல்'' என்று சொன்னார்.

அப்பால் சிலகாலம் இவ்விதம்செய்த தவமானது மீறிப் பாய்ந்தால் அதாவது தன் நிலைக்குள்தான் நிலை பட்டவுடன் உன் றூஹ் என்னும் கமல முகம்மதிய்யா வென்ற றூஹானியான தன்னுட்டமானது, ஒரு முகவுரை கீருக பத்து வயது வாலிப ஸ்திரீயின் சூரத்தில் காலில் தங்கஜோடிட்டு தலையில் ரத்னக்கிரீடம் இட்டு ஒளிவென்னும் போர் வைக்குள் மறைந்தவளாய் உன் வடிவத்தில் வெளியாகுவாள். அது தான் நீ என்ற தன் நாட்டமாக இருக்கும். அவ்விதம் வெளியான அந்த சூரத்தானது மகா சிவகாமி சூருபத்தை யுடையவள். ஆகையால் அவள் காட்டும் அனேக வித்தை இந்திர ஜால விநோத நூதனசல்லாப சரசத்தில் நீ சொக்கி யதனிடம் வரம்பெற்ற பிறகு உனக்கு அவள் இருஸ்தன மென்னும் இடகலை பிங்கலை என்ற பாலாமிர்தத்தை உன் வாயில் வைத்து ஊட்டுவாள். அதில் ஒரு திவலை உன்வாயில் நுழைந்த மாத்திரத்தில் இனி ஒரு பொழுதும் உனக்கு பசி என்பது இல்லாமல் அற்றுப்

போகும். அதுதான் காய கற்பம் என்று நமது நபிகள் சிரோன் மணியவர்கள் அலியவர்களுக்கு உபதேசித்தார்கள். இதன் முழு விபரம் ஒரு மட்டில் அடங்காது ஆனதாலே இவ்வளவுடன் முடித்துக் கொள்கின்றேன்.

## 27-வது திருப்பாடல்

என்ன விதமாகத் தன்னை மறப்பது சிங்கி அது
ஒன்றைப் பொருந்தி யொடுங்கி யிருப்பது சிங்கா.

## திரவிய உரை

வின:—ஆமா ஆஷிக்கானவளே! முன் சொன்ன வுரையில் தன்னை இல்லாமலாக்கி விட்டுத்தவந்தில் இருக்கவேண்டும் மென்று சொன்னையே! அது எந்த விதமாக தன்னை மறந்து பனு செய்கிறது. அந்த விதத்தை இன்னமாதிரி என்று தெளிவாகச் சொல்.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! அதாவது, ஒரு வஸ்து உன்னில் பிரதான கருவியாக இருக்கின்றது. அதில் நீ விரவிக் கலந்துக் கொண்டு மற்ற உலக ஊசாட்டங்கள் யாவற்றையும் ஒடுக்கிக் கொள்கின்றது.

## கருத்துரை

உன்னில் ஒரு வஸ்து பிரதான கருவியாக இருப்பதானது நினைவாக இருக்கும். அந்த நினைவே "தான்" என்றுணர்ந்து அத்துடன் நாட்டத்தைப் பொருத்தி விடச் செய்து புலன்கள் பொறிகள் ஐந்தையும் ஒடுக்கிவிட்டால் ஜடலம் "தான்" என்ற ஒரு ஊக்கம் மற்று பனுவாகி விடும். நாட்டமும் நினைவும் ஒன்று பட்டுபோகும். நெருப்புடன் விரகு சப்பந்தப் பட்டவுடன் அந்த விரகும் நெருப்பாய்ப் பற்றிக்கொண்டு பழய விரகென்ற சுயகுணம் பனுவாகிப் போகுவதுபோல், நாட்டமும் நினைவும் ஒன்று பட்டவுடன் "தான்" என்ற அகந்தையான இந்த ஜடல பூதங்கள் எல்லாம் பனுவாகி "ஒன்று" என்னும் வஹதானிய்யத்தின் துறையில் கூடிக்கொண்டு கல்க்கு என்ற காரணப் பெயர் மாறி ஹக்கென்ற இயற்கை பெயருண்டாகி விடும். அப்பால் அந்த மனிதாத்மாவானது பரமாத்மாவாகி, எல்லா வல்லமை



யும் தான் பெற்றுக்கொண்டு, எக்காலும் அழியாத சுயம்பென்ற எல்லாவித ஏகாதி பத்தியங்களும் உரிய சுதந்தரத்தைத் தானுகவே அடைகிறது. இப்படித்தான் மஹாத்மாக்களான குதுபுமார்கள். எல்லா சுதந்தரத்தையும் அடைந்து நினைத்த பாரிய கருமங்களைச் செய்தார்கள். ஆனதாலே நீயும் அவ்விதம் செய்தால் உனக்கும் அந்த மஹாப்பரஸ்பரசப்பந்த சுந்தரம் தடைஇல்லாமல் கிடைக்கும். அப்போது இந்த உலக கோடி சரா சரங்களெல்லாம் நீயாகவே நின்ருடுகிற ஒரு பாரதூரமாண தஜல்லியைத் தெரிவாய். ஆனதாலே இதற்கு மேல் சொல்லும் வகையில் இந்த மஹாவிஸ்தரிப்பை அறியாதவன் ஒருபோதும் அந்த பதவிக்கு உரியவனுக மாட்டான்.

---

## 28-வது திருப்பாடல்

என்ன விதமாக வொன்றைப் பொருந்தலாம் சிங்கி அது
எல்லா மறந்து மிருளா யிருபது சிங்கா.

## திரவிய உறை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! அவ்விதம் ஒரு வஸ்துவென்னும் பிரதான கருவியாகிய நினைவுடன் தன்னுட்டத்தைக் கலந்து கொள்ளும் விதம் என்ன மாதிரி நீ தான் விவரப்படுத்த வேண்டும்.

விடை:—கேளடா மஉஷூக்கானவனே! அதாவது நீ யாகிறவன் இந்த தூல சரீரத்துடன் என்னென்ன தொழிலில் யிருக்கின்றையோ! அவைகள் அத்தனையும் விட்டொழிந்து உன்னை சாஸ்பதமாய் உற்றுப்பார்ப்பாயானுல் அந்த மகாமில் வெறும் இருளையேயன்றி வேருெரு உபாதிகளையும் காண்கமாட்டாய்.

## கருத்துரை

அவ்விதம் ஒருமை யான நிலபரத்தில் தரிப்பையானுல் நீ பனுபடுத்திக்கொண்டு ஹக்கைக்கலந்து விட்டதான மேல் பதவியில் உயர்ந்து கொண்டாய். இதுதான் சாகுவதற்கு முன்

சாகிறது என்று ஞானவான்களெல்லாம் சொல்லிக்கொண்டு போனதும் இதுதான். எப்போது நீ மரண மென்னும அருவருப்பான பானத்தை அநுவிப்பதற்கு முன்னே இந்த விதமான வல்லமை ஹிக்மத்தால் மரணித்துக் கொண்டாயாகில் இனி ஒரு முறை உனக்கு அந்த அருவருப்பான மரணம் எற்படும் மென்று நீ கனவிலும் நினையாதே, உதாரணம் குணங்குடியார்:—

இஷ்டப்படிக்கு யாங்கொண்டு கொஞ்சவும்
எனக்கு பயந்து யமன் நின்று கெஞ்சவும்; (வங்கென்ற)

என்று சொல்லிப் போயிருப்பதை நீ சற்றுக் கவனித்துப்பார். உன் மனக்கழுதையானது உன்னைக் கண்ட மட்டும் இழுத்துக்கொண்டு போய் உலக மருட்டென்கிற, பீங்காட்டளவில் விடும். அதிலெல்லாம் நீ மயங்கித் திரியாதே ஒரு உப்புக் கல்லுக்கும் பிரயோசனப்படாது. பொய் என்பது கைமெய்யான இந்த அற்ப சொற்ப உலகத்தின் மாய சுகங்களை உன்புறங்காலால் தள்ளி ஒதிக்கி விட்டு தப்பினேன் என்று என் திரவிய ஞான மென்னும் ஆகாய விமானத்தில் வந்து ஏறிக் கொள். இதானது கூடிய சீக்கிரம் உன்னை ஹக்கில் கலக்கச் செய்து உள்ள படியே உனக்கு உரிய சுதந்திரத்தை வாங்கி உனக்குக் கொடுக்கும். அப்போது நீ காலகாலமும் அழியாவரம் பெற்றிருந்து சகல பேரின் பங்களையும் அனுபவித்து மற்ற சிருஷ்டிகளை யெல்லாம் ரக்ஷிக்கும் எஜமான் தனத்தில் தரித்து வெற்றி பெற்ற ஜயசீலனு வாய். இந்த மகாமில் தரித்திருந்து கொண்டுதான், மஹாத்மா ஷெய்குமண் சூறுல்ஹல்லாஜி "அனல்ஹக்" அதாவது நான்தான் அல்லா என்பவன் என்னும் அர்த்தம் புரிகிற ஒரு உண்மை வாக்கியத்தைச் சொல்லினுர்கள். இதையும் நல்ல ஊன்றிக் கவனித்துப் பார்.

## 29-வது திருப்பாடல்

ஒன்றென்று சொன்ன வுயிர் நிலை யென்னடி சிங்கி அது
உன்னு லுதிப்பல முன்னுல் நினைவடா சிங்கா



## திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! நீ ஒன்றென்று சொல்லிக்கொண்டு வந்த அந்த நினைவென்னும் உயிர் நிலையானது கருமத்தில் எதுவாக இருக்கும்? அதை விஸ்தரித்துச் சொல்.

விடை:—கேளடா மஊஷூக்கானவனே! அதாவது உன் சரீரம் விளைந்து உதிப்பாகும் முன்னைபே உற்பத்தியான நினைவாக இருக்கின்றது.

## கருத்துரை

ஒரு கருமத்தை உன்னி உதிப்பென்ற சப்தம் உண்டாகுவதற்கு முன்னமே அந்த உகிப்பை எண்ணிக் கொண்டு உன்னிற்றே! அதாவது தன்னுட்டமென்னும் நினைவாகத்தான் இருக்கும். இதை உன் மூளைக்கு எடுத்துப்பார் அப்போது தெரியவரும். இன்னும் நல்ல கவனித்துப்பார். நீ ஒரு இடத்துக்கு போகும்போது உன் சரீரத்தை எது நடத்துகின்றதோ, அதுதான் நினைவு. அந்த நினைவு எண்ணி தன்னளவில் உன்ன அதாவது பூதநப்ஸுகளுக்கு உதிப்புச்செய்ய, நப்ஸுகள் எழுந்து சரீரகனத்தைத் தூக்கிக் கொண்டுபோகும். அதனுல் சரீரம் என்பது ஒரு கட்டைத்துண்டு என்றும், அதற்குள்ளிருந்து ஆடுகிற நெருப்பு, காற்று, தண்ணீர், மண் நான்கு பூத சக்திகளும் இந்த சரீரக்கட்டையைத் தூக்கி எடுத்து இழுத்துச் செல்கின்றன. அப்படி இழுத்து கொண்டு போகும் பூதசக்திகளுக்கு அறிவைக் கொடுத்து அதனதன் காரியங்களை நல்ல ஒழுங்காக நடத்திக்கொண்டு போகும். சுக்கான் என்கிற மேல் சக்தியானது அந்த நினைவாக இருக்கும். அந்த நினைவு ஒன்றே சரீரத்தின் தலைமைத் தனத்திற்கும், உலகங்களின் சிருஷ்டிப்பிற்குங் காரண காரியமாக நின்று பராபரிக்கின்றது என்று சந்தேஹந் தெளிந்து, இருதயத்தில் உறுதியுடன் ஒப்புக் கொண்டு அறிந்து, தன்னை அதனுடன் கலந்து கொண்டு நிர்மலமாய் வாசாட்ட மொழிந்திருப்பதுதான் தவநிலை.

ஆரப்பா! இந்த ஞானத்தெளிவை அறிந்துக்கொண்டு தவத்தில் முயலுவையாகில் இதுவே தவம். வேறே நாட்டில் பலையில்

போய் என்ன செய்யப்போகிருய்! அங்கு போனுலும் இதைத்தான் செய்வது. சில மஹான்கள் அவ்விதம் காட்டில் வனத்தில் சென்றும் தவஞ்செய்திருப்பது உண்மைதான். அது ஒதற்காக வேண்டி என்ருல், இந்த மாருட்ட உலக காமியங்களில் மனமானது செல்லாமலும், கண்புலன் செவிப்புலன் முதலிய அவயங்கள் வீண் மருட்டலான செய்கைகளில் அகப்படாமலும் ஊசாட்டமற்றிருப்பதற்கேதான், அதை நல்ல சமிக்கையாகத் தெரிந்து கொண்டார்கள். ஆனபடியாலே நீ எப்படியாவது உன் நாற்ற துடக்கைக் கழுவி துப்புறவு செய்துக்கொண்டால் நீ காட்டில் இருப்பதும் வீட்டில் இருப்பதும் இரண்டும் ஒன்றுதான். இன்ஸான் என்பவன், அவன் விளைந்து வந்த அசுத்த உதிரத்தின் துர்விநியோமான துடக்கை கழுவிக் கொள்ளாத பட்சத்தில் எந்த விதத்திலும் காரியம் சித்தி பெறமாட்டாது. சிருத்தல் முஸ்தக்கீன் பாலம் என்ற சுழிமுனை கடவைக் கடந்து மோட்ச மடையவும் இயலாது என்பதாம்.

## 30-வது திருப்பாடல்

கன்னி யெழுந்து கலந்திட மெவ்விடஞ் சிங்கி அது
உன்னி யெழுந்த உயிர்நிலை யல்லவோ சிங்கா.

## திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானனே! கன்னி என்கின்ற வாலை பனோமணியானது உதயமாகிக் கலந்த இடமானது சரீரத்துள் எந்த இடமாக இருக்கலாம், அதை விபரித்து விடுவாயாக.

விடை:—கேளப்பா மஉஷூக்கானவனே! அதாவது உன்னுடைய இருதயக்கமலத்தில் நின்றும் உன்னல் உண்டாகி அப்பால் உதிப்புண்டாகிற உயிர் நிலையாக இருக்கும் என்பதாம்.

## கருத்துரை

வாலைமனோமணி என்பது இந்த ஜடலத்தில் ஆதிவஸ்துவாய் நிரம்பிய பிரதான பிரம்ம ஆத்மாவாக இருக்கின்றது. அந்த பரமாத்மாவானது நினைவென்னும் தன் நாட்டமாய்ப் பூரணித்திருக்



கின்ற றூஹுல்துஸியாக இருக்கும். எப்போது இன்ஸான் என்பவன் தன் சுதந்தரங்களை இன்ன தன்மை தான் என்று அறிய வில்லையோ, அதுமட்டிலும் வல்லமைத் தன மில்லாத பேடியாகத் தான் இருக்கின்ருன். ஆனபடியாலே அந்த தன் நாட்டமானது ஒரு ஸ்திரீயின் ஸ்ரூபத்தில் வெளியாகும் என்று ஞானவான்கள் ஓநமித்துக் கூறினது நம்பிக்கையான உறுதி என்பதற்குத் தடையே இல்லை. இதைத்தான் மஹரின் கவூரார் தமது பூஜாவிதியில்.

''வாமியிவள் வாமம்வைத்துப் பூசைபண்ண
மதியுனக்கு வேண்டுமடா வதிகமாக
காமியிவள் வெகுகாமி சிவகாமிரூபி
காணரிது சிறுபிள்ளை கன்னிகன்னி
ஆமிவளை யறிந்தவர்கள் சித்தர்சித்தர்
அறிந்தாலு மன தடக்க மறியவேணும்
நாமிவளை பூசைபண்ண நினைத்தவாறு
நாட்டிலே சொல்லவென்ருல் நகைப்பார்காணே.

என்று சொல்லிப் போயிருக்கின்ருர். ஒருமனிதன் தனக்குள்ள சர்வ சுதந்தரங்களையும் ஞான குருவென்னும் அறிவினுல் அறிந்து பரத்தோடும் பரமாய்ச் சேர்ந்து கொள்ளும் வரையிலும் அவன் எப்பேர்ப்பட்டயோகியானுலும் சரி, அரசனுனுலும் சரி, மற்றபடி எவனுனுலும் சரி, அவன் அடிமைத்தன்மை என்கின்ற கீழ்ப்படியில்தான் இருக்கிருன் என்பதாம்.

## 31-வது திருப்பாடல்

எங்கும் பரந்த பெரும்பொரு ளென்னடி சிங்கி அது
அங்கிங்கு மெங்கு மகண்ட பெருவெளி சிங்கா.

## திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! ஏழை வஸ்தை நோக்கினுலும் தானுக நிற்கின்ற பெரிய பொருளான தென்ன, அதை இன்ன தென்று வெளியாக்கி விடுவாயாக.

விடை:—கேள் மடஷூிக்கானவனே! அதாவது ''அங்க என்றுசொல்லும் நாட்டத்திலும், இங்கு என்று சொல்லும் தேட்டத்திலும் இருந்து வெளியாகிவந்த மஹாபாரதூரமான பெரிய ஆகாயமாகிய நினைவாக இருக்கும் என்பது.

## கருத்துரை

அங்க என்பது நாட்டமென்று எப்படி யாருமென்றால், அங்கு என்று சுட்டிக்காட்டின ஞானச் சொல்லானது, தகப்பனுடைய மூளையிலிருந்து விளைந்த இந்திரியமாக இருக்கும். அப்பால் இங்கு என்றசொல்லானது தாயுடைய உதிரத்தில் கர்ப்பமாயிருந்த அந்த இந்திரியத் துளியானது இந்த மனித ஜடலத்தை யெடுத்துக் கொண்டதே அதுவாக இருக்கும். எங்கு என்ற சொல்லானது இந்த பூலோகத்தில் மானிட கோலத்தில் வந்து சகல வஸ்துகளிலும் நிறைபூரணமாய் நின்றதே அதுவாக இருக்கும். நீ ஊன்றி உணர்ந்து கொள் என்பதாம்.

---

## 32-வது திருப்பாடல்

அன்று மின்றுமழி யாப்பொரு ளென்னடி சிங்கி இரு
கண்ணையு மூட விருள்ளழி யாப்பொருள் சிங்கா.

## திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவனே! எக்காலத்திலும் அழியாமல் நித்தியமாய் இருக்கப்பட்ட வஸ்தானது என்ன வென்ற சொல்வாயாக.

விடை:—கேள் மடஷூிக்கானவனே! அதாவது நீ இரண்டு நேத்திரங்களையும் மூடிக்கொள். அப்போது உனக்கு ஏக இருள் மயமாகத் தெரியும். கண்மூடினபிறகு இருளாக இருப்பது எப்படித் தெரிந்தது. அதை ஒரு அகக்கண் பாக்கின்றது என்பதை நல்ல ஸ்பஷ்டமாய்த் தெரிந்து கொண்டாய் அல்லவா



அந்த இருளாக தான் இருக்கும். அதுதான் என்றைக்கும் அழியாமல் நித்தியமாய் நிற்கின்றது என்பதாம்.

## கருத்துரை

அந்த மனக்கண் என்ற நினைவு தான் ''தான்'' என்றது, அதை உணர்ந்து அத்துடன் கலந்து கொள்ளும் பட்சத்தில் சரீரம் பொன் மயமாய் கற்பமாய்விடும். அப்போது அந்த நினைவானது அழியாமல் நின்ற பான்மைபேல் தானும் தன் சரீரமும் அழியாமல் எக்காலமும் நித்திய வாழ்வைப் பெறுவாய் என்பதாம்.

---

## 33-வது திருப்பாடல்

ஆங்கார வுடலுக்கு மாணிதா னென்னடி சிங்கி அது
ஓங்கார மூலத்தி னுள்ளொளி யல்லவோ சிங்கா

## திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! இந்த ஆங்காரமுடைய சரீரத்திற்கு ஆணிவேரென்பது என்னதாக இருக்கும். அதை விபரித்துச் சொல்.

விடை:—கேள் மடஷூிக்கானவனே! அதாவது ஓங்காரம் என்று சொல்லப்பட்ட மூலாதாரம் என்றும், றாஹு என்றும், உன்னுக்குள் உள்ள ஒளிவாக இருக்கும் என்பதாம்.

## கருத்துரை

மூலாதாரத்தின் உள்ளொளி என்பதைப் பற்றி முன் சைட்டுகளில் நல்ல தெளிவாகச் சொல்லி யிருப்பதினாலே இங்கு காட்ட வேண்டியது அவசியமில்லை என்பதாம்.

## 34-வது திருப்பாடல்

ஆணியாய் வந்த வரும்பொரு ளென்னடி சிங்கி  முன்
தோணிய சற்குரு முதனும மல்லவோ சிங்கா

## திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! அவ்விதம் ஆணிவேரான மூலாதார ஒளிவு என்பது என்ன அருமையான பொருளாக இருக்கும். அதை அறிந்தால்தான் சந்தேகமறும் ஆனபடியாலே அதைத் தெளிவுடன் சொல்ல வேண்டியது.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! அதாவது உன்னுடைய சுதந்திரத்தை இன்னமாதிரி என்று ரூபித்துக்காட்டின அந்த சற்குருவாகிய அறிவென்னும் குண்டலியின் திருநாமம் என்கின்ற "ஹூ" என்றதாக இருக்கும் என்பதாம்.

## 35-வது திருப்பாடல்

இந்தப் பொருள்வந்த தெந்த வழியடி சிங்கி  அது
அந்தக் கதிர்மதி வந்த வழியடா சிங்கா.

## திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! இந்த சரீரத்துள்ளே மூலாதார ஒளிவானது வந்தது எந்த வழியாக இருக்கலாம். நல்ல விபரமாக சொல்லி அருள்.

விடை:—கேள் மஉஷூக்கானவனே! அதாவது சூரியர் சந்திரர் எந்த வழியாக வந்தனவோ அதே வழியாகத் தான் இருக்கும் என்பதாம்.

## கருத்துரை

சூரியன் என்ருல் என்ன, சந்திரன் என்ருல் என்ன, அவை இந்த ஜடலத்துள் என்ன விதமாக நின்ருடுகின்றன, எனறு



கேட்பாய். அதன் விபரம், தகப்பனுடைய சுக்கில இந்திரியமானது சூரியனும், தாயுடைய சுரோணித இந்திரியமானது சந்திரனாகவும். அது ரூபத்தில் வலது பக்க நாசியில் ஓடும் சுவாசம் சூரியனாகவும், இடதுபக்க நாசியில் ஓடும் சுவாசம் சந்திரனாகவும் இருக்கும் ஆகையால் இவை இரண்டுந்தான் றூஹ் றூஹானி என்னும் இரண்டு ஆத்மாக்களாக இருந்து சரீர நடவடிக்கை நடத்துகின்றது. இதுதான் மூலாதார ஒளி என்று ஞானிகள் மொத்தத்தில் சொல்கிருர்கள். தமிழ் ஞானிகள் இதைத்தான் ஓங்காரவட்டம் என்றும் சொல்வார்கள்.

காரியம் இவ்விதம் நுழைந்து கொண்டிருப்பதாலே. நீ இதன் வகுப்புகளைச் சிறுகச் சிறுக உணர்ந்து நாளா வட்டத்தில் வஸ்ஸைத் தெரிந்து கொள்வையேயானல் எல்லாம் உன் கைவசம் சிக்கிக் கொள்ளும். அப்பால் நீ மேல்மீசை முளைத்த ஆண்பிள்ளையாவாய் நான் சொல்லும் ஒவ்வொரு கடவான உடைவுகளையும் நல்ல மணங்கவிந்து பார்த்தால், அது உனக்கு அகப்படும். ஏனென்ருல் நீ பூலோக மாயம் என்ற பொய் நாற்றக் கருவாட்டை வாங்கி லேவாதேவி செய்தவன். ஆனதாலே இந்த மேன்மையான ஞானம் என்ற மாணிக்கத்தை மதித்துக்கொள்ள இலேசில் முடியாது. நல்லனன்றி உணர்ந்து பார்த்து மதித்து மனதில் பதியும்படி பதித்து வைத்துக் கொள்ளப்பா என்பதாம்.

## 36-வது திருப்பாடல்

கந்த ஞெளிவு கலந்திட மெவ்விடம் சிங்கி  அது
யத்த நடனந்தா னுடிய தற்பரஞ் சிங்கா.

## திரவிய உரை

வினா!—ஆமா ஆஷிக்கானவனே! அப்படிப்பட்ட ஜடலகர்த்தாவாகிய ஒளிவானது எந்த இடத்தில் வைத்து இந்த தேஹத்துடன் கலந்துக்கொண்டது.

விடை:—கேள் மஉஷுகிக்கானவனே! "தஹ்துல் மௌஜூத்" என்னும் றூஹுல் குதுஸியானது நின்று நடனமாடக்கூடிய தற்பரம் என்ற தன் கொலுவான இருக்ஷேத்திரங்களில் வைத்தே இந்த ஜடலத்தில் அது கலந்து உதய மாகிக்கொண்டு ஒளிமறைவாக நிற்கின்றது. ஆனால் அதுவே சூரியகலையாக இருக்கும். அதை அநுசரித்து நடக்கின்ற றூஹானி என்பது சந்திரனில் கலந்து உலக நடவடிக்கைகளை நடத்தாட்டி வருகின்றது. ஏதவத்தில் குடிகொண்டு மிதக்கவந்தவனே! சந்திரனுடன் கலக்கின்ற றூஹானி என்பதை முதலாவது வேறுடன் பிடுங்கி எடுத்து விடுவது முக்கிய கடமையாக இருக்கும். ஆனபடியினாலே நீ அந்தப் பெண்தன்மையான றூஹானியின் ஆட்டத்தை ஒடுக்கி விட்டு பார்ப்பாயானால் அப்போது தான் உனக்கு அந்த வல்லமை விளங்கும் என்பதாம்.

---

## 37-வது திருப்பாடல்

உற்ற பொருளுக் குயிரெழுத் தென்னடி சிங்கி அது
நச்சர வாடும் நடு நிலை யல்லவோ சிங்கா.

### திரவிய உரை

விஞ:—ஆமா ஆஷிக்கானவளே! நீ இதுமட்டிலும் மேலே சொல்லிக்கொண்டு வந்த நீதிப்பொருளாகிய அந்த வஸ்துக்கு உயிர்நிலையானது என்ன.

விடை:—கேள் மஉஷுகிக்கானவனே! அதாவது விஷப்பாம்புக் கொப்பாகிய சுழிமுனைக்கு நேரேதெரிகின்ற (காபகௌஸைன்) என்கிற புருவமத்தியாக இருக்கும்.

### கருத்துரை

விஷப்பாம்புக் கொப்பென்று ஆசிரியர் சொன்னதாவது:—அதைஅறியாத பாவிகளை அந்திகாலத்தில் அதுவே அபாயம் செய்து



விட்டதினாலே அவ்விதம் சொன்னார்கள். இதன் பயன்களை புத்திமான்கள் உணர்ந்து தெளிந்துகொள்ள வேண்டியது என்பதாம்.

---

## 38-வது திருப்பாடல்

எட்டெழுத் தாக வெழுந்த வெழுத்தென்ன சிங்கி அது
மட்டி லடங்கா வடிவட்ட கோணமே சிங்கா.

### திரவிய உரை

விஞ—ஆமா ஆஷிக்கானவளே! எட்டு எழுத்தாக இந்த ஜடலத்தில் எழுந்த எழுத்தாகிறது என்ன, அதன் மர்மங்களாவது என்ன, அதைச் சொல்ல வேண்டும்.

விடை:—கேள் மஉஷுகிக்கானவனே! அதாவது ஒரு மட்டிலடங்காத இன்ஸான் வடிவென்கிற எட்டுக்கோணமென்னும் அஷ்ட உருப்புகளாக இருக்கும். இதன் மர்மங்களைப் பற்றி விபரம் அறிய வேண்டுமானால் ஹக்கீகத்துல் இன்ஸானில் பார்த்தால் இதன் தெளிவைக் கண்டு கொள்ளக் கூடுமென்பதாம்.

---

## 39-வது திருப்பாடல்

அஞ்செழுத் தாக வமைந்த எழுத்தென்ன சிங்கி அது
அஞ்சும் பொருந்திய வாகாய வட்டமே சிங்கா.

### திரவிய உரை

விஞ:—ஆமா ஆஷிக்கானவளே! எட்டெழுத்தின் காரண விபரங்களைப்பற்றிச் சொன்னது போல் அஞ்செழுத்தாக ஜடலத்தில் பொருந்திய ஒரு ஸ்தலத்தை ஒரே எழுத்தாக சூரத்துப்படுத்திச் சொல வேண்டும்.

விடை:—கேளடா மஉஷூிக்கானவனே! அதாவது வெள்ளை வட்டம், சிகப்பு வட்டம், பச்சை வட்டம், கருப்பு வட்டம், இந்த நாலுக்கும் அடங்காமல் நேராக நடு நேத்ர மத்திபத்தில் நீலவட்டமாகத் தோன்றி அறுஷேமு அல்லாவில் ஒரு நுக்தா ஸ்ரு ,த்தில் அருபமயமாய் தெரியும்படியாய் அமைந்த அஞ்செழுத்திலும் கூடித் திரண்ட பிஞ்செழுத்தாக நிற்கும் கோலத்தைப்பார்! இதுவே கருத்தாகவும் சொல்லி வந்ததை நல்ல ஊன்றி உணர்ச்சி செய்து கொள்ள வேண்டியது. மஹரிபத்தைப் பிடித்தவன் தைரியத்தையும் கையிருகப் பிடிக்க வேண்டியது. வைராக்கியம் ஞான ரஸ்தாவின் கூட வருந்துணையாக இருக்கவேண்டும் என்பதாம்.

———

## 40-வது திருப்பாடல்

அன்பத் தோரட்சர மறியநீ சொல்லடி கிங்கி அது
வஞ்ச மகார நடுச்சுழி மூன்றுமே சிங்கா.

### திரவிய உரை

வினா:— ஆமா ஆஷிக்கானவனே! இதுமட்டிலும் நீ சொல்லி வந்த தீர்ச்சையான தெல்லாம் உண்மையே. அதில் முக்கியமாய் அறியவேண்டிய ஐம்பத்தோரட்சரமாக இருப்பதால் அதை நல்ல விளக்கி சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா மஉஷூிக்கானவனே! அதாவது அஞ்சம் அகாரம் யாதெரு அச்சமில்லாத அலிபுடைய நீட்டத்தின் பாதையான நாசித்துவார நுணிக்கு நேரான நடுமத்திபத்தின் இரண்டு ஐன்யென்னும் கண்ணாக இருக்கும். ஒன்று அலிபாக இருக்கின்றது என்பதாம்.

### கருத்துரை

இதன் உள்கருத்தை தன் பிர்மார்களின் சமூகத்தில் நேரில் கண்டறிய வேண்டியது மூன்று வகையாக இருக்கின்றது, அதாவது, ஒன்று புருவமத்தி, மற்ற இரண்டும் கண்களாக இருக்கும்.



## 41-வது திருப்பாடல்

கற்பக வாசி கலந்திட மெல்விடஞ் சிங்கி அது
உற்பன மூலத்தி னுள்ளொளி வல்லவோ சிங்கா.

### திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! இந்த சரீரத்திற்கு சுவர்க்கமாகிய வாசியானது கலந்து நிற்கின்ற இடமாகிறது எது

விடை:—கேள் மஉஷூிக்கானவளே! அதாவது இந்த சரீரம் உற்பத்தியாய் வந்தபோதே ஒன்றாகச் சமைந்து நின்ற மூலாதாரமானதாக இருக்கும்.

### கருத்துரை

சுவாசத்தின் அடிமூலமாகிறது ஜடலத்தை உற்பத்திசெய்த மூலவஸ்தாகிய ஆறு ஆதாரகளில் நின்றும் உதயமாய் வருகின்றது என்பதாம்.

———

## 42-வது திருப்பாடல்

சத்தம் பிறந்திடுஞ் தலமேதும் சொல்லடி சிங்கி அது
உற்றசுவாச முயிர்நிலை யல்லவோ சிங்கா.

### திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவளே! ஜடத்திற்குள்ளே உதிப்பாகி மொழிச்சலானது எந்த ஸ்தலந்தில் நின்றும் உதயமாய் வருகின்றது சொல்லி விடுவாயாக.

வினா:—கேளடா மஉஷூிக்கானவனே! அதாவது சந்திர சூரிய கலைகளான இரண்டு இருதய குழாய்களின் வழியாக மூச்சு ஓடிவரும் கற்றின் இந்திரியத்தில் நின்றும் உதிப்பாகிறது.

## கருத்துரை

உயிர் இரண்டு வகைகளாக நிற்கிறது. அதில் ஒன்று றூஹு, மற்றொன்று றூஹானியாக இருக்கிறது. றூஹ் சூரியன், அதாவது உஷ்ணநாடி. றூஹானி சந்திரன், அதாவது சிலேஷ்மநாடி. ஆகிய இவ்விரண்டும் ஒன்றுகூடி வருகிற ஸ்கலந்தான் உந்திக்கமலம் என்று எல்லோரும் சொல்லுகிற நுரை ஈரலாக இருக்கும்.

அப்பா! நீ முக்கரணம் போட்டாலும் இந்த மானிட உலகத்தில் ஒரு குருவானவன் இந்த மாதிரி தெளிவாக அவிழ்த்துச் சொல்லமாட்டான். இதை நீ கண்ணாலே பார்க்கும் படியான ஒரு பாலத்துரை இருக்கிறது. அந்தத் துரையில் உன்னை நிற்பாட்டி இதோ பார் என்று காட்ட முடியும். அதற்கு நீ நம்மிடம் வரும் போது இந்த உலகப் பொருளில் ஒரு கனத்ததுகை நமக்கு நாட்டமிருப்பதனாலே அதற்கு சக்தி உள்ளவன் மேற்படி துகையைக் கொண்டு வந்து வைத்துக் கேட்டால் காட்டுகின்றேன் என்பதாம்.

## 43-வது திருப்பாடல்

கண்டு தொழுஞ்சிவ காரண மேதடி சிங்கி நம்மை
யுண்டு படுத்திய வுள்ளொளி வாமைதே சிங்கா

## திரவிய உரை

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! இருக்கண்ணாலே கண்டு உருதிகொண்டு வணங்கக்கூடிய றப்புடைய வெளிச்சம் இந்த ஜடலத்தில் என்ன மூல காரண கருவியாக இருக்கிறது, அதை இன்னதென்று சொல்வாயாக.

விடை:—கேளடா மஉஷூக்கானவனே! அதாவது இந்த ஜடலத்தில் ஒரு சிறுதுளியான இந்திரியத்தினாலே கற்பகக் குவளரையில் வைத்து உண்டுபடுத்தி விட்ட உள்ளொளிவாகிய றூஹுல் குதுஸியாக இருக்கும்.



## கருத்துரை

இந்த ஜடலத்திற்கு ஆதிகாரண வஸ்துவாக நின்று சமைப்பித்த உஷ்ண நாடியானது இரு நேத்திரங்களுக்குள்ளும் நின்று ஒளி செய்கின்ற படியாலே அதைக் கண்ணாலே கண்டு சந்தேகமற ஈமானுடன் ஒப்புக்கொண்டு அப்பால் அத்துடன் விரவிக் கொள்வதற்குரிய உபாயங்களைத் தேடவேண்டியது. அதுதான் மஹரிபாவாக இருக்கும். இதல்லாத மற்ற எவ்வித பாதைகளும் சரியானதல்ல. இன்ஸான் காமில்காரரும் இதையே வற்புறுத்துகிறார். அல்லாவும் குர்ஆனில் இதையே சமிக்கினை செய்கின்றான். அறிவுடைய சீதேவிகள் கண்டுபிடித்துக் கொள்ளவும் என்பதாம்.

## 44-வது திருப்பாடல்

எப்படிக் கண்டே யிறையை வணங்கலாம் சிங்கி அது
நட்புடன் ரண்டு நடுநிலை காண்பது சிங்கா.

## திரவிய உரை.

வினா:—ஆமா ஆஷிக்கானவனே! இறை என்கிற பரிசுத்த வஸ்த்துவை என்ன விதமான தோற்றத்தில் கண்டு வணங்குகிறது அதை இன்னவிதம் என்று சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா மஉஷூக்கானவனே! அதாவது இந்த ஜடலத்தின் பிரதான கருவியாக அமைந்து சரீர உருப்புக்களை நடத்தாட்டி வருகின்றதே அந்த இரண்டு நேத்திரங்களை உறுதியான ஜனுல் எகீனுக ஈமான்கொண்டு, அதனுள் நின்று சராசரங்களெல்லாம் இலங்கிக் கொண்டிருக்கின்ற றூஹுல் குதுஸியைத் தெரிசிக்கின்றதாக இருக்கும் என்பதாம்.

## கருத்துரை.

நேத்திரங்களில் சுயம்பான பளிக்கிச் சுடர்போல் கலப்பற்று நின்று துலங்கி வீசாநின்ற தாத்துர் றஹ்மானியாவைக் கண்ணாலே

கண்டு லுகாவுடைய நேரத்தில் தெரிசித்து வைராகிய நிலையுடன் இஷ்க்கின்புரத்தால் தன்னுட்டத்தில் வைத்துப் பாராட்டித் தாராட்டினுல் அப்போது வேற்றுமையான அமா பனுவாகி தன்னுட்டமே தானென்ற நினைவாகி ஒன்றுபட்டு விரவிக் கொள்ளும். அப்பால் அந்த மகிமையை என்னவிதம் என்று சொல்ல முடியும். அனுபவித்த வல்லமை வஸ்துதான் அரியும் என்பதாம்.

## 45-வது திருப்பாடல்

நடுநிலை யானதை நாடுவ தெப்படி சிங்கி அது
நாட்டந் தேட்ட மோட்ட மாட்ட மொன்ருகினுல் சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! இரண்டும் நடுநிலை என்பதைத் தீர்ச்சையானபடி சொல்லிவிட்டாய் அதன் படி அதை நாடிப் பிடிக்கும் உபாயம் என்னவிதம் அதை அறிவித்துவிடு.

விடை:—கேளடா மஉஷூக்கானவனே! அதாவது உன்னுடைய வெளி அறிவாகிய வீண் நாட்டம் என்ற வெகுளி வெஞ்சாமை என்ற உபாதிகளையும், தேட்டம் என்ற உபாதிகளையும். ஓட்டம் என்ற சுவாச நிலைமையும் ஒன்று படுத்திக்கொண்டு நுழைந்து விடுகிறது. இதுதான் கமாலுற் றஹ்மானியா என்று பெரிய ஞானியார் சாகிபு அவர்கள் கடைப் பிடித்து கூறியிருக்கிருர்கள் என்பதாம்.

## 46-வது திருப்பாடல்

தேட்டமு நாலுந் திருந்துவ தெப்படி சிங்கி அது
திருவைப் பொருந்தி யொருமித் திருப்பதே சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா மஉஷூக்கானவளே! தேட்டத்துடன் நாலும் சரிவரத்திருந்தி வரவேண்டுமென்று சொன்ன அந்தபடி அந்நான்கு



கருவிகளும் ஒற்றுமைப்படும் அந்த சூட்சமத்தை மெதுவாக உடைத்துவிடு.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! திரு என்று மேலோர்கள் சொல்லிப்போன அந்த றூஹூல் குதுஸியை இடிக்கில் வைத்து தாராட்டிக் கொண்டு விடாத வைராகியத்துடன் தியானித்திருக்கிறதாக இருக்கும்.

### கருத்துரை

கரிய வண்டானது ஒரு சிறு கிரிமியைத் தூக்கிக் கொண்டு வந்து தன் மரத்துளையில் வைத்து கிர்ரென்று தாராட்டி உறுதியும் இஷ்க்கும் வைத்து ஆடின சிலகாலத்தில் சிறு கிருமி மேற்படி வண்டாகி பறந்து போவது போல், ஞானத்தை ஆராய்ச்சி செய்ய வந்த மகனே! நீயும் அதுபோல் உன் அசலியத் தான நேத்ர ஜோதியின் ரதத்தின் பேரில் இஷ்க்கும் உறுதியும் வைத்து தாராட்டி வருவையே ஆனுல் அதைப் போல் ஒளியமயமாய் விடுவாய் என்பதாம்.

## 47-வது திருப்பாடல்

ஒருமித் திருக்கின்ற வோரிட மெவ்விடஞ் சிங்கி அது
வொன்ரு மிரவும் பகலு முதிப்பிடம் சிங்கா

### திரவிய உரை

வினு:—ஆகா ஆஷிக்கானவளே! அவ்வித வைராக்கியத்தைப் பற்றிப் பிடித்திருக்கின்ற இணையற்ற அந்த திருஸ்தலம் என்னதான் அதை விபரித்துச் சொல்லிவிடு.

விடை:—கேளடா மஉஷூக்கானவனே! அதாவது இரவு பகல் என்ற இரண்டும் எந்த இடத்தில் நின்றும் உதயம் செய்கின்றதோ அந்த இடமாக இருக்கும். இதன் விபரம் கீழ் பாராக்களில் அடிக்கடி கூறிவருகிறதினுலே இங்கு கருத்துரை சொல்லவில்லை என்பதாம்.

## 48-வது திருப்பாடல்

இரவும் பகலும் மென்ருன தெவ்விடஞ் சிங்கி அது
வெப்போது மிருளா யிருப்பது மூளையே சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா ஆஷுக்கானவளே! இரவும் பகலும் ஒன்ருகச் சேர்ந்து இருக்கின்ற நலமானதை விஸ்தரித்துச் சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா மஉஷூக்கானவனே! அதாவது எப்போதும் ஒரே இருள் மயமாக இருப்பது கபாலம் என்ற மூளையாக இருக்தும். மூளைதான் இந்த ஜடலத்திற்கு உன்னத பீடமாக இருக்கும். அந்த மூளைக்கு நடுவேதான் அறுஷேமு அல்லாவின் உதய ஒளிவானது பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அதை எந்த விதமாக அறியவேண்டுமாளுல், இருகண்கள் என்ற தேஜஸ் கண்ணுடிக்குள்ளே பார்த்தால் பளிங்கு விளக்குப்போல் தோன்றும். உடனே கண்டு ஈமான்கொள்ள வேண்டியது. இதைப்பற்றி குர்ஆனும் அதற்கு முன்வந்த மற்றும் மூன்றுவேத நூல்களும், இன்னும் பல்லாயிரங் கோடிக்கணக்கான ஞானகலைகளும் சாட்சி கூறுகின்றதை நல்ல மஹாத்துமாக்களை அடுத்துப்பார் கூறுவார்கள் என்பதே.

—o—

## 49-வது திருப்பாடல்

இரவும் பகலும் பிறப்பிட மெவ்விடஞ் சிங்கி அது
விருளி லுதித்துன்னி வந்த தடி மூலஞ் சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா ஆஷிக்கானவளே! இரவும் பகலும் உற்பத்தியான ஸ்தலமானது, எந்த ஸ்தலம். அதை நல்லபடியாகச் சொல்வாயாக.



விடை:—கேளடா மஉஷூக்கானவனே! அதாவது இருளான மூளையில் நின்றும் உதித்து, அப்பால், அடி மூலமாகிய உந்திக் கமலத்தி னிடமாக வந்து நிற்கின்றது. இந்த ரகசியம் அவ்வளவு பகிரங்கமாகச் சொல்லப்படாது என்பதாம்.

———

## 50-வது திருப்பாடல்

இரவும் பகலு மெழுந்திட மெவ்விடஞ் சிங்கி அது
எகாந்த வுன்னல்வந் தேறிய தாமரை சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா மஉஷூக்ககனவளே! நீ மேற்கூறிய இரவு பகல் என்ற கருவிகள் இரண்டும் எழுந்து நிறைதானது எந்த இடம் அதை நல்ல தெளிவாகவும், உறுதியாகவும் சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது ஏகசொரூபத்தில் நின்றும் மூளையாகி, அப்பால் உதிப்பாகி, உதிப்பு நினைவாகி, நினைவு உன்னலாகி உதயமாகி எழுந்த தாமரைக்காயாக இருக்கும்.

———

## 51-வது திருப்பாடல்

இரவும் பகலும் பிரிந்திட மெவ்விடஞ் சிங்கி அது
எழுந்தறு கோணம் இடம்வலம் வாசியே சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா மஉஷூக்கானவனே! அந்த இரவு பகலானது பிரிந்து ஓடக்கூடிய. இடமானது எது, அதை நல்ல விபரப்படுத்தி அருளவேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது ஆதியில் கன்சுல் மக்பிதாத்தாகிய இருளில் நின்றும் உதித்தெழுந்த உன்னலானது ஆறு ஆதாரம் என்னும் தத்துவ கருவியாக பிரிந்து கொண்டு இடம் வலம் உன்னும் சூரிய சந்திரர்களாகிய வாசியானது ஒன்று பட்டு நிர்க்கும் இடமாக இருக்கும்.

## 52-வது திருப்பாடல்

இரவும் பகலும் நின் ருடிய தெவ்விடஞ் சிங்கி அது
எழுந்து நின்ருடுஞ் சுழி முனை மண்டலஞ் சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா மஉஷஓக்கானவனே! அந்த இரவு பகல்கள் ஒன்று சேர்ந்து நின்ருடக்கூடிய இடமானது என்ன வென்று நீ சொல்ல வேண்டியது.

விடை:—ஆஷிக்கானவனே! அதாகிறது, இரண்டும் ஏகமய மாய் எழுந்து சூட்சியமாய் ஆடக்கூடிய சுழிமுனையென்ற மூக்கு முனையாகிய நடுஸ்தலமாக இருக்கும்.

---

## 53-வது திருப்பாடல்

இரவும் பகலு மிருப்பிட மெவ்விடஞ் சிங்கி அது
இராறு மோடிய வோரான நான் கடா சிங்கா.

### திரவிய உரை

வினு:— மஉஷஓக்கானவனே! டி இரவு பகல்கள் எப்போதும் இருப்பாகத் தங்கி இருக்கும் ஸ்தலமானது எதுவாக இருக்கும் அதை சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது பன்னிரண்டு கலையாக ஓடிச் செல்லானின்ற சரீரத்தின் வேரான நான்கு பூதநாடிகளாக இருக்கும். விபரம் ஈராறு என்றது, சந்திரன் சூரியன் ஆகக்கூடி பன்னிரண்டு சரங்களாக இருக்கும். நாலு என்றது, மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகா நான்காக இருக்கும் என்பதாம்.

---

## 54-வது திருப்பாடல்

இரவும் பகலு முதிப்பிட மெவ்விடஞ் சிங்கி அது
ஏறுமெட் டங்குல மிருவிழி நடுநிலே சிங்கா.



### திரவிய உரை

வினு:— ஆமா மஉஷஓக்கானவளே! அந்த இரவு பகல் என்ற வைகள் உதயமாகி வருகின்ற ஸ்தலங்கள் எவை; அவை நல்ல தெளிவுபெறச் சொல்லவேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது, எட்டு அங்குல வடிவமாக கமான் வளைந்திருக்கானின்ற இரண்டு நேத்திரங்களில் நடுவாலே நின்று கற்பூரத்தீபம் போல் வெளிச்சம் செய்யா நின்ற மஹா இந்திர சொருப வடிவாகிய ஹக்தூர் றகுமானியாவில் நின்று மாக இருக்கும்.

### சுருத்துரை

விபரம் இதில் சொல்லப்போகுதல் மஹாரகசியமல்ல. காட் டானை ஷெய்கு முதலிய மஹான்கள் யாவரும் ஒருமித்துக் கூறிப் போயிருப்பதனுலே நான் இவ்விடத்தில் அல்லாவுடைய ரகசியத் தை பலரும் பார்க்கக்கூடிய இந்த பகிரங்க நூலின் வாயிலாக அவிழ்த்துச் சொல்ல வேண்டிய தவசியமல்ல. இது கை த்தெரு வல்ல இதை அறியாத அநேக மூடாத்துமாக்க ளெல்லாம் முரீதை ஒரு வியாபாரமாக விற்று வயிறு பிழைத்து வருகிருர்கள். இதைச் சொல்வதற்காக வேண்டித்தான் நாயகம் முஸ்தபா ரஸூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களை அல்லா, இரவில் தன் உதய பீடத்தளவில் வரவழைத்துப் பேசினுன். அதுதான் இரகசியம் பன்னீராயிரம் பேச்சென்று உலகத்தார்களுக கிடையில் வழங்கிற்று என்பதாம்.

---

## 55-வது திருப்பாடல்

இரவு பகலென்றென்னத்தைச் செல்லலாஞ் சிங்கி அது
இரவு பகல்யிட பின்கலை வாசியே சிங்கா.

### திரவிய உரை

வினு:—ஆமா மஉஷஓக்கானவளே! நீ இது மட்டிலும் விப ரித்துக்கொண்டு வந்த மேலான உடைவுகளில் ஒரு காரியம் முக்

கியப்பட்டதாக இருக்கிறது. அதாவது அந்த இரவு பகலென்றது மானுட ஜடலத்துக்குள், என்னதாக இருக்கும் சொல்வாயாக

விடை:- கேளடா ஆஷிக்கானவனே! அதாவது இரவு சந்திர கலை பகல் சூரியகலையாக யிருக்கும் என்று திட்டப்படுத்திக் கொள்வாயாக. இதுதான் இரவு பகல் என்று இந்த உலகத்தின் தோற்றத்தில் வருவதும் போவதுமாக நடைபெறுகிறது என்பதாம்.

## 56-வது திருப்பாடல்

இடகலை பின்கலை யென்னத்தைச் சொல்லலாம் சிங்கி அது
இடகலை சந்திரன் பின்கலை சூரியன் சிங்கா.

### திரவிய உரை

வினா:—ஆமா மஉஷஹிக்கானவனே! இடகலை யென்றும் பின் கலையென்றும் ஞானவான்கள் சொல்லிப் போயிருக்கிறார்களே அதை இன்னதென்று நீதான் விபரிக்க வேண்டியது.

விடை:- கேளடா ஆஷிக்கானவனே! அதாவது இடகலை என்பது இடது நாசியான துவார வழியாகப் போகின்ற சுவாசமாகிய சந்திரனாகவும், பின்கலை என்பது, வலதுபக்க நாசியின் துவார வழியாகச் செல்லும் சுவாசமாகிய சூரியனாகவும் இருக்கின்றது என்பதாம்.

## 57-வது திருப்பாடல்

என்னத்தைச் சொல்லலாம் சந்திரன் சூரியன் சிங்கி அது
இடவல மாக எழுந்தோடு மூச்சடா சிங்கா.

இதன் தாற்பரியத்தை இதற்கு முதல் பாட்டு உடன் இணைத்துச் சொல்ல வேண்டிதவசியமான படியாலே அவ்விதம் காட்டியாயிற்று, ஆனதாலே இதில் அர்த்தம் அவிழ்க்கவில்லை என்பதாம்.



## 58-வது திருப்பாடல்

சந்திரன் சூரிய னென்றான தெவ்விடம் சிங்கி அது
கலையும் பொருந்து நடுச்சுழி மூலையே சிங்கா.

### திரவிய உரை

வினா:—ஆமா மஉஷஹிக்கானவனே! அந்தவிதமான சந்திரன் சூரியன்கள் இரண்டு ஒன்றாகக் கலந்து நிற்கின்ற ஸ்தலமானது எது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதானது கழுத்தளவுக்கு மேலே உள்ள எழுவான் மண்டலமாகிய தலைக்கு நடுவே பூதங்கள் ஐந்தும் ஒன்றுபட்டு வாசஞ்செய்கின்ற சுழி முனை என்னும் நாசிநுனிக்கு நேரே நடுவாந்திரமாக இருக்கும் காபகௌஸன் என்னும் புருவமத்தியின் மூலையாக இருக்கும் என்பதாம்

## 59-வது திருப்பாடல்

என்னத்தி லேப்பால மேறிநின் றுடுது சிங்கி அது
உன்னுக்குள் வாசி நடனப் புரவிமேற் சிங்கா.

### திரவிய உரை

வினா:—ஆமா மஉஷஹிக்கானவனே! நீ இது மட்டும் சொன்னதெல்லாஞ் சரி, இப்போது ஜடலமென்ற ஸ்தூல ஆதமியானது என்ன வஸ்துவின் மேல் சவாரிசெய்து இந்த ஆலமென்ற மாய்கை பாலத்தில் ஏறி நின்று ஆடிக்கொண்டு வருகிறது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது உனக்குள்ளே பன்னிரண்டு சரங்களாகப் பிரிந்தோடும் சுவாசமென்ற நிட்டியக் குதிரையின்மேல் ஏறி நின்று ஆடுகிறது பார். இதன் விபரத்தைக் கண்டவர்கள் இந்தப் பூலோக மாயவலையைக் கிழித்துக் கொண்டு போய் விடுவதற்குச் சந்தேகமல்ல என்பதாம்.